# தீபங்கள் எரிகின்றன



நாவண்ணன்

3.248
2.844
390
240

# தீபங்கள் எரிகின்றன

(அருள்திரு மேரி பஸ்ரியன் வரலாறு)

நாவண்ணன்

மல்வம்
சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய வெளியீடு

பதிப்பு: மாசி 1988
உரிமை: ஆசிரியருக்கு

விலை: ரூபா 20/=

**"Theepankal Erikinrana"**

(Life of Rev. Fr. Mary Bastian)

Author: **Naavannan**

Published by:
Swamy Gnanapiragasar Community Centre,
Malvam, Uduvil

Printers:
St. Joseph's Catholic Press, Jaffna

# " இது யாம்பெற்ற பேறு "

" தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும் " (குறள்: 114)

ஒருவருக்குப்பின் தங்கிநிற்கும் புகழும் பழியுமே அவரவர்தம் தகமைக்குச்சான்று பகர்ந்து நிற்பவையாகும். எமது முன்னுள் பங்குத்தந்தை அருள் திரு மேரிபஸ்ரியன் எமது கிராமத்து மக்களின் இதயங்களில் எல்லாம் தீபமாக எரிந்து கொண்டு நிற்கின்ருர் என்ருல் அதற்கெல்லாம் காரணம் அவர் எமக்கு, எமது இளைஞர்களுக்கு ஆற்றிச்சென்ற பணிகளேயாம்.

எமது சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் 1966-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அன்றுமுதல் அது ஒரு பணிக்களமாக இயங்கிவந்தது என்ருலும் மேரிபஸ்ரியன் அடிகளார் எமது பங்கில் பணியாற்றிய 1977-1981-ம் ஆண்டுவரையிலான காலகட்டத்திலேதான் சமூகப்பணியில் அதிதீவிரமாக ஈடுபட்டது. அன்று அவரால் உருவாக்கப்பட்ட இளைஞர்களான நாமே இன்றுவரை அவர்காட்டிய வழியில் சமூகப்பணியைத் தொடர்ந்து வருகின்ருேம். அவரது புகழ் சாற்றிநிற்கும் எச்சங்களாக எமது சனசமூக நிலையமும் நாமும் செயற்பட்டு வருகின்ருேம் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்ருேம்.

அவரது மறைவு எம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியாத ஒரு நிகழ்வாகும். அவர் நினைவு என்றும் எம்மிடையே வாழவேண்டும் என்பதற்காகவே அவர் மறைந்த மூன்று மாதத்தில் அவர்பெயரால் எமது ஆலயத்தில் மணிக்கோபுரம் எழும்பி ஆறுமாதத்துள் அவரது உருவச்சிலையையும் நிறுவினேம்.

1986-ம், 87-ம் ஆண்டுகளில் எமது ச. ச. நிலையம் அவர் நினைவாக நாட்காட்டிகளை வெளியிட்டது. அவர்தம் நினைவு எமது கிராம மட்டத்துள் மட்டும் நிலைத்துநிற்க நாம் எடுக்கும் இம்முயற்சிகள் பரந்தமட்டத்துள் அறிவிக்கப்படவேண்

டும் எனும் முயற்சியாகவே அவரது பிரிவின் மூன்ருவது ஆண்டில் அவரது வாழ்க்கை வரலாற்றினை நூலுருவில் வெளியிட முன்வந்துள்ளோம்.

அடிகளார் எம்மிடையே வாழ்ந்தகாலத்தில் இந்நூலாசிரியர் திரு. நாவண்ணன் அவர்களை எமது கலைவளர்ச்சிக்கு ஒரு கருவியாக பஸ்ரியன் அடிகளார் பயன்படுத்திஞர். அதே நாவண்ணன் அவர்கள் அவரை நன்கு அறிந்த — அவரோடு வாழ்ந்து உறவாடிய நாவண்ணன் அவர்கள், அடிகளாரைப் பற்றிஎழுதிய இந்த நூலை நாம் முன்னின்று வெளியிடுவதில் பெருமையடைகின்ருேம். எம்மை உருவாக்கிய மேரிபஸ்ரியன் அடிகளாருக்குச் செய்யும் ஒரு நன்றிக்கடனுகவே இதனைக் கருதுகின்ருேம். இப்படி ஒருநூலை வெளியிட்டு அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் பெருமையை நிலைத்து நிற்கச் செய்ய வழிகோலிய நாவண்ணன் அவர்களுக்கு நன்றிகூறுவதுடன் எமக்குக் கிடைத்த இந்த வாய்ப்பினை பெரும் பேருகவே கொள்ளுகின்ருேம்.

இதன்மூலம் அமரர் அருள்திரு. மேரி பஸ்ரியன் அவர்களது புகழும், திரு. நாவண்ணன் அவர்களின் எழுத்துப் பணியும் மென்மேலும் வளர ஆசி கூறுகின்ருேம்.

— வெளியீட்டாளர்:
சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம்,
மல்வம்,
உடுவில்.

★

# என் பாதகாணிக்கை

மன்னார் புனித சவேரியார் கல்லூரி
முன்னைநாள் அதிபர்



அருட் சகோ. ஹில்லறி யோசப் F. S. C.
B. A. Acad. Dip-in-Ed. (Lond.)

எழுத்தறிவித்த என் இறைவா!

நான் எழுதிய என் முதன் நூலுக்கு

முன்னுரை வழங்கிய ஆசானே —

கலை — கல்வி — எழுத்தில் வளர

எனை வாழ்த்திய வள்ளலே

சாம — பேத — தான — தண்ட உளிகளால்

எனைச் செதுக்கி உருவாக்கிய சிற்பியே! — உன்

அறிவு — ஆற்றல் — அன்பை — வியந்து — உனை

"ஆண்டவர்" என்று நாம் அழைத்ததுண்டு.
அது உண்மை என்பதாற்ருன் நீ
அமரர் உலகு போய்விட்டாய்
பாவிகளுக்குத் தெய்வதரிசனம் கிடைப்பதில்லை
எனைப் பாவி என்று எண்ணிவிட்டாய் போலும்
—அது தான்
உன் பரலோக யாத்திரையின்போது
உன் பாதங்களைக் கூட
காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை
கண்ணீரால் நின் கால்களைக் கழுவி
கையளவு மண்ணை நின் கல்லறையிலிட்டு
நன்றிக்கடன் தீர்க்கும் நற்பேறும் கிடைக்கவில்லை
எனவேதான் ஐயனே!
உன் உருவாக்கலால் உதித்த
என் சிந்தனை வித்துக்களை
இந்த எழுத்துக் குவியலை—
எண்ண மலர்களை
பூஞ் செண்டாக்கி
உன் பொன்னடிகளில் வைத்துப் பூசிக்கின்றேன்
இப்பொழுதே என் மனதில் சாந்தி—
உன் ஆன்மாவும் அடையட்டும் சாந்தி

... நாவண்ணன்

# இது பிரசுரமல்ல பிரசவம்

"பலரின் வாழ்வு மரணத்தில் முடிகிறது. ஆனுல் எனது சகோதரன் பஸ்ரியன் அடிபளாரின் வாழ்வு மரணத்தில் நிலேத்து நிற்கின்றது'' இப்படி எழுதுகிருர் அருட்திரு மேரிபஸ்ரியனின் அன்புத்தம்பி யோசப் பிலிப்பு மனுவேற் பிள்ளே.

''வாழ்ந்தபோது அடைந்த பெருமை, புகழைவிட அனேத்து மக்களது புகழையும் இப்பொழுது பெறுகிருர் பஸ்ரி.'' இது அவர்தம் நெருங்கிய நண்பர் அருள்திரு. டோமினிக் அவர்களின் கூற்று.

இப்படி மறைந்தபின்பும் வாழ்ந்துகொண்டிருக்கும் அருட் திரு. மேரிபஸ்ரியனுக்கு—பலருக்கு வாழ்வளித்துச் சென்ற பஸ்ரியனுக்கு என்னுல் என்ன செய்ய முடியும் என்ற வினு வுக்கு என்கருத்திலே ஜெனித்த கருதான் இந்நூல்......

இதனேப் பிரசவிக்க நான் எடுத்த பிரயாசைகள், பட்ட வேதனேகள் பல. ஏனெனில் பஸ்ரியன் என்ருே வாழ்ந்து மறைந்த ஒரு மனிதரல்ல, அவரைப்பற்றி யான் எழுதக் கூடிய ஒவ்வொரு எழுத்தைப்பற்றியும் தட்டிக்கேட்கும் தகைமைபெற்ற, உரிமைபெற்ற பலர் இன்றும் வாழ்கின்ருர் கள், அவர்களுள் பஸ்ரியன் வாழ்ந்தும் வருகின்ருர்.

அப்படியிருந்தும் அவரைப்பற்றித் தகவல் சேகரிப்பது ஒரு பிரச்சனேக்குரிய விடயமாகவே இருந்தது, காரணம்:

— அவரது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்களில் நண்பர்களில் பெரும்பாலானோர் இங்கு இல்லை; வெளி நாடுகளில்.

— அவரால் உருவாக்கப்பட்ட இளைஞர்களில் வேண்டிய பலர் வெளிநாடுகளில்.

— அவர் கொலை செய்யப்பட்டபோது அக்கிராமத்தில் இருந்தவர்களில் தகவல் தரக்கூடிய பலர் இந்தியா வுக்கு அகதிகளாகச் சென்றுவிட்டனர்.

— தொடர்பு கொள்ளக்கூடிய நிலையில் இருந்தவர்களுள் முக்கியமானவர்கள் பலர் 'அவரைப்பற்றிக் கருத்துக் கூறப்போய் ஏதும் சிக்கலில் மாட்டிவிடுவோமோ' என்ற தயக்கத்தின் காரணமாக தகவல்தர மறுத்து விட்டனர், அல்லது காலம் தாழ்த்தினர்.

இந்நிலையில் போஷாக்கான உணவு பற்றாக்குறைவால் பிரசவிக்கப்படும் குறைமாதக் குழந்தையாக இந்நூல் அமைந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சியே பிரசுரிக்கப்படு கின்றது.

''புத்தகத்தை எழுதி முடிப்பதற்குப் பலர் உதவ முன் வராவிட்டாலும், புத்தகத்தில் குறைபிடிப்பதற்குப் பலர் முன்வருவார்கள்'' என்ற அருட்திரு. S. J. இம்மனுவேல் அவர்களின் வார்த்தைகளை எம் மனதிற்கொண்டே இந்நூலை எழுதி முடித்துள்ளேன்.

குறைகூற முன்வருபவர்கள் எனது எழுத்துக்களுக்கு தான்தோன்றித் தனமானவை என்று முத்திரை குத்தி விடக்கூடாது என்பதற்காகவே என் எழுத்துக் குதிரைக்கு கடிவாளமிட்டு அதனை அடக்கிச் செலுத்தும் சாரதிகளாக இயங்கும்படி சில தகுதிசான்றவர்களின் தயவை நாடினேன். அவர்கள் எனது எழுத்துக்களை வரிவரியாகப் படித்து எனது வேகத்துக்கு நிதானநடை காட்டி, கருத்துக்கள் கருச்சிதை வடையாவண்ணம் நெறிப்படுத்தி என் இலட்சியத்தை வென் றடையத் துணை நின்றனர்.

" பஸ்ரியனது வாழ்க்கையை எனது பார்வையில் எழுதப் போகின்றேன் " என்ற கருத்தை யான் முதன் முதலில் வெளியிட்டது அருள்திரு. T. E. தேவராஜன் அவர்களிடம் தான். அப்பொழுது அவர் மயிலிட்டியில் டங்குத் தந்தையாக இருந்தார். " நூலை எழுதுவது மட்டுமே எனது நோக்கம். அதனை வெளியிடும் தகைமையும், வலிமையும் எனக்கு இல்லை " என்பதை அவரிடம் தெரிவித்தேன். அவரே எனது திட்டத்தை " அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித்திட்டக்குழு " (B. E. A. S.) வினிடம் அறிமுகம் செய்து வைத்தார். BEAS இந்நூலை எழுதி முடிப்பதற்கும், அதற்காக கொள்ளவேண்டிய வெளிநாட்டுத் தொடர்புகளுக்கும் தாம் உதவ முன்வந்தனர்.

யான் சற்றும் எதிர்பாராத விதத்தில் பஸ்ரியன் அடிகளாரின் குடும்பத்தவர்கள் புத்தக வெளியீட்டின் ஒரு பகுதிச் செலவாகக் கணிசமான தொகையை தாமாக முன் வந்து தந்துதவினர்.

பஸ்ரியன் அடிகளாரால் உருவாக்கப்பட்ட மல்வம், சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக இளைஞர்கள் மிகுதித் தொகைக்கு தாமே முன்னின்று தமது நிலைய வெளியீடாக இதனை வெளியிடச் சம்மதம் தந்தனர்.

ஆனல், இந்திய அமைதிப்படையின் வரவும், தொடர்ச்சியான ஊரடங்குச் சட்ட அமுல் நடைமுறையும் இரண்டு மாதங்களுக்கு மேலாக ஒளிராதுவிட்ட மின்சாரமும் எமது திட்டத்துக் கெல்லாம் தடைகளாக நின்றன. அதன்விளைவு பஸ்ரியன் அடிகளாரின் மரணத்தின் மூன்ருவது நினைவு நாளான 6-1-88 இல் நூலை வெளியிட முடியாமற் போய்விட்டது.

இத்தனை தடைகள், இடர்களுக்கிடையில் இந்நூல் சுகமாகப் பிரசவிக்கப்படுகிறது என்ருல் " என்னல் முடிந்த வரை உன்னைப் பயன்படுத்துவேன் " என்று தான் வாழும் போது எனக்கு வாக்குத்தந்த பஸ்ரியன் அடிகளாரின் ஆன்மாவின் வழிநடத்துதலே இதற்குக் காரணம் என்று உறுதியாக நம்புகின்றேன்.

''விடியுமுன் அணைந்த விளக்கு '' எனும் பெயரையே இந்நூலுக்குச் சூட்டுவது என்றே யான் முதலில் எண்ணியிருந்தேன். எனது மதிப்புக்குரிய சிரித்திரன் ஆசிரியர் திரு. சிவஞான சுந்தரம் அவர்களிடம் இதனைத் தெரிவித்த போது '' பஸ்ரியன் அடிகள் அணைந்தவிளக்கல்ல, இன்றும் சுடர்விட்டுக்கொண்டிருக்கும் விளக்கு '' என்று வலியுறுத்திக் கூறித் தலைப்பை மாற்றும்படி கேட்டுக்கொண்டார். அதன் பயனாகவே அணைந்த விளக்காக அல்லாமல் எரிகின்ற தீபங்களாக உங்கள் கைகளுக்கு வருகின்றன. இத் தீபங்கள் அருள்திரு. மேரிபஸ்ரியனை அறியாத பலருக்கு அறிவிக்கும் ஒளிப்பிளம்புகள் என நம்புகின்றேன்.

உங்கள் கைகளில் எனது பிரசவமான
'' தீபங்கள் எரிகின்றன ''

நாவண்ணன்.

★

273 ULLOA STREET
SAN FRANCISCO CALIFORNIA 941[illegible]

July 4, 1987

A Tribute to Fr. M. Mary Bastian

While it would be both premature and perhaps somewhat presumptuous to anticipate the Catholic Church's judgment on the death of one of its priests, the word martyr ie witness, comes to mind. By definition a martyr is one who willingly sacrificed his life for a Christian virtue. It is not premature nor too early for us, his survivors, to give our testimony to the fact that Fr. M. Mary Bastian gave his life in the cause of the basic virtue of justice.

His zeal for justice for all people cut across religious lines, focussed especially on refugees, and flourished in his beloved parish at Vankalai. This zeal soon made him a marked man, an undisguised enemy of oppression and injustice

Like his Master before him, he was executed by soldiers of a hostile government on the Feast of the Epiphany at age 33. With his death he joined a long line of priests who as good shepherds give their lives for their flocks.

L-9-0 ×

973 ULLOA STREET
SAN FRANCISCO CALIFORNIA 94127

Never let it be said that his was a political assassination. Those of us who knew him, who saw him in action in his beloved country and in his cherished parish; must in turn be witnesses to the fact that he was not immolated on the altar of politics but on the cross of justice.

Nor must we forget that another fifteen members of his parish were cut down along with their pastor.

As we contemplate the third anniversary of their deaths, we pray that the justice they sought may come to their country and its suffering people. Peace, as our Scriptures tell us; is the fruit of justice.

Fr. M. Mary Bastian was both an apostle and martyr to that virtue of justice. May he and his companions in death rest in peace.

+ Mark J. Hurley

273, உலோவா வீதி,
சான் பிரான்சிஸ்கோ.
காலிபோர்னியா, 4-7-1987,

அமரர் அருட்திரு
மேரி பஸ்ரியன் அடிகளார்க்கு
ஓர் அஞ்சலி

திருச்சபை அதன் குருக்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவருடைய மரணத்தையிட்டு, எத்தகைய தீர்ப்பை அல்லது கணிப்பைக் கொண்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பு காலத்துக்கு முந்தியதும், அதிக நம்பிக்கைவைக்க முடியாததுமாய் இருக்கலாம்.

இவருடைய இறப்பு வேதசாட்சி — அதாவது சாட்சி பகருதல் என்ற எண்ணத்தைத்தான் மனதில் படியவைக்கின்றது. ஒரு கிறிஸ்தவ நெறிக்காகத் தன் உயிரையே சுயமாக அர்ப்பணிக்கும் தன்மையை — வேதசாட்சிக்கு வரைவிலக்கணமாகக் கொள்ளலாம். அருட்திரு பஸ்ரியன் அடிப்படை நெறியாம் நீதிக்காகத் தன் உயிரையே ஈந்தார் என்ற உண்மைக்கு நாம் சாட்சி பகர்வது முற்றிலும் பொருத்தமானதொன்றுகும்.

எல்லா மக்களுக்கும் நீதிசெலுத்தப்பட வேண்டும் என்று அவருக்கிருந்த தணியாத தாகம், சமய எல்லைகளைக் கடந்து, அகதிகள் மட்டில் சென்று, அவர் நேசித்த வங்காலைப் பங்கில் செழித்துப் பரவியது. இந்தத் தாகம் — அவரை ஒடுக்கி ஆள்பவர்கள், அநீதி இழைப்பவர்கள் கண்ணில் படவைத்தது.

அவருடைய எசமானருக்கு நடந்ததுபோல், கொடுங்கோல் அரசின் இராணுவத்தால், 33 வயதில், மூவிராசாக்கள் விழாவன்று அவரது உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டது. இந்த உயிர்த்தியாகம் — தங்கள் மந்தைகளுக்காக உயிரைக் கொடுத்த பல குருக்களின் வரிசையில் இவரையும் ஒரு தியாகியாக, நல்லாயனாக நிலைக்கச்செய்துள்ளது.

அவர் இறப்பதற்கு அரசியல் காரணங்களைக் கற்பிப்பது முற்றிலும் பொருந்தாததொன்ருகும். அவரை நெருங்கி அறிந்தவர்கள், அவர் நேசித்த நாட்டிலும், விரும்பிப் பணியாற்றிய பங்கிலும் — அவர் செயற்பட்டதைக் கண்ணுற்றவர்கள் — அரூட்திரு மேரி பஸ்ரியன் தன்னுயிரை அரசியல் பலிபீடத்திலல்ல, நீதியின் சிலுவைமேல் தியாகம் செய்தார் என்று பகர்வர்.

இவரோடு அதேநாளில் வங்காலைப் பங்கைச் சேர்ந்த பதினைந்துபேர் படுகொலை செய்யப்பட்டதையும் நாம் மறந்துவிடலாகாது.

இவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மூன்ரும் ஆண்டினை நினைவுகூரும் நாம், இவர்கள் அவாவிய நீதி அந்நாட்டிற்கும், அங்கு இன்னலுறும் மக்களுக்கும் வரவேண்டுமென்று மன்ருடுவோமாக.

சமாதானம் — நீதியின் கனியென்று எம் மறையின் நெறிகள் கூறிநிற்கின்றன.

அருட்திரு மேரி பஸ்ரியன் இந்த நீதிக்காக வாழ்ந்து மரித்த அப்போஸ்தலரும், வேதசாட்சியுமாவர்.

அவரதும் அவருடன் மரித்தவர்களினதும் ஆன்மாக்கள் நித்திய அமைதியைப் பெறுவதாக.

மாஷ்ஹேர்னி பேராயர்,
காலிபோர்னியா, 4-7-87.

★



குருமகன் மலர்ந்த குடும்பச் சோலை

# (1)

## தவம் செய்த தந்தை:

அன்று ஞாயிற்றுக்கிழமை—

காலை ஏழுமணிக்கெல்லாம் இளவாலை, புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி முடிவடைந்து விட்டது. திருப்பலி முடிந்ததுமே அவசரம் அவசரமாக ஆலயத்தை விட்டு வெளியேறிய பக்தர்களைத் தொடர்ந்து, கல்லறைச் சுரூபம் முதல் ஏனைய சுரூபங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தடவி முத்தமிட்டுச் செல்லும் பக்தர்களும் ஒருவர்பின் ஒருவராக வெளியேறிக்கொண்டிருந்தனர்.

முதியவரான மனுவேற்பிள்ளையும் ஆலயத்தை விட்டு வெளியே வந்தார். வயது ஆறுபத்துஆறைக் கடந்துவிட்ட நிலையிலும் சமயக் கடமைகளை அசட்டை செய்யாத பண்பு அவரிடம் குடிகொண்டிருந்தது.

வழக்கமாகத் திருப்பலி முடிந்ததுமே நேராக வீட்டுக்குச் சென்றுவிடும் அவருக்கு ஏனோ அன்று உடனடியாக வீடுசெல்ல மனம்வரவில்லை. மனம் அமைதியின்றித் தவித்தது — நடக்கக்கூடாதது எதுவோ நடந்துவிட்டது போன்ற மனப்பிரமையில்—உள்ளுணர்வு உறுத்திக்கொண்டிருந்தது.

எவருடனுவது, எதையாவது பேசவேண்டும் போலிருந்ததால் முன்பின் பேசியிராதவர்களுடனும் பேசிக்கொண்டு கோவில் வளவிற்குள்ளேயே நின்றூர். ஏனிந்த வழக்கத்துக்கு மாறுன செயல்கள்? அதன் காரணம் அவருக்கே புரியவில்லை.

"அவருக்கு என்ன குறை?"

இப்படித்தான் அவரை அறிந்தவர்கள் கூறுவார்கள். முப்பத்தைந்துவருட அரசாங்க சேவையில் விவசாய இலாகாவில் உயரதிகாரியாகச் சேவை புரிந்தவர். அவரது வேலைத் திறமையின் பொருட்டு எப்பொழுதோ வழங்கப்படவேண்டிய மாவட்ட விவசாய அதிபர் பதவியை அவர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் தான் அரசு வழங்கியது. ஆயிரம் தகைமையிருந்தென்ன? தமிழனுயிற்றே! பதவி உயர்வுகள் கட்டைவண்டியில்தானே வந்துசேரும்.

சேவையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட அவருக்குத் தனது ஓய்வூதியத்தை நம்பித்தான் வாழவேண்டும் என்ற நிலை இல்லை. "அவருக்கென்ன குறை?" என்ற அடுத்தவர் கூற்றுக்கு ஒப்ப போதுமான பொருட்செல்வம். இளவாலைக் கிராமத்திலேயே அதிகப்படியான நிலபுலமுடையவர்கள் என்று விரல்விட்டு எண்ணிச் சொல்லிவிடக்கூடிய முக்கியமான புள்ளிகளில் அவரும் ஒருவர். அவராகத் தேடியவை போக, பரம்பரைச் சொத்துக்களும் ஏராளம்.

பொருட்செல்வம் மட்டுமென்ன, பிள்ளைச் செல்வங்கள் மட்டுமென்ன குறைந்தனவா. அவர்கள் பெற்றெடுத்த நான்கு பிள்ளைகளும் நான்மணிகளே.

மூத்த மகன் அன்ரன் அமெரிக்காவில், விஞ்ஞானப் பட்டதாரியாகி ஆய்வுகூடம் ஒன்றில் முக்கிய பதவி வகிக்கின்றூர். அமெரிக்க நங்கையான ஆன் பாபருவைத் தனது

வாழ்க்கைக்குத் துணையாக்கிக்கொண்டு இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாக உவோல்போலில் (Walpol) வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆன் பாபருகூட ஏதோ ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கின்றார்.

இரண்டாவது புதல்வன், பெற்றவர்கள் செய்த தவப் பயனின் விளைவாகக் குருவாகி மன்னார் மறைமாவட்டத்தில் வங்காலைப் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்து வருகிறார். மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர் விவகாரத்துக்குப் பொறுப்பாளராகவும், மன்னார் மாவட்டத்தில் வாழும் இனக் கலவரங்களால் இடம்பெயர்ந்தோருக்கு 'வாழ்வுதயம்' வழங்கும் புனர்வாழ்வுப் பணிகளில் முக்கியமானவராகவும் இயங்கி வருகின்றார்.

மூன்றாவது, அவர்கள் குடும்பத்தில் தோன்றிய ஒரே பெண் ஆன் பற்றிமா. தற்பொழுது திருமதி இராஜசிங்கமாக, கணவர் பிள்ளைகளுடன் லண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். ஸ்தாபனமொன்றில் காசாளராக விருக்கின்றார். அவர் கணவர் இங்கிலாந்தில் நெசவுத் தொழிற்சாலையொன்றில் முக்கிய பதவி வகிக்கின்றார்.

ஆக இளையவனை யோசப் பிலிப்பு ஒரு விஞ்ஞான பட்டதாரி. தென் அமெரிக்காவில் 'பேரு' (Peru) நாட்டில் உயர் பதவியில் இருக்கின்றார்.

> ''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தியிருப்பச் செயல்''

என்ற வள்ளுவன் வாக்கை நிறைவேற்றிவிட்ட திருப்தி அவருக்கு.

அவரது துணைவியார் திருமதி மேரி திரேசா மனுவேற்பிள்ளை நல்ல மனைவி மட்டுமல்ல, நல்ல தாயாரும்கூட. எனவே தான் கணவன், மகள், மகன்மார் என்று இலங்கை, இங்கி

லாந்து, அமெரிக்கா என்று செட்டைகட்டிப் பறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார். தற்பொழுது மருமகள், மகன்மார், பேரப்பிள்ளைகளின் அன்பில் அமெரிக்காவில் இருந்து வரு கின்றார்.

இத்தகைய சிறப்புமிக்க, அழகிய, அன்புநிறைந்த குடும் பத்தின் தலைவர் என்ற பெருமை பெரியவர் மனுவேற்பிள் ளைக்கு — எதற்கும் பற்றவர் கையை எதிர்பார்க்க வேண்டிய தேவையில்லாதவராக இளவாலையில் உள்ள அவரது இல் லத்தில் தற்பொழுது தனிமையாகவே வாழ்ந்துகொண் டிருக்கின்றார்.

கோவிலடியில் இருந்து வீட்டுக்கு வந்தவருக்கு என்ன வோ போலிருந்தது. நாளாந்த கடமைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிக்க, பகல் மணி ஒன்றாகிவிட்டது. மனம் அமைதி யற்றநிலையில் பசிக்கவில்லையாயினும் கடமைக்காகவெனி னும் சாப்பிடுவோம் என்ற எண்ணத்தில் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மருமகள் பிரேமினியிடம் இருந்து அவசரமாக அழைப்பு வந்தது. அறிந்தவர் ஒருவர் தான் அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தார்.

முதுமையின் தளர்வு ஒருபக்கம் அன்றைய மனநிலையின் தாக்கம் மறுபக்கம். அந்த உச்சி வெயிலில் உடன் புறப்படு வதை நினைக்க எரிச்சலாகவும் இருந்தது.

"எனக்குப் பின்நேரம் கனக்க வேலை இருக்கு; இன் றைக்கு எனக்கு வர ஏலாதாம் என்று போய்ச் சொல்லும்."

வந்தவர்பாடு தர்ம சங்கடமாயிருந்தது. அவரை எப் படியாவது அழைத்துச் செல்லவேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது. "வங்காலையில் நடந்து முடிந்துவிட்ட அந்தப் பயங்கர சம்பவத்தைப் பெற்ற தந்தையிடம் எப்படிக் கூறு வது' என்ற தயக்கம் அவரிடம்

மனிதன் பிடிவாதக்காரன்; விடயத்தை உள்ளபடி சொல்லாவிடில் ஆள் இப்பொழுது புறப்படமாட்டார் என்பதுவும் தெரியும். எனவே தயக்கத்துடன் தான் கொண்டு வந்த செய்தியை அரைகுறையாகச் சொன்னர்.

''வங்காலையில் ஏதோ கலவரமாம், பஸ்ரியனைக் காண வில்லையாம், அதுதான் போய்ப் பார்க்கவேணுமாம்......... அதுக்குத்தான் உங்களைக் கூட்டிவரட்டாம்.''

மறுகணம் மனுவேற்பிள்ளை உணவை மறந்தார், உண்ட களையை மறந்தார். அறுபத்துஆறு வயதின் முதிர்ச்சியின் தளர்ச்சி மறைந்தது. அவசரம் அவசரமாக உடுத்திக் கொண்டு புறப்பட்டார்.

கீரிமலை — யாழ்ப்பாணம், 788-ம் இலக்க சேவை மினி பஸ்வண்டி யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. காலையிலும் மாலையிலும் பிரயாணிகளால் பிதுங்கி வழியும் அந்த வண்டியில் நடுப்பகல் வேளையாதலால் பிர யாணிகள் குறைவாகவே காணப்பட்டனர். வசதியாக ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொண்ட மனுவேற்பிள்ளைக்கு எது வுமே புரியாத நிலை.

இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. காலையில் இருந்தே ஏற்பட்டிருந்த குழப்பநிலை இப்பொழுது இன்னும் அதிகமாகவிருந்தது. ''பஸ்ரியனைக் காணவில்லையாம், என்ன நடந்திருக்கும்?'' இந்தக் கேள்விக்குப் பதில் கண்டுகொள்ள மனம் துடித்தது. சாதாரண வேகத்தில் சென்றுகொண் டிருந்த அந்த மினிபஸ்வண்டி அப்பொழுது அவருககிருந்த மனேநிலையில் ஊர்ந்துகொண்டு செல்வதான பிரமையை யூட்டி எரிச்சலைக் கொடுத்தது.

'மகனே, பஸ்ரியன்' என்று உள்மனம் உளறிக்கொண் டது. களங்கமற்ற அந்த வெள்ளை முகம், அழகிய சிவந்த

உதடுகள் மலர்ந்து சிரிக்கையில் சற்றே நுனி உடைந்த ஒரு பல்லோடு கூடிய பல்வரிசைப் புன்னகை —

'பப்பா' என்று பாசத்தோடு பக்கத்தே இருந்து அழைப்பது போன்று உள் மனதில் ஒலித்தது.

கடைசியாக பஸ்ரியனைச் சந்தித்த அந்தநாளின் நிகழ்வுகள் மனத்திரையில் நிழலிட்டன.

இறுதியாக 8-11-84இல் இளவாலையில் இருந்த தனது வீட்டுக்குத் தந்தையாரைப் பார்க்கச் சென்றிருந்தார். இயற்கையிலேயே அழகனான பஸ்ரியன் தோற்றத்தில் இன்னும் சற்று அழகு கூடியிருந்தது.

உடலில் ஒரு மினுமினுப்பு. ஒரு சுற்றுப் பருத்து இருப்பது போன்று தோற்றமளித்தார். இந்த மாற்றத்தைக் கண்ட தந்தையார், "என்ன இந்தமுறை உன்னுடைய உடம்பு ஊதிப்போய் இருக்கு?"

இயல்பான புன்னகையுடன் பஸ்ரியனிடமிருந்து பதில் கிடைத்தது. "இப்ப நான் பங்குக்கு வெளிய அதிகமாகப் போறதில்லை. அறைவீட்டோடைதான். மோட்டார் சைக்கிள் ஓட்டமும் குறைவு."

மகனுடைய இந்தப்பதில் அவருக்குத் திருப்தியளித்தது. மகன் உடலைக் கவனியாது ஓய்வின்றி உழைப்பவர். அத்தோடு இராணுவக் கெடுபிடிகள் மன்னாரில் அதிகரித்திருப்பதால் இவர் மோட்டார் சைக்கிளில் அடிக்கடி வெளியில் போய்வருவதை அவர் விரும்புவதில்லை.

அன்று நீண்ட நேரமாகத் தந்தையாருடன் பல விடயங்கள் பற்றியும் பேசிக்கொண்டிருந்தபோது பஸ்ரியன் கூறினார் —

"பப்பா! உங்களைக் கடைசிகாலத்தில் பார்ப்பதற்கு அம்மாவோ, மற்றப் பிள்ளைகளோ பக்கத்தில் இல்லையென்று நீங்கள் துக்கப்படவேண்டாம் உங்களுக்கு வேண்டிய எல் லாக் கடமைகளும் நான் செய்வன். நீங்கள் எல்லாப் பிள் ளைகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் செய்து போட்டீங்கள். இனிச் சந்தோஷமாய் இருங்கோ."

பஸ்ரியனின் இந்த வார்த்தைகளைக் கேட்கத் தந்தை யாருக்குப் பெருமையாக இருந்தது. எவர்தான் இல்லாட் டிலும் என்ன? பஸ்ரியன் ஒருவன் இருக்கிறனே என்ற மனத்துணிவு பிறந்தது.

"உங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை எல்லாம் நான் செய்வன்" என்ற சொற்களின் பொருள் சாதாரண மானவையா? கட்டிய மனைவியென்ன மற்றப் பிள்ளைகள் என்ன. கடைசிநேரத்தில் எவர்தான் கண்முன்னே இருந்தா லும் உடல் சம்பந்தப்பட்ட உதவிகளைச் செய்வார்கள். ஆனல் பஸ்ரியன் அப்படியல்லவே. உடல் சம்பந்தப்பட்ட உதவிகள் மட்டுமல்ல, ஒரு குருவாக நின்று தன் தந்தை யாருக்கு வேண்டிய ஆன்மீகக் கடமைகளையும் இறந்தபின்னர் கூட நிறைவேற்றும் தகைமை பெற்றவரல்லவா?

நீண்டநேரம் இருந்து பேசிவிட்ட பஸ்ரியன் தந்தை யாரிடம் விடைபெற்றுச் செல்லுகின்றார். வெளிக் கேற்று வரை சென்றுவிட்ட பஸ்ரியனை தந்தையார் ஏதோ நினைத் துக்கொண்டவராக மீண்டும் கூப்பிடுகிறார். முதியவரான மனுவேற்பிள்ளையுடன் இயற்கையாகவே அமைந்துவிட்டது இந்தக் குணம். எதையுமே மீண்டும் மீண்டும் நினைவுபடுத் திக் கூறிக்கொண்டிருப்பார். தனக்குத் திருப்தி ஏற்படும் வரை விடமாட்டார்.

போகவிட்டு மீண்டும் கூப்பிடுவது என்பது தந்தையா ருக்கு இயற்கையாக அமைந்துவிட்ட குணம் என்பதை பஸ்

ரியன் நன்கு அறிவாராகையால் மீண்டும் திரும்பிவந்தார். தந்தையாரின் இச்செய்கை அன்று ஏனோ பஸ்ரியனுக்கு எரிச்சலை ஊட்டியது.

தந்தை கூறினர்:

"கவனமாய்ப் போக வரவேணும். இப்ப மன்னரில ஆமிக்காரர் ஆட்களைக் கண்டபடி சுடுகிருர்கள்."

இது ஒன்றும் புதுவிடயமல்ல. பேசிக்கொண்டிருந்த அவ்வளவு நேரத்திலும் பலதடவைகள் அவர் சொல்லி விட்ட விடயம். வாசல்வரை போனவரைத் திரும்பவும் அழைத்து அதையே மீண்டும் கூறியது சலிப்பைக் கொடுத்தது.

"ஏன் பப்பா என்னைப் போகவிட்டுப் பிறகால கூப்பிடுறியள். இவ்வளவும் இருந்து கதைச்சது போதாதா?" என்று சற்றுக் கடிந்து கூறிக்கொண்டே விடைபெற்றுச் சென்ருர்.

பிள்ளைமனம் அப்படித்தானே பேசும்; பெற்றமனம் கேட்குமா? உலகத்துக்கு அவர் துறவியாகவும், போதகராகவும் இருக்கலாம். ஆனல் பெற்றவர்களுக்குப் பிள்ளை தானே. பிள்ளை துறவியென்பதால் பிள்ளைப்பாசத்தில் நின்றும் பெற்றவர்கள் பிள்ளைகளைத் துறந்துவிடுவார்களா என்ன?

வங்காலைக்குச் சென்ற மகன் தந்தையாருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்திலும் பப்பா கவலைப் படக்கூடாது, ஓய்வாக இருக்கவேண்டும் என்ற கண்டிப்பே நிறைந்திருந்தது.

அக்கடிதத்துக்குப் பதில் அனுப்பிய தந்தை தன் கடிதத்தில், "இந்தமுறை நான் தனிய இருந்தாலும் நீர் இங்கே வரவேண்டாம். கண்டபடி ஆட்களைப் பாதையில்

சோதிக்கிறார்கள். உம்முடைய பங்கின் அலுவல்களைச் செய்துகொண்டு ஓரிடத்தில் இருக்கவும். மாவட்ட வேலைகளைக் குறைத்துக் கொள்ளவும்" என்று அறிவுறித்தி எச்சரிக்கை செய்திருந்தார்.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டவருக்கு, "பஸ்ரியனுக்கு என்ன நடந்தது? அவர் இப்பொழுது எங்கே?" என்பன போன்ற கேள்விகள் மீண்டும் தோன்றி மூளையைக் குழப்பின.

1984-ம் ஆண்டில் ஆவணி 12-ம் திகதி மன்னாரில் நடைபெற்ற இராணுவக் கலவரங்கள், கடையெரிப்புகளைத் தொடர்ந்து பஸ்ரியன் பெரும் மனக்குழப்பமும், கவலையும் அடைந்திருந்தார். இக்கலவரத்தில் பாதிப்படைந்தவர்களுக்குத் தன்னால் இயன்ற அளவுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்து அவர்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடரத் துணைபுரிந்தார். புனர்வாழ்வு விடயத்தில் மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருள்திரு ஜே பி தேவராஜா அடிகளாருக்கு வலக்கரமாக இருந்து உழைத்தார்.

இழப்புகள், அழிவுகளைப் பார்வையிடவும், விசாரணை செய்யவும் வந்த அரச குழுவினருக்கும், ஏனையவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து விளக்கம் கொடுத்தார். அவர் இதுவிடயத்தில் காட்டிய அக்கறையும் செயற்பாடுகளுமே இராணுவத்தினர் அவர்மீது குறிவைக்க முதற்காரணமாக அமைந்தன.

அப்பொழுதே பஸ்ரியனின் தந்தையார் மகனை எச்சரித்தார். பிள்ளையின் குணம் பெற்றவருக்குத் தெரியாதா? "இனியும் நீர் இங்கிருப்பது ஆபத்து. நீர் அமெரிக்காவுக்குச் சென்று படியும். இதற்கான உதவிகளையும் ஏற்பாடுகளையும் உம் சகோதரர்கள் செய்வார்கள்" என்றார்.

ஆனால் —

"எங்கட சனம் இப்படிக் கஷ்டப்படுகிறபோது நான் மட்டும் எப்படித் தப்பிப்போக நினைக்கிறது. கலகம் முடிந்து அமைதி ஏற்பட்டதும் கட்டாயம் புறப்படுவேன்" என்று தந்தையின் ஆலோசனையை நிராகரித்துவிட்டார்.

துன்பப்படும் மக்களை விட்டுத் தன் உயிரைமட்டும் வெல்லமாக நினைத்து ஓடும் கோழைத்தனம் அவரிடம் இல்லாத காரணத்தால் அவர் வெளிநாடு போவதென்பதை அப்போது அறவே வெறுத்தார்.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் அமெரிக்காவில் உள்ள அவரது தாயாரும், சகோதரர்களும் கடிதங்கள் மூலமும், தொலைபேசி மூலமும் அமெரிக்காவுக்கு வந்துவிடும்படி வற்புறுத்திக் கொண்டேயிருந்தனர். பஸ்ரியனும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லிக் கடத்திக்கொண்டே வந்தார். இப்பழைய சம்பவங்களை எல்லாம் எண்ணிக்கொண்டுவந்த அவரது பெற்றமனம், 'எங்களுடைய சொல்லைக் கேட்டிருந்தால் இப்படியொரு நிலைமை வந்திருக்காதே! இனி ஒரு கணமும் தாமதிக்கக்கூடாது. உடனடியாக வில்லங்கமாய் என்றாலும் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துவிட வேண்டும்' என்று எண்ணிக்கொண்டார்.

மினிபஸ் யாழ் நிலையத்தைச் சென்றடைந்தது. மருமகள் வீட்டை நோக்கி மெல்ல நடைபோட்டார். பகல் வெய்யில், முதுமையின் தளர்ச்சி இவற்றைவிட இதயத்தின் தாக்கம் கொடுமையாகவிருந்தது.

அடைக்கலமாதா ஆலயத்தை அடைந்தபோது வழக்கத்துக்கு மாறாக மக்கள் அங்கு குழுமிநின்றனர். அனைவர் முகத்திலும் கவலை குடிகொண்டிருந்தது.

அங்கு நின்றவர்களுக்கு பஸ்ரியனின் தந்தையை அடையாளம் தெரியாது. அவர்களிடம் சென்று "என்ன விஷயம் ?' என்று விசாரித்தார்.

"முந்தி மானிப்பாயில் இருந்த சுவாமியை வங்காலை யில் ஆமிக்காரங்கள் சுட்டுப்போட்டார்களாம். உடம்பை யும் காணேல்லையாம்."

ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு இதயத்தைத் தாக்கி யதுபோன்ற உணர்வு அவருக்கு. மறுகணம் அவர் தன் சுய நினைவில் இல்லை. மயக்கமுற்று வீழ்ந்துவிட்டார்.

கூடிநின்றவர்கள் பின்னர்தான் அவர் யார் என்று இனம் கண்டனர். அவருக்குச் சிகிச்சையளித்து அண்மையில் இருந்த மருமகளின் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

மகனைப்பற்றி அவர் கட்டியிருந்த கோட்டைகளெல் லாம் சிதறடிக்கப்பட்டுவிட்டன. "மகனே, உன்னுடைய அம்மா, சகோதரர்கள் எல்லோரும் வெளிநாட்டில் இருந் தாலும் நீ ஒருவன் இங்கிருக்கின்றாய் என்ற துணி வோடுதானே நானிருந்தேன். நான் செத்தாலும் நீ எனக் குச் செய்யவேண்டிய கடமைகள் எல்லாம் செய்வாய். நீ பூசைவைத்து என் பிரேதத்தை அடக்கம் செய்வாய் என் றெல்லாம் கனவு கண்டேனே. எல்லாவற்றையும் எண்ணி யெண்ணி என்னை அழுது புலம்பவைத்துப் போய்விட்டா யேடா. எல்லா விஷயத்திலேயும், நீ குருவானபின்னரும் எங்கட சொற்கேட்டு நடந்தாய். அம்மா, நான், சகோ தரங்களெல்லாம் உன்னை அமெரிக்காவுக்குப் போகும்படி சொன்னோமே. இந்த விஷயத்திலமட்டும் நீ பிடிவாதமாக எங்கட சொல்லைக் கேட்காமல் நடந்துகொண்டாயே! இப் படி அவலமாகப் போவதற்குத்தானோ?

கடைசியாய் நான் உன்னைக் கண்டபோது உடம்பு ஊதிப்போய் இருந்ததே. இப்படி எங்களையெல்லாம் விட் டுப் போறதுக்குத்தானோ அந்தச் சா வளர்ச்சி......?

ஐயோ! கடைசியாய் நீ என்னிடம் வந்துபோனபோது வெளிக்கிட்டுப்போன உன்னை வாசலில மறிச்சுக் கூப்பிட் டேனே. ஏன் வெளிக்கிட்டுப்போற என்னைப் பிறகால கூப்

பிடுறியள் என்று ஒருநாளும் இல்லாதவாறு சினந்தாயே. இனித் திரும்ப வரமாட்டேன் ஒரேடியாகப் போகிறேன் என்பதற்காகத்தான் அப்படி எரிந்து விழுந்தாயோ.''

இப்படி ஒவ்வொன்றாய் எண்ணி எண்ணித் தனக்குள் புழுங்கிக்கொண்டிருந்தார். மருமக்களைப் பார்க்கும்போது அவரது வேதனை மேலும் அதிகரித்தது.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் கொடிகட்டிப் பறந்த புகழ்பெற்ற இரசாயனவியல் விஞ்ஞான ஆசிரியர் சாம் (அல் பிறட்) அவர்களின் புதல்விகள் அவர்கள். மேரி பஸ்ரியன் அவர்களின் தாயார் திருமதி மேரி தெரேசா மனுவேற்பிள்ளையின் உடன்பிறந்த சகோதரன்தான் சாமமாஸ்டர். சில வருடங்களின் முன்னர் சாம்மாஸ்டரும் அவர் துணைவியாரும் அடுத்தடுத்துக் காலமானதைத் தொடர்ந்து, மேரி பஸ்ரியனே அப்பிள்ளைகளுக்கும் பாதுகாவலனாக இருந்துவந்தார். இன்று அப்பிள்ளைகள் தமது பாதுகாவலனையும் இழந்துவிட்ட பரிதாப நிலையைக்கண்டு வெதும்பினார்.

பஸ்ரியனின் நண்பர்கள், சகோதரக் குருக்கள், துறவியர்கள், கன்னியர்கள் தந்தையாரைத் தேடிவந்து ஆறுதல் கூறி, அனுதாபம் தெரிவித்தனர்.

தனது மைந்தனின் இறப்பு, தனக்கு—தன் குடும்பத்துக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல ஒரு சமூகத்துக்கே ஏற்பட்ட பேரிழப்பு. அவர் வாழ்க்கையும், மரணமும் மற்றவர்களுக்கு முன்மாதிரியானவை என்பதைப் பிறர்மூலம் சொல்லக் கேட்கும்போது தனது மைந்தனின் பெருமைக்கும், தியாகத்துக்கும் முன்னால் அவரைப் பெற்ற தான் ஒரு சிறியவனே என்கின்ற எண்ணம் முகிழ்த்தது. அத்துயரத்துள்ளும் ஒரு பெருமித உணர்வு தோன்றவே செய்தது. தன்னைத் தேடிவந்து ஆறுதல் கூறியவர்களுக்கு அவர் கூறிய வார்த்தை : "I am not worthy to say that I am the father of this priest"

ஆமாம், " இந்தக் குருவுக்குத் தந்தை எனக் கூறிக் கொள்ளும் தகைமை எனக்கு இல்லை" என்று கூறினர்.

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான்கொல் என்னும் சொல்"

இவனைப் பெறுவதற்கு இவனுடைய தந்தை என்ன தவம் செய்தானோ" என்று மற்றவர் வியந்துரைக்க வாழ்வதே பிள்ளையானவன் பெற்றவனுக்குச் செய்யும் பேருதவியாம் என்ற வள்ளுவன் தன் கூற்றை வாழ்ந்து காட்டிவிட்டார் மேரி பஸ்ரியன்.

பெற்ற தாய் தந்தையர் மட்டுமல்ல யாழ்ப்பாணத் திருச்சபைத் தாயே எண்ணிப் பெருமைப்படுமளவுக்கு வாழ்ந்து காட்டியவர் மேரி பஸ்ரியன் அடிகள்.

★

(2)

# பெற்ற மனம்

முன்னர் இங்கு குறிப்பிட்டதுபோன்று திருமதி மேரி திரேசா மனுவேல்பிள்ளை இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா என்று பறந்துகொண்டிருந்தார். அந்தத் தாய்ப் பறவை தற்பொழுது குடிகொண்டிருந்த கூடு அமெரிக்காவில் மஸ்ஸசுசட் மாநிலத்தில் உவால்போல் நகரில் இருந்தது. அங்குதான் அவரது மூத்தமகன் அன்ரன் தன் குடும்பத்தோடு வசித்துவந்தார். மகன், மருமகள் பாவரு, பேரக் குழந்தைகளின் அன்பில் மூழ்கிக்கொண்டிருந்தார்.

1984-ம் ஆண்டு ஏப்ரல் 12-ம் நாள் கட்டுநாயக்கா விமான நிலையம்வரை வந்து பஸ்ரியன் தாயாரை இங்கிலாந்துக்கு வழியனுப்பிவைத்தார். அந்தப் பிரிவுதான் அவர்களிடையே நிகழும் இறுதிப் பிரிவு என்பதை பஸ்ரியனோ, தாயாரோ அன்று உணர்ந்திருக்கவில்லை. அந்த அன்புத் தாய்க்கும், தனயனுக்கும் கிடைத்த இறுதித் தரிசனம் அதுதான்.

அன்றுமுதல் இங்கிலாந்தில் மகள் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அதே ஆண்டு கார்த்திகையில் அமெரிக்காவுக்கு வந்துவிட்டார்.

மேலைநாட்டின் சீதளமும், வளமும் வனப்பும்மிக்க வாழ்வும், மகன் மருமகள் பேரப்பிள்ளைகளின் அன்பும் கொள்ளை கொள்ளையாகக் கிடைத்தாலும், அவரது மனம் இலங்கையை நோக்கியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அதற்கு முக்கிய காரணம் அப்பொழுது வங்காலையில் பங்குத் தந்தையாகப் பணியாற்றித் தொண்டிருக்கும் அவரது இரண்டாவது புதல்வன் பஸ்ரியன்தான்.

பஸ்ரியன் குழந்தைப்பருவம் தொட்டு குளப்படிகாரனுயிருந்தாலும் தாயின்மட்டில் பேரன்பு கொண்டிருந்தார். ஒரு தாயின் அன்பின் முன்னுல் பிள்ளைகள் எல்லோருமே சமமானவர்களென்றூலும் — 'விஞ்ஞானப் பட்டதாரிகளின் தாய், எக்கவுண்டனின் தாய்' என்பதில் கிடைக்கும் பெருமையைவிட, ஒரு குருவானவரின் தாய் என்பதில் கிடைக்கும் பெருமை பெரிதல்லவா! அந்தப் பெருமையைப் பெற்றுக் கொடுத்தவர் பஸ்ரியன்தானே ! அத்தகைய மைந்தன்மீது ஒருபடி அன்பு அதிகமாக இருக்கத்தானே செய்யும். அத்தோடு மற்ற மூன்று பிள்ளைகளும் வசதியாகவும், அமைதியாகவும் வாழ்க்கை நடாத்திக்கொண்டிருக்கும்போது — பஸ்ரியன் மட்டும் இந்த வசதி, வாய்ப்பு, சுகம் எதையும் நாடாது துறவியாக எளிமையில் வாழ்ந்து கொண்டிருந்தார். கிழிந்து தையல்போட்ட அங்கியும், காலணி இல்லாத அவர் பாதங்களும், தனக்கென்று எதையும் சொந்தம் கொண்டாடாத மனுேநிலையும், ஓய்வின்றிப் பம்பரம்போல் தானும் சுழன்று மற்றவர்களையும் இயங்கவைக்கும் சுறுசுறுப்பும் உடைய மகனை எப்படிச் சாதாரணமாக நினைத்துவிட முடியும் ? அவரது வாழ்க்கையையும் போக்கையும் நேரடியாகக் கண்டவராயிற்றே!

மானிப்பாயில் பஸ்ரியன் பங்குத் தந்தையாக இருந்தபோது நிகழ்ந்த அந்தச் சம்பவத்தை அந்தத் தாய்மனம் அடிக்கடி எண்ணிப்பார்ப்பதுண்டு.

இளவாலையில் இருக்கும் தாயார் தனது மகனைப் பார்ப்பதற்காக அடிக்கடி அங்கு செல்வது வழக்கம். அது ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஒரு செவ்வாய்க்கிழமை. அந்த மாதம் 25-ம் திகதி பஸ்ரியன் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட நினைவுநாள். அன்று யாழ்ப்பாணத்திலுள்ள அவரது சகோதரன் சாம்மாஸ்டர் வீட்டுக்குச்சென்று தாயார் மகனைச் சந்திப்பதற்காக மானிப்பாய் அந்தோனியார் கோவிலடியில் இறங்கி அறைவீட்டுக்குச் சென்றார். கோவில் அறைவீட்டில் பஸ்ரியன் இல்லை. கோவில் மெழுகுதிரிக்கடையில் நிற்பவரிடம் விசாரித்தபோது அவர் கூறினார் :

" அம்மா, சுவாமி இப்ப இங்கே நிற்கிறது குறைவு. அன்னம்மாள் கோவில் திருத்த வேலைகள் நடக்குது. அங்கே தான் அவர் நிற்பார். மெழுகுதிரியைக் கொழுத்தி மன்றாடிப் போட்டு அங்கேதான் போங்கோ. அங்கபோய்ப் பாருங்கோவன் அவர் நிற்கிற கோலத்தை ! வேலைசெய்யிற ஆட்களோட தானும் ஒருவராய் வேலை செய்துகொண்டுதான் நிற்பார். நேரில் பார்த்தால் எல்லாம் விளங்கும்."

தாயார் அன்னம்மாள் கோவிலை அடைந்தபோது மெழுகுதிரிக் கடைக்காரர் சொன்னது உண்மையாகவே இருந்தது.

கோவில் திருத்தவேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. கல்லுத்தூக்கிக் கொடுத்துக்கொண்டு நிற்பவர்கள், சாந்து குழைத்துக்கொண்டு நிற்பவர்கள், தண்ணீர் ஊற்றுபவர்கள் இப்படியாக ஒரே வேலை அமளி. இத்தனை பரபரப்புக்கள் நடுவில் பஸ்ரியன் நின்றுகொண்டிருந்தார்.

அரைக்காற்சட்டை, வெள்ளை பெனியன், தலையில் ஒரு தொப்பி. இந்தக் கோலத்தில் சாரத்தின்மேலே நின்று வேலைசெய்து கொண்டிருப்பவர்களுக்கு கயிற்றின்மூலம் வாளியில் சீமெந்துக் கலவை அனுப்பிக்கொண்டிருந்தார். அந்த

நிலையில் அவரைப் பார்ப்பவர் எவரும் அவரை ஒரு குருவானவர் என்றே கூறமாட்டார்கள். அங்கு வேலைசெய்து கொண்டிருக்கும் இளைஞர்களில் அவரும் ஒருவர் — அவ்வளவுதான்.

மகன் வேலைசெய்யும் அழகைத் தாயார் பார்த்தபடி கொஞ்சநேரம் நின்றுகொண்டிருந்தார். பஸ்ரியன் கவனித்ததாய் இல்லை. பஸ்ரியனின் அம்மாவை அங்கு நின்றவர்களுக்குத் தெரியும். ''அம்மா வந்திருக்கிறு'' என்று மற்றவர்கள் சொன்னபின்னரே அம்மாவை அவர் பார்த்தார். ''அம்மா'' என்று அழைத்தபடி தாயை நோக்கி வந்தார்.

உடல் முழுவதும் வியர்த்து வழிந்துகொண்டிருந்தது. ''இது என்ன கோலம், கசக் (cassok) கூடப் போடாமல்?''

குருவாகிய தனது மகன் அவர் தகைமைக்குரிய கோல உடையில் இல்லையே என்பதில் அந்தத் தாய்க்கு ஒரு ஆதங்கம்.

தாயின் அந்தக் கேள்விக்குச் சிரித்தபடி பதில் சொன்ஞர் பஸ்ரியன். ''கசக்குடன் நின்று எப்படியம்மா வேலை செய்கிறது. நானும் கூடநின்று வேலைசெய்தால்தான் மற்றவர்களும் சுறுசுறுப்பாய் வேலை செய்வார்கள். இன்னும் கொஞ்சநாளில வேலை முடிந்துவிடும்.''

குருப்பட்ட நினைவுதினத்தை நினைவுபடுத்தவந்த அன்னை, பொறுப்புணர்ச்சியுள்ள ஓர் ஊழியனை தன் மகனைக் கூலிகாரன் தோற்றத்திலே கண்டார். மகனது அந்தத் தோற்றத்தை அவர் என்றும் மறந்ததில்லை. தன்னை மறந்து, தன் தகைமையை மறந்து எல்லோருக்கும் ஊழியனுக விளங்கி எல்லோர் இதயத்திலும் இடம்பிடித்துக்கொண்ட பஸ்ரியனைத் தாயார் என்ன — அவரை அறிந்த யார்தான் மறக்கமுடியும்.

செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தவர். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இருக்கும் சகோதரர்கள் அடிக்கடி பணம் அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். பஸ்ரியன் நினைத்தால் டாம்பீகமாக வாழலாம். இத்தனை இருந்தும் தன்னை ஒரு கூலிக்காரனாக மாற்றி தன்னையே வருத்திக்கொண்டிருக்கும் பஸ்ரியனை — வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தனது மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அந்தத் தாயுள்ளம் அடிக்கடி கவலைப்படுவதுண்டு.

அவருடைய கவலைக்கு இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. மன்னாரில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளையும், அதனால் ஏற்பட்டுவரும் அசம்பாவிதங்கள் அவலங்கள் பற்றியும் அவர் படித்தும், கேள்விப்பட்டும் வருகின்றார். அவரது பிள்ளையின் குணம் அவருக்குத் தெரியாதா? தனக்கு ஆபத்து வரக்கூடும் என்ற நிலையிலும் பேசாது ஒதுங்கி இருக்க மாட்டார், அல்லது ஓடி ஒளிய மாட்டார். ஏதோ ஒருவிதத்தில் தலையிட்டே தீருவார். அவரது இந்தத் தீவிரபோக்கால் தனக்கு ஏதும் ஆபத்தைத் தேடிக்கொள்ளக் கூடாதே என்ற அச்சம் வேறு அவரை வாட்டியது.

அதனாலேதான் அவர் மனதில் ஒரு திட்டம் உருவாகியிருந்தது. எப்படியாவது பஸ்ரியனை இங்கிலாந்துக்கு அல்லது அமெரிக்காவுக்கு அழைத்துவிட வேண்டும் என்பதுதான் அது. தானும் பிள்ளைகளும் அவருக்குக் கடிதம் எழுதும் போதும், தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசும் போதும் எல்லாம் அங்கு வரும்படி அழைப்பு விடுத்துக் கொண்டே இருந்தனர்.

வெளிநாடு செல்வதற்கும், படிப்பதற்கும் யாருக்குத் தான் ஆசையில்லை? வெளிநாடு செல்வதும், படிப்பதும் (f)பாஷனாகிவிட்ட காலகட்டமிது. பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் கசந்து அந்நியநாட்டுக் கலாசாரமும் கல்வி

யுமே மேலானது என்ற மோகம் தலைதூக்கி நிற்கின்ற துன்ப நிலை. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'தல் எமது பண்பாடுதான். அத்திரவியத்துள், கல்விச் செல்வத்தையும் கொள்ளலாம். ஆனுல் தான் கற்ற கல்வியும், பெற்ற செல்வமும் தன்னுட்டுக்கும், மக்களுக்கும் பயன்படாது அந்நிய நாட்டில் விதைக்கப்படுவது கண்டு நாட்டுப்பற்று இனப்பற்று உள்ள எவரும் வேதனைப்படாமல் இருக்கமுடியாது. மேலைத் தேயம் சென்ருல்தான் மேதையாகலாம் என நினைப்பவர்கள் மலிந்த நம்மவர்கள் மத்தியில், அந்த மாயையில் மயங்காது தனித்துவத்துடன் பஸ்ரியன் வாழ்ந்தார் என்பது மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வெளிநாடு செல்லும் வாய்ப்பு பஸ்ரியனை வலியத் தேடி வந்தது. ''உனக்கு ஆகக்கூடிய செலவுகளை நாங்கள் பொறுப்பேற்கின்ருேம். நீ வா'' என்று சகோதரரும் தாயாரும் வலியுறுத்தி அழைத்தபொழுதெல்லாம், ''எங்களுடைய மக்கள் துன்பப்படும் இந்தவேளையில் நான் மட்டும் தப்பி ஓடி வாழவேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லை'' என்று பஸ்ரியன் மறுத்துவிட்டார்.

எனினும் வெளிநாட்டுக்கு ஒருமுறை போய்வர வேண்டும் என்ற எண்ணம் அவருள் இருந்தது — அதுவும் உடனடியாகவல்ல. 1984-ம் ஆண்டு முடிவதற்குள் நாட்டுப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு அமைதி நிலவிவிடும். அதன் பின்னர் 1985இல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் சென்று தன் தாய் சகோதரங்களுடன் தான் குருவாகிப் பத்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாட வேண்டும் என்று எண்ணியிருந்தார். அதுவே தாய் சகோதரங்களினதும் ஆசையாக இருந்தது.

அதனுற்றுன் அந்த ஆண்டு (1984 ஏப்ரல்) தாயாரை இங்கிலாந்துக்கு வழியனுப்பி வைத்தபோது, "அம்மா, போனமுறை நீங்கள் வாறபோது எனக்கெண்டு கனசாமான்

கொண்டுவந்து கஷ்டப்பட்டனீங்கள். வாறவருஷம் வாற போது எனக்கென்று ஒன்றும் கொண்டுவர வேண்டாம். ஏனென்றால், ''வாறவருஷம் தை மாதத்தில் நான் வெளிக் கிட்டுவிடுவேன்'' என்று தாயாருக்குச் சொல்லி அனுப்பி யிருந்தார்.

1984 ஆவணி 12ஆம் நாள் மன்னார், சங்குப்பிட்டிப் பாதையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இரா ணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர். அதைத்தொடர்ந்து மன்னார்ப் பட்டினம் தீப்பற்றி எரிந்தது.

கொலைவெறி கொண்ட இராணுவம் வீடு வீடாகச் சென்று மக்களைத் துன்புறுத்தியது. அதில் ரவீந்திரன் பங்கி ராஸ் எனும் இளம் ஆசிரியர் சுட்டுக் கொலை செய்யப்பட் டார். 'கலாவதி கபே' முதலாளி கதிரவேலு சுடப்பட்டு எரிகின்ற கடைக்குள் எறிந்து கருக்கப்பட்டார். எங்கும் வெடிமுழக்கமும், பயங்கரமும். பொதுமக்கள் ஆலயங்களை யும் பாடசாலைகளையும் நோக்கித் தஞ்சம் தேடி ஓடினர்.

இந்தச் செய்திகள் எல்லாம் அப்பொழுது இங்கிலாந்தில் மகளோடு இருந்த தாயாருக்கு எட்டின. தாயும், மகளுமாக பஸ்ரியனை எண்ணிக் கலங்கினர். இனியும் பஸ்ரியனை மன் னாரில் இருக்கவிடக்கூடாது என்ற முடிவில் பஸ்ரியனோடு தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றனர். ஆனல் அம்முயற்சி உடனடியாகக் கைகூடவில்லை. புரட்டாதி மாதம் 9-ம் திகதியே வங்காலைக்குத் தொடர்பு கிடைத்தது.

தாயும் மகளும் ஆவலுடனும், பரபரப்புடனும் பஸ் ரியனுடன் பேசினர். அவர்கள் பேச்சு முழுவதும் நாட்டு நிலைமையை அறிவதிலும், பஸ்ரியனை உடனடியாகப் புறப் பட்டுவரும்படி அழைப்பதாகவுமே இருந்தது.

ஆனல் பஸ்ரியன் மிகச் சாதாரணமாகவே பதில் கொடுத்துக்கொண்டிருந்தார். "இப்போ மன்னாரில அமைதி நிலவுகிறது. அசம்பாவிதங்கள் ஒன்றுமில்லை. எங்களைப்பற்றி ஒன்றும் நீங்கள் அதிகம் கவலைப்பட வேண்டாம்."

"பப்பா எப்படி இருக்கிறார் ?

"பப்பா சுகமாய் இருக்கிறார், நீங்கள் எப்போ அம்மா இலங்கை வரப்போறீங்க ?"

"நான் கார்த்திகை 21-ம் திகதி அமெரிக்காவுக்குப் போய் பிறகு தை 23இல்தான் சிறீலங்காவுக்கு வர இருக்கிறன். நீர் எப்ப வெளிக்கிடுகிற எண்ணம் ?"

"இப்போதைக்கு வெளிக்கிடுற எண்ணம் எனக்கில்லையம்மா. எல்லாம் நீங்கள் வந்தபிறகு யோசிக்கலாம். வாற வருஷம் நீங்கள் வந்தபிறகு இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போறதுக்கு ஒழுங்குகளைச் செய்யலாம்."

"ஏன் இந்த வருஷம் நீர் வெளிக்கிட்டாலென்ன ?"

"வாற வருஷமென்றால் நாடும் ஓர் அளவுக்கு அமைதி நிலைமைக்கு வந்திடும். அதோட பப்பாவும் இங்க தனிய இருக்கிறார். பிறேமினியும், தர்மினியும் (சாபமாஸ்டரின் பிள்ளைகள்) தனிச்சுப்போய் விடுவார்கள். எல்லாம் நீங்கள் வந்தபிறகு பார்ப்பம். இப்ப எனக்கு உடனடியாய் வெளிக்கிடவேணும் என்ற அவசரமும் இல்லை."

"நீர் மிகவும் கவனமாய் இருக்கவேணும்."

"நான் மிகவும் கவனமாய்த்தான் இருக்கிறேன் அம்மா. அப்படி எனக்கு ஏதும் ஆபத்து வாறதென்றால் அது கடவுளின் சித்தம். அப்படியென்றாலும் நல்ல பெயரோடுதான் சாவேன். அதற்காக நீங்கள் என்னையிட்டுக் கவலைப்பட வேண்டாம்."

அத்தோடு, அவர்கள் பேச்சு அன்று முடிவடைந்து விட்டது. அதுதான் அவர் தன் தாயாரோடும், தங்கையோடும் இறுதியாகப் பேசிய வார்த்தைகள். தன் அன்பு மகனின் குரலை அத்தாய் இறுதியாகக் கேட்ட தினம்.

தைமாதம் 25-ம் திகதியை அந்தத் தாயின் உள்ளம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

1979 ஆவணி 11இல் முதன்முதலாக அவர் அமெரிக்காவிலிருந்து இலங்கை திரும்பிய அன்று பஸ்ரியனும், அவர் தந்தையும், இன்னுமொரு நண்பரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் காத்துநின்று வரவேற்றதையும் தான் அவர்களைக் கண்ட மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்ததையும் அவர் மனம் மீண்டும் அசைபோட்டு மகிழ்ந்தது.

1984 மார்கழி நாலாம் திகதி மன்னார்—முருங்கன் வீதியில் நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு இராணுவ வீரன் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மன்னார்-வவுனியா வீதியில் உள்ள கிராமங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் இராணுவத்தினரால் ஈவ இரக்கமின்றிக் கொலைசெய்யப்பட்டனர்.

இந்தக் கொடுமைகள் இல்கிலாந்தில் இருந்த பஸ்ரியனின் சகோதரி பற்றிமாவுக்கு எட்டியது. தன் சகோதரனை எண்ணிக் கலங்கிய பற்றிமா, அமெரிக்காவில் இருக்கும் தன் தாயாருடன் தொலைபேசியில் உடன் தொடர்பு கொண்டார்.

"அம்மா, இந்தமுறையும் ஆமிக்காரங்கள் மன்னார்ப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்களைக் கண்டகண்ட இடங்களில் எல்லாம் அநியாயமாகச் சுட்டுக்கொண்டிருக்கிறாங்கள். சின்னண்ணன் இதுகளைப் பார்த்துக்கொண்டுசும்மாய் இருக்க மாட்டார். எனக்கு அவரை நினைக்கத்தான் பயமாயிருக்குதம்மா. வேலையால அண்ணன் வந்ததும் அவரை எப்படியும் உடனே கூப்பிடவேணுமென்று சொல்லுங்கோ அம்மா" என்று வலியுறுத்திக் கூறினார்.

மகன் வேலைமுடிந்து வரும்வரை அந்தத் தாயாரால் பொறுத்திருக்க முடியவில்லை. அன்ரனுடைய அலுவலகத்துக்கே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். தாயார் சொல்லுவதையெல்லாம் பொறுமையாகக் கேட்ட அன்ரன் பதில் கூறினார்.

"எனக்கும் கவலையாகத்தான் இருக்குதம்மா. ஆனால் பஸ்ரியன் விரும்பாமல் நான் என்ன செய்யலாம். கடிதம் போட்டேன், போனில் கதைத்தேன். பஸ்ரியனுக்கு இடத்தைவிட்டு வெளிக்கிடச் சம்மதமில்லை. இப்ப வெளிக்கிடுகிற நோக்குமில்லை. பிறகு நான் என்ன செய்யட்டும்."

அமெரிக்காவில் சகோதரர்களும், தாயும், மைத்துனியும், இங்கிலாந்தில் சகோதரியும் கணவரும் பஸ்ரியனுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

இலங்கை புறப்படும் நாள் நெருங்க நெருங்க மகனைக் காணவேண்டும் என்ற துடிப்பும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இலங்கையில் நடைபெறும் அசம்பாவிதங்களைக் கேள்விப்படும் போதெல்லாம் அச்சம் எழுந்து அச்சுறுத்திக் கொண்டிருந்தது. எனவே கார்த்திகைமாதம் தாயார் பஸ்ரியனுக்குக் கடிதம் எழுதிப் போட்டார்.

அக்கடிதத்தில்,

"தைமாதம் 23-ந் திகதி நான் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்குவேன். இந்த நாளில் கொழும்புக்குப் பிரயாணம் செய்வது ஆபத்தானது என்றால் நீர் வீணாக வந்து ஆபத்தைத் தேடவேண்டாம். நீர் அறிவித்தால் நான் பிரயாணத்தைப் பின் போடுவேன்" என்று குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் மகனது குணம் அவருக்குத் தெரியும். தனக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அறிந்திருந்தாலும் அம்மாவைப் பார்க்கவராமல் இருக்கமாட்டார் என்பதை அவர் அறிவார்.

கிறிஸ்துமஸ் விழா நெருங்கிக்கொண்டிருந்தது. அமெரிக்கர் கொண்டாடும் பெருவிழாக்களில் அதுவுமொன்று. கிறிஸ்துமஸ் தினம் நெருங்க நெருங்க அலங்காரங்களாலும், ஆரவாரங்களாலும் நாடு விழாக்கோலம்பூணத் தொடங்கி விட்டது. பெரியவர்களே சிறுவர்களாகிக் கிறிஸ்துமஸ் கொண்டாடும் நாடு அமெரிக்கா. அன்ரனுடைய வீட்டிலேயே இரண்டு குழந்தைகள். அதிலும் அன்ரனுடைய துணைவியார் ஓர் அமெரிக்கப் பெண். எனவே அந்த ஆரவாரமும் மகிழ்ச்சியும் அவர்கள் வீட்டில் விதிவிலக்காகி விடுமா. அவர்களது இல்லத்திலும் கிறிஸ்துமஸ் களைகட்டத் தொடங்கிவிட்டது.

ஆனல், அத்தனை கலகலப்பினுள்ளும் எந்த வருடத்திலும் தோன்றியிராத தளர்ச்சியும், மனச் சோர்வும் பஸ்ரியனின் தாயார் திருமதி மேரி திரேசா மனுவேற்பிள்ளைக்குத் தோன்றியிருந்தது. அந்தத் தளர்ச்சியும் சோர்வும் அச்சமாகப் பரிணமித்தது கிறிஸ்துமஸ் தினமான மார்கழி 24-ம் திகதி இரவுதான்.

வழக்கமாகத் தமிழ்ப் பெண்கள் தாம் திருமணத்தன்று கட்டிய கூறைச் சேலையைப் பத்திரப்படுத்தி வைப்பார்கள். ஏதும் மங்கலகரமான தினங்களில் மட்டும்தான் அதனைக் கட்டுவார்கள்.

பஸ்ரியனின் தாயாரிடம் இன்னுமொரு சேலை இருந்தது. அதனை மிகவும் பூச்சியமாகக் காப்பாற்றி வருகின்றார். அவர் இலங்கையை விட்டுப் புறப்படும் வேளையில் எல்லாம் அச்சேலையையும் தன்னோடு கூடவே எடுத்துச் சென்றுவிடுவார். ஏதும் விஷேட தினங்களில் மட்டுமே அதனைக் கட்டுவார். அது சரிகை வேலைப்பாடமைந்த நீல நிறக் காஞ்சிபுரம் பட்டுச்சேலை.

அச்சேலை, 1975-ம் ஆண்டு பஸ்ரியனின் குருப்பட்ட விழாவுக்கு உடுத்துவதற்கென்றே தாயார் வாங்கியது. அவ் வாண்டின் சித்திரை 25—ம் திகதி குருப்பட்ட தினத்தன்று தான் அப்பட்டுச்சேலையை முதன் முதலில் அவர் கட்டினர். அதனைப் பார்க்கும் பொழுதெல்லாம் தன் அன்புமகன் பஸ் ரியனின் நினைவு தோன்றும் என்பதற்காகவே அதை அவர் தான் போகுமிடமெல்லாம் எடுத்துச் செல்வார்.

அன்றும் கிறிஸ்துமஸ் இரவுப் பூசைக்காக அந்தச் சேலையை எடுத்து உடுத்தினர். அதனை உடுத்தியபின்னர் மகனின் குருப்பட்ட விழாவுக்குப் புறப்பட்டு நிற்பதுபோன்ற ஓர் உணர்வு. சுமார் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற அந்த விழாவின் நினைவுகள் மனதில் பசுமையாக எழுந்தன. அதே இனிய நினைவுகளுடன் காலுக்கு உறை களை மாட்டி, காலணியின் நாடாக்களைக் கட்டுவதற்காகக் குனிந்தார். அப்பொழுதுதான் அந்தத் துர்க்குறி நிகழ்ந்தது.

பஸ்ரியனின் குருத்துவப் பட்டமளிப்பு விழா நினைவுக ளுடன் குனிந்த அந்த வேளையிற்றன் அவர் அணிந்திருந்த அந்த அழகிய பட்டுச்சேலை பின்புறமாகப் பிரிந்து கிழிந்தது. அந்தவேளையில் அச்சேலை மட்டுமல்ல, அந்தத் தாயின் நெஞ் சமே கிழிந்ததுபோல் இருந்தது.

அந்தக் கணம்முதலே அவ்வன்னையின் மனம் அமை தியை இழந்தது பஸ்ரியனின் நினைவுச் சின்னமாகிய அச் சேலை கிழிந்த நேரம் முதல் பஸ்ரியனுக்கு ஏதும் ஆபத்து நிக ழப் போகின்றதோ ? என்ற அச்சம் பிடித்துக்கொண்டது.

ஆயினும், ''சீ... அப்படி எதுவும் நடக்காது பட்டுச் சேலை மடித்தபடி அதிகநாள் பெட்டியில் இருந்தால் இப்படித் தான் கிழிந்துபோகும் என்று அம்மா அந்தநாளில் சொன் னவதானே'' என்று தனக்குள்தானே ஆறுதல் கூறிக்கொண் டார். அப்படியிருந்தும் ஏனோ அந்த நினைவுகள் மீண்டும் மீண்டும் எழுந்து கலக்கிக்கொண்டிருந்தன.

பஸ்ரியன் மோட்டார் சைக்கிலில் போவதென்றால் 'பிசாசு' ஓட்டம் ஓடுவார். அப்படித்தான் ஏதும் நடந்து கை காலுக்கு மோசம் ஏற்பட்டிருக்குமோ ?

அப்படிக் கற்பனைசெய்து பார்க்கவே முடியாமலிருந்தது. "ஆண்டவரே, என் பிள்ளைக்கு எதுவும் நடந்துவிடக்கூடாது" என்று தனக்குள் பிரார்த்தித்துக்கொண்டார். நினைவுக்கு வந்த புனிதர்களையெல்லாம் வேண்டிக்கொண்டார்.

அன்ரனுக்கு அன்று இரவு வேலையென்றாலும் கிறிஸ்துமஸ் திருப்பலியில் குடும்பமாகப் பங்குகொள்வதற்காக விடுப்பு எடுத்துக்கொண்டு வந்திருந்தார். காரில் ஆலயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கையில் மீண்டும் தன் மனதை வாட்டிக்கொண்டிருக்கும் அந்த விடயத்தை மகனிடம் கூறினார் தாயார்.

"என்னவோ தெரியவில்லை மகனே, எனக்கு மனம் அமைதியில்லாமல் இருக்கிறது. இந்தமுறை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டபோது முதன்முதல் இந்தச் சேலையையும், இதற்குரிய பாவாடை சட்டையையும்தான் பெட்டியில எடுத்து வைத்தனான். இன்றைக்கு இப்படி நடந்ததற்குப் பிறகு தம்பியை நினைத்தால் கவலையாய் இருக்குது அவருக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று பயமாயிருக்குது. அந்தச் சேலை கிழிந்த சம்பவத்தையிட்டு அடிக்கடி இப்படிச் சங்கடப் பட்டுக்கொண்டார்.

அன்றைய கிறிஸ்துமஸ் திருப்பலியை பஸ்ரியனுக்காகவே ஒப்புக்கொடுத்தார் சின்ன இயேசுவிடம் அவருக்காகவே மன்றாடினார். அன்றைய கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் முடிய அதிகாலை ஐந்துமணி ஆகிவிட்டது. அந்தக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளிலும், மகிழ்ச்சிகளிலும் அந்த அன்னையால் முழுமையாகப் பங்குகொள்ள முடியவில்லை.

24-ம் திகதி இரவு நடந்த நிகழ்ச்சியினுல் ஏற்பட்ட மனத்தாக்கம் நீங்கும் முன்னர் தை முதலாம் நாள் நடந்த மற்றுமொரு சம்பவத்தால் மனம் மேலும் கலங்கத் தொடங்கியது.

வருடப்பிறப்பன்று வெண்பனி (snow) கடுமையாகக் கொட்டிக்கொண்டிருந்தது குளிர்காற்று மறுபுறம். தாங்க முடியாத அளவுக்குக் கொடுமையாக இருந்தது.

வருடப்பிறப்பன்று காலையிலேயே கோவிலுக்குக் குடும்பமாகப் போகவேண்டும் என்று விரும்பினர், அன்ரன் குடும்பத்தவர்கள். ஆனல் கொட்டும் கொடும் பனிக்குளிர் காற்றில் பிள்ளைகள் இருவரையும் கொண்டு செல்வது பிரச்சனையாகவிருந்தது. நான்கு வயதும், இரண்டு வயதுமான சிறுவர்கள் அவர்கள். எவ்வளவுதான் குளிர். பாதுகாப்பு உடைகளை அணிந்திருந்தாலும் அதையும் மீறி அவர்களை நடுங்க வைத்தது இயற்கை. எனவே சிறுவர்களையும் மனைவியையும் வீட்டில் விடுத்து தாயோடு ஆலயத்தை நோக்கிக் காரில் கிளம்பினுர் அன்ரன்.

அவர்கள் நற்கருணைநாதர் ஆலயத்தை அடைந்த போது ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. அந்தப் பனியிலும் மழையிலும் மக்கள் ஆலயத்துக்கு வரமாட்டார்கள் என்ற எண்ணத்துடன் ஆலயம் அன்று அந்த நேரத்தில் திறக்கப்படவில்லை. எனினும், ''வந்ததுதான் வந்தோம். ஆலய வாசலில் நின்று பத்துப் பரமண்டல மந்திரம், பிரிய தத்தமந்திரமாவது சொல்லிவிட்டுப் போவோம்'' என்ருர் அன்ரன்.

மகனுடைய ஆலோசனைப்படி தாயாரும் இறங்கி ஆலய வாசலில் மூடிய கதவுகளின் முன்னின்று செபிக்கத் தொடங்கினர் இருவரும். அப்பொழுதுதான் அந்த ஓசை அவர்களுக்குக் கேட்டது.

''தம்பி, எனக்குத் துக்கமணி அடிக்கிறமாதிரி ஒரு சத்தம் கேட்குது. உமக்குக் கேட்குதா?''

''ஓம், எனக்கும் கேட்குது.''

இருவரும் மேலே அண்ணாந்து ஆலய மணிக்கூண்டை நோக்கினர். அந்தக் கோவில்மணி எவ்வித சலனமுமற்றுத் தொங்கிக்கொண்டிருந்தது. எனவே அது அந்த ஆலய மணியின் ஓசையல்ல. ஆனால் அந்தவேளையில் எங்கிருந்தோ எழுந்த துக்கமணியின் ஓசை இவர்கள் காதுகளில் விழுந்தது எந்தத் திசையில் இருந்து வருகிறது என்றுகூட அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

கிறிஸ்துமஸ் இரவில் ஓர் அமங்கல நிகழ்வு!

புதுவருடப்பிறப்பன்று இன்னுமொரு அமங்கல நிகழ்வு!!

தாய்மனது மீண்டும் குழம்பித் தவித்தது. பஸ்ரியனின் நினைவு மீண்டும் எழுந்து கலக்கத்தை உண்டாக்கியது. செபத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பியபோதும் மனம் சாந்தியடையவில்லை. காரில் வழிநெடுக அதைப்பற்றியே இருவரும் பேசிக்கொண்டு வந்தனர்.

''தம்பி, எனக்கென்னவோ பயமாகத்தான் இருக்குது. எங்கட குடும்பங்களில யாருக்கோ என்னவோ நடக்கப் போகுது: போன செவ்வாய்க்கிழமை இரவு நத்தார்ப் பூசைக்கு வெளிக்கிடுகிறபோது பஸ்ரியனுடைய குருப்பட்டத்துக்கு உடுத்தின சேலை கிழிந்தது ஒரு துர்க்குறி. இன்றைக்கு இப்படி. எனக்கு பஸ்ரியனை நினைக்கத்தான் கவலையாய் இருக்கு.''

சகுன சாஸ்திரங்களில் அறவே நம்பிக்கையில்லாத விஞ்ஞானப் பட்டதாரியான அன்ரனுக்கே அன்று நடந்துவிட்ட நிகழ்வு ஒருவித தளர்ச்சியைக் கொடுத்திருந்தது. தாயின்

கூற்றை மறுத்துரைக்கவில்லை. 'அப்படி எங்கள் குடும்பத்தில் யாருக்கு, என்ன நடக்கப்போகின்றது' என்ற ஆராய்ச்சியில் இறங்கியது. என்றாலும், தாய் பஸ்ரியனை நினைத்துக் கவலைப்படுவதைத் தவிர்க்க விரும்பியவராக, "தம்பிக்கு அப்படி ஓர் ஆபத்தும் நடக்காது. நீங்கள் மனத்தைரியமாய் இருங்கோ அம்மா" என்று ஆறுதல் கூறினர். ஆனால் மனதுமட்டும் ஏதோ ஒரு பேரிழப்பை எதிர்நோக்கி நிற்கும் நிலையில் இருந்தது.

மீண்டும் தைமாதம் நான்காம் திகதியன்று ஒரு பயங்கரக் கனவு :—

அமெரிக்காவில் இருந்து சவப்பெட்டியில் பிணம் ஒன்றை வைத்து சிறீலங்காவுக்கு அனுப்பிவைத்ததாகக் கண்டார் பஸ்ரியனின் தாயார்.

திடுக்கிட்டு எழுந்தார். இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. அவர் ஏற்கனவே மனதில் கொண்டிருந்த அச்சத்தின் காரணமாக அவர் உள்மனதில் ஆழப் பதிந்துவிட்ட கற்பனைகள், கனவில் இப்படியொரு காட்சியாகக் காட்டப்பட்டிருக்கலாம் என்று கருத இடமிருந்தாலும், மறுநாள் (இலங்கை நேரப்படி அன்று 5-ம் திகதி) நடைபெறவிருக்கும் பயங்கர நிகழ்வுபற்றி அவ்வன்புத் தாய்க்குக் கொடுக்கப்பட்ட முன்னறிவிப்பு என்றே கொள்ள வேண்டியுள்ளது.

கனவுகண்டு எழுந்தவருக்கு மீண்டும் தூக்கம்வர மறுத்தது. மீண்டும் மீண்டும் இலங்கை நினைவுகள், மகன் பஸ்ரியனின் நினைவுகள்.

இந்தக் கனவுக்குப்பின்னர் எங்கள் குடும்பத்தில் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஒன்று ஏற்படப்போகின்றது என்ற அவரது நம்பிக்கை உறுதியாகத் தெரிந்தது.

நான்கு வருடங்களுக்கு முன்னர்வரை இந்தக் கனவுகள், சகுனங்களில் அவருக்கு நம்பிக்கையில்லை. சகோதரன் சாம்மாஷ்டர் காலமான பின்னர் இப்படி ஒரு பயங்கரமான கனவு கண்டதன் பின்னர், 19-ம் நாள் சாம்மாஷ்டரின் மனைவி திடீரென அகால மரணமடைந்தார். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ஏனோ இந்தக் கனவு விடயத்தில் ஒருவித நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

பழைய கனவும், சாம்மாஸ்டரின் மனைவியின் சாவும் நினைவும் கூட வரவே எண்ணங்கள் பயங்கரமாக உருவெடுத்து அந்தப் பெற்ற மனத்தைக் கலங்கவைத்தன. மன்றாரில மறுபடியும் குழப்பமோ? அப்படியென்றால் பஸ்ரியன் சும்மா இருக்கமாட்டார். அந்த நிலையில் அவருக்கு ஏதும் ஆபத்து நிகழ்ந்துவிட்டதோ!......

அதன்பின்னர் தூக்கம் அறவே போய்விட்டது. "ஆண்டவரே, உமக்கென்று அர்ப்பணித்த பிள்ளைக்கு ஒரு தீங்கும் வரவிடாதேயும்" என்று மனம் பல தடவைகள் வேண்டிக்கொண்டது. எப்போ விடியும், தன் மனத்துயரை மற்றவர்களுடன் எப்போ பரிமாறிக்கொள்வேன் என்று காத்திருந்தார்.

விடிந்தது, மகனிடமும் மற்றவர்களிடமும் தான் கண்ட கனவுபற்றிக் கூறினார். என்ன ஆச்சரியம்! அன்ரன் கூட தானும் அப்படியொரு பயங்கரமான கனவு ஒன்று கண்டதாகக் கூறினார். அதனைக் கேட்டதும், ஏற்கனவே இருந்த பயம் இரட்டிப்பானது.

அன்ரனைப் பொறுத்தவரையில், அவர் அதையெல்லாம் சாதாரணமாக எடுத்துக்கொண்டார். ஏதோ தனக்கு ஏற்பட்ட மனப்பிரமைகளின் வெளிப்பாடுதான் இவ்வித கனவுகள் என்ற தத்துவ ரீதியான சிந்தனையில் தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டார்.

அன்று தைமாதம் 5-ம் திகதி சனிக்கிழமை காலை—இலங்கையில் 5-ம் திகதி மாலை.

அன்று இலங்கை நண்பரின் குடும்பம் ஒன்றுக்கு இலங்கை உணவில் இரவு விருந்தளிப்பதற்காக அன்ரன் தன் வீட்டில் ஏற்பாடு செய்திருந்தார்.

இரவு கனவுகண்ட நேரம்முதல் கலக்கத்துடன் இருக்கும் தாயாரையும் — ஒரு மாறுதல் கொடுக்க விரும்பி —சுப்பர் மார்க்கட்டுக்கு அழைத்துச் சென்று இரவு விருந்துக்காகப் பொருள்கள் வாங்கிக்கொண்டார். எனினும் அவருக்கு ஆறுதல் ஏற்பட்டதாகவில்லை.

விருந்துக்கு இடியப்பம் அவிக்கும்வேலை பகலே ஆரம்பமாகிவிட்டது. வரவிருக்கும் விருந்தாளிகள் தொகையைக் கணக்கிட்டு இடியப்பம் பிழிந்து அவிக்கும் பொறுப்பைத் தாயார் ஏற்றுச் செய்துகொண்டிருந்தார்.

அரைவாசி இடியப்பம் அவித்திருப்பார்.

மனதிலே இனந்தெரியாத பதற்றம் — உடலிலே ஒரு வித படபடப்பு, நடுக்கம் — காரணம் தெரியாத ஒரு தவிப்பு ...... அந்தநேரம்தான் ......

பஸ்ரியன் வங்காலையில் "அம்மா .........!" என்று கடைசி முறையாகக் கூவி அழைத்துப் பூமியிலே விழுந்த நேரம் — வங்காலையில் பஸ்ரியன் இட்ட அவல அழைப்பின் அதிர்வு அமெரிக்காவில் இருந்த அன்புத்தாயின் இதயத்தைத் தாக்கியது. வங்காலையில் உதிரம் பெருக்கெடுத்துப் பாய்ந்த அந்த வேளையில் அமெரிக்காவில் அவரைப் பெற்ற உதரம் துடித்தது, உதிரம் கொதித்தது.

தாயின் நிலையை அன்ரன் கவனித்தார். அம்மாவுக்கு ஒருநாளும் இப்படி இருந்ததில்லை. "அம்மா, நீங்கள் இடி

யப்பத்தை மட்டும் அவியுங்கோ. நாங்கள் மற்ற வேலைகளைக் கவனிக்கிறோம்'' என்றார்.

தொடர்ந்து கொஞ்சநேரம் அவித்தார். அதற்குமேல் முடியவில்லை. வைத்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டார். எண்ணம் எல்லாம் இலங்கையிலேயே இருந்தது.

பிற்பகல் மூன்று மணிக்கு விருந்தினர்கள் வந்தனர். வந்தவர்களோடுகூட கலகலப்பாய்ப் பேசுவதற்கு அவரால் முடியவில்லை.

தாயார் இரவுகண்ட கனவால் மனம் குழம்பியிருப்பதை அன்ரன் விருந்தினருக்குக் கூறி நிலைமையை விளக்கினார். ''இன்றைக்கு வங்காலைக்கு call எடுத்துக் கதைத்த பிறகுதான் அம்மா அமைதியாக இருப்பார்'' என்று சொல்லிக்கொண்டார்.

இரவு விருந்தைக்கூட தாயாரால் சுவைத்துச் சாப்பிட முடியவில்லை. அவர் எண்ணமெல்லாம் விருந்தினர் சென்றவுடன் வங்காலைக்கு call எடுத்துக் கதைக்கவேண்டும் என்பதிலேயே பதிந்திருந்தது.

இரவு விருந்தினர் சென்றதும், வங்காலைக்குக் call எடுக்க முயற்சித்தனர். ஆனால் வங்காலையுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்ற பதிலே கொழும்பில் இருந்து கிடைத்தது. எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தனர்; முடியவில்லை. அப்படியானால் யாழ்ப்பாணத்துக்குத் தொடர்பு தரும்படி கேட்டனர். அதுவும் முடியவில்லை. இரவு பதினொரு மணியாயிற்று. எனவே விடிந்ததும் ஞாயிற்றுக்கிழமை காலை மீண்டும் முயற்சித்துப் பார்ப்போம் என்ற முடிவுடன் படுக்கைக்குச் சென்றனர்.

6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 4-00 மணிக்கு அன்ரன் வீட்டுத் தொலைபேசி ஒலித்தது. அந்த ஒலியைத் தொடர்ந்து துயரச் செய்தி காத்திருக்கின்றது



இழப்பிலே துடிக்கும் இரத்த உறவுகள்

என்பதை அறியாமலே தூக்கக் கலக்கத்தில் ஒலிவாங்கியைத் தூக்கிக் காதுக்கும் வாயுக்குமாக அணைத்துப் பிடித்து, ''ஹலோ'' என்றார் அன்ரன்.

இங்கிலாந்தில் இருந்து தங்கை பற்றிமாவின் கணவன் ராஜசிங்கத்தின் குரல் மறுமுனையில் இருந்து ஒலித்தது. அந்தக் குரல்கொடுத்த செய்தியைக் கேட்டு அன்ரன் சிலையாய்ச் சமைந்தார். அவர் கண்கள் கலங்கின. உடம்பெல்லாம் நடுங்கியது.

கொழும்பில் இருந்து தொலைபேசிமூலம் உறவினரான ரெட்னேஸ் இங்கிலாந்துக்கு பஸ்ரியனது மரணச் செய்தியை அவரது சகோதரிக்கு அறிவித்திருந்தார். அதே செய்தியைத் தான் சகோதரியின் கணவன் இப்பொழுது இவர்களுக்குக் கொடுத்தார்.

''அம்மாவின் பயம், அம்மாவும் தானும் கண்ட கனவுகள் பலித்துவிட்டன. அம்மாவுக்கு இந்தச் செய்தியை எப்படித் தெரிவிப்பது ?''

அம்மாவுக்குச் செய்தியைக் கூறுமுன்னர், தங்களைத் தாமே திடப்படுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயக் கடமை அன்ரனுக்கும் பாபருவுக்கும் இருந்தது. அம்மாவை எழுப்பியவுடனே செய்தியைக் கூறக்கூடாது என்ற திட்டத்துடன் தாயை எழுப்புவதற்காக அன்ரன் அவர் இருந்த அறையை நோக்கிச் சென்றார். பாபரு கோப்பி தயாரித்தார்.

அன்ரன் அம்மாவை மெல்ல எழுப்பினார். அப்பொழுது அதிகாலை 4-15 மணியிருக்கும்.

அம்மா திடுக்கிட்டுக் கண் விழித்தார். எழும்பியதும் தாய்க்கு என்ன சொல்லுவது என்று தெரியாது தயங்கி நின்றார் அன்ரன்.

''ஏன் தம்பி இந்த நேரத்தில் எழுப்பினீர் ? என்ன விஷயம் ?''

'' கோவிலுக்குப் போகவில்லையா ? எழும்பி வெளியில் வாங்கோவன்.''

அவர் குரலில் கலக்கம் தொனித்தது. தாயாருக்கு வியப்பாகவும், கலக்கமாகவும் இருந்தது. அநேகமாக அந்த வீட்டில் யாருமே அந்தநேரத்தில் எழும்புவது கிடையாது. பாபருவும் எழும்பிவிட்டிருந்தார். வீட்டில் முழுவிளக்குகளும் எரிந்துகொண்டிருந்தன. எல்லாம் புதுமையாகவிருந்தது. 'என்ன நடந்தது?' என்ற கேள்வியைத் தனக்குள்ளேயே எழுப்பிக்கொண்டு வெளியே வந்தார்.

''போய் முகத்தைக் கழுவிற்று வாங்கோ.'' அவர்கள் நடந்துகொண்ட முறையாவும் அசாதாரணமாகத் தோன்றியது முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தார்.

''இந்தாங்கோ கோப்பி, குடியுங்கோ.''

செற்றியில் இருந்தவாறே கோப்பியை வாங்கிப் பருகினார் தாயார். பருகிமுடிந்ததும், ''இப்ப என்னம்மா உங்களுக்குச் சாப்பிட விருப்பம்?'' அன்ரன் இப்படிக் கேட்டார்.

'' இந்த விடியப்புறம் நாலரைமணிக்கு என்ன சாப்பாடு ? எனக்கு ஒன்றும் வேண்டாம். விஷயத்தைச் சொல்லும்.''

செற்றியில் இருந்த தாயாரை அன்ரன் அணைத்துக்கொண்டார். உதடுகள் துடிக்க, கண்கள் பனிக்க தளம்பும் குரலில் சொன்னார் :

''அம்மா ... அம்மா ... கலங்காதீங்கோ, அழாதீங்கோ ...... தம்பி பஸ்ரியனை ...... வங்காலையில் சனிக்கிழமை இரவு ஆமிக்காரன்கள் சுட்டுக் கொன்றுபோட்டாங்களாம். அவ

ரோட இருந்து வளர்ந்த இரண்டு பெடியன்களையும் சுட்டுக் கொன்றுபோட்டாங்களாம்.'' அதுவரை அடக்கிவைத்திருந்த அழுகை அன்ரனிடமிருந்து வெடித்துக் குமுறியது.

மறுகணம் அம்மா உட்கார்ந்திருந்த 'செற்றி'யில் இல்லை. நிலத்தில் விழுந்திருந்தார். ''மகனே! மகனே!!'' என்று ஓலமிட்டு அழுதார்.

''கடவுளே! இத்தனை ஆயிரம் மைல்களுக்கப்பாலே இருந்துகொண்டு என்ர செல்வத்தைப் பறிகொடுத்துவிட்டேனே...... என்ர பிள்ளையை உம்மால் காப்பாற்ற முடியவில்லையா?'' தலையைத் தரையில் மோதினார். அன்ரன் தாங்கிப் பிடித்துக்கொண்டார்.

''மகனே, போனில் கதைக்கும்போதெல்லாம் அம்மா அம்மா என்று பலத்த சத்தமாய்க் கூப்பிடுவாயே. இனி அந்தச் சத்தம் எனக்குக் கேட்காதே ... இனி உனது குரலை எப்போது மகனே கேட்கப்போகிறேன்?......''

''மகனே...! என்னை இங்கிலாந்துக்கு வழியனுப்ப நீ வந்தபோது உனக்கு எவ்வளவு புத்திமதி சொன்னேன். கவனம், பிடிபட்டவர்களை விடுவிக்கிறதுக்குக் கண்டபடி நீ ராணுவ முகாமுக்குப் போகவேண்டாம், போனால் உனக்குத்தான் ஆபத்து, உன்னில அவங்களுக்கு ஆத்திரம் வருமென்று சொன்னேனே. ஐயோ மகனே! இப்ப என்னைக் கலங்க வைச்சிட்டு, என்ரை நெஞ்சைப் பிளக்க வைத்திட்டுப் போயிற்றியே .....''

''இந்தமாதம் 23-ம் திகதி அங்கே வாறதுக்கு எல்லா ஆயத்தங்களையும் செய்து உன்னைக்காண வாறதுக்கு ஆவலோட இருந்தேனே ... ரெண்டு கடிதம்கூட அனுப்பினேனே. என்ரை செல்வமே...இனி உன்ர அழகு முகத்தைக் காணமுடியாத அளவுக்கு, என்ரை சீவியகாலம் முழுதும் மாறாத கலக்கத்தைத் தந்திட்டுப் போயிற்றியே!

" ஐயோ, உன்ர பத்தாவது குருப்பட்ட நாளை அமெரிக்காவில கொண்டாட வேண்டுமென்று நினைச்சுக்கொண்டிருந்தோமே. அது எங்களுக்குக் கொடுத்துவைக்கவில்லையே ......!"

"மகனே, உன்ர குருப்பட்டத்துக்கு உடுத்தின சேலை கிழிஞ்சுதே...... வருஷப்பிறப்பன்று சாவுமணி கேட்டுதே... முந்தநாளிரவு சவப்பெட்டியில பிரேதம் அனுப்புறமாதிரி கனவு கண்டேனே ..... இது எல்லாம் உன்னை அள்ளிக் கொடுக்கத்தானோடா..... என்ர குருதெய்வமே......"

அணைகடந்த துயரம். ஆழம் காணமுடியாத அந்த அன்புக்கடல் அப்பொழுது குமுறிக்கொண்டிருந்தது. அவரை எப்படித் தேற்றுவது என்று அறியாதவர்களாக மகனும், மருமகளும் திகைத்து அழுதுகொண்டு நின்றனர் ......

★

(3)

# பிள்ளைப் பருவத்திலே

மனுவேற்பிள்ளையின் துணைவியார் தனது இரண்டாவது பிரசவத்துக்காகத் துடித்துக்கொண்டிருந்தார். அது 1948 நவம்பர் 11ஆம் நாள் சனிக்கிழமை.

அப்பொழுது வவுனியா மாவட்டத்தின் விவசாய அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த மனுவேற்பிள்ளை தாண்டிக்குளம் எனும் கிராமத்தில் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார்.

சிலதினங்களுக்கு முன்னர் தொடங்கிய அடைமழை அன்று விடாது பொழிந்து கொண்டிருந்தது. நேரமோ அதிகாலை. மழையும் விட்டபாடாயில்லை. பிரசவத்துக்கான நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

எப்படியும் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும். வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்வதற்கும் தயக்கமாகவிருந்தது. மழை ஒருபக்கம், சேறும்சகதியும் மறுபக்கம். கொண்டுசெல்லும் வாகனத்துக்கு நடுவழியில் ஏதாவது ஆகிவிட்டால் எல்லாமே ஆபத்தாக முடிந்துவிடும். பல சிந்தனைகளிலும் எந்த முடிவுக்கு வருவதென்று புரியாது தவித்த

அவர் இறுதியாகக் கார் அனுப்பி டாக்டரையும் மருத்துவ மாதையும் வீட்டுக்கே அழைப்பது என்ற முடிவுக்கு வந்தார்.

டாக்டர் தருமலிங்கம், மருத்துவமாது, தாதி எல்லோ ரும் தக்க தருணத்தில் வந்து சேர்ந்தனர்.

அதிகாலே 3 மணிக்கு அந்த ஆண்குழந்தை பிறந்தது. பையன் பார்ப்பதற்கு மொழு மொழுவென்று இருந்தான். வெள்ளரிப்பழம் போன்ற தோற்றம் அழகில் மட்டுமன்று, உருவத்தில்கூட மடிநிறைந்த பெரியபிள்ளே. நிறுத்துப் பார்த் ததில் அவனது நிறை ஒன்பது இறுத்தல். எதிர்காலத்தில் வயதை மிஞ்சிய வளர்ச்சியும். முதிர்ச்சியும் பெற்று ஒளிர் வான் என்பதற்கு அந்தத் தோற்றம் ஒரு முன்னறிவிப்போ என்னவோ !

''அடைமழையோடு வவுனியாவில் ஒரு குறும்புக்காரன் பிறந்திருக்கின்ருன்'' என்று டாக்டர் தருமலிங்கம் மருத்துவ மாதுக்கும் அங்குநின்ற மற்றவர்களுக்கும் சொல்லிச் சிரித் தார். அவர் அன்று சொன்னவாக்குப் பொய்த்துவிடவில்லே. பையன் பிற்காலத்தில் குறும்பனிலும் குறும்பன், மகாகுறும் பனுகவே விளங்கினுன்.

பாட்டன்மாரின் பெயர்சொல்ல வந்தவன் தானே பேரன்: அதன்படி இருவழிப்பாட்டன்மாரின் பெயரையும் அடக்கி பையனுக்குப் பெயர்வைப்பது என்று தீர்மானமா யிற்று.

குழந்தையின் தந்தையின் தந்தையாரின் பெயர் சூசைப்பிள்ளே வஸ்தியாம்பிள்ளே. தாயாரின் தந்தையாரின் பெயர் சாமுவேல் பஸ்ரியன் ராசையா.

இருவர் பெயர்களிலும் இருந்த பஸ்ரியன் எனும் பெய ரையும், பையன் அன்னே மரியாளின் தினமாகிய சனிக்கிழ மையன்று பிறந்ததினுல் 'மேரி' எனும் பெயரையும்

இணைத்து மேரி பஸ்ரியன் என்று பெயர் சூட்டப்பட்டது. குழந்தையின் தாயாரின் பெயர்கூட மேரிதிரேசா. அதன் பொருட்டும் 'மேரி' என்ற பெயர் சேர்க்கப்பட்டது என்று கொள்ளவும் இடமுண்டு. அதன் காரணம்தானே என்னவோ மேரி பஸ்ரியன் வாழ்ந்த முப்பத்துஆறு வருடகாலத்திலும் அன்னை மேரியிலும், தனது தாயார் மேரித்திரேசாவிலும் மாளா அன்பு பூண்டிருந்தார். அவர் இறுதி மூச்சுக்கூட "அம்மா" என்ற அழைப்புடனேயே விடுபட்டது.

மேரி பஸ்ரியன் பிறந்த எட்டாம்நாள் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில், அப்பொழுது அங்கு பங்குத்தந்தையாக விருந்த F. J. ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாரால் திருமுழுக்கு அளிக்கப்பட்டது மனுவேலபிள்ளை தம்பதியரின் உறவினர்களான சூசைப்பிள்ளை தம்பதியர் ஞானப்பெற்றோராக இருந்தனர்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பர். டாக்டர் தருமலிங்கம் பஸ்ரியனை பசும் முளையிலேயே பார்த்துக் குறும்புக்காரன் என்று கூறிவிட்டார். வளரவளர அவரது குறும்புத்தனமும் துடியாட்டமும் அதிகமானதாகவே இருந்தது. அதே வேளையில் படிப்பிலும் சளைத்தவரல்ல.

அண்ணன் அன்ரனுக்கும், பஸ்ரியனுக்கு மிடையில் வயதில் ஒன்றரை ஆண்டு வித்தியாசம். ஆனால், இருவருக்கும் ஒரே அச்சில் வார்க்கப்படடதுபோன்ற உருவ அமைப்பு: பார்ப்பவர்கள் எவரும் இருவரும் இரட்டைப்பிள்ளைகள் என்று தீர்மானித்து விடக்கூடிய அளவுக்கு பஸ்ரியன் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்து வந்தார். அண்ணனுக்கும் தம்பிக்கும் ஒரேபோட்டி. அது அடிபிடி அளவுக்கு வளர்ந்துவிட்டால் அண்ணனைத் தம்பியார் மிஞ்சிவிடுவார்.

பஸ்ரியன் பூசைப்பரிசாரகனாக இருந்த வயதில் அப்பொழுது இளவாலைப் பங்குத்தந்தையாக இருந்த கோமஸ்

அடிகள் ''யாருக்குக் குஸ்திபோடத் தெரியும்'' என்று கேட்டால் உடனே பஸ்ரியன் அன்ரனே இழுத்து விழுத்தி தானே வீரன் என்று நிரூபிக்க குஸ்திபோட்டுக் காட்டுவார்.

சின்ன பஸ்ரியனின் அழகிய தோற்றத்தினுல் அயலில் உள்ளவர்கள் அவரை 'பப்பிக்குட்டி' என்று செல்லமாக அழைப்பதுண்டு அவருக்கு கோபம் வந்ுவிட்டால் 'மூசிமூசி' பாய்ந்து அடிக்கும் கோபக் குணத்தால் 'புலிக்குட்டி' என்றும் அவரை அழைத்தனர். ஆனுல், பிற்காலத்தில் பஸ்ரியன் குருவானதின் பின்னர் அம்மாக்கா (திருமதி மனுவேற்பிள்ளை) வின் சம்மனசு என்று அதே அயலவர்கள் பெருமையோடும் அழைத்து மகிழ்ந்ததுண்டு.

அவரது துடியாட்டம் எல்லைமீறிய வேளைகளில் அவருக்கே ஆபத்தாக முடிந்த சம்பவங்களும் உண்டு.

1951இல் இது நடந்தது.

அப்பொழுது பஸ்ரியனுக்கு வயது மூன்று ஒருமுறை தங்களுடைய கார்க்கதவுக்குள் கையைவைத்து விரலை நெரித்துக்கொண்டார். அரசாங்க வைத்தியசாலையில் மருந்து கட்டுவதற்காக இரண்டு நாளைக்கு ஒருமுறை தாயார் கொண்டு செல்வார்.

மருந்து கட்டும் வேளையில் வலிதாங்க முடியாமல் அழுவார். மருந்து கட்டவிடாமல் தடுப்பார். மருந்து கட்டுபவர் பாடு திண்டாட்டமாகிவிடும். அதற்காக வைத்தியசாலைக்குச் செல்லும்போதே இனிப்பு, பிஸ்கட், சொக்லட் என்று எதையாவது தாயார் வாங்கிச் செல்வார் மருந்து கட்டுகையில் கொடுத்துச் சமாளிக்கலாம் என்பதற்காக.

தனக்கு நோகநோக மருந்து கட்டிவிட்டு இவற்றைக் கொடுத்துச் சமாளிக்கப் பார்க்கிறார் என்ற ஆத்திரம் பஸ்ரியனுக்கு அதனுல் அவற்றையெல்லாம் பறித்து எறிந்து விடுவார். எதனையும் கூர்ந்து சிந்திக்கும் ஆற்றல் அந்தச் சிறு வயதிலேயே பஸ்ரியனுக்கு இயல்பாகவே இருந்தது.

இன்னுமொருமுறை வராந்தாவில் இருந்த வாங்கின் மீது ஏறி விளையாடி விழுந்து ஒட்டகப் புலத்துக்கு கொண்டு சென்று முழங்கைக்கு மருந்து கட்டிய அனுபவமும் உண்டு.

1955. அப்பொழுது பஸ்ரியனுக்கு வயது ஏழு. அவரது தந்தையார் பேராதனையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். பஸ்ரியனும் அண்ணனும் கண்டி சில்வேஸ்டர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஞாயிறு வாரம் தவறாமல் மலையில் இருக்கும் புனித திரேசாள் ஆலயத்துக்கு குடும்பமாகத் திருப்பலிக்குச் சென்று வருவது அவர்கள் வழக்கம். மலையில் ஏறி அந்த ஆலயத்துக்குச் செல்வதற்கு இரண்டு வழிகள். ஒன்று ஆட்கள் ஏறிச் செல்வதற்கான வழி செங்குத்தானது. ஐம்பதுக்கும் அதிகமானபடிகள் கொண்டது; ஒடுக்கமானது. சீமேந்தால் கட்டப்பட்டது. அடுத்தது வாகனங்கள் போவதற்காக அமைக்கப்பட்ட சுற்றுவழி.

ஆரம்பத்தில் இவர்கள் படிகளாலேயே ஏறிச் சென்றனர். அதில் ஏறிமுடிவதற்குள் மூச்சுவாங்கிவிடும். சற்றுத் தவறினாலும் அவ்வளவுதான். விழுந்து கைகால் முறிந்துவிடும். எனவே, நாளடைவில் சுற்றுவழி என்றாலும் சிரமத்தைப் பாராது வாகனங்கள் செல்லும் வழியாலேயே ஆலயத்துக்குச் சென்று வருவர்.

ஆனால், அன்ரனுக்கும் பஸ்ரிக்கும் படிகளால் ஏறி இறங்குவதே விருப்பம் ஒவ்வொருமுறையும் படிகளால் ஏறிச் செல்லவே அடம் பிடிப்பர்.

அன்றும் அப்படித்தான். பூசை முடிந்து வரும்வேளை படிகளால் இறங்கி வரலாம் என்று சமாதானம் செய்து சிறுவர்களை அழைத்துச் சென்றனர் பெற்றோர்.

திருப்பலி முடிந்தது. முன்னர் கூறியது போன்று படிகளாலேயே இறங்கிப் போகவேண்டும் என்று நின்றனர் சிறுவர். பெற்றோரும் சரியென்று சம்மதித்தனர். அவ்வளவுதான்,

மறுகணம் அண்ணனும் தம்பியும் போட்டி போட்டுக் கொண்டு இறங்க ஆரம்பித்தனர். அண்ணனை முந்தவேண் டும் என்ற ஆர்வத்தில் 'கிடுகிடு' வென்று பாய்ந்து இறங்க லானார் பஸ்ரியன். மூன்று நான்கு படிகள் தாண்டியிருப்பார் பஸ்ரியன். 'கவனம்' என்று பெற்றோர் எச்சரிக்கு முன்னர் 'படார்'.

பஸ்ரியன் கால் இடறி 'தடதட' வென உருண்டு கீழே விழுந்தார். ஐம்பதுக்கும் மதிகமான படிகள், பெற்றவர்கள் அலறியடித்துக்கொண்டு பாய்ந்துசென்று பிள்ளையைத் தூக்கி னர். தலையிலே பலமான அடி. பிடரி வெடித்து இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டே இருந்தது ஆலயத்துக்குக் காரிலேயே வந்திருந்த குடும்பம் ஒன்று இவர்களுக்குக் கை கொடுத்தனர். வைத்தியசாலைக்கு அவர்கள் தம்காரிலேயே அழைத்துச் சென்றனர். பெற்றவர்களும் கூடவே சென்றனர்.

கண்கலங்கி நின்ற பெற்றோருக்கு ஆறுதல் கூறினர் டாக் டர். தலையின் காயத்துக்கு தையல் போட்டு மருந்து கட்டப் பட்டது. தொடர்ந்து ஒருவாரம் வைத்தியசாலையிலும், மேலும் ஒருமாதம் வீட்டிலும் வைத்துத் தொடர்ச்சியாக வைத்தியம் செய்யப்பட்டது.

இரவு வேளைகளில் தலைவேதனை தாங்கமாட்டாதவராய் அனுங்கி அனுங்கி அழுவார். அந்த வேளையில் எல்லாம் "உம் முடைய பெயர் கொண்ட செபஸ்தியார் மூலம் யேசுவிடம் மன்றாடும், சின்னப்பிள்ளைகள் மன்றாடினால் யேசுவுக்கு நல்ல விருப்பமாய் இருக்கும். உமக்கு காயம் வருத்தம் எல்லாம் கெதியாய் மாறிவிடும்" என்று கூறிச் செபிக்கச் செய்வார் கள். பஸ்ரியனும் செபிப்பார்.

ஓரளவு புத்திதெரிய வந்த வயது தொட்டுத் தானே தன்கையால அள்ளி உணவு உண்பதுதான் பஸ்ரியனுக்கு விருப்பம். தாயாருக்குச் சிரமமளிக்கமாட்டார். ஆனல், தலை

யில் அடிபட்டுப் படுக்கையில் இருந்த காலத்தில் "அம்மா நீங்களே எனக்குத் தீத்திவிடுங்கோ" என்று கேட்டு மூன்று வாரங்கள் தொடர்ந்து அன்னை ஊட்டியே உணவு உட்கொண்டார்.

இளவாலையில் இருந்த காலத்தில் இன்னுமொரு சம்பவம் நடந்தது. அன்று அண்ணன் அன்ரன் வீட்டிலில்லை. பஸ்ரியன் மட்டுமே இருந்தார். அவர்களது வீட்டு வராந்தா சற்று உயரமானது. நீளமான பலகை ஒன்றை எடுத்து வராந்தாவுக்கும் நிலத்துக்குமாகச் சாத்திவைத்தார். பாலம் போல சாய்வாக இருந்த அந்தப் பலகையின் மீது மேலும் கீழுமாக ஏறிஇறங்கி கோச்சி (train) விட்டு விளையாடிக் கொண்டிருந்தார்.

வேலைப்பராக்கில் இருந்த தாயார், இவரது இந்த விளையாட்டை கண்டு இரண்டு தடவைகள் எச்சரிக்கை செய்துவிட்டு தனது வேலைகளில் கண்ணுயிருந்தார். ஆனால், பஸ்ரியனுக்கு அன்னையின் சொல்லைவிடக் 'கோச்சி' விளையாட்டே விருப்பமாக விருந்தது. சற்று நேரம் சென்றது.

"தடால் ......"

வேலையில் கண்ணுயிருந்த அன்னையாருக்கு 'திகீர்' என்றிருந்தது. என்ன நடந்திருக்கும் என்று கற்பனைபண்ணிப் பார்க்கவே முடியவில்லை. கைகால் முறிந்தோ பற்கள் நொறுங்கியோ மகன் இரத்தவெள்ளத்தில் தான் கிடப்பான் என்று எண்ணியவராகப் பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்தார்.

வந்து பார்த்த பொழுது வராந்தாவில் சாத்தியிருந்த பலகை பொறிந்து விழுந்து பஸ்ரியன் தரையில் குப்புற விழுந்து கிடந்தார். ஓடிவந்து மகனைத்தூக்கினார் தாயார். அவர் பயந்தபடி அடி பற்களிலே தான் பட்டிருந்தது. பல்லொன்று உடைந்திருந்தது.

'விழுந்து முளைத்த பற்களில் அடிபட்டு விட்டதே எத்தனை பற்கள் ஆட்டம் கண்டனவோ, இந்த நேரத்தில் எப்படி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவது' என்று கலங்கினார் பஸ்ரியனின் தாயார். ஆனால், பஸ்ரியனோ எதுவுமே நடைபெறாதது போல அமைதியாக இருந்தார். கண்ணாடியில் தன் பற்களைப் பார்த்துவிட்டு "அம்மா முன்ரெண்டு பல்லும் நுனி உடைஞ்சு போச்சு, ஒருபல்லும் நோகேல்ல, நீங்கள் பயப்பிட வேண்டாம்" என்று தாய்க்கு ஆறுதல் கூறினார்.

தனக்கு ஏற்படும் இழப்புக்களை மிகச் சாதாரணமாக நோக்கும் மனப்பக்குவம் பஸ்ரியனுக்கு இருந்ததற்கு இதுவும் ஒருசான்று. முன் பற்களின் முனைகள் முறிந்திருந்ததை அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அவதானித்திருக்கக் கூடும்.

பஸ்ரியன் வீட்டில் எந்தளவுக்கு துடிப்பும் துடியாட்டமுமாக விருந்தாரோ அந்த அளவு பாடசாலையிலும் இருந்தார். எப்பொழுதும் கலகலப்பான சுபாவம். ஏதோ ஒரு விதத்தில் மற்றவர்களைச் சீண்டிக் கொண்டிருப்பார், அல்லது சிரிக்க வைப்பார்.

அவரோடு நான்காம் வகுப்புமுதல், திருச்சி சின்னப்பர் குருமடம்வரை ஒன்றாகப் படித்தவருமான எஸ். ஜே. இராஜநாயகம் அடிகளாரைக் கேட்டபோது அவரது சிறுவயது அனுபவம்பற்றிக் கூறியவற்றுள் ஒன்று.

வகுப்பில் சித்திரப்பாடத்துக்குப் பயன்படுத்தும் வர்ணங்களை மற்றவர்களுக்குப் பூசுவதிலும், தன்முகத்தில் பூசிக் கொண்டு வேடிக்கை காட்டுவதிலும் அலாதிப் பிரியம் பஸ்ரியனுக்கு இருந்ததாம். சில வேளைகளில் வர்ணம் கலக்கப் பயன்படுத்திய வர்ணம் கலந்த தண்ணீரை போத்தலோடு தூக்கி மடக் மடக்' கென்று குடித்துவிட்டு நின்று சிரிப்பாராம்.

இப்படியாக பிறரை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்த பண்பு சிறுவயதில் மட்டுமல்ல இறக்கும்வரை அவரிடம் இருந்தது. பிற்காலத்தில் இன்னுமொருபடி கூடுதலாக பிறர் மகிழ்ச்சிக்காக தன்னையே ஒறுத்துக் கொண்டு, வருத்திக் கொண்டு வாழ்ந்த உயர்பண்பையும் கொண்டிருந்தார். அவற்றையும் பின்னர் பார்ப்போம். நான்காம் வகுப்பில் அவரோடு படித்த இன்னுமொரு மாணவன் அவரைபபற்றிக் கூறும்போது ''பஸ்ரியன் நல்லாய்க் குட்டுவார். குட்டுற தென்றால் அவருக்கு நல்ல விருப்பம். வகுப்பில் மாஸ்ரர்மார் மற்ற மாணவர்களுக்குக் குட்டுறதுக்கு இவரைத்தான் கூப்பிட்டு விடுவினம். தன்னையே மாஸ்ரர்மார் நெடுகிலும் குட்டுவதற்குக் கூப்பிடவேணுமென்றதுக்காக இவரும் பலமாய்க் குட்டிக் காட்டுவார்'' என்று சிரித்துக்கொண்டே கூறினர். ''இவரோடு கூடிவிளையாடிய ஙங்களுக்கு இவர் குருபட்டத்துக்குப் போனதும், சுவாமியாகினதும் ஆச்சரியமாகவே இருக்குது'' என்று அவர் மேலும் கூறினர்.

பிற்காலத்தில் மானிப்பாய் பங்குத்தந்தையாக இருந்த போது அந்தோனியார் கோவிலில் நேர்ச்சிப்பாண் விநியோகம் நடைபெறும் அந்தச் சந்தர்ப்பங்களில் ''இளவாலையில் படிக்கிறபோது எங்கட வகுப்புக்குப் பாண் கொடுக்கிறது என்னுடைய பொறுப்புத்தான். அதனால் என்னைப் பொடியன்கள் 'பணிஸ்மாமா' என்றுதான் கூப்பிடுவான்கள் என்று மற்றவர்களுக்குச் சொல்லிச் சிரிப்பார்.

மரமேறிக் கள்ளமாங்காய் பிடுங்குவதும், மற்றவர்களைக் கண்டதும் இறங்கி ஓடுவதும் சிறுவயதில் பஸ்ரியனுக்குக் கைவந்த கலை. இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் இன்றுமிருக்கும் மாமரங்கள், பலாமரங்களுக்கு வாயிருக்குமானல் பஸ்ரியனின் அந்தச் சாதனைகளை அவை கதை கதையாகச் சொல்லும்.

ஒருநாள் பாடசாலை முடிந்ததும் பஸ்ரியன், அண்ணன் அன்ரன், இன்னும் வேறுசில உடன் மாணவர்களும் 'மளமள'

வென்று மாமரத்தில் ஏறினுர்கள். மரத்தில் இவர்கள் தம் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்த வேளையில் அப்பொழுது கல்லூரியின் அதிபராகவிருந்த எல். ஏ. சிங்கராயர் அடிகள் அங்கு வந்துசேர்ந்தார்.

மாங்கொம்புகள் ஆடுவதையும், கிளைகளுக்குள் சில மனிதப் பிஞ்சுகள் தங்களை மறைத்துக் கொள்ள முயற்சிப்பதையும், அந்தக் கூட்டத்தில் அன்ரனும், பஸ்ரியனும் இருப்பதையும் அவருடைய கழுகுக் கண்கள் கண்டு கொண்டன.

எல்லோரையும் கீழே இறங்கிவரும்படி அதிபரிடமிருந்து கட்டளை பிறந்தது. அனைவரும் நடுங்கியபடி சிற்ருலயக் கூரை வழியாக இறங்கினர். கீழே இறங்கியவர்களை ஒவ்வொருவராகப் பார்த்த பொழுது அனைவர் கைகளிலும், பைகளிலும் பாதிமாங்காயும், முழுமாங்காயுமாக இருந்தன. அக்கூட்டத்தில் நன்கு பழக்கப்பட்ட குறும்புக்காரன் பஸ்ரியனை மட்டும் அங்கு காணவில்லை. மரத்திலும் ஆள் இல்லை.

''எங்கே பஸ்ரியன் ? ''

''எங்களோட மரத்திலதான் நின்ருர். ''

"இப்போ எங்கே ? ''

பதில் சொல்லமுடியாது விழித்தனர் அனைவரும். இந்த விராசணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பஸ்ரியன் வழக்கத்துக்கு மாருக அன்ரனுக்கு முன்னதாக நல்லபிள்ளை போல வீட்டிலே நின்று கொண்டிருந்தார்.

விசாரணை தொடர்ந்தது ......

"பஸ்ரியன் ஓடிப்போய்ற்ருர் போல இருக்கு''.

அதிபரால் நம்ப முடியவில்லை. தான் பார்த்துக்கொண்டு நிற்க அவன் எப்படி ஓடியிருக்க முடியும் ''இங்கேதான் எங்கேயும் நிற்பான் தேடிப் பிடித்துக் கொண்டு வாங்கோ.''

சிற்ருலயம், பாடசாலைவளவு எல்லா இடமும் தேடுதல் வேட்டை நடந்தது. ஆள் கிடைக்கவில்லை, உயர்வகுப்பு மாண வர் சிலரும் அங்குவந்து சேர்ந்தனர். மாங்காயும் கையுமாக நிற்கும் சிறுவர்களையும், விசாரணை செய்யும் அதிபரையும் கண்டு புதினம் பார்த்தபடி நின்றனர். அதிபருக்கு பஸ்ரியன் மீது உண்டான கோபத்தைவிட வியப்பே அதிகமாக விருந்தது.

''இவன் சரியான நெப்போலியன் பொனப்பார்ட்டாக இருக்கிருன். இப்போமட்டுமல்ல முதலும் பல விடயங்களில் பார்த்திருக்கிறன் எப்பிடியோ தான்பிடிபடாமல் தப்பி விடு கிருன். பிற்காலத்தில் நெப்போலியன் போல துணிச்சல் கார ஞகத்தான் வருவான்'' என்று கூறிஞர்.

நடந்தது இதுதான். எல்லோரும் பயந்து பயந்து மாங் காய்களுடன் சிற்ருலயத்தின் கூரையால் இறங்கிக் கொண்டி ருக்கும் வேளையில், அதிபர் முதலில் கீழே இறங்கியவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தபோது பஸ்ரியன் கூரையின் மறு பக்கத்தால் இறங்கிக் குதித்தது எவரது கண்ணிலும் படாமல் ஒளித்தோடி வீடுவந்துவிட்டார். இப்படியாக துணிச்சலுக்கு நெப்போலியன் என்ற பெயரை அதிபர் எல். ஏ. சிங்கராயர் அடிகள் வாயால் பெற்றவர் பஸ்ரியன். பிற்காலத்தில் பஸ்ரி யனிடம் அலாதியான துணிச்சல் இருந்தது உண்மை. ஆஞல், அந்தச் துணிச்சலை தன் உயிரைக் காப்பாற்றுவதிலும் காட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றவில்லை. ஏனெ னில், மரணவேளையில் மற்றவர்கள் தப்பிக்கொள்ள வழிகாட் டியவர் தன்னைத் தப்புவிக்க வழிதேடவில்லை. துப்பாக்கி முனை யின் முன்னே துணிந்து சென்ருர்.

எப்பொழுதும் சவாலை எதிர்நோக்கி வெற்றிபெற்றவர் பஸ்ரியன் குருமடத்தில் சிறுவஞகப் படித்துக்கொண்டிருந்த போது ஒருமுறை விடுமுறையில், அவரது தாய்மாமஞன சாம்மாஸ்டர் வீட்டில் படித்துக்கொண்டிருந்தார். பாடத்

தில் ஏதோ பிழைவிட்ட காரணத்தால் மாமன் தண்டித்த துடன், "நீ சுவாமியாயல்ல அதுக்கு மேலாலேயும் வருவாய்" என்று கூறிவிட்டார்.

அடியைத் தாங்கிக்கொண்ட சிறுவன் பஸ்ரியனுக்கு அந்த வார்த்தைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சாம் மாஸ்டருக்குப் பிள்ளைகள் எல்லோரும் பயம்; பஸ்ரியனும் உட்பட. ஆனால் யாரும் எதிர்பாராத விதத்தில் பஸ்ரியன் அன்று சாம்மாஸ்டர்முன் துணிந்து பேசினார். "நான் சுவாமியாக வந்து காட்டுகிறேனா இல்லையா என்று இருந்து பாருங்கள்" என்று சவால் விட்டார். அவர் எதிர்கொண்ட சவால்கள் இது ஒன்றுமட்டுமல்ல. பிற்காலத்தில் குருவாக வருவதற்கே பல மட்டங்களில் இருந்து எழுந்த பல சவால்களைப் பஸ்ரியன் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவர் தன் தேவ அழைத்தலில் கொண்டிருந்த நம்பிக்கையை இறைவன் ஏற்றுக்கொண்டதால் அனைத்துச் சவால்களையும் மேற்கொண்டார் என்பதே உண்மை.

"என்னுடைய சகோதரர்கள் எல்லாரும் தாங்கள் டொக்டராகவும், ஆசிரியராவும் வருவோம் என்று சின்ன வயதில் சொன்னார்கள். நான் மட்டும் 'சுவாமியாக வருவேன்' என்று சொன்னேன். சொல்லியபடி எனது விருப்பம் மட்டும்தான் நிறைவேறியது" என்று பிற்காலத்தில் தான் பணியாற்றிய பங்குகளில் சிலருக்கு அவர் சொல்லிப் பெருமைப்பட்டுள்ளார். வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய பெரும் உயர் பதவிகளைவிட, ஒரு குருவாக வாழ்வதில்தான் பஸ்ரியன் பெருமை கொண்டார்.

பஸ்ரியன் சுவாமியாக வந்தது ஏதோ தற்செயலாக நடந்த விடயமல்ல. அவ்வெண்ணமும், ஆசையும் திட்டமிட்டுப் பெற்றோரால் ஊட்டி வளர்க்கப்பட்டதாகும்.

பஸ்ரியனின் தந்தையார் மனுவேல்பிள்ளையின் சிறிய தந்தையார் ஒருவர் குருவானவராக இருந்தார். பெயர்

மாட்டீன் சுவாமியார். சொற்ப ஆண்டு காலமே அவர் குருவானவராக வாழ்ந்து, 1939-ல் காலமானுர். அக்குரவர் வாழ்ந்தது சொற்பகாலமெனினும், பக்திமிக்கவராகவும், மற்றவர்களால் நன்கு மதிக்கப்பட்டவராகவும் இருந்தார்.

மாட்டீன் சுவாமியார் இளவாலைக்கு வருகிருராம் என்ருல் — இளவாலையில் வாழும் அவரது உறவினர்க்கு எல்லாம் ஒருவித கலக்கம். இளவாலையில் அவரது உறவினர்க்கிடையில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நீதிபதி அவர்தான். எவரும் "பட்டினம் (யாழ்ப்பாணம்) போகிறேன்" என்ருல் அங்கு பிழைசெய்த மற்றவர்களுக்குத் தம்மைப்பற்றி ஏதும் அவரிடம் சொல்லிவிடப் போகின்ருரே என்ற பயம் பிடித்துவிடும். மாட்டீன் சுவாமியார் வரும் மாட்டுவண்டிலின் சலங்கை ஒலி கேட்டாலேபோதும் ஆளுக்காள் அமைதியாகி விடுவார்கள். தப்புத்தண்டாவில் ஈடுபட்டவர்கள் "எவனோ பட்டினம்போய் கோள்மூட்டிக் கொடுத்துவிட்டானுக்கும்" என்றே திட்டுவார்கள்.

இத்தகைய சிறப்புகள் மிக்க பேரனுர் மாட்டீன் சுவாமியாரைப் போன்று தமது மகனும் சுவாமியாராய் வரவேண்டும் என்ற ஆசை பெற்றோருக்கு இருந்தது. மாட்டீன் சுவாமியாரைப் போன்ற அஞ்சாமை மற்றும் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராய் பஸ்ரியன் சிறுவயதில் இருந்தமைகண்டு தமது பரம்பரையில் மாட்டீன் சுவாமியாரின் வாரிசாக, அவரது பெயர் சொல்லக்கூடிய குருவானவராக விளங்குவார் என்று பெற்றவர்களும், உறவினர்களும் நம்பினர்.

அவர்களது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. ஆனல் மாட்டீன் சுவாமியாரைப்போன்று அற்ப ஆயுளிலேயே பஸ்ரியனும் போய்ச் சேருவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அண்ணனோடும், மற்றவர்களோடும் பஸ்ரியன் சண்டை பிடிக்கும்போதெல்லாம், ''ஒற்றுமையாக இருந்து விளையாட வேணும், அடிபடக்கூடாது, நீர் நல்லபிள்ளையாக இருந்தால்தான் குருமடத்துக்குப்போய்ப் படித்து நல்ல சுவாமியாய் வரலாம். பொறுமை தாழ்மையில்லாமல் இருந்தால் சுவாமியாய் வரஏலாது'' என்று தாயார் அடிக்கடி புத்திமதி கூறி அவர் குருவாக வரவேண்டும் என்ற எண்ணத்தை சிறு வயதுதொட்டே ஊட்டிவந்தார்.

இத்தகைய அறிவுரைகள், தினப்பூசைக்குப் பிள்ளைகளைத் தவறாது அனுப்பிவைத்தல், ஞாயிறுபூசை, மற்றும் திருவிழாக்களுக்குப் பெற்றோரும் குடும்பமாகச் செல்லுதல் ஆகிய நடைமுறைகள் மூலம் பஸ்ரியனுக்குத் தேவ அழைத்தலுக்கான உரம் ஊட்டப்பட்டது. அத்தோடு இளவாலை புனித அன்னம்மாள் கோவிலின் பூசைப்பரிசாரகர் கூட்டத்தில் அவரும் ஓர் உறுப்பினராக இருந்துவந்தார்.

திருவிழாக்களுக்கு அழைத்துச் செல்வர் என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, இளவாலை புனித அன்னம்மாள் கோவிலில் இடம்பெறும் 'ஆறும் கிழமைத் திருவிழா'வின் போது பஸ்ரியனின் சுட்டித்தனங்களைச் சொல்லாமல் விடுதல் சரியன்று.

தவக்காலத்தில் வரும் ஆறும் வெள்ளிக்கிழமை இளவாலை புனித அன்னம்மாள் கோவிலில் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவரும். குடா நாட்டின் பலபக்கங்களிலிருந்தும் மக்கள் பெருந்தொகையாகத் திரண்டுவருவர். அந்நாவில் அங்கு வந்து கூடும் அங்காடிகளில் பொருட்கள் வாங்குவதற்கென்றே அயல் ஊர்களிலிருந்து பெருந்தொகையான பிறசமயத்தவரும் வருவர்.

ஐந்தாம் வெள்ளிமுடிந்த அடுத்த நாளே கடைகள் ஒவ்வொன்றாகத் தோன்றத் தொடங்கிவிடும். கடலை கச்சான், ஐஸ்கிறீம், தின்பண்டங்கள், மணிக்கடை, செபமாலை படக்கடைகள், மெழுகுதிரிக் கடைகள், இத்தியாதி இத்தியாதி ......

பப்பா மம் மாக் குழல்கள், ஊதல்களின் ஓசை, விளையாட்டுத் துப்பாக்கி வெடிகள், பலூன்கள் இப்படியாக எங்கும் நிறைந்து தவககாலத்தின் கோலத்தையே மறைத்து விடும் அளவுக்கு அந்த ஒருவாரகாலமும் அங்கு திருவிழா களைகட்டி நிற்கும்.

திருவிழா தொடங்குவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னரே பாடசாலையின் முதலாம் தவணை விடுமுறை தொடங்கிவிடும். சாதாரணமான நாட்களிலேயே பஸ்ரியனை வீட்டில் கண்டு பிடிப்பது சிரமம், இப்படியான தினங்களில் சொல்ல வேண்டியதில்லை.

கடைத் தெருவும் பஸ்ரியனும் பட்டதுபாடு. கடைகளில் காணப்படும் எல்லாப் பொருளகளும் தனக்கு வேண்டும் என்று அடம்பிடிப்பார். பஸ்ரியனுக்கு வாங்கிக் கொடுத்தே அலுத்துப் போய்விடும் பெற்றோருக்கு. எப்படியும் அன்ரன் குறித்த நேரத்துக்கு வீட்டுக்குவந்து விடுவார். ஆனல், பஸ்ரியனை தாயார் அல்லது வேறுயாரேனும் தேடிப் பிடித்தே வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டியிருக்கும். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் தன்னை விட்டுவிட்டுத் தனியே வீட்டுக்குச் சென்ற அண்ணன் அன்ரன் மீது கோபம் கோபமாக வரும் பஸ்ரியனுக்கு.

மாலை ஆராதனைகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்லும் தாயார். அவர்களுக்கு வேண்டிய விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பார்: வாங்கிய பொருட்களோடு பஸ்ரியன் கொஞ்ச நேரமே அமைதியாக விருப்பார். மீண்டும் எதையாவது காட்டி வாங்கித்தரும்படி நிற்பார்.

"இன்றைக்கு இவ்வளவும் போதும், இனி நாளைக்கு வாங்குவோம்" என்று தாயார் தந்திரமாக சமாதானப்படுத்தி அழைத்துச் செல்ல முற்பட்டாலும், அது முடியாத காரியமாகவே இருக்கும். அவரது பிடிவாதத்தின் உச்சக்கட்டமாக அத்

தனை சனக் கூட்டத்துள்ளும், தரையில் விழுந்து புரண்டு அழு வார். கோவிலுக்கு அணிந்துவந்த உடை எல்லாம் புழுதிமய மாக்கப்பட்டுவிடும். வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்குள் பெரும்பாடாகிவிடும்.

"இனி உம்மைக் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு வர மாட்டேன். நீர் வந்தால் பக்தியாய் மன்றாடவோ, பிரசங்கங் களைக் கேட்கவோ விடமாட்டீர். இப்படி ஒரே பிரளிபண்ணிக் கொண்டிருந்தால் கோவிலில் இருக்கிற மற்றவையள் உம் மைப் பார்த்துச் சிரிப்பினம்" என்று அன்னையார் சொல்லி வைப்பார். ஆனால், மறுநாள் கோவிலுக்குப் புறப்படும்போது தானும் அடம்பிடித்துச் செல்வார். மீண்டும் பழையபல்லவி தான். "சோனகன் கடையில் இருக்கும் சாமான் எல்லாம் வேண்டும்'' என்று நிற்பார்.

1957 ஆம் ஆண்டு புரட்டாசி 8ஆம் திகதி அன்னைமரி யாள் பிறந்ததினம். இளவாலை புனித அன்னம்மாள் கோவில் ஆலயத் திருவிழாவுக்கு முன்னர் நடைபெறும் நவ நாள் ஆராதனைகளில் எட்டாவது நாள் திருவிழா பஸ்ரிய னது குடும்பத்தாருடையது. ஒவ்வொருநாள் திருவிழாவை யும் அந்த அந்த நாட்களைச் சேர்ந்தவர்கள் போட்டி போட் டுக் கொண்டு செய்வது வழக்கம். இரவு ஆராதனைகள் முடிந் ததும் தினமும் வெடிமுழக்கமும் வாணவேடிக்கைகளும் அங்கு கண்கொள்ளாக் காட்சிகள். பட்டாசுகள், மத்தாப்புகள், எறிவெடி, அவிட்டுவெடி, எலிவாணம், காவடிவாணம் இத் தியாதி... இத்தியாதி...

இத்தனை வேடிக்கைகள் நடக்கும்போது பஸ்ரியன் மட் டும் சும்மா இருப்பாரா. அன்ரனையும் இழுத்துக்கொண்டு அங்கு பிரசன்னமாகிவிடுவார். அந்தமுறை இவர்களது நவ நாள் அன்று ஏகப்பட்ட வாண விளையாட்டு, வேடிக்கைகள். பஸ்ரியனுக்கும் அன்ரனுக்கும் நேரம் போனதே தெரிய வில்லை. ஏனெனில். இந்த வேடிக்கைகள் முடிந்ததும் வெடிக் காத வெடிகளைப் பொறுக்க வேண்டிய முக்கிய கடமை இருந்தது.

அனைத்தும் ஓய்ந்தது. போட்டி போட்டுக்கொண்டு இரு வரும் பொறுக்கினார்கள் இருவருடைய காற்சட்டைப் பைக ளும் நிறைந்துவிட்டன. பைகளும் கைகளும் நிறைந்தபின்னர் பரமதிருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் இருவரும் வீடுதிரும் பினர்.

வீடு நெருங்க நெருங்க மகிழ்ச்சியில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. எவ்வளவு நேரம் தாமதமாகிவிட்டார்கள் என்ற கலக்கம் இருவரையும் பீடித்துக் கொண்டது. இயற்கை யிலே பயந்த சுபாவமுடையவர் அன்ரன் வழக்கமாக பஸ்ரி யன் தாமதத்தாலும் முதலில் வீடுவந்து சேர்பவர் அவர், இன்று அவருமல்லா சேர்ந்து பிந்திவிட்டார்.

''வேடிக்கை பார்க்கத் தாமதித்தது சரி, ஆனால் இந்த வெடிகளையும் இப்போது கொண்டுபோக பப்பா பயங்கரமாக வெடிக்கப் போகிறார். இவற்றை என்ன செய்வது?'' இரு வரும் சிந்தித்தனர் இறுதியில் வீட்டுக்கு அண்மையில் இருந்த கல்லுக் குவியலுள் மறைத்து வைப்போம் என்ற பஸ்ரியனின் ஆலோசனை அமுலுக்கு வந்தது. அங்கு மறைதது வைத்தா யிற்று ''இந்தப் பூனைகளும் பால்குடிக்குமா?'' என்ற பாவனை யில் அப்பாவிகள் போல் இருவரும சென்றனர். வெளிக்கேற் றுக்குப் போனபோது அவர்கள் எதிர்பார்த்தபடியே இருந் தது.

கையிற் பிரம்புடன் பப்பா காவல்நின்றார். பஸ்ரியன் அன்ரனுக்குப் பின்னால் நின்று கொண்டார். தப்பிக்கத் தெரி யாத அன்ரன் தயங்கித்தயங்கி தந்தையை நோக்கி அடியெ டுத்து வைத்துச் சென்றார். தந்தையாரின் கையில் இருந்த பிரம்பு ஒருமுறை ஓங்கிச் சுழன்று அன்ரனது தொடையைக் குறிபார்த்து விழுந்தது.

'' டுமீல் ''

இந்த வெடிச்சத்த அதிர்ச்சியில் வீட்டில் எரிந்து கொண்டிருந்த அலடின் லாம்ப்' (Aladin lamp) அணைந்து விட்டது. அந்த இடத்தில் வெடிமருந்தின் மணமும், புகையும் கவிந்து கொண்டது.

தந்தையார் திடுக்கிட்டார், தாயார் தவித்துக்கொண்டு ஓடிவந்தார். வீதியால் சென்றவர்களும், அயல்வீட்டுக் காரர்களும் ஓடிவந்தனர். மின்கல விளக்கின் (torch) துணையுடன் அங்கு நடந்ததைப் பார்த்தபோது. அன்ரன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். தொடை பிய்ந்து காற்சட்டை கிழிந்து... இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

நடந்தது இதான். வெடிக்காத எறிவெடியொன்று அவர் காற்சட்டைப் பைக்குள் இருந்தது. அன்ரனுக்கு இருந்த பதட்டத்தில் அதைக் கவனிக்காது வந்துவிட்டார். தந்தையாருக்கு அருகில் வந்தபோது பைக்குள் ஏதோ உறுத்துவது தெரிந்தாலும், காலையில் தான் பைக்குள் வைத்துக்கொண்ட தடித்த பென்சில் தான் அது என்று நினைத்துவிட்டார். அதன்பயன், தந்தையாரின் பிரம்படி பையில் இருந்த வெடி மீது விழ அது வெடித்துத் தொடையைப் பிய்த்துவிட்டது.

''எல்லாம் முடிந்து வாறபோது பிள்ளைகளை நீங்கள் கூட்டிக்கொண்டு வராமல் ஏன் விட்டுட்டு வந்தனீங்கள். சும்மா வெருட்டிவிட்டு விடுறதுக்கு இப்ப உங்களையார் அடிக்கச் சொன்னது'' அழுது அழுது அன்னையார் கணவரை ஏசினர். அவர் ஏசுவது காதில் விழும் நிலையிலா தந்தையிருந்தார். பிள்ளைக்கு என்ன நடந்ததோ என்று பதறிக் கொண்டிருந்தார். அன்ரனை வைத்தியம் செய்ய எடுத்துப் போவதில் முனைந்துகொண்டிருந்தார். மானிப்பாய் வைத்தியசாலைக்குப் பிள்ளையைக் கொண்டுபோனார்கள்.

இத்தனை ஆரவாரத்துள்ளும் பஸ்ரியனுக்கு ஒரு நிம்மதி வழக்கம்போல தண்டனையில் இருந்து தான் தப்பிவிட்டது பற்றி ஒருதிருப்தி. போதாதற்கு அம்மா வேறு பப்பாவை ஏசிவிட்டது பரமதிருப்தி.

போர்க்களத்தில் பட்ட வீரத்தழும்புபோல இன்றும் பெரிய எலுமிச்சம்பழ அளவில் அன்ரனின் தொடையில் அச் சம்பவத்தை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது அந்தமறு.

தமது பிள்ளைகளை அலங்கரிப்பதிலும், அழகான சட்டை அணிவிப்பதிலும் பெற்றவர்களுக்கு மனநிறைவு உண்டு. பஸ்ரியனின் பெற்றோரும் இதற்கு விதிவிலக்கல்ல ஆனால், பஸ்ரியனுக்கு எந்தப் புதுச் சட்டையைத்தான் அணிந்துவிட்டாலும், அந்த சேட் கொலர்கள் இரண்டினதும் முனைகளை வாய்க்குள் வைத்து மென்று தும்பாக்கி விடுவார். தாயார் முதல், மற்றவர்களும் பலதடவைகள் இப்பழக்கத்தைத் தடுத்தபோது அவர் விட்டதாயில்லை.

குருமடத்திற் சேர்ந்தபின்னர் அப்பழக்கம் விட்டுப் போனது என்றாலும், அதற்குப் பதிலாக நகம் கடிக்கும் பழக்கம் தொற்றிக் கொண்டது தன் பெருவிரல் நகத்தைக் கடித்துக் கொண்டேயிருப்பார். இதனால் பெருவிரல் புண்ணாகி மருந்துகட்டிய சம்பவங்களுமுண்டு. இப்பழக்கம் குருவாக வந்தபின்னர்கூட அவரை விட்டு அகன்று விடவில்லை.

வங்காலையில் பங்குத்தந்தையாக விருந்த காலத்தில் அவரது தாயார் ஒருமுறை அவரைப் பார்க்கச் சென்றபோது மகன் நகம் கடித்து பெரும்விரலில் புண் ஏற்பட்ட காரணத்தால் விரலுக்கு மருந்து கட்டிக்கொண்டிருப்பதையும் விரல் சற்று வீங்கியிருப்பதையும், அதனால் அவர் சற்றுச் சிரமப்படுவதையும் கண்டு "இந்தப் பழக்கம் கூடாது. நகத்தோடு சதையும் கடிபட்டுப் புண்ணாக்கினால் நகம் முழுவதும் கழற்ற வேண்டி வரும்" என்றார்.

"இது மானிப்பாயில் ஒருமுறை கழற்றி திரும்ப முளைத்த நகம் அம்மா" என்றார் பஸ்ரியன் சிரித்துக்கொண்டே. இறக்கும் வரை இந்தப் பழக்கம் அவரை விட்டு நீங்கிவிடவில்லை எனலாம்.

பேசுகின்றபோது நாவில் சொற்கள் இடறி சற்றுத் திக்குவாய் போலப் பேசும் குறைபாடு பஸ்ரியனிடமிருந்தது. ஆனால், இந்தக் குறைபாட்டை ஒரு பலஹீனமாக அவர்

என்றுமே கருதியதில்லை. எதையுமே ஒரு சவாலாக ஏற்றுப் பழகிவிட்ட பஸ்ரியன், தான் சொல்ல வேண்டியதை சொல்லத் தவறியதில்லை.

1981 இல் குருவாக இருந்தபோது இனப்பிரச்சினையில் புரிந்துணர்வை இரு இனங்களிடையே ஏற்படுத்தும் நோக்கோடு வடக்கு, தெற்குத் துறவற சபைகளுக்கிடையிலே இடம்பெற்ற கலந்துரையாடல்களில் எல்லாக் கூட்டங்களிலும் பஸ்ரியன் தவறாது கலந்து கொண்டார்.

அநுராத புரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஆரம்ப உரையை நிகழ்த்தி வடக்கு. கிழக்கு வாழ் தமிழர் நிலைபற்றி விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு முக்கிய பிரமுகர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. எதிர்பாராத விதத்தில் கடைசி நேரத்தில் அப்பிரமுகர் வராது போகவே அந்த ஆரம்ப உரையை நிகழ்த்தும் பொறுப்பை பஸ்ரியன் ஏற்றுக் கொண்டார்.

எதுவித முன் ஆயத்தமும் இல்லாமல், குறுகிய கால அவகாசத்தில் நாற்பத்துஐந்து நிமிடங்களுக்கு மேலாக பஸ்ரியன் விளக்கமளித்து புள்ளிவிபரங்களுடன் அங்கு ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரை அங்கிருந்தவர்களை வியப்பிலாழ்த்தியது. அது மட்டுமல்ல, சிங்களத் துறவிகள் எழுப்பிய சந்தேகங்கள், வினாக்களுக்கெல்லாம் தயக்கமில்லாது தகுந்த விடையும் அளித்தார். சொற்தடுமாறும் என்ற கூச்சமோ, ஆங்கில மொழியில் உரை நிகழ்த்துகின்றோம் என்ற அச்சமோ பஸ்ரியனிடம் அணுவளவுமில்லை. தனது பலவீனங்களையெல்லாம் சவால்களாக ஏற்று அவற்றை ஆட்கொண்டு வாழ்ந்தவர் பஸ்ரியன் என்பதற்கு இதுவுமொரு சான்று.

புனித மாட்டீனார் குருமட மாணவனாக இருந்த காலத்திலேயே பஸ்ரியன் ஓயாது எதிலாவது ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தன்மையால் பிஸி பஸ்ரியன் (Busy Bastian) என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டார். அவரைச் சந்திக்கப் பெற்றவர்கள் தேடிச்செல்லும் போதெல்லாம், ''அவரை இப்பொழுது எங்கே தேடிப் பிடிப்பது'' என்று கூறி, அவரை

அழைத்து வரும்படி ஆளனுப்புவர். வெகுநேரத்தின் பின்னரே பஸ்ரியன் வந்து சேருவார். பெரும்பாலும், கலைந்த முடியும், வியர்த்த மேனியும், அழுக்கடைந்து புழுதிபடிந்த உடையிலுமே காட்சியளிப்பார்.

பிஸி பொடி (Busy Body) பிஸி பஸ்ரியன் என்று சிறு வயதுமுதல் அழைக்கப்பட்ட இவர், குருவாக வந்தபின்னரும் பிஸியாகவே இருந்தார். தான் மட்டுமன்று தன் பங்கு மக்களையும், தன்னோடு சார்ந்த சகோதரக் குருக்களையும் பிஸியாக இருக்கவைக்கும் சூத்திரதாரியாக நின்று இயங்கினார்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் இவரது துடிப்பான போக்கினைக் கண்டு, ''பிற்காலத்தில் கெட்டிக்காரனாக வருவார்'' எனறு பாராட்டியுள்ளார். அது மட்டன்று ஆயர்களுக்கு ஒரு செல்லப் பிள்ளையாகவும் விளங்கினார். ஆயர் அவர்கள் எங்காவது பிரயாணம் செய்வதாயில் தமது பொருட்களை அடுக்கி ஆயத்தம் செய்வதற்கும், புகையிரத நிலையம் சென்று பிரயாணச் சீட்டுப்பெற்று ஆசனம் பதிவு செய்வதற்கும்கூட பஸ்ரியனையே அனுப்பி வைப்பார்.

இவ்வாறாக ஆயர் முதல் தன் உடன் மாணவர்கள் வரையில் எல்லார் இதயத்திலும் சிறு வயதுமுதல் இடம் பிடித்தவராயிருந்தார் பஸ்ரியன்.

துடியாட்டமும் விளையாட்டுத்தனமும் நிறைந்த பஸ்ரியன் கல்வியிலும் பின்னிற்கவில்லை மடுத்தினார் குருமடத்தில் அவரோடு படித்த மாணவர்கள் பரீட்சை எடுத்தபோது அம்முறை இரண்டுபேர்களுக்கு மாத்திரமே இலத்தீன்மொழியில் அதி விசேட சித்தி ''D'' கிடைத்தது. அவர்களில் ஒருவர் அருட்திரு மத்தாயஸ், அடுத்தது பஸ்ரியன் என்பது குறிப்பிடத்தக்கது.

★

# (4)

## அச்சமில்லை அச்சமில்லை!

"அஞ்சினர்க்குச் சத மரணம், அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம்"

இந்த வரிகளின் பொருளே பஸ்ரியனின் வாழ்க்கையாக இருந்தது. குழந்தைப் பருவம் தொட்டு குண்டுக்கு முன்னே நின்றதுவரை அவர் துணிவே துணையாகக் கொண்டிருந்தார். அண்ணனை அடித்துத் தனக்கு அஞ்சவைத்தகாலம் முதல், இராணுவம் இரவில் இயமனாக வந்தது வரைக்கும் அவரது செயல்கள் யாவும் துணிவின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் முன்னாள் அதிபர் எல். ஏ. சிங்கராயர் அடிகளார் 'நெப்போலியன்' என பஸ்ரியனுக்குப் பெயர் சூட்டியதற்கும் அதுவே காரணம்.

சிறு வயதிலே பஸ்ரியனோடு சேர்ந்து விளையாடுவதற்குக் கூட சில மாணவர்களுக்குப் பயம். ஏனென்றால், அவர் தோல்வியை இலகுவில் ஏற்றுக்கொள்ள மாட்டார். தான் பிடித்தது சரி என்றே சாதிப்பார். முடியாத கட்டத்தில் சண்டைக்குப் போவார். இது விடயத்தில் பஸ்ரியனுக்கும் அன்ரனுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதுண்டு.

பஸ்ரியனுடன் விளையாடிச் சண்டைபிடித்த சிறுவர்கள் அன்ரனிடம் சென்று முறையிடுவார்கள். அன்ரனும் தான் மூத்தவன் என்ற துணிவில் பஸ்ரியனுக்கு அறிவுரை சொல்லத் தொடங்குவார்.

“மற்றவர்களோடு கொழுவல், சண்டையில்லாமல் விளையாடத் தெரியாத நீர் பிறகு ஏன் விளையாடப்போறனீர்” இதே கருத்தைத் தாயாரின் முன்னிலையிலும் அடிக்கடி தமையன் சொல்லுவார். அந்தச் சந்தர்ப்பத்திலெல்லாம் பஸ்ரியனிடமிருந்து துடுக்கான பதில் வரும்.

“நீர் நினைக்கிறீர் நீர் பெரிய ஆள், உமக்கு எல்லாரும் பயம் என்று. நீர் உம்முடைய வசப்பில மௌனிற்றாய் இருந்து என்ன பிரயோசனம். எனக்குப் பயத்திலதான் உமக்குக் கைநீட்டாமல் இருக்கிறாங்கள். நீர் நினைக்கிறீர் நீர் பொல்லாத ஆளெண்டு. நானில்லாட்டில் தெரியும். இதில இருந்து தெரிஞ்சுகொள்ளும், ‘தம்பி உள்ளவன் சண்டைக்கு அஞ்சான்’ என்று. இரண்டு மாதத்துக்கு முன்னர் நடந்தது தெரியும்தானே. உம்முடைய மரியாதையை நான்தான் காப்பாற்றினேன்.’

இந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகளல்ல. உண்மையானவை. இதற்கு ஆதாரமாக சில சம்பவங்கள் நடைபெற்றுமுள்ளன.

அன்று ஒரு செவ்வாய்க்கிழமை. பகல் பாடசாலை முடிந்து மாணவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன் வியர்க்க விறுவிறுக்க முன்னாலே ஓடிக்கொண்டிருக்க, பின்னாலே ஒரு மாணவக் கும்பல் அவனைத் துரத்திக்கொண்டுவந்தது. துரத்தி வந்தவர்களுக்குத் தலைமைவகித்து முன்னே ஓடி வந்துகொண்டிருந்தான் சிறுவன் பஸ்ரியன்.

“பிடியடா பஸ்ரி, அவனை விடாத பிடியடா” என்று பின்னே வந்த கும்பல் கூச்சலிட்டபடி வந்தது.

துரத்திவந்த பஸ்ரியன் இளவாலை கன்னியர் மடத்து வாசலுக்குள் அந்த மாணவனை மடக்கிப் பிடித்து மடத்து மதிலோடு சாத்திப் பிடித்துக்கொண்டு 'மள மள' வென்று அந்தச் சிறுவனை அடித்தான். "தொடுவியாடா இனி என்ர அண்ணனை, தொடுவியாடா இனியும்? உனக்கு அவ்வளவு தைரியமோ? காணுமா இன்னும் வேணுமா?'' இந்த வார்த்தைகளே மூசி மூசி அடித்த அந்தப் புலிக்குட்டியின் உறுமல்களாக வெளிவந்துகொண்டிருந்தன.

கன்னியர் மடத்துக்கு எதிராக அப்பொழுது ஒரு பல சரக்குக்கடை. அதன் உரிமையாளர் திரு. செல்லையா என்பவர். அவரும் மனைவியாரும் ஓடிப்போய் அடிபடும் இருவரையும் விலக்குப் பிடித்துவிட்டுப் பிள்ளைகள் இருவரும் யார் என்பதையும் அடையாளம் கண்டுகொண்டனர்.

அன்று மாலை அந்தோனியாரைச் சந்திக்க பஸ்ரியனின் அன்னையார் ஆலயத்துக்கு அந்தவழியாலே கடையைத் தாண்டிச் சென்றபோது, செல்லையாவும் துணைவியாரும் ''இஞ்ச வாருங்கோ உங்களுக்கு ஒரு முஸ்பாத்தி சொல்லுறம்'' என்று நடந்த சம்பவங்களைக் கூறினார்கள். அவருக்கு அதுவிடயம அப்பொழுதுதான் தெரிந்தது. ஏனென்றால் இப்படிப்பட்ட சண்டித்தனங்களையெல்லாம், அண்ணனும் தம்பியுமாக வீட்டாருக்குத் தெரியாமல் மறைத்துவிடுவது வழக்கம. பின்னர் தாயார் இவர்களை விசாரித்தபோதுதான் உண்மை வெளிப்பட்டது.

வகுப்புக்கள் முடிந்து போகும்போது மாணவர்கள் மேசைகள்மீது புத்தகம், அடிமட்டம்போன்ற எதையாவது விட்டுச் சென்றால், வகுப்பில் மாணவர் தலைவன் (மொனிற்றர்) அதனை எடுத்துவந்து தனது மேசையின்மீது வைத்துவிட வேண்டுமென்பது வகுப்பாசிரியரின் கட்டளை.

அன்றுமொரு மாணவன் அடிமட்டத்தை வைத்துவிட்டுச் சென்றுவிட்டான். வகுப்பின் மாணவர் தலைவனாய் இருந்த அன்ரன் அதனை எடுத்துக்கொண்டார். அடிமட்டத்தை விட்டுச்சென்ற சிறுவன் அடிமட்டத்தைத் தரும்படி அன்ரனிடம் கேட்டிருக்கிறார். "நான் சேர்உடைய மேசையில் கொண்டுசென்று வைத்தபின்பு உமக்கு வேண்டுமென்றால் அவரிடம் கேட்டு வாங்கும்" என்று அன்ரன் கூறியிருக்கிறார்.

"சேரிட்ட நான் கேட்டு வாங்கிறது இருக்கட்டும், நீ இப்ப தா?" என்று நின்றிருக்கிறான் அடிமட்டத்துக்கு உரியவன். அன்ரன் மேலும் மறுத்திருக்கிறார். விவாதம் முற்றிவிட்டது. கோபங்கொண்ட மாணவன் அன்ரனை அடித்துவிட்டான். அடியை வாங்கிக்கொண்டு சாதுவாக இருப்பது அன்ரனுக்குரிய சுபாவம்.

அண்ணனுக்கு ஒரு மாணவன் அடித்துவிட்ட செய்தி பஸ்ரியனுடைய காதுகளுக்கு எட்டியது. "என்ர அண்ணனை அடிச்சவன் ஆரடா? ஆளைக்காட்டு, அவன்ரை பேர் என்ன?" என்று துள்ளினான். மாணவர்கள் ஆளைக்காட்டினார்கள். அதன் விளைவுதான் பாடசாலை முடிந்ததும் அத்தனை குத்துக்களையும் அடிகளையும் குறிப்பிட்ட அந்த மாணவனைத் துரத்திவந்து பஸ்ரியன் கொடுத்ததன் காரணம்.

தான் அண்ணனுடன் அடிபடுவார், சண்டையிடுவார், ஆனால் மற்றவர்கள் அண்ணன்மீது கைவைப்பதை பஸ்ரியன் பொறுத்துக்கொள்ள மாட்டார். தாயார்கூட ஏதேனும் குற்றத்துக்குத் தந்தையாரிடம் முறையிட்டு தமையனுக்கு அடிவாங்கிக் கொடுப்பதை பஸ்ரியனால் தாங்கிக் கொள்ள முடியாது. "ஏனம்மா பப்பாவிடம் சொல்லி அடிவாங்கிக் கொடுத்தனீங்கள்?" என்று தாயாரிடம் கேட்டுக் கவலைப்படுவார். துணிவும், முரட்டுத்தனமும் மட்டு

மல்ல நீதியும் அன்பும் கொண்டு விளங்கியவர் பஸ்ரியன். இவருடைய இப்பண்பே பிற்காலத்தில் அன்புக்காகவும், நீதிக்காகவும் கோபப்படவும், அன்பினாலும், நீதிக்காகவும் துணிச்சலுடன் செயற்படவும், அன்பினாலும் நீதிக்காகவும் துன்பங்களை ஏற்கவும், உயிர் துறக்கவும் காரணமாக அமைந்தது.

அண்ணன் அன்ரனுக்கு இருட்டு என்றாலோ அச்சம். இருட்டிய பின்னர் வீட்டு அறைக்குள் தனிமையாய்ச் செல்வதற்குக்கூடப் பயம். பேய், பிசாசு என்று சொல்லிவிட்டால் அவ்வளவுதான்; சற்றுக்கூட அன்ரன் அந்த இடத்தைவிட்டு அசையமாட்டார்.

பஸ்ரியன் இதற்கு நேரெதிரான குணம் படைத்தவர். எந்த இரவிலும் எங்கும் போகும் மனத்துணிவு சிறுவயதிலேயே அவரிடமிருந்தது. காலையிலே யார் முதலில் கோவிலுக்குப் போவார்களோ அவர்களுக்குத்தான் திருப்பலியில் பரிசாரகனாக உதவும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதற்காக அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து கோவிலுக்குப் போகப் போவதாக அடம்பிடிப்பார். 'வழியிலே பாம்பு பூச்சி இருக்கும், நாய்கள் கடிக்கும்' என்றெல்லாம் சமாதானம் கூறித் தடுத்துவைப்பதற்குள் தாயாருக்குப் பெரிய பாடாகிவிடும். இறுதியில் பிள்ளைகளைத் தனியே விடப்பயந்து ஆறு மணிக்குத் தொடங்கவிருக்கும் திருப்பலிக்காக ஐந்துமணிக்கே ஆலயத்துக்கு அவர்களைத் தாயார் அழைத்துச் செல்வார்.

பஸ்ரியனுக்கு "பேய் பிசாசு" என்று சொல்லிக்கூட அஞ்சவைக்க முடியாது. "பேயாவது பிசாசாவது, யேசுவே மரியாயே சூசையப்பரே அந்தோனியாரே என்று சொன்னால் அதுகள் பயந்து ஓடிப்போய் விடுங்கள்" என்று தனக்கே உரிய தன்னம்பிக்கைக் குரலில் மொழிவார்.

ஒருமுறை சகோதரர்கள் இருவருக்குமிடையில் பேய் பிசாசு பற்றிய தர்க்கம் வந்துவிட்டது. அவைமட்டில் அன்ரனுக்கு உள்ள பயத்தையிட்டு பஸ்ரியன் கேலிசெய்தார். இறு

தியில் தலைமயனுக்குச் சவால்விட்டுப் பந்தயம் பிடித்தார். "சரி நீர் என்னோட பந்தயம் பிடியும். நீர் எதாவது ஒரு பொருளைத் தாரும். நான் நடுச்சாமத்தில் சவக்காலைக்குள்ள, இல்லாட்டி சுடலைக்குள்ள கொண்டுபோய் நீர் சொல்லிற இடத்தில வைச்சிட்டு வாறன். விடிஞ்சப் பிறகு வேண்டுமென்றால் போய்ப்பாரும்"

பஸ்ரியனது இந்தச் சவாலைக் கேட்கவே அன்ரனுக்கு நடுக்கமாக இருந்தது. காரணம் பஸ்ரியன் சொன்னதுபோல கட்டாயம் செய்துவிடுவார் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் தம்பிக்கு ஏதாவது நடந்துவிட்டால்......! தன்னுடைய வெற்றிக்காக தனது தம்பியை இழக்க அவர் தயாராக இலலை. எனவே அந்தச் சவாலை அவர் ஏற்கவில்லை. அதற்கு மறுத்துவிட்டார். "நான் வென்று விடுவேன் என்று தான் நீர் பயப்படுகிறீர்" என்று பஸ்ரியன் அவரை மேலும் கேலிசெய்தார். பஸ்ரியனது முரட்டுத்தனமான துணிவுக்கு அஞ்சி, அவரது நன்மை கருதி அன்ரன் விட்டுக்கொடுத்த சம்பவங்கள் பல.

அவரது அஞ்சாமைக்கு இன்னுமொரு சான்று— 1981-ல் யாழ்ப்பாண நகரம் மீண்டும் எரியூட்டப்பட்ட காலகட்டம். இராணுவம், கடற்படை, பொலிசாரின் ஆதிக்கம் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்க்கப்பட்டிருந்த காலமது.

யாழ்ப்பாணம் எரிக்கப்பட்ட சம்பவங்களை வெளிநாடுகளுக்குப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு பஸ்ரியன் ஓடித்திரிந்து கொண்டிருந்தார். அன்றும் அதுவிடயமாகத்தான் யாழ்ப்பாணம் சென்றவர் மானிப்பாய்க்குத் திரும்பிக்கொண்டிருந்தார். மோட்டார்சைக்கிளில் அவர் பின்னால் உடுவில் மல்வத்தைச் சேர்ந்த ஆக்காஸ் எனும் இளைஞனும் இருந்தார். அப்பொழுது நேரம் இரவு ஒரு மணி.

யாழ். பெரியகடை யூடாக ஸ்ரான்லி வீதியால் வந்து காங்கேசன் துறை வீதியால் திரும்பினூர். அவ்வீதியில் இருக்கும் சிவன்கோவில்வரை (1987 ஜூன் மாதத்தில் விமானத் தாக்குதலில் குண்டுவீசித் தகர்க்கப்பட்டது) அது ஒரு வழிப்பாதை. பஸ்ரியன் தான் போகவேண்டிய ஒழுங்கான பாதையால் சென்றுகொண்டிருக்கின்ருர். இவர்கள் சிவன் கோவிலை அடையுமுன்னர் திடீரென அவர்கள் எதிரே ஒரு ஜீப்வண்டி வந்துகொண்டிருந்தது.

எதிரே வருவது ஜீப்வண்டி என்று தெரிந்ததும் பஸ்ரியன் ஒதுங்கி வழிவிட்டுக் கொடுக்காது தனது மோட்டார் சைக்கிலை நடுவீதியிலேயே நிறுத்தினூர். எதிரே வந்த ஜீப் வண்டியு நின்றது.

ஜீப்வண்டியில் வந்தவர்கள் கடற்படை வீரர்கள், கடற்படையினர் என்று அறிந்ததும், மோட்டார் சைக்கிலில் பின்னே இருந்த இளைஞனுக்கு அந்த இரவிலும் வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு பட படவென்று அடித்தது. "சுவாமி என்னடா முரட்டுத்தனமாய் நிற்கிருர் இன்றைக்கு இரண்டு பேரும் தொலைந்தோம்" என்று எண்ணிக் கலங்கினூர். ஆனால் பஸரியன் அஞ்சியதாகவோ, அசைந்து கொடுத்ததாகவோ தெரியவில்லை. பதிலாக பஸ்ரியன் துணிந்து பேசினூர்.

"இது ஒருவழிப் பாதை, நான் சரியான பாதையால் தான் வந்துகொணடிருக்கின்றேன். உங்கள் பாதை பிழையானது. வீதி ஒழுங்குகளையும், சட்டங்களையும் கடைப்பிடிப்பதில் நீங்கள் தான் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக இருக்க வேண்டும். தயவு செய்து திரும்பிப் போங்கள்" என்று ஆங்கிலத்தில் கூறினூர்.

சுவாமியின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் "நிச்சயமாக இன்றைக்கு நாம் உயிரோடு வீடுபோய்ச் சேர மாட்டோ-" என்று நினைத்துக்கொண்டார். ஆனால் என்ன

ஆச்சரியம்! ஜீப்வண்டியில் வந்தவர்களில் முக்கியமானவர் யாரோ கிறிஸ்தவராக, அல்லது படித்த பண்பாளனாக இருந்திருக்க வேண்டும். மறு பேச்சில்லாமல் ஜீப்வண்டியை பின்னுக்கு எடுத்துச்சென்று மறுவழியால் போய்விட்டார்கள்.

பாதுகாப்புப் படையினர் பயங்கர வாதிகளாக மாறி அட்டூழியம் புரிந்துகொண்டிருந்த அந்தக்காலத்தில் அதிலும் அக்கம் பக்கம் ஏனென்று கேட்க யாருமற்ற நடு இரவில் பாதுகாப்புப் படையினரையே எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கு அசாதாரணமான நெஞ்சுத்துணிச்சல் வேண்டும். இவ்வண்ணம் தனக்கு நீதியெனப்பட்ட விடயத்தில் அவர் காட்டிய உறுதிப்பாடும், அபரிமிதமான நெஞ்சுத் துணிவுமே பின்னர் அவருடைய அவலச் சாவுக்கு வழி கோலியது என்பது அவரை அறிந்தவர்கள் பலரதும் அபிப்பிராயமாகும்.

தவறு செய்பவன் எவராக இருந்தாலும் அது தட்டிக் கேட்கப்படவேண்டும் என்பதில் தயக்கம் காட்டாதவர் பஸ்ரியன். அவர் சாதாரணமானவராக இருக்கலாம், உயரதிகாரிகளாக இருக்கலாம். 'குற்றம் குற்றமே' என்ற நக்கீரத்தன்மை அவரிடம் குடிகொண்டிருந்ததற்குச் சான்றுகள் பலவுள.

திருச்சி புனித சின்னப்பர் குருமடத்தில் மாணவனாக இருந்தபொழுது இது நிகழ்ந்தது.

ஒவ்வொரு புதன் நாளும் குருமாணவர்களுக்கு "வில்லா டே" (Willa Day) என்று வழங்கப்படும். இத்தினத்தை மாணவர்கள் சுதந்திரமாகத் தமது சொந்த விடயங்களைக் கவனிப்பதற்காகச் செலவிடுவர். மாணவர்களின் நன்மை கருதி வழங்கப்பட்ட இந்தச் சலுகையிக்க நாளை சில மாணவர்கள் துர்ப்பிரயோகம் செய்யத் தொடங்கினர். விளைவு, கல்லூரி நிர்வாகம் இச்சலுகையை மீளப் பெறுவது என்று தீர்மானித்தது.

''ஒரு சில மாணவர்கள் செய்த தவறுக்காக முழுக் கல்லூரி மாணவர்களுக்கும் இத்தடையை விதிப்பது எப்படி நீதியாகும்?'' என்ற கேள்வி மாணவர்களுக்குள் எழுந்தது. வேறு சாதாரண கல்லூரியாக இருந்தால் - வகுப்புகளைப் பகிஷ்கரித்தல், மறியல் போராட்டம் என்று எதிலாவது இறங்கிவிடலாம். ஆனல் இது குருத்துவக் கல்லூரியா யிற்றே! தலைமைப் பீடத்தின் கட்டளையைத் தலைமீது சுமந்து நிற்கக் கற்பித்துக்கொடுக்கும் இடமாயிற்றே. எனவே நிர்வாகத்தின் முடிவை எதிர்த்துப் பேசத்துணிவில்லாமல் தமக்குள்ளேயே புழுங்கியவர்களாக, மெளனிகளாக நின் றனர் ஏனைய மாணவர்கள். நிர்வாகத்தினைத் தட்டிக் கேட்கும் துணிவு மேரி பஸ்ரியனிடம் மட்டுமே இருந்தது.

எனவே அடுத்து வந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியின்போது பஸ்ரியன் தனது பங்களிப்பைத்தர முன்வந்தார்.

பஸ்ரியன் தனது மொழிப் புலமையைப் பற்றியோ, சொற் தடங்கல் பற்றியோ கவலைப்படாதவர் என்று முன் னரும் குறிப்பிட்டுள்ளோம். குருமட மாணவனுக இருந்த காலத்தில், குருவாக வந்த காலத்தில் இருந்ததைவிடத் தேர்ச்சியின்மை சற்று அதிகமாகவே இருந்திருக்கும் என்றே கருத இடமுண்டு.

பஸ்ரியன் எழுந்தார், தன் கருத்துக்களைப் பொழிந்தார்.

''சட்டங்கள் மாணவர்களுக்காகவேயன்றி, சட்டங் களுக்காக மாணவர்கள் அல்ல. கொடுக்கப்பட்ட சலுகை களைச் சில மாணவர்கள் துர்ப்பிரயோகம் செய்தால் எல்லா மாணவர்களையும் தண்டிக்கும் விதத்தில் நிர்வாகம் சலுகை களை உடனடியாக மீளப் பெறுவது எந்த விதத்தில் நீதி யாகும். அல்லாமலும் இச்செயல் மாணவர்களை (Form-ation) உருவாக்குதல் என்ற வகையில் முற்றிலும் பொருத்த

மற்ற செயலாகும். சலுகைகளை சரிவரப் பயன் படுத்தாத வர்களையும் முறையாகப் பயன்படுத்தும்படி அவர்களை நெறிப்படுத்துதலே உண்மையான உருவாக்குதலாக அமையும்.''

பஸ்ரியனின் இந்தக் கருத்துக்கள் கல்லூரி நிர்வாகத்தினர்க்கு அதிருப்தியை உண்டு பண்ணியது. எனினும் அவர்களும் பஸ்ரியனின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக்களை முன்வைத்துத் தயது நடவடிக்கை சரி என்று நிலைநாட்டினர். விவாதம் முற்றிக் காரசாரமாகி உச்சக் கட்டத்தை அடைந்தபொழுது பஸ்ரியன் "It is a mean way of acting'' (இது ஒரு கீழ்த்தரமான செயல்) எனறு அடித்துக் கூறி விட்டார்.

இந்தச் சொற்பிரயோகமானது நிர்வாகத்தினரது முகத்தில் அடித்தது போலாயிற்று. அவரைப்பற்றிய ஒரு கரும்புள்ளியைத் தமக்குள் குத்திக் கொள்ள வாய்ப்பை உண்டு பண்ணியது. ஆயினும் மாணவர்கள் தம் கோரிக்கையை நிர்வாகம் ஒரு சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளச் செய்தது.

தமக்காக வாதாடச் சென்று பஸ்ரியன் இப்படியான இக்கட்டுக்குள் மாட்டிக் கொண்டாரே என்ற கவலை உடன் மாணவர்க்கு எழுந்தது. குறிப்பாக அவரது இலங்கை நண்பர்கள், ''பஸ்ரியன் மாணவன், போதிய மொழிப் புலமை இன்மையாலே இத்தகைய சொற்-பிரயோகத்தைக் கையாண்டார். நிர்வாகத்தினரை புண்படுத்தும் நோக்கத்தோடு அல்ல''என்று நிர்வாகத்தினரிடம் மன்னிப்புக் கோரி நிலைமையைச் சமாளித்தனர்.

பொதுவாக எல்லாத்திலும் தன்னை நல்லபிள்ளை என்று வெளிக் காட்டிக் கொள்ளாது—தன்னைக் கவனிக்காது மற்றவர்களுக்காக எந்நேரமும் செயற்பட்டது மேலதிகாரிகள் சிலருக்கு பஸ்ரியன் மட்டில் அதிருப்தியைக்கூட ஏற்படுத்தியது.

குருவாக வந்த பின்னர்கூட மற்றவர்களுக்காகக் குரல் எழுப்புவதில் பஸ்ரியன் என்றும் தயக்கம் காட்டியவரல்லர். தயங்கிக் கொண்டிருப்பவர்களுக்குப் பக்கத்தில் நின்று 'நான் உன்னோடு நிற்கின்றேன்' என்ற துணிவைக் கொடுத்து மற்ற வர்கள் வாழ்வுக்கும், முன்னேற்றத்துக்கும் வழி கோலினர்.

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு எவர் சென்றாலும், பஸ்ரியனை நாடிச்செல்வதும், அவர்களுக்கு பஸ்ரியன் வழி காட்டியாகச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுவ தும்கூட, அவர் கல்வியைக் கவனிக்காது விட்டுவிடுவாரோ என்ற தயக்கத்தை மேலதிகாரிகளுக்கு ஏற்படுத்தியிருந்தது. எத்தனை இடர்களுள்ளும் பஸ்ரியன் தன் கடமைகளைத் தவ ருமலேயே செய்துவந்தார்.

அநீதியைக் கண்டு அஞ்சி நிற்காத் தன்மை பஸ்ரிய னுக்கு உண்டு.

1981 செப்டம்பரில் பஸ்ரியனும் தமிழகத்தில் இருந்து வந்த அவரது குருநண்பனான C. சேவியர் அடிகளாரும் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிக்குச் செல்லும் வழியில் குருநாகல் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் இரவு பஸ்வண்டிக்காகக் காத்து நின்றனர்.

திடீரென பயணிகள் தங்கும் அறையில் யாரோ அடி படும் சத்தமும் தொடர்ந்து அபயக் குரலும் எழுந்தது. தொடர்ந்து தமிழ் இளைஞன் ஒருவன் அவ்வறையினுள் இருந்து தலைதெறிக்க ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து இரண்டு சிங்களக் குண்டர்கள் வெளிவந்தனர். அவர் களில் ஒருவன் இராணுவ உடையில் இருந்தான்.

பஸ்ரியன் ஓடிவந்த தமிழ் இளைஞனைத் தடுத்து என்ன நடந்தது என்று விசாரித்தார். அந்த இளைஞன் பேசக்கூடச் சக்தியற்ற நிலையில் தயங்கித் தயங்கிக் கூறினன்.

''நான் மட்டக்களப்பைச் சேர்ந்தவன். பயணிகள் தங்கும் அறைக்குள் இருந்தேன். அவர்கள் என்ர சூட் கேசைத் திறக்கச் சொன்னார்கள். நான் நீங்கள் கொள்ளை அடிக்க அதுக்குள் எதுவும் இல்லை என்றேன். அதுக்கு அவர்கள் மட்டக்களப்பில் சிங்களவர்களை நீங்கள் அடிக் கிறீர்கள் என்று சொல்லி என்னை அடித்தார்கள்'' என்று கூறினான்.

பஸ்ரியன் அவ்விளைஞனுடன் அனுதாபத்துடன் பேசிக் கொண்டிருந்ததைக் காணச் சகிக்காத அந்த இரண்டு குண் டர்களும் பஸ்ரியனை நோக்கி வந்தார்கள்.

பஸ்ரியன் அவர்கள் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டி வாதாடினார். அவர்களோ ''நீங்கள் யாழ்ப்பாணத் தில் சிங்களவர்களைக் கொல்லுகிறீர்கள்'' என்று துவேஷ மாகப் பேசினார்கள்.

''இப்படியெல்லாம் பேசும் நீங்கள் முதலில் யாழ்ப் பாணம் வந்து பார்த்து விட்டுப் பேசவேண்டும்'' என்று பஸ்ரியன் விட்டுக் கொடுக்காது வாதாடினார். அங்கு மக்கள் கூடிவிடவே ''பயணிகள் அறைக்குள் வாரும் பேசிக்கொள் வோம்'' என்று அந்த இருவரும் சதித்திட்டத்துடன் பஸ்ரி யனை அழைத்தனர். ஆனால், பஸ்ரியன் மறுத்துவிட்டார். கூடநின்ற அந்தக்குரு நண்பரும் அதற்கு அனுமதிக்கவில்லை. இதற்கிடையில் நிலையத்திற் பணி புரிந்த தமிழ் ஊழியர்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததின்பேரில் தக்கசமயத் தில் பொலிசார் வந்து சேர்ந்தனர். பஸ்ரியன் பொலிசாரிடம் நடந்த விடயத்தை விளக்கிக் கூறினர். இதுவரை நடந்த வற்றைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழர்களும் பஸ்ரியனது கூற்று உண்மை என்று சாட்சி கூறினர். அந்தக்காடை யர்கள் இருவரும் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட் டனர்.

பொலிசார் வருவதற்குச் சற்றுத் தாமதமாயிருந்தால் அன்று பஸ்ரியனுக்கு என்ன நடந்திருக்குமோ! அவருக்கு முற்றிலும் அந்நிய இடமான அந்தச் சிங்கள இடத்தில், சிங்களர்கள் மத்தியில், சிங்களக் காடையர்களுடன் தமிழனுக்காகக் குரல் எழுப்பிய பஸ்ரியன் 'நீதியின்மேல் பசிதாக முள்ளவர்' தான் என்பதை நிரூபித்தார்.

பஸ்ரியன் துணிவு கொண்டிருந்ததனால் பணியைச் செய்தார். பணியைச் செய்ய வேண்டும் என்பதற்காகத் துணிவைக் கொண்டிருந்தார். இதனை அவரது இருபத்து ஆறு வருட வாழ்க்கையின் சாரமாகக் கொள்ளலாம்

பஸ்ரியனின் பணியின் விரைவுக்கும், துணிவுக்கும் அவரது மோட்டார் சைக்கில் ஓட்டம் ஒரு எடுத்துக்காட்டு, அவர் மானிப்பாயில் இருந்தபோது ஒருநாள் 'பிறேக்' இல்லாத ஒரு B. S. A. மோட்டார் சைக்கிலில் அவரின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு மானிப்பாயில் இருந்து யாழ்ப்பாணம் சென்றேன். "ஏனடா இந்த மனுஷனோடு புறப்பட்டோம்" என்று நான் ஏங்கித் தவித்ததை என்னால் இன்னும் மறக்க முடியாமல் உள்ளது.

மற்றவர்களை மகிழ்விப்பதிலும், மற்றவர்களின் இன்ப துன்பங்களில் தானும் பங்கெடுப்பதிலும் அவர் பின்னின்றது கிடையாது. அதற்காகச் சிறு பிள்ளை போன்று ஒரு முரட்டுத்தனமான துணிவுடன் செயல்பட்டு மிருக்கின்றார். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையெல்லாம் ஒரு சவாலாகக் கருதியே வாழ்ந்துள்ளார்.

1979 ஆகஸ்ட் 10ஆம் திகதி மடுத்திரு விழாவுக்காக வந்திருந்தபோது ஒரு மோட்டார் சைக்கில் சாதனையை நிகழ்த்தினார்.

அந்தமுறை அவருக்கு இரண்டு பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஒன்று சக்கிறித்திப் பொறுப்பு. மற்றது விடுதிகள் கண்காணிப்புப் பொறுப்பு.

10ஆம் திகதி தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத் திருவிழா. 9 ஆம் திகதி இரவு நற்கருணைத் திருவிழா. 9ஆம் திகதி இரவு தலைமன்னாருக்குச் சென்று அப்பொழுது தலைமன்னார் பங்குத் தந்தையாக விருந்த அருள்திரு சூசை நாயகத்தை சந்திக்க வேண்டும் என்பது அவரது திட்டம்.

9ஆம் திகதி இரவு மடுத்திருப்பதியில் ஆராதனைகள் முடிந்தது. மறுநாட்காலை வழிபாடுகளுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து முடித்தார். சக குருமார் சாப்பிட்டுவிட்டு அவரவர் விடுதிகளுக்குச் சென்று விட்டனர். பஸ்ரியன் விடுதிகளுக்கும் பொறுப்பாளராகையால் அவர் படுக்கைக்குப் போகும் நேரத்தை எவரும் கவனிப்பதில்லை.

எல்லா ஆரவாரங்களும் அடக்கிவிட்ட பின்னர் பஸ்ரியனது மோட்டார் சைக்கில் மடுப்பதியில் இருந்து புறப்படுகின்றது. சுமார் 45 மைல் தொலைவிலுள்ள தலைமன்னார் கிராமத்தை அடைந்து சில மணிநேரத்தை பங்குத் தந்தை சூசைநாயகத்துடன் கழித்துவிட்டு உடனே திரும்புகின்றார்.

அதிகாலை திருந்தாதி மணி அடிக்கு முன்னர் அவர் மடுப்பதியில் நிற்கவேண்டும். மோட்டார் சைக்கிலில் ஏறி விட்டார். அவர் மோட்டார் சைக்கில் வேகத்தைக் கட்டுப்படுத்துவது கிடையாது.

செம்மண் தீவில் வந்துகொண்டிருந்தபோது நாயொன்று அவரைக் கட்டுப் படுத்த எண்ணியது போலும், மோட்டார் சைக்கிலுக்குக் குறுக்கே பாய்ந்து விட்டது. மறுகணம் மோட்டார் சைக்கிலோடு பஸ்ரியன் கீழே கிடந்தார். நல்ல வேளை பலமான அடிகள் ஏதுமில்லை. முழங்கையில் மட்டுமே உராய்வு ஏற்பட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அவர் அணிந்து வந்த தொப்பியும், கண்ணுடியும் எங்கே விழுந்தன என்று அவ்விருட்டில் கண்டு பிடிக்க முடிய வில்லை. அவற்றைப் பொறுமையோடு தேடிக்கண்டு பிடிக்க முடியாமல் கைவலி எடுத்தது. முதலில் காயத்துக்குக் கட்டுப் போடவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு மைல் தொலைவிலுள்ள முருங்கன் கிறிஸ்து அரசர் கோவிலுக்கு விரைந்தார். நல்லகாலம் மேட்டார்சைக்கில் தகராறு எதுவும் செய்யவில்லை.

அப்பொழுது அங்கு பங்குத் தந்தையாக இருந்தவர் அருள்திரு தேவராஜன் அவர்கள். இவரும் பஸ்ரியனின் ஊரான இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சகோதரக் குருவும், நெருங்கிய நண்பருமாவர்.

ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த அவரைத்தட்டி எழுப்பி விடயத்தைச் சொன்னர். தன்னுல் செய்யக்கூடிய சிகிச்சை களைச்செய்து, பின்னர் இருவருமாக செம்மண் தீவுக்கு வந்தனர். மோட்டார் சைக்கிலோடு விழுந்த இடத்துக் குக் குறிப்பாக வந்து கண்ணுடியையும், தொப்பியையும் எடுத்துக் கொண்டு திரும்பினர். திருந்தாதி அடிக்கு முன் னரே பஸ்ரியன் மடுப்பதிக்கு வந்து விட்டார். இவர் தலைமன்னுருக்குப் போனதும் வந்ததும் மடுப்பதியில் எவருக் கும் தெரியாது.

கையில் ஏற்பட்ட காயத்தையோ, உள்ள வலியை யோ அவர் வெளிக்காட்டவில்லை. மோட்டார் சைக்கிள் ஓடி விழுந்தெழும்புபவர்களை ஏனையவர்கள் கேலி செய்வர். அந்தக் கேலிக்கு ஆளாக அவர் விரும்பவில்லை.

ஆனுல், இரண்டு நாள்களுக்குள் குட்டு அம்பலமாயிற்று. சக குருவானவர் ஒருவர் தற்செயலாக முழங்கையில் முட்டி யதும் இவர் 'ஆ...!' என்று அலறிவிட்டார். ''கையிலே என்ன ?'' என்று மற்றவர்கள் கேட்டதற்கு அது விஷப்

பரு என்று கூறி மழுப்பிவிட்டார். ஆனால், புண்ணுக்கு மருந்து கட்டும் சகோதரிமூலம் விஷயம் அம்பலத்துக்கு வந்துவிட்டது. அதன் பின்னர் மற்றக் குருக்கள் ''எப்படி பஸ்ரியன் விஷப்பரு ?'' என்று கேலி பண்ணுவது சாதாரணமாகி விட்டது. அது மட்டன்று, அவர் எங்கேனும் மோட்டார் சைக்கிலில் சென்று வந்தால், மற்றவர்கள் இவரது கையைக் காலை பிடித்துப் பார்ப்பது ஒரு தமாஷாக இருந்தது.

தனது குரு நண்பர் ஒருவரை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக பஸ்ரியன் தன்னை வருத்திக் கொண்ட சம்பவம் இதுவாகும்.

மானிப்பாயில் உள்ள 'பொண்ட் (Bond) சின்னத்துரை' என்ற பெயரால் அழைக்கப்படும் அன்ரனி எனும் இளைஞருக்குக் கிடைத்த அனுபவம் மிகவும் சுவையானது:

1980ஆம் ஆண்டில் வவுனியாவில் தேவ அழைத்தல் பற்றிய ஒரு பொருட்காட்சி இடம் பெற்றது. பொருட்காட்சியின் ஒரு பிரிவை அருட்சகோதரி காமன் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். அதில் பூகோளம் சுழலுவது போன்ற ஒரு காட்சி அமைக்கப்படல் வேண்டும். அதற்கு மின்விசிறியின் துணைகொண்டு தான் செய்து தருவதாக பஸ்ரியன் அடிகளார் பொறுப்பேற்றிருந்தார். பொருட்காட்சி இடம் பெற இருந்த தினம் ஒரு செவ்வாய்க் கிழமை.

பிஸி பஸ்ரியனுக்கு பல அலுவல்கள். எனவே குறிப்பிட்ட பொருட்காட்சி நடைபெற இருந்த தினத்தை மறந்துவிட்டார். அன்று திங்கட்கிழமை மாலைதான் மானிப்பாயில் இருந்துவந்த ஒரு அருட்சகோதரி ''பாதர் நீங்கள் நாளைக்குப் பொருட்காட்சிக்குப் போகவில்லையா ?'' என்று நினைவுபடுத்தினர்.

"அடடா" என்று தலையில் அடித்துக் கொண்டார். நாளை பொருட்காட்சி எனவே இன்று வவுனியாவில் குறிப்பிட்ட காட்சியமைப்பு செய்யப்பட்டு ஒத்திகையும் பார்த்திருக்க வேண்டும்; நேரமும் திங்கள் மாலையாயிற்று.

உடனடியாக வவுனியா சென்று ஏதாவது ஒழுங்கு செய்ததாக வேண்டும். ஆனால் மறுநாள் செவ்வாய்க்கிழமை அந்தோனியாரின் நாள். காலை 6-15க்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்க வேண்டும். காலையில் பூசை வைப்பதற்கு எந்தக் குருவானவரின் உதவியையும் கோரமுடியாது. அவரவருக்கு முன்திட்டமிட்டபடி தமது பங்குகளில் காலைப் பூசை இருக்கும். அத்தோடு வேறு சுவாமிமாரைத் தேடிக் கொண்டிருப்பதில் அதிக நேரம் தாமதமாகிவிடும். தாமதமாகப் போய் வவுனியாவில் செய்யக்கூடியதும் ஒன்றுமில்லை. உடனே ஒரு முடிவுக்கு வந்தார்.

அந்தக் காட்சி அமைப்பைச் செய்யக் கூடிய 'பொண்ட்' எனும் இளைஞனுக்கு ஆள் அனுப்பிக் கூப்பிட்டார். 'பொண்ட்' வந்துசேர நேரம் இரவு 8-30.

"பொண்ட், சரியாக ஒன்பது மணிக்கு வவுனியாவுக்குப் புறப்பட வேண்டும், நீ சாப்பிட்டுவிட்டாயா ?"

"இன்னும் சாப்பிடேல்லை, போய்ச் சாப்பிட்டிட்டு உடனே வாறன்"

"நீ இங்கேயே சாப்பிடு"

சாப்பாடு கொடுக்கப்பட்டது. நேரம் ஒன்பதைத் தாண்டி விட்டது. காட்சியமைப்புக்கு வேண்டிய மின்விசிறி உபகருணங்களுடன் பொண்ட் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருக்க, மோட்டார் சைக்கிலைக் கிளப்பினார் பஸ்ரியன். வவுனியாவை நோக்கிப் பறந்தது மோட்டார் சைக்கில்.

மானிப்பாயில் இருந்து வவுனியா சுமார் 95 மைல்கள். காற்று வேகத்தில் சென்ற அவரது வேகத்தால் பின்னே இருந்த பொண்டிக்கு மூச்சுவிடக் கூடச் சிரமமாக விருந்தது. ஒவ்வொரு வளைவுகளிலும் எங்கே புரண்டு நொறுங்கி விடுவோமோ என்ற திகில் ஆட்டிப் படைத்தது. ''மானிப்பாய் அந்தோனியாரே'' என்று மனதுக்குள் பல தடவைகள் வேண்டிக் கொண்டார்: பொருட்காட்சியின் அந்தக் குறிப்பிட்ட பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சகோதரி இரவு ஒன்பது மணிவரை காத்திருந்தார். பஸ்ரியன் வராதது கண்டு அவர் அழத்தொடங்கி விட்டார். ''விடிந்தால் பொருட்காட்சி, இனி நான் என்ன செய்வேன்? எப்படிச் செய்வேன்''என்று புலம்பிக் கொண்டே இருந்தார்: ஏனெனில், பொருட்காட்சியின் ஏனைய பகுதிகள் எல்லாம் ஆயத்தமாகி விட்டது. இந்தப் பகுதிமட்டும் வெறுமையாக விருந்தது.

சரியாக இரவு 11—10 அச்சகோதரியின் வயிற்றில் பாலை வார்த்த செயலாக பஸ்ரியனின் மோட்டார் சைக்கில் வவுனியா அந்தோனியார் ஆலய வளவுக்குள் நுழைகின்றது; அந்தச் சகோதரி மட்டுமல்ல அதுவரை நேரமும் மரண பயத்தில் பின்னுக்கு இருந்து வந்த பொண்டும் நிம்மதியாக மூச்சுவிட்டார்.

நேரம் அகாலமாகி விட்டது. கடைகள் வேலைத்தலங்கள் எல்லாம் மூடிவிட்ட வேளை, அந்தப் பூகோள உருண்டையை சுழலவைப்பதற்கு மின்விசிறியோடு இணைத்து ஒட்டுவேலை செய்ய வேண்டியிருந்தது.

அந்த அர்த்த ராத்திரியில் ஒட்டுவேலை செய்யும் கடைகளைத் தேடிச் சென்று ஒரு கடைக்காரனைச் சம்மதிக்க வைத்தார். தவித்த முயல் அடிப்பதில் கைதேர்ந்த வர்க்கத்தைச் சேர்ந்த அந்தக் கடைக்காரனும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிடிவாதமாக ஒன்றிற்கு நான்கு மடங்காக கூலியைப் பெற்றுக் கொண்டான்.

பூகோள வேலையைத் தடையின்றித் தொடர வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் செய்து முடித்தபோது அதிகாலை இரண்டு மணியைத் தாண்டி விட்டது. காலை 6-15க்கு மானிப்பாயில் திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதையும் அவர் மறந்து விடவில்லை.

சற்று நேரம் பொண்டுக்கு உதவியாக நின்று விட்டு "வேலை முடிந்ததும் என்னை எழுப்பு" என்று கூறிப்படுக்கச் சென்றார்; சுமார் ஒரு மணி நேரம்தான் கண்ணயர்ந்திருப்பார்.

"வேலை முடிஞ்சுது பாதர்" என்று பொண்ட் எழுப்பினார். பூகோள உருண்டையை சுழலவைத்துப் பார்த்தார். அனைத்தும் திருப்தி. அப்பொழுது நேரம் அதிகாலை நான்கு.

முகத்தைக் கழுவிக் கொண்டு புறப்பட ஆயத்தமானார். தலைக்கவசத்தை அணிந்து கவசக் கண்ணாடியை முகத்துக்கு நேரே இழுத்து விட்டுக் கொண்டார். மோட்டார் சைக்கிளை இயக்கும் போது "பொண்ட் கவனமாயிரு" என்று எச்சரிக்கை செய்தார்; ஏனெனில் இரவு முழுவதும் பொண்ட் கண்மூடவில்லை என்பதனால்,

மறுகணம் மோட்டார் சைக்கிள் அசுரவேகத்தில் பறந்தது. வைகறைக் குளர்காற்று 'சுள்' ளென்று குத்தியது. 'உயிரோடு போய்ச் சேருவோமா என்று மறுபடியும் பொண்டின் மனம் மரண அவஸ்தைப்படத் தொடங்கியது. அந்தோனியாரை நோக்கிய அவரது மன்றாட்டு மீண்டும் ஆரம்பமானது.

மாங்குளத்தில் தேனீர்க் கடையில் மோட்டார் சைக்கில் நிறுத்தப்பட்டது. மோட்டாா சைக்கிலில் இருந்தபடியே கோப்பி வாங்கி இருவரும் பருகினர். மீண்டும் வாகனம் புறப்பட்டது.

கீழ்வானம் வெளுக்கத் தொடங்கிய சமயம் பரந்தன் வீதியில் சென்று கொண்டிருந்தார். "படார்" என்று தலைக் கவசத்தில் ஏதோ மோதியசத்தம்: ஆனால், மோட்டார் சைக்கில் நிறுத்தப்படவில்லை. பயணம் தொடர்ந்தது. கோப்பாய் வீதியால் வந்து மருதனா மடசசந்தியில் மோட்டார்சைக்கில் வந்தபோது நேரம் 6-15.

மிகவும் வேண்டிய ஒருவரை மருதனாமடத்தில் கண்டதால் டக்கென்று வாகனத்தை நிறுத்தினார். சுவாமியோடு பேசவந்தவர் வியப்போடு அவரைப் பார்த்தார். காரணம்?

சிறிய பூக்குத்திக் குருவி ஒன்று தலைக்கவசத்துக்கும் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ள முனைக்கும் இடையில் சொண்டு சொருகப்பட்ட நிலையில் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் செட்டை அடித்துத் அடித்துக் கொண்டிருந்தது. அவர் அதனைச் சுட்டிக் காட்டவே தனக்கே உரித்தான சிரிப்புடன் அதனைப் பிடித்து பொண்டின் கையில் கொடுத்தார். பாவம் பரந்தனில் இருந்து மருதனாமடம் வரை, பொண்டோடு கூட அந்தக் குருவியும் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டுவந்திருக்கிறது.

காலை 6-25க்கு அன்று செவ்வாய்க் கிழமை திருப்பலியை மஸ்ரியன் அடிகளார் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்தார். பொண்ட் உயிரோடு கொண்டு வந்து சேர்த்த அந்தோனியாருக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தார்.

கடமை என்று முன்னிற்கும் போது உணவு, உறக்கம், ஓய்வு எதையுமே பஸ்ரியன் வலிந்து தேடிக் கொள்ள முயல்வதில்லை. அது அவரோடு உடன் பிறந்த குணம், இது விடயத்தில் பஸ்ரியனைப்பற்றி அதிகம் கவலைப்பட்ட ஒரு ஜீவன் இருந்தது. அவரைத் தன் சொந்தப்பிள்ளை போலப் பராமரித்துவந்த அவரது சமயற்காரர் இராசநாயகம் எனப்படும் முதியவர்தான் அவர்.

"சுவாமி நேரத்துக்குச் சாப்பிடுகிறார் இல்லை. காலையில் சாப்பிடுகிறது பிந்தித்தான். சில நேரங்களில் காலைச் சாப்பாடும், பகல் சாப்பாடுமாய் சேர்த்து மத்தியானத்தில்தான் சாப்பிடுகிறார், இரவுச் சாப்பாடும் ஒழுங்கில்லை என்று பஸ்ரியனின் பெற்றவர்களிடமும் மற்றவர்களிடமும் சொல்லி முறையிடுவார். சுவாமியார் வர எவ்வளவு நேரமானாலும் தானும் சாப்பிடாமல் காத்திருந்து அவர் சாப்பிட்ட பின்னரே தான் சாப்பிடுவார் அந்த மனிதர்.

பஸ்ரியன் அடிகளாரை எந்த நேரமும் இளைஞர்கள் தேடிவருவது வழக்கம். அவர் சாப்பிடத் தாமதமாக வரும் நாட்களில் 'இனிச் சுவாமி வேறு இடத்தில் சாப்பிட்டிட்டுத் தான் வருவார், என்ற துணிவில் சில சமயங்களில் இளைஞர்கள் அவரது உணவைத் தாம் பங்கு போட்டுக்கொள்வதுண்டு. அந்த அளவுக்கு உள்வீட்டுப்பிள்ளைகளாக இளைஞர்களைத் தம்முடன் உறவாடும் உரிமையை பஸ்ரியன் அளித்திருந்தார். இளைஞர்களின் இந்தச் செயலால் சில வேளைகளில் அவர் பட்டினி கிடந்த சம்பவங்களும் உண்டு. அதற்காக அவர் எவரையும் கடிந்து கொண்டது கிடையாது.

இதனால் அதிக வேதனை அடைபவர் சமையற்காரர் இராசநாயகம் அப்பாதான். எனவே மற்றவர்களுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்து பஸ்ரியன் பசித்துவந்த வேளை உணவளித்து உபசரித்தவர் இராசநாயகம்.

வங்காலையில் பணியாற்றியபோது இராசநாயகம் நோயுற்றுக் காலமானார். இராசநாயகம் அப்பாவின் பிணம் யாருமற்ற அனாதைப் பிணமாகவல்ல; தன் சொந்தத் தந்தைக்கு மகன் செய்யும் இறுதிக் கடமைகள் போன்று ஆடம்பரமாக வழிபாடுகளுடன் செய்து முடித்தார் பஸ்ரியன். அவரது இறப்பையிட்டு பஸ்ரியன் குலுங்க அழுததைக் கண்ட இளைஞர்கள் வியந்து நின்றனர். பெற்ற

தந்தைக்குக் கிடைக்காமல் போய்விட்ட அந்தப் பாக்கியம் உணவளித்து உபசரித்த அந்த ஊழியனை இராசநாயகம் அப்பாவுக்குக் கிடைத்தது.

அகால வேளைகளிலெல்லாம் இவர் மேற்கொண்ட மோட்டார் சைக்கில் பிரயாணங்களால் இரவு வேளைகளில் நடுவழியில் அந்தரித்து நின்ற சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு.

ஒரு முறை இரவு வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பிரயாணத்தைத் தொடங்கியவருக்கு ஆனையிறவுக்கு அண்மையில் மோட்டார் சைக்கில் தகராறு பண்ணி நகர மறுத்தது. மோட்டார் சைக்கிலை யார் வீட்டிலோ வைத்து விட்டு அவ்வழியால் வந்த வாகனமொன்றில் ஏறி கிளிநொச்சிக்கு வந்தார். கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்தின் பங்குத் தந்தையை எழுப்ப வேண்டியிருந்தது.

அப்படி அலுத்துக்களைத்து வந்தவேளையிலும் அவருக்கே உரித்தான அந்தக் குறும்புக் குணம் போகவில்லை. அறையின் கதவைப் பலமாகத்தட்டி "யார் இந்தக் கோயில் சுவாமி, வா வெளியால" என்று சத்தமிட்டிருக்கிறார்.

உள்ளே இருந்த சுவாமியார் அச்சம் கொண்டவராக, எதற்கும் ஆயத்தமாக கையில் ஒரு பொல்லும் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தார். அங்கு பஸ்ரியன் சிரித்துக் கொண்டு நிற்க அவரும் வாய் விட்டுச் சிரித்தார்.

"பஸ்ரியனுடைய மோட்டார் சைக்கிலை அவர் மட்டும் தான் ஓட்டமுடியும்" என்று அவரது குரு நண்பர்கள் அவரைக் கேலி செய்வதுண்டு. ஏனென்றால், உரிய உதிரிப் பாகங்கள் சில இல்லாதிருக்கும் மோட்டார் சைக்கிலில் எந்த வயரை இழுத்தால், அல்லது பொருத்தினால் அது இயங்கத் தொடங்கும் என்ற இரகசியம் அவருக்கு மட்டுமே தெரியும்.

தனது இந்த வேகத்தால் தான் அடிக்கடி விழுந்து எழுந்த போதும் அதற்காக அவர் பயந்ததோ அதனால் அவர் தன் கடமைகளிற் தவறியதோ கிடையாது.

1980ல் மல்வம் இளைஞர்கள் ‘பழிதுடைத்த பலி’ (திருப்பாடுகளின் காட்சி)யை அரங்கேற்று முன்னர், முதல் நாள் வாகனமொன்றில் ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்கின்றனர். இவர்கள் சட்டவிரோதமாக விளம்பரம் செய்கின்றனர் என்று யாரோ தவறான தகவல் கொடுத்ததால் பொலிசார் அவ்விளைஞர்களையும் ஒலிபெருக்கியையும் வாகனத்தையும் தடுத்து வைத்தனர்.

திருப்பாடுகளின் காட்சி விடயமாக, வேகமாக அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த பஸ்ரியன் ஓரிடத்தில் மோட்டார் சைக்கிலோடு சறுக்கிவிழுந்து இரத்தக்காயங்களுடன் மல்வம் வந்து சேர்ந்தார். செய்தியைக் கேள்விப்பட்டதும், தன் காயங்களுக்குக்கூட மருந்து கட்டாமல் புழுதி படிந்த அதே கோலத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அவர்களை விடுவித்த பின்னரே பஸ்ரியன் தன்னைப்பற்றிக் கவனித்தார்.

இளைஞர்களுக்கு இன்னல், இக்கட்டான நிலைமையென்றால் பஸ்ரியன் நிச்சயமாகப் பின்னிற்கமாட்டார். அவர்களை எப்படிக் காப்பாற்றுவோம் என்ற ஏக்கமும் துடிப்பும் அவரிடம் காணப்படும்.

1984ல் இது நடந்தது. அப்பொழுது மன்னார் வாழ்வுதயம் நடாத்திய புனர்வாழ்வுப் பணியில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன்.

1979ஆம் ஆண்டுக் கலவரத்துடன் மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களை நடுவீதியில் உள்ள பூமலர்ந்தான் கிராமத்தில் குடியமர்த்திப் பராமரித்து வந்தது வாழ்வுதயம்.

கொர்னேலியுஸ் எனும் இளைஞர் எம்மோடு வேலை செய்து கொண்டிருந்தார். தை மாதம் 19ஆம் இரவு முருங்கன் அதிரடிப்படையினர் பூமலர்ந்தான் கிராமத்தை முற்றுகையிட்டனர். அன்று அந்த இளைஞர் வங்காலைக்கு பஸ்ரியன் அடிகளாரிடம் போய் விட்டு அடம்பனுக்குத் தன் சகோதரனிடம் போவதாகக்கூறிச் சென்றிருந்தார்.

என்னையும், அங்கு பணியாற்றும் இளம் பெண்களை யும் விசாரணை செய்தனர். ஏனோ அவர் சென்ற இடம் பற்றிய தகவல்களை நாம் கொடுக்கவில்லை. விடிந்து அவர் வந்தால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரும்படி கூறி விட்டுச் சென்றனர்.

வங்காலைக்கு இவ்விளைஞர் சென்றுராகையால் பஸ்ரிய னுக்கு அதிகாலையிலேயே தகவல் அனுப்பப்பட்டது. செய்தி அங்கு கிடைத்தபோது பஸ்ரியனும் அங்கில்லை, அவ்விளைஞ ரும் அங்கில்லை. எனினும் பஸ்ரியன் வந்ததும், தகவலை உடன் கொடுக்கவும் என்று அறிவிக்கப்பட்டது.

பஸ்ரியன் வந்தபின்னர் செய்தி கொடுக்கப்பட்டது. "பொலிஸ் விவகாரம், நமக்கேன் வம்பு?" என்று அவர் வாளா இருந்துவிடவில்லை. எமது இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதையும், விசாரணை என்னும் பெயரில் சித்திரவதை செய்யப்படுவதையும், கொலை செய் யப்படுவதையும் அறிந்து துடிக்கும் அவரால் எப்படி அமைதி யாக விருக்கமுடியும்?

தனது மோட்டார் சைக்கிலில் கிளம்பினுர். அடம்ப னுக்குச் சென்று, இளைஞரின் சகோதரன் வீட்டில் விசாரித்த போது, 'அவர் இரவு தங்கிவிட்டு காலை பூமலர்ந்தான் போவதாகக் கூறிப் புறப்பட்டுவிட்டார்' என்ற செய்திதான் கிடைத்தது.

அந்த இளைஞர் பிரயாணம் செய்யக்கூடிய ஒவ்வொரு வாகனத்தையும் மறித்துப் பார்வையிட்டார். இறுதியாக முருங்கனில் மினிபஸ் ஒன்றில் மடுவீதி நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்த இளைஞரைக் கண்டுபிடித்தார். அவரை உடனே இறக்கி, தகவலைக் கூறித் தனது மோட்டார் சைக்கிலில் ஏற்றி திருக்கேதீஸ்வரச் சந்திக்கு அப்பால் அழைத்துச் சென்றார். அவ்விளைஞருக்கு வழிச்செலவிற்குப் பணமும் கொடுத்து சங்குப்பிட்டி பஸ்சில் ஏற்றிவிட்டே திரும்பினார்.

பின்னர் நான் பஸ்ரியன் அடிகளாரைக் கண்டபொழுது கூட தான் செய்த இவை ஒன்றையுமே கூறவில்லை. தகவல் கிடைத்தபோது, தான் வங்காலையில் இல்லையென்று மட்டுமே கூறினார்.

சில மாதங்களின் பின்னர் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டபோது பஸ்ரியன் அவ்விளைஞருக்காகக் கண்ணீர் விட்டு அழுதார். சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் அவர் விடுதலையாகி வந்தபின்னரே அவ்விளைஞர் இத்தகவல்களை என்னிடம் கூறினார். அப்பொழுது பஸ்ரியன் இல்லை. அமரராகிவிட்டார்.

பஸ்ரியன் கொலை செய்யப்பட்ட செய்தியை அருட்திரு சிங்கராயர் மூலம் வெலிக்கடைச் சிறையில் தாம் அறிந்ததாகவும் தாம் அனைவரும் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகக் கூடிப் பிரார்த்தித்ததாகவும் கூறினார்.

அவ்விளைஞர் தேடப்பட்டுவந்த காலத்தில் நான் அடிக்கடி தள்ளாடி இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டேன். முதன்முறை முருங்கன் அதிரடிப் படை பொலிஸ் நிலையத்துக்கு நான் அழைக்கப்பட்டபோது தனிமையாக அங்கு செல்லப் பயந்துகொண்டிருந்தேன். அப்பொழுது பஸ்ரியன்தான் "இதற்கெல்லாம் என்ன பயம்?" என்று தானே என்னை அழைத்துச் சென்றார்.

பின்னர் இந்தச் சம்பவம்பற்றி பொலிஸ் இலாகாவில் தொடர்புடைய எனது நண்பர் ஒருவருடன் பேசியபோது, "கவனம் பஸ்ரியன்மீது பாதுகாப்புப் படையினருக்கு ஒரு கண்ணிருக்கிறது. அவரோடு கூடித்திரிவதை நீர் குறைத்துக்கொள்ளும்" என்று என்னை எச்சரிக்கை செய்தார். அந்த நண்பர் கூறியதை பஸ்ரியனிடம் கூறியபோது, "எனக்குத் தெரியும்; இதற்கெல்லாம் பயந்து வாழமுடியுமா ?" என்றே அவரிடமிருந்து பதில் கிடைத்தது. பஸ்ரியன் தனக்கு ஏற்படக்கூடிய இன்னலைக்கண்டு அஞ்சியவரல்ல. தான் வாழும் வரை மற்றவர்களுக்காகத்தான் வாழும் கடமையைச் செய்வது என்ற உறுதிப்பாட்டில் வாழ்ந்தார்.

1984 மார்கழி நாலாம் திகதி மன்னாரின் அயற்கிராமங்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொலைசெய்யப்பட்டபோது வீதிகளிலே கிடந்து அழுகி மணத்துக்கொண்டிருந்த பிணங்களை லொறிகளில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லுதல், உரியவர்களிடம் பிணங்களை ஒப்படைத்தல், அப்பிணங்களுக்கான இறுதிக்கிரிகைகள் செய்தல் முதலிய பணிகளை மற்றவர்களுக்குத் தலைமைதாங்கி பஸ்ரியனே செய்துமுடித்தார். இரவு பகலாகப் பிணங்களுடன் அத்தினங்களைப் பஸ்ரியன் கழித்த சம்பவங்களை இலகுவில் மறந்துவிட முடியாது.

இந்தக் கொடூர சம்பவங்களை நினைவுகூரும் இவ்வேளையில், நாம் மறந்துவிடாமல் நன்றியோடு நினைவுகூரவேண்டிய இன்னுமொரு நபர் இ. போ. ச. பஸ்நடத்துநர் வில்லியம் என்றழைக்கப்படும் சிங்களச் சகோதரராகும்.

அன்று வவுனியாவுக்குச் சென்ற அந்த பஸ்வண்டியில் அவரே நடத்துனராகக் கடமையாற்றினார். இராணுவம் இடைவழியில் மறித்து அதில் பிரயாணம் செய்த பொது மக்களைக் கொலைசெய்ய முனைந்தபோது சிங்களவரான வில்லியம் அவர்களுக்குக் குறுக்கே நின்று, "எனது பஸ்ஸில்

வந்த இப்பிரயாணிகளுக்கு நானே பொறுப்பு. வேண்டு மானால் நீங்கள் இவர்களை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்யுங்கள். நான் உயிரோடு இருக்கும்வரை இதற்குச் சம்மதிக்க மாட்டேன்'' என்று நெஞ்சு நிமிர்த்தி நின்றார். கொலைவெறி பிடித்த இராணுவம் முதன்முதலில் சிங்களவரான வில்லியத்தை சுட்டு விழுத்தியது. அதன்பின் னரே ஏனைய தமிழர்களைச் சுட்டு விழுத்தினர்.

வில்லியம் நினைத்திருந்தால் தப்பியிருக்கலாம். ஆனால் மொழி, இனம், மதம் கடந்த நிலையில் அந்தத் தமிழ் மக்க ளுக்காக உயிர்நீத்த அந்த வீரச் சிங்கம் தமிழ் மக்களால் போற்றப்பட வேண்டியவர். அவரது வீரமரணம் தமிழ் இனத்தின் மீட்புக்காக உயிர்நீத்த எமது போராளிகளின் உயிர்த்தியாகத்துக்குச் சற்றும் குறைந்ததல்ல என்பதே என் கருத்து.

அதேமாதம் 13-ம் திகதி இன்னுமொரு கொடூரமான நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் தள்ளாடி இராணுவ முகாமுக்கு அண்மையில் முள்ளிப்பள்ளம் எனும் இடத்தில் தனது மோட்டார் வண்டியில் தமிழ் பொலிஸ்காரர் ஒருவ ருடனும், தனது சாரதியுடனும் பிரயாணம் செய்த 'ஜீவோ தயம்' இயக்குநரும், மெதடிஸ்த போதகருமான அருள்திரு ஜோர்ச் ஜெயராசசிங்கம் இராணுவத்தினரால் சுடப்பட்டு மற்ற இருவருடனும் காரோடு தீ மூட்டப்பட்டார்.

இச்செய்தியைக் கேள்விப்பட்டு அனைவரும் என்ன செய்வதென்று அறியாது திகைத்து நிற்க, இளையவரான பஸ்ரியன் துடித்து நின்றார். "அவர் எமது சபையைச் சாராதவர் என்றாலும், கிறிஸ்தவ பாதிரியார். இன்று அவ ருக்கு நடந்தது நாளை நமக்கும் நடக்கலாம். எனவே எரிந்து கருகியவைபோக, எச்சங்களையாவது நாம் எடுத்து உரிய மரி யாதையுடன் இறுதிக் கிரியைகள் செய்விக்க வேண்டும்'' எனத் துடித்தார். இவரது இக்கூற்றை ஜாயிஸ் பொன்

னையா அடிகள் ஆதரித்தார். அதன்பின்னரே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எரிந்த உடலின் சில எலும்புகள் மட்டும் அவரவர் இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அருட்திரு ஜெயராசசிங்கம் அவர்களுக்கு நேர்ந்த அதே கதி எண்ணி இருபத்துமூன்று நாட்களின் பின்னர் பஸ்ரியனுக்கும் நிகழ்ந்தது.

பஸ்ரியன் கொலைசெய்யப் பட்டதன்பின்னர் எழுந்த கண்டனங்களும், மக்கள்மயப் படுத்தப்பட்ட எதிர்ப்புகளும் அருட்திரு ஜெயராசசிங்கமும் ஒரு கிறிஸ்தவக் குரு என்ற உணர்வோடு அனைத்துச் சபையினரும் இணைந்து ஒருமித்துக் காட்டப்பட்டிருந்தால் தொடர்ந்தும் சமயத் தலைவர்களைக் கொலைசெய்யும் கொடுமைகளைத் தடுக்க வழிகோலி இருக்கலாம்.

பஸ்ரியன் வாழ்நாள் முழுவதும் பிறர் அன்பிலும், அஞ்சாமையிலும் வாழ்ந்திறந்த மகான் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இவரது அசாதாரணத் துணிச்சல் இவரைச் சிலவேளைகளில் ஆபத்தில் மாட்டிவிட்டதும் உண்டு.

திருச்சியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் கொல்லிமலைச் சாரலுக்குச் சுற்றுப்பயணம் புறப்பட்டது ஒரு மாணவர் குழு. இக்குழுவில் பஸ்ரியனும் இருந்தார்.

அவர்களுக்கு மலைஏறிப் பார்க்கவேண்டும் என்று தோன்றியது. பஸ்ரியன் முன்னே ஏற பஸ்ரியனில் நம்பிக்கை வைத்து மாணவர் குழு பின்தொடர்ந்து ஏறிக்கொண்டிருந்தது. பஸ்ரியன்மீது இருந்த நம்பிக்கையில் கூடச்சென்றவர்கள் எவருமே சென்றுகொண்டிருக்கும் வழியைக் குறிப்பா

கக கவனிக்கத் தவறிவிட்டனர். அதன் விளைவு? அந்தோ பரிதாபம். திருப்பி வரவேண்டிய பாதையை மறந்து விட்டனர்.

அங்கிருந்து கீழே செல்வதற்கு வாகனம் செல்லும் வழி இருந்தது. ஆனால் அவ்வழியால் செல்வதானால் பலமைல் தொலைவு நடந்து செல்லவேண்டும். நேரமும் மாலையாகி விட்டது. அந்நேரத்தில் அங்கிருந்து செல்வதற்குப் பஸ் எதுவுமில்லை. இரவு அங்கேயே எங்காவது தங்கி அதிகாலையில் பஸ்வண்டியில் புறப்படுவதாகத் தீர்மானம் எடுத்தனர்.

பிரச்சினை வேறு ரூபத்தில் எழுந்தது. இரவு தங்குவதானால் சாப்பிடவேண்டும். ஆனால் எல்லோர் கைகளிலும் இருந்த பணம் மொத்தமாக பஸ்ஸுக்குக் கொடுப்பதற்கே போதுமானதாகவிருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும்'' அல்லவா. இருந்தபணத்தில் ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டனர்.

அடுத்த பிரச்சனை எங்கே தங்குவது? ஒரு வீடடுத் திண்ணையைத் தேடிப்பிடித்து வீட்டுக்காரரின் அனுமதி பெற்றுக்கொண்டனர். இரவு அத்திண்ணையிலேயே முடங்குவதாகத் தீர்மானமாயிற்று.

இருக்குமிடமோ மலை. நேரம் போகப்போகத்தான் குளிரின் கொடுமை தெரிந்தது. கொண்டுசென்ற துவாய்களால் தலையைச் சுற்றிக் கட்டிக்கொண்டு, சாரங்களால் கழுத்துமட்டும் இழுத்துப் போர்த்துக்கொண்டு இரவு முழுவதையும் கழித்தனர். இந்த இக்கட்டான நிலைக்குள் மாட்டிவிட்ட பஸ்ரியனை இரவு முழுவதும் சும்மா விட்டுவைப்பார்களா? சிலர் கோழித்தூக்கம் போட்டனர். இதுவும் ஒரு புதிய அனுபவம்தான்.

அதிகாலையில் பஸ்வண்டி வந்தபோது முகம்கூடக் கழுவாமல் அவசரம் அவசரமாக அதே கோலத்தில் வண்டியில்

ஏறிக்கொண்டனர். பஸ்கட்டணம் கொடுப்பதற்குப் போதிய பணம் இல்லை. பஸ் நடத்துனரிடம் கடன்சொல்லவேண்டிய நிலைமை. குருத்துவக் கல்லூரி வாயிலில் பஸ் நிறுத்தப்பட்டது. 'கேற் அப்பா' (காவலாளி) விடம் காசு கடனுகப் பெற்று மிகுதிப் பஸ் கட்டணத்தைச் செலுத்தினர்.

பஸ்ரியனோடு செய்த அந்தச் சுற்றுப்பயணத்தில் பெற்ற சுவையான சம்பவம்—அனுபவம்பற்றி அவரது உடன் மாணவர்கள் இன்றும் பசுமையோடு நினைவு கூருகின்றனர்.

கருச்சியில் படிப்பு முடிந்து கண்டி தேசியக் கல்லூரியில் ஓராண்டு இறையியல் மாணவனுக 1974இல் இருந்தபோது அவரது அசட்டுத் துணிச்சலைப்பற்றி அன்றைய மெய்யியல் மாணவராய் இருந்த இன்றைய குரு ஒருவர் சொல்லிச் சிரித்தார்.

ஏப்ரல் முதலாம் திகதி சித்திரை முட்டாள் தினம். மெய்யியல், இறையியல் மாணவர்கள் ஒருவரையொருவர் முட்டாள்களாக்கி மகிழும் தினம். அதன் உச்சக்கட்டம் படுக்கை அறைகளில் இரவில் நீர் ஊற்றுவது.

பஸ்ரியன் சார்ந்த இறையியல் மாணவர் குழு அன்று இரவு மெய்யியல் மாணவர்களது படுக்கை அறையில் தண்ணீர் ஊற்றுவதாகச் சபதமெடுத்தனர். முடியுமானுல் ஊற்றிப்பாருங்கள் என்று மெய்யியல் மாணவர்கள் சவால் விட்டனர்.

அன்று இரவு — நள்ளிரவு கடந்துவிட்டவேளை ஓர் உருவம் தண்ணீர் பேசினுடன் பதுங்கிப் பதுங்கி மெய்யியல் மாணவர்கள் அறையை நோக்கிச் சென்றது. அந்த உருவம் அறையை அண்மித்ததும், ஏற்கனவே ஆயத்தமாக இருந்த மாணவர்கள் அந்த உருவத்தைச் சுற்றி வளைத்து சாத்துசாத்தென்று சாத்தினர். தண்ணீர் பேசினையும்

போட்டுவிட்டு அவ்வுருவம் ஓட்டம் பிடித்தது. ஆனல் வந்தது யார் என்றுமட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை. அத்துணை சாமர்த்தியமாக அவ்வுருவம் தப்பி ஓடிவிட்டது.

மறுநாள் காலை திருப்பலியில் கவனித்தபோது இறையியல் மாணவர்களோடு பஸ்ரியன் இல்லாததைக் கண்ட போதுதான், இரவு வந்தது பஸ்ரியன் என்று கண்டுபிடித்தனர். இரவு வாங்கிக்கட்டிய அடியின் அகோரம் படுக்கையினுல் எழும்பமுடியாது கிடந்தார் பஸ்ரியன். இப்படியாக விளையாட்டிலும் சரி விட்டுக் கொடுக்காமல் எந்த இடரையும் எதிர்நோக்கி வாழ்ந்த மனேபலம், மனத்துணிவு பஸ்ரியனிடமிருந்தது. அவரது அச்சமின்மைக்கு ஆதாரமாகப் பல விடயங்களை இன்னும் எடுத்துக் கூறலாம்.

அவரது உற்ற நண்பனுன அருள்திரு டோமினிக் அடிகளால் இன்னுமொரு அனுபவம் கிட்டியது.

பஸ்ரியனும், அரச அதிகாரி ஒருவரும் அவரது மோட்டார் சைக்கிளிலும், டோமினிக் அடிகள் தனது மோட்டார் சைக்கிளிலுமாக யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தனர். திடீரென டோமினிக் அடிகளார் பிரயாணம் செய்த மோட்டார் சைக்கிளின் முன் சில்லுக்குக் காற்றுப்போக அவரது சைக்கிள் மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. டோமினிக் தூக்கியெறியப்பட்டு சுய நினைவற்றுக் கிடந்தார்.

பஸ்ரியனேடு கூடவந்த அரச அதிகாரி டோமினிக் இறந்துவிட்டாரோ என்ற அச்சத்தில் பதறித் துடித்தார். ஆனல் பஸ்ரியனே சற்றும் பதட்டம் அடையாதவராக, தனக்கே உரிய நிதானத்துடன், "Dom, Dom" என்று அழைத்துத் தட்டிஎழுப்பினுர். பின்னர், "There is nothing Seriously wrong. He will be OK" என்று எதுவித தயக்கமும் இன்றி மிகச் சாதாரணமாகக் கூறினுர். பக்

கத்தே இருந்த நாட்டு வைத்தியர் ஒருவரிடம் அவரைத் தூக்கிச் சென்று சிகிச்சையளிக்கப்பட்டது. சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னர் டோமினிக் சுயநினைவு பெற்றார்.

“பஸ்ரியனுக்கு இவ்வளவு மனத்துணிவு இருக்கும் என்று அன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது” அந்த அதிகாரி வியப்போடு கூறினர். அதற்கு டோமினிக் அடிகள் பதிலாக, “With Basti I can go to hell and come back safe” (பஸ்ரியனுடன் நரகத்துக்குப் போனாலும் என்னால் பத்திரமாகத் திரும்பிவர முடியும்) என்று நம்பிக்கையுடன் கூறினர்.

பஸ்ரியனது இழப்புச் செய்திகேட்டுப் பல நாட்கள் தொடர்ந்து அழுதவர்களில் டோமினிக் அடிகளாரும் ஒருவர். அப்பொழுது அவர் றோமாபுரியில் படித்துக்கொண்டு இருந்தார்.

“Be independent — do not be bependent on others unnecessarily” (சுயமாகச் செயற்படு — அவசியமின்றி அடுத்தவர்களில் தங்கி வாழாதே) என்று பஸ்ரியன் அடுத்தவர்களுக்கு அடிக்கடி கூறுவார் என்கிறார் அருட்திரு டோமினிக் அவர்கள்.

*

# (5)

## துறவிக்கு அரசியலா?

"ஒரு குரு என்றால் நடுவு நிலைமை வகிக்கவேண்டியவர். அவருக்கு ஏன் அரசியல்?"

இப்படியாக அன்று கேட்டவர்கள் பலர், இன்றும் கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். மதகுரு என்றால் அவன் நாட்டின் பிரசை இல்லையா? தனக்குப் பிரியமான வரை, கட்சியை ஆதரித்து வாக்களிக்கும் உரிமை அவருக்கு இல்லையா? அந்த விதத்தில் பிதா பஸ்ரியனுக்கு மட்டும் ஏன் விதிவிலக்கு?

இது பௌத்த தர்மிஷ்ட நாடு. இங்கு பௌத்த குருமாருக்கு அரசியலில் உள்ள ஈடுபாடு எம்மவர்களுக்கு இல்லையென்றே கூறவேண்டும். ஒரு சிங்களத் துறவியோ, குருவோ அரசியல் பேசினால் அது தேசிய வாதம். தமிழ்த் துறவியோ, குருவோ அரசியல் பேசினால் அது இனவாதம், இனவெறியென்று ஏன் கொள்ள வேண்டும்?

பஸ்ரியன் இனப்பற்று, மொழிப்பற்று உள்ளவராக இருந்தாரே ஒழிய, நிச்சயமாக இனவெறியராக இருக்கவில்லை. இன்னும் தமிழர்களில் எந்த அளவுக்கு நண்பர்

கள் இருந்தார்களோ அந்த அளவுக்கு அவருக்குச் சிங்கள வர்களிலும் நண்பர்கள் இருந்தனர். மானிப்பாயில் அவர் இருந்த காலத்தில் அவரோடு வந்து பல மாதங்கள் தங்கி யிருந்து தமிழ் கற்றுச் சென்றனர். சில சிங்களக் குருக் களும் குருமாணவரும் அவர் கொலை செய்யப்பட்டதைக் கேள்வியுற்று "பஸ்ரியனுக்கா இந்தக்கதி?" என்று பதறித் துடித்தனர். அவருடைய கொலையைக் கேள்வியுற்று மனம் புண்பட்ட சிங்களவர்கள் பலர் உள்ளனர். கொழும்பிலே முதன் முதலில் அவருக்காக ஆன்ம சாந்தி வழிபாட்டினைச் செய்து முடித்தவர் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்செல்வி யோசபின் மெண்டிஸ் எனப்படும் சிங்களச் சகோதரி அவர்களே.

எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது கொள்கையை விட்டுக் கொடுக்காத பஸ்ரியன் தன் இனப்பற்றினை எவர் முன்னிலை யிலும் தயக்கமின்றிக் காட்டிவந்ததினால அவர் ஒரு தீவிர வாதியாகவே பலரால் கணிக்கப்பட்டு வந்தார்.

பஸ்ரியனைப்பற்றிக் கூறுவானேன்? யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள்கூட ஒரு தீவிர வாதியாகவும், பயங்கரவாதிகளின் ஆதரவாளராகவுமே சிங்கள ஆயர்கள், குருக்கள், கத்தோலிககர் சிலரின் கண் களுக்குக் காணப்பட்டார். இலங்கைக் கத்தோலிக்க தமிழ்க் குலத்தின் மூத்த தலைவருக்கே இப்படி முத்திரை குத்தி வைத்திருப்பவர்கள், பஸ்ரியனை எந்த அளவுக்குப் பயங்கர வாதியாகக் கொண்டிருப்பர் என்பது சொல்லிப் புரியவைக்க வேண்டியதில்லை.

1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்துக்குப் பின்னர் கூட நாடு பிளவு பட்டுத்தான் தமிழன் நிம்மதியாக வாழ வேண்டும் என அவர் தீவிரமாக எண்ணியவர் அல்லர். எமது பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுத் தமிழன் தனது தாயகத்தில் நிம்மதியாகவும் உரிமைகளுடன் வாழவேண்டும்

என்ற தாகமே அவரிடம் குடிகொண்டிருந்தது. அத்தாகத்தை இங்கிலாந்தில் இருக்கும் அவர் சகோதரி ஆன் பற்றிமாவுக்கு 20-2-1983இல் அவர் கைப்பட எழுதிய கடிதத்தின்மூலம் உணரக் கூடியதாகவுள்ளது.

"இன்றைய காலகட்டத்தில் எங்களுக்கு விழாக்களும் இல்லை நத்தாரும் இல்லை"

மழை ஓய்ந்து தூவானம் அடிப்பது போல் பல இடங்களிலும் பிரச்சினை ஆயுதப் படையினரால் நடைபெறுகிறது. சில இடங்களில் பெண்களையும் பிடித்து Rape பண்ணி மக்களை விரட்டுகிறார்கள்.

சமாதானக் கூட்டம் தொடங்க மனம் இல்லாதவர்போல் J. R. ஒன்றும் செய்யாமல் இருக்கின்றார். வட்டமேசை, சதுரமேசை என்று பத்திரிகைகளில் வெளிவருகிறது. ஆனால், நீதியாக, நேர்மையாக ஏதும் தீர்மானிக்கவேண்டும் என்று யோசிக்கின்றார்கள் இல்லை.

ஏற்கனவே பதினைந்து ஆயிரத்துக்குமேல் இளைஞர்கள் இந்தியாவுக்குச் சென்று விட்டார்கள். நல்ல தீர்ப்பு ஒன்று—குறைந்த பட்சம் மாநில சுயாட்சி (Federal State)—போதிய அதிகாரங்களுடன் கிடைக்காவிடில் ஜூலையைவிட மோசமான இரத்தக்களரிதான்."

அவர் தம்கைப்பட எழுதிய இந்தக் கடிதவாசகங்கள் பஸ்ரியன் ஒரு இனவெறியனா? அல்லது சமாதானம் விரும்பியா என்பதற்கான பதிலைக் கொடுத்து நிற்கின்றன. ஒற்றையாட்சியின்கீழ் நியாயமான உரிமைகள் கிடைத்தாலே போதுமானது என்பது அவரது கொள்கையாக விருந்தது. ஜூலையைவிட மோசமான இரத்தக் களரி ஏற்படாமல் மாநில சுயாட்சியுடன் சமாதானமாக வாழ வழி பிறந்தாலே போதும் என எண்ணியவர் இனவெறியராக இருக்க

முடியுமா? இன்று சிங்களத் தேசியவாதிகளே வடக்குக் கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியைத்தானே வழங்க முன்வந்துள்ளனர். எனவே பஸ்ரியன் தீவிரவாதி பயங்கர வாதியென்றால், இன்று இவர்கள் எல்லாம் யார்?

தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த வன்முறைகளும் இரத்தக்களரிகளும் நாளடைவில் தமிழ் ஈழம் ஒன்று மலர்ந்து தான் தமிழன் நிம்மதியாக வாழ முடியும் என்ற முடிவுக்கு அவரை வரவைத்தது...அந்த நாள் என்று வரும்? தமிழ் மக்கள் நிம்மதியாக வாழும் அந்த நாள் எது? என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்தார்.

20-9-84இல் தாயாருக்கு எழுதிய கடிதம் அவரது இந்த இறுதிக்கால நிலைப்பாட்டுக்கு சாட்சி கூறி "எப்பொழுது தமிழ் ஈழம் மலரும் என்றுதான் யோசனை" என்ற வாசகங்களைத் தாங்கி நிற்கின்றது. இந்த எண்ணம் அவருக்கு மட்டுமல்ல வடக்குக் கிழக்கில் தமிழனாய் வாழும் ஒவ்வொருவனுக்கும் மனதிலே எழுந்த யோசனையும் கேள்வியுமாகும். ஏன் மனித நேயத்தோடு சிந்தித்த சிங்களவர்களுக்கே எழுந்த எண்ணமும்கூட என்பதில் தவறில்லை.

தமிழ் மக்கள்படும் துன்பங்களை சிங்கள மக்கள் சரியாகவும் முழுமையாகவும் அறிய முடியாத வண்ணம் இலங்கையின் தொடர்பு சாதனங்கள் இருட்டடிப்புச் செய்து வந்தன. ஆனால், உண்மை நிலையினை சிங்கள மக்கள் மட்டுமல்ல முழு உலகுமே அறியும் வகை செய்யவேண்டும் என அவர் விரும்பினார். அதன் காரணத்தினால்தான் வடக்குத் தெற்குத் துறவற சபைகளுக்கிடையே இடம் பெற்ற அனைத்துக் கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டு பிரச்சனைகளைத் தெளிய வைப்பதில் தீவிரமாகச் செயல்பட்டார். 1981இல் யாழ்ப்பாணம் மீண்டும் எரிக்கப்பட்டபோது அந்த அனர்த்தங்களை வீடியோ படங்களாக்கித் தொகுத்து வெளியிட்டுப் பிரச்சாரங்கள் செய்தார்.

''இவையெல்லாம் செய்ய வேண்டியது கத்தோலிக்க குரு ஒருவருக்கு உள்ள கடமையா ?'' என்று மற்றவர்கள் வினவெழுப்பிய பொழுதெல்லாம், ''அநீதிக்கு எதிராகக் குரலெழுப்புவதைவிட ஒரு கிறிஸ்தவ குருவுக்கு வேறு எது முக்கியமாகவிருக்க முடியும் ?'' என்று எதிர்க் கேள்வி கேட்டு நீதியின்மேல் பசிதாகமுள்ளவராய் இயங்கினர்.

அருள்திரு A. சிங்கராயர் அ. ம. தி. அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் நீதியின் மட்டில் அவருக்கிருந்த தாகத்துக்கு ஒரு நல்ல உதாரண மாகும்.

14-11-1982இல் அருள்திரு ஆபரணம் சிங்கராயர் அ. ம. தி. பயங்கரவாதத்தடை சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். இது சம்பந்தமான அறிக்கையொன்றை கத்தோலிக்க ஆயர் மன்றம் அவசர அவசரமாக வெளி யிட்டது. மன்றத்தலைவர் ஆயர் பிராங் மார்க்கஸ் பெர் ணண்டோ அவ்வறிக்கையில் ஒப்பமிட்டிருந்தார்.

ஆயர் மன்றம் வெளியிட்ட அறிக்கையாயினும் அது வடக்கு—கிழக்கு ஆயர்களது ஆலோசனைகளுடன் வெளி யிடப்பட்டதல்ல, இதன்மூலம் தெற்குத் திருச்சபை தனது சுயரூபத்தை வெளிக்காட்டியிருந்தது. அவ்வறிக்கையின் சில வாசகங்கள் கைது செய்யப்பட்ட சிங்கராயருக்கோ ஏனைய குருக்களுக்கோ, எதுவித பாதுகாப்பையும் ஏற்படுத் தாத விதத்தில் அமைந்திருந்தன.

''பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் வடபகுதி மதகுருமார் சிலரைச் சம்பந்தப் படுத்திக் கடந்த சில தினங்களாகப் புதினப் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. இந்தச் செய் திகளால் வாசகர்கள், குறிப்பாக எமது கத்தோலிக்க மக்கள் மனக் கலக்கம் அடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒருவர் குற்றவாளியென நிரூபிக்கப்படாதவரை அவரை நிரபராதியெனக் கொள்ள வேண்டுமென்ற பூர்வாங்க சட்டநிலையை நாம் சுட்டிக் காட்டுகிறோம். இதே வேளை வன்செயல்கள் எந்த வடிவத்தில் வந்தாலும், அது எந்த இலக்கைக் கொண்டிருந்தாலும், அது எந்த வட்டங்களிலிருந்து வந்தாலும் நாம் உண்மையாகக் கண்டிக்கிறோம் என்பதை ஒரு திருச்சபை என்ற நிலையில் மீண்டும் வலியுறுத்த இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறோம். இந்த நாட்டின் சட்டங்களை மீறும் எவரும் தனது நடவடிக்கைகளுக்கான விளைவுகளை ஏற்றுத்தான் ஆகவேண்டும். திருச்சபை என்றுமே நீதியை, உண்மையை, சமத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும்'

மேற்படி இவ்வறிக்கை 18—11—82இல் வெளியான பத்திரிகைகள் வெளியிட்டிருந்தது. இவ்வறிக்கையை அரசாங்கம் மறுபிரதி செய்து துண்டுப் பிரசுரமாக வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கை அ. ம. தி. சபையின் முதல்வர் அருள்திரு. பேர்ணட் குயின்ரஸ் அ. ம. தி. அவர்களின் அறிக்கையென்று 20—11—82இல் வெளியிடப்பட்டது.

"ஆயர் பேரவையினர் விடுத்த அறிக்கையை முழுமையாக ஆதரிக்கிறோம். சகோதர, அ. ம. தி. கள நீதியாகவோ, அநீதியாகவோ துன்பத்துக்குள்ளாகி இருந்தால் சகோதர பாசத்தோடு இவர்களுக்காகச் செபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்."

இவ்வறிக்கைகளின் பின்னரே பாதுகாப்புப் படையினர் அருள்திரு. A. சிங்கராயர்மீது வன்முறையைப் பிரயோகித்தனர் என்பது சிங்கராயர் அடிகளாரின் வாக்குமூலமாகும்.

ஆயர் பேரவையின் அறிக்கைகளினுல் தமிழ்க் கத்தோலிக்க சமூகமே அதிருப்தி அடைந்திருந்தது. ஆயர் பேரவை விடுத்த அறிக்கை தமிழ் கத்தோலிக்க குருக்களுக்கு எதிராக, அநீதியான முறையில் வெளியிடப்பட்டது என்று கொதித்துக் கொண்டிருந்தது. உண்மையிலேயே "நீதியின் மேல் பசிதாகம் உடையவர்கள்" என்ற நிலையில் நின்று வெளியிடப்பட்டதுதானு என்பதனை நடுநிலை நின்று நோக்குவோரது கருத்துக்கு விட்டுவிடுவோம்.

இவ்வறிக்கையால் ஏற்பட்ட ஆத்திரத்தை மற்றவர்கள் பேச்சளவிலும், மனத்தளவிலுமே காட்டினுலும், பஸ்ரியன் அதைச் செயலளவிலே காட்டத் துணிந்தார். குற்றத்தைக் குற்றமெனச் சுட்டிக் காட்டுவதற்குத் தயங்காத பஸ்ரியன் ஆயர் பேரவையின் தவறைச் சுட்டிக்காட்டி ஆயர் பேரவைக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதினுர். அக்கடிதத்தின்மூலம் தன் இனத்தின் அவலநிலையையும் நடுநிலை நின்று செயற்படவேண்டிய தெற்குத் திருச்சபை ஒரு பக்கச் சார்புடையதாகச் செயல்படுகின்றது என்பதனையும் இடித்துரைத்தார். அவர் அன்று வரைந்து அனுப்பிய ஆங்கிலக் கடிதத்தின் தமிழாக்கம்.

புனித அன்னம்மாள் ஆலயம்,
வங்காலை,
மன்னுர் மாவட்டம், 25-11-82

தலைவர்,
இலங்கையின் ஆயர்குழு,
கொழும்பு.

மேதகு ஆயர் அவர்களே!

மன்னுர் மாவட்ட வங்காலையின் பங்குக் குருவராகிய யான், பத்திரிகைகளில் தங்கள் கூற்றுக்களை வாசித்தபின், மிகவும் மனம் விரக்தியுற்ற நிலையில் இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

நவம்பர் 18-ந் திகதியன்று வெளிவந்த பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட தங்களது செய்தி — அதிர்ச்சியையும், மிகுந்த வேதனையையும் எம் மக்களுக்கு அளித்துள்ளது. தாங்கள் எல்லாவித அகிம்சை வழி (வன்செயல்கள்) களை யும் கண்டித்துள்ளீர்கள் ; அது நியாயமானது. இவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிவதற்கு நீங்கள் எப்போ தாவது முயற்சித்ததுண்டா ? இலங்கையின் எல்லாக் கத் தோலிக்கர் — ஆயர் — சார்பாக இத்தகைய கூற்றை வெளி யிடுமுன், பொதுமக்களின் கருத்தை நீங்கள் கலந்தாலோ சித்ததுண்டா ?

எங்கள் திருச்சபை சத்தியத்தையும், நீதியையும், சமத் துவத்தையும் கடைப்பிடிக்கின்றது என்று நீங்கள் எவ்வாறு கூறுவீர்கள் ? இத்தகைய நிலைப்பாட்டை திருச்சபை பின் பற்றி வந்திருக்குமேயாகில், இன்றைய அவலநிலை ஏற்பட் டிருக்கக் காரணமில்லை. எங்கள் திருச்சபை தேசிய நிகழ்வு களுக்கு, பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கத் தவறியதினால் இன்று பல பொதுநிலையினர் நீதிக்காகவும் உரிமைகளுக்காக வும் குரல்கொடுக்க வெளிப்பட்டுள்ளனர்.

படிப்படியாக எமது நாட்டை அச்சுறுத்தி வந்துள்ள பிரச்சனை சிங்கள—தமிழ் இனங்களிடையே எழுந்துள்ள துவேசமாகும். அரசியல் வாதிகள் தங்கள் சுய தேவைகளுக் காக இந்தக் கசப்புணர்வை வளர்த்துவந்தனர். சிறுபான்மை மக்களிடையே அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. அவர் கள் தங்களை இரண்டாந்தரப் பிரசைகளாகக் கருதுகின்ற னர். சுதந்திரத்திற்கு முன் பிரிட்டிசார் எம்மை "அடிமை களாய்" ஆண்டனர். எனவே, இவ்விரு இனங்களையும் சம மாகக் கருதினர். சுதந்திரம் பெற்றோம்; பெரும்பான்மை யினர் சிறுபான்மையினரை அடக்கியாள முற்பட்டனர். சம "அடிமைகளாய்" இருந்த நாம் சுதந்திரத்திற்குப் பின் சமத் துவத்தை இழந்தோம்! இந்தியா தன் சுதந்திரத்தைக் கண் ணீர் விட்டு, இரத்தம் சிந்திப் பெற்றுக்கொண்டது. எனவே,

அங்குவாழும் பல்வேறு இனத்தவர்க்குச் சம அந்தஸ்தை அளித்து, சுதந்திரத்தைப் பெருமைப் படுத்துகின்றது. பதிமூன்று முக்கிய மொழிகள் பேசுவோர்க்கு சுய ஆட்சி முறையை வழங்கியுள்ளது. ஆகவே இவ்வினங்கள் தங்கள் மொழி கலாச்சாரம் — காணி போன்றவற்றை வளர்த்துப் பாதுகாக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. இலங்கையர், இந்தியரைப் போல் சுதந்திரத்திற்காக அல்லல் படவில்லை. ஆங்கிலேயர் இந்தியாவிற்குக் கொடுத்த சுதந்திரத்தை எமக்கும் 'சும்மா' அளித்துவிட்டுச் சென்றனர். இங்கு எல்லா இனத் தலைவர்களும் சுதந்திரத்திற்காக முயற்சித்தது என்னவோ உண்மை தான்! ஆனால் இப்போ நடப்பதென்ன ? கிடைத்த சுதந்திரத்தைத் தமிழினத்தால் அனுபவிக்க முடியாத நிலை! மீண்டும் பெரும்பான்மையினரால் — சிங்களமென்னும் ஆட்சி மொழியால் — நாம் ஆளப்படும் அவலம் ஏற்பட்டுள்ளது!

எமக்கு சமத்துவம் மறுக்கப்படுகின்றது என்பதற்குப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் விளக்கும்:

★ எல்லா நிர்வாக "அலுவல்களும்" சிங்கள மொழியிலேயே நடாத்தப் படுகின்றன.

★ இதனால் கிராமத்துத் தமிழ் மக்கள் போலீஸ் நிலையத்திலோ, கச்சேரியிலோ எந்தவிதக் கருமத்தையும் செய்விக்க முடியாத நிலையில் உள்ளனர். இத்தகைய சமத்துவத்திற்கும்—நீதிக்காகவுமா திருச்சபை சாதகமாக நிற்கின்றது ?

இப்படி எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். திருச்சபை இவ்வநீதிகளின்பால் மௌனமாயிருந்துள்ளது.

★ தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கியமை.

★ சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கிய சட்டம்.

★ 1960-ம் ஆண்டில் அரசுக்கு எதிரான சதிப்புரட்சி. (கத்தோலிக்க ஸ்தாபனங்கள், கன்னியர் மடங்கள் இத்தலைவர்களுக்குப் புகலிடம் அளித்தன என்பதையும் பின்பு இவர்களை நீதிமன்றங்கள் சாதாரண சட்டத்தின்கீழ் விசாரணை செய்தனர் என்பதையும் யான் சிறுவனாக இருந்தபோது அறிந்தேன்.)

★ 1971-ல் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிக்கு சில குருமார்களும் சார்பாக நின்றதை யான் அறிவேன். இவர்கள் (கிளர்ச்சித் தலைவர்கள்) பின் விடுதலை செய்யப்பட்டது ஏன் ?

★ 1981-ல் போலீசும், இராணுவத்தினரும் யாழ் நகரின் சில பகுதிகளைத் தீயிட்டு அழித்தனர். பலகோடி ரூபா பெறுமதியுள்ள பொருள்கள் எரிந்தழிந்தன ! எரித்தவர்கள் ஆளும் இனம் — எனவே அவர்கள் பதவி உயர்வு பெற்றனர். இதுவா நீங்கள் கூறும் சமத்துவம் ? இதைப் பற்றிய கூற்றொன்றை வெளியிட உங்களுக்கு எத்தனை மாதங்களெடுத்தன ? ''பெரியவர்களின்'' இரட்டைக் கொள்கைகளில், அவர்களுடைய சூன்யமான அரசியலில் விரக்தியடைந்த வாலிபர்கள் தமிழ் ஈழத்திற்குப் போராடத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பயங்கரவாதப் பட்டம்சூட்டி, தண்டித்து, சிறையிலிட்டு கொன்றொழிக்கலாம். ஆனால் தமிழக்களுக்கு இவர்கள் உரிமைக்காகப் போராடும் போராளிகளே !

யான் ஒரு கத்தோலிக்க குருவாயிருப்பதையிட்டு வெட்கப்படுகின்றேன். எம் மக்கள் ஒடுக்கப்பட்டு சலுகைகளுக்காகக் கையேந்தி வாழ்கின்றனர் ! (மத். 15, 27)

திருச்சபை என்ன செய்கின்றது ? பிரச்சனையைத் தீர்க்கும்படி கூறி, ஆயர் குழுவினர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருப்பதாக அறிகின்றேன். அத்தோடு உங்கள் பொறுப்புக்

கள் தீர்ந்துவிட்டதா ? சற்றுச் சிந்தியுங்கள் ! தமிழ்த் தலைவர்கள் காலாதி காலமாகச் சிங்கள அரசுகளுடன் இப் பிரச்சனையைத் தீர்க்க அமைதி வழியையே நாடினார்கள். செல்வா, பண்டா, செல்வா-டட்லி ஒப்பந்தங்கள் ...... என்னத்தைக் கண்டோம் ?

இந்து — இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினர். ஆனால் அங்கு முஸ்லிம் ஒருவர் ஜனாதிபதியாயுள்ளார். கிறிஸ்தவர் - முஸ்லிம்களைக் கொண்ட லெபனானில் இரு இனங்களும் தலைமைவகித்து வாழ்கின்றன. ஆனால் இலங்கையில்...? எல்லா இனத்தவர்களும் நல்லவர்கள்! அரசியல்வாதிகள் தான் அழுக்குப் படிந்தவர்களாயுள்ளனர். அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது ?

ஓடுக்கப்பட்டோர் — ஏழைகளைப்பற்றி, இன ஒற்றுமையைப்பற்றி ஆழமாக ஆராயவேண்டிய காலகட்டம் திருச்சபைக்கு ஏற்பட்டுள்ளது. எல்லா அகிம்சை வழிகளும் பொய்த்துவிட்டால் — எமக்கு வேறு வழியென்ன ?

தமிழ்ப்பகுதிகளில் நிலைமை கொந்தளிப்பாயுள்ளது. மக்கள் அல்லல் படுகின்றனர்; அபிவிருத்தியில்லை; வேலைவாய்ப்பில்லை; வாழ்வதே சுமையாகிவிட்டது. மரித்தவர்களுக்குப் பூசைப்பலி ஒப்புவிப்பதோடு நாங்கள் அமைதிபெற இயலாது. இளைஞர்களுக்கும் எமக்குமுள்ள இடைவெளி விரிகின்றது. ''திருச்சபை என்ன செய்கின்றது''? என்ற வினாவை எம்மை நோக்கிக் கேட்கின்றனர்! நீதியை, சகதியத்தை, சமத்துவத்தைக் கைவிட்டு, அடக்கி ஆள்பவர்களோடு ''ஒப்புரவு'' கொண்டாடுகின்றோம்!

ஆயர் குழுவும் திருச்சபையும் இனிவரும் காலத்திலாவது தான் விடுக்கும் அறிக்கைகளுக்கு விசுவாசமாக நடக்கும் என்று நம்புகின்றேன்.

தங்களுக்கு நன்றிகூறி, யான் எழுதியவற்றில் குறைகள் இருப்பின் மன்னித்தருளவேண்டி முடிக்கின்றேன்.

தங்கள்
கீழ்ப்படிவுள்ள,
மேரி பஸ்ரியன் அடிகளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதிக்கும், இலங்கையின் எல்லா ஆயர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இத்தோடு பஸ்ரியன் அமைதி அடைந்துவிடவில்லை. வர வர நிலைமைகள் மோசமடைந்து வருவதையும், இலங்கையின் சிங்கள ஆயர்களும் குருக்களும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படுவதற்கு உரியவிதத்தில் தமது பங்களிப்பை எது விதத்திலும் அளிக்காதிருப்பதையும, அதேவேளையில் வடக்குக் கிழக்குவாழ் தமிழர்களின் உண்மை நிலைமையை அறியாதவர்கள்போல எழுந்தமானத்தில் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதையும், அதனால் தமிழ்க் கத்தோலிக்கரும் குருக்களும் நெருக்கடிக்குள்ளாவதையும் கண்டு கொதித்துக் கொண்டிருந்தார்.

கடிதம்மூலம் தன் கருத்தை வெளியிட்ட அவருக்கு, நேரடியாகவே அதனைச் சொல்லக்கூடிய வாய்ப்பு அதே வருடத்தில் கிட்டியது.

அந்த ஆண்டு ஜூலை 2-ம் திகதியில் நடைபெறவிருந்த மடுத் திருவிழாவுக்குப் பேராயர் மேதகு நீக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ அவர்கள் வருகைதரவிருப்பதாகச் செய்தி கிட்டியது. அவர் தமது உள்ளக்கிடக்கைகளைக் கொட்டுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு எனக் கொண்டார்.

பஸ்ரியனோடு சக குருக்களான அருள்திரு ஜெயக்குமார், அருள்திரு ஞானனந்தன் ஆகியோர் சேர்ந்துகொண்டனர்.

இம்மூவரும் அவரைச் சந்தித்து 1982 நவம்பர் 18-ல் பத்திரிகையில் விடப்பட்ட ஆயர் மன்றத்தின் அறிக்கை பற்றி விளக்கம் கேட்பது, அத்துடன் தமிழ்மக்களின் உண்மை நிலைமையை விளக்குவது என்று தீர்மானித்தனர்.

இம்மூவருமே இளம் குருக்கள். எனவே இது சிறியவர்களின் சிந்தனைகள்தான் என்று பேராயர் அவர்கள் கருதிவிடக் கூடாது என்பதற்காகக் கடைசிநேரத்தில் இளைய குரவர் ஒருவருக்குப் பதிலாக முதியவரும், அனுபவசாலியுமான அருள்திரு லூயிஸ் பொன்னையா அ. ம. தி. அவர்கள் மற்ற இருவருடனும் செல்வதாக முடிவாயிற்று.

திருவிழாவுக்கு முதல்நாள் இரவு, அதாவது 1-ம் திகதி இரவு 9 மணிக்கு பேராயர் தங்கியுள்ள அறையில் சநதிப்பது என்று ஒழுங்கு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி சரியாக இரவு ஒன்பதுமணிக்கு ஆயரின் அறையைச் சென்றடைந்தனர் மூவரும் ; கலந்துரையாடல் ஆரம்பமாயிற்று,

முதலில் தமிழர்களது உண்மையான நிலையை மூவரும் விளக்கினர். ' இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படவேண்டும். தெற்குத் திருச்சபை பாரபட்சமற்ற முறையில் இயங்கி நல்ல தீர்வு ஒன்று காண்பதற்கு ஆட்சியாளரை இணங்கச் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டனர். இதேவேளையில், ''ஆபரணம் சிங்கராயர் அடிகள் கைது செய்யப்பட்டபோது ஆயர் மன்றம் விடுத்த அறிக்கை தவறான தொன்றாகும். இத்தகைய அறிக்கைகள் வெளியிடுவதிலும் பார்க்க மௌனம் சாதிப்பது நன்மை பயக்கும்'' என்று வலியுறுத்தினர்.

அனைத்தையும் அமைதியுடன் செவிமடுத்த பேராயர் அவர்கள் பதில்கூறத் தொடங்கனர். தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் வருகின்றனர் என்ற குருக்களின் முறைப்பாட்டுக்குப் பதிலாக ஆயர் அவர்கள் :

"சிங்களவர்களின் நிலைமையைத் தமிழ்மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்'' என்றார்.

அவரது இந்த முதற்பதிலே அவர் சாய்ந்துள்ள பக்கம் எதுவென்பதற்குச் சான்றுகூறியது.

" அது தமிழ்மக்களின் தவறு அல்லவே. நாடு சுதந்திரம் பெற்று இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளாகி விட்டன. அன்றுமுதல் இன்றுவரை சிங்களவர்கள்தான் ஆண்டு வருகின்றார்கள். இந்த முப்பத்தைந்து வருட சிங்கள ஆட்சிக் காலத்திலும் சிங்களவர்கள் தமது கல்வி, தொழில், பொருளாதாரத்தில் முன்னேறாது விட்டால் அதற்கு யார் பொறுப்பு? தமிழர்களா?'' இப்படிக் கேட்டனர் குருக்கள்.

இந்த உரையாடலின்போது பேராயர் அவர்கள் இன்னுமொரு விடயத்தை ஒப்புக்கொண்டார். அது தான் தமிழன்; தமிழ்த்தாய் பெற்றெடுத்த புதல்வன் என்பதனை.

"என்னுடைய தாயாருக்குத் தமிழ் மட்டும்தான் தெரியும். நான் அவரோடு தமிழில்தான் உரையாடுவேன். ஆனால் எனது பிறப்புச் சான்றிதழில் நான் ஒரு கரைநாட்டுச் சிங்களவன் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது!''

"பிறப்பால் தமிழராகிய தாங்கள், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக ஏன் குரல் எழுப்பக் கூடாது?''

"நானும் எனது தாயாருக்குச் சில இறுதிக் கடமைகள் செய்யவேண்டியுள்ளது. எனவே அவர் உயிரோடு உள்ள வரை நான் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அறிக்கைகள், கண்டனங்கள் மூலம் நான் பிரச்சினைக்குள்ளாவதையோ ஆபத்தைத் தேடிக்கொள்வதையோ விரும்பவில்லை ''

"அதனுற்றான், சிங்கராயர் அடிகள் விடயத்தில் அப்படி ஓர் அறிக்கை விடப்பட்டதா ?"

" அது மிகவும் கவனமாக விடப்பட்ட அறிக்கை. சொல்லப்போனால் உளவியல் ரீதியான அணுகுமுறையுடன் வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.

"ஆண்டவர் அவர்களே ! எம்மைப் பொறுத்தவரையில் சாதாரணமான ஒரு அரசியல்வாதியின் அறிக்கைபோல அது காணப்பட்டதே தவிர, உளவியல் அணுகுமுறை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை."

இந்த உரையாடல் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை நீடித்தது. பேராயர் அவர்கள் பிரச்சினையைப் புரிந்து கொண்ட போதிலும், புரியாதவர் போலவே பிடிகொடாது பேசிக்கொண்டு வந்தார். அந்த நீண்ட உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் பேராயர் அவர்கள் இறுதியாகக் கூறினார் :

"afterall I am the Bishop of the Sinhalese people, I have to be with them"

("எப்படி இருப்பினும், நான் சிங்கள மக்களின் ஆயர். நான் அவர்களுக்காகவே நிற்கவேண்டும்.")

ஆயரின் அந்த இறுதி மறுமொழிக்கு பஸ்ரியனும், ஏனையோரும் உடன் பதில் கொடுத்தனர்.

" So, please don't make any statesment about us........"

அதாவது,

"அப்படியானல் தயவுசெய்து எங்களைப்பற்றிய அறிக்கைகள் எதையும் தாங்கள் விடாதீர்கள். தாங்கள் சிங்கள மக்களின் ஆயராகவே இருந்துகொள்ளுங்கள். எங்களுக்கும்

ஆயர்கள் இருக்கின்றூர்கள். தேவை ஏற்படின் அவர்கள் எங்களுக்காக அறிக்கைகள் விடுவார்கள். தாங்கள் அறிக்கைகளை விட்டு எங்கள் நிலைமையை மேலும் மோசமாக்க வேண்டாம்'' என்றுகூறி வெளியேறினர்.

இந்நிகழ்ச்சியின் பின்னர் பஸ்ரியன் மிகவும் மனம் உடைந்திருந்தார். 'தமிழ் மக்களின் உண்மைநிலையை உயர் மட்டங்களுக்கும், சிங்கள மக்களுக்கும் எடுத்து விளக்கி சமாதானதீர்வைக் கொண்டுவரக் கூடியவர்களே இப்படிப் பக்கம் சார்ந்து நிற்கின்றூர்களே' என்று வேதனைகொண்டார். இவர்கள் சந்திப்பு நடந்து சரியாக 22 தினங்களுக்குப் பின்னர் — அதாவது ஜுலை 23-ம் திகதியே இலங்கை வரலாறு அது வரையில் கண்டிராத இனக்கலவரம் வெடித்தது.

ஆயர் மன்றத்தால் விடப்பட்ட அறிக்கையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் அப்பொழுது கைது செய்யப்பட்டிருந்த சிங்கராயர் அடிகளே. ஏனெனில், இந்த அறிக்கையின் பின்னரே, ''உம்மை உமது ஆயர்களும் தலைவர்களும் கைவிட்டுவிட்டார்கள்'' என்றுகூறி அவரது அங்கியைக் கழற்றும்படி கூறி பாதுகாப்புப் படையினர் அவரை அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினூர்கள்.

அவ்வறிக்கையின் பின்னர்தான் 1983 பெப்ரவரியில் பேராயர் அவர்கள் சிறையில் இருந்த சிங்கராயரைக் காணச் சென்றபோது, ''வடக்கின் உண்மை நிலையை அறியாமல் ஏன் இப்படி ஓர் அறிக்கையை விட்டீர்கள் ?'' என்று சிங்கராயர் நேரடியாகவே கேட்டார். அப்பொழுதுகூட அவர் சொன்ன பதில் முன்னர் பஸ்ரியன் குழுவினருக்குச் சொன்ன வகையிலேயே அமைந்திருந்தது.

''நாங்கள் என்ன செய்வது ? நாங்கள் எங்கள் சிங்களக் கத்தோலிக்க மக்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது'' என்றூர்.

பஸ்ரியனைப்பற்றிய நூல் ஒன்றை எழுதப் புகுந்த யான், அவரோடு சம்பந்தப்படாத விடயங்களில் புகுவதாக ஒரு பிரமை வாசகர்களுக்குத் தோன்றலாம். ஆயினும் இது தவிர்க்கப்பட முடியாதவிடயம். ஆனால் வடக்குக் கிழக்குக் கத்தோலிக்க ஆயர்களைத் தவிர ஏனையோரது மனப்பான்மை தமிழர் பிரச்சினைமட்டில் எப்படி இருந்தது என்பதற்கு இந்த உரையாடல்களை முக்கிய சான்றுகளாகக் கொள்ளவேண்டி யிருந்தது. இவர்களது இந்த மனப்பான்மைதான் பஸ்ரியன் இறந்த பின்னர்கூட சிங்களக் கத்தோலிக்க சமூகம் பஸ்ரிய னின் சாவுக்காக அனுதாபம் தெரிவிக்காத நிலைமையை உரு வாக்கி விட்டிருந்தது. ஒரு நாட்டின் கத்தோலிக்க குரவர் ஒருவர் கொலைசெய்யப் பட்டபின்னர் அவர் மரணம் நியாய மானது என்று சிங்களக் கத்தோலிக்க சமூகம் தமக்குத் தாமே சமாதானம் செய்துகொள்ளுமளவுக்கு மனப் பக்கு வத்தை வளர்த்துவிட்டிருந்தது.

பஸ்ரியன் ஒரு தீவிரவாதியா? பஸ்ரியனுக்கும் போரா ளிகளுக்கும் தொடர்பு இருந்தது உண்மையா?

மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர் விவகாரத்துக் குப் பொறுப்பாளராக பஸ்ரியன் நியமிக்கப்பட்டிருந்த படி யால் பல்வேறுபட்ட இளைஞர்களின் தொடர்புகள் அவருக்கு ஏற்பட்டிருந்தன. அதில் தீவிரவாத சார்புடைய — தீவிர வாதிகளுடைய நட்புகளும் ஏற்பட வாய்ப்புகள் இருந்தன. இது அவரால் தவிர்க்கப்பட முடியாத விடயம் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

அப்படிப் பார்க்கப்புகில், தமிழ்த் தீவிரவாதிகளுடன் தொடர்பே இல்லாத தமிழன் யார்? 1983-ம் ஆண்டு யூலைக் கலவரத்தின் பின்னர் ஈழத் தமிழ்மக்களின் வாழ்வில் — அரசியல் வரலாற்றில் நிர்க்கதியடைந்திருந்த நிலையில் — தமிழன் தனது சொந்த மண்ணிலேயே அகதியாக்கப்பட்ட அவலச் சூழலில் தமக்கு உள்ள பாதுகாப்புச் சக்திகள் இளை

ஞர் இயக்கங்களே என்ற நம்பிக்கை நிலைக்கு உணர்வு பூர்வ மாகத் தள்ளப்பட்டனர். இதில் எதுவித ஒளிவு மறைவும் இல்லை. பாரதமே இவ்வியக்கங்களுக்குப் பக்கபலமாக இருந்தது

இந்த நிலையில் முழுமனித விடுதலைப் பணிக்காகத் தம் மையே அர்ப்பணித்த குருக்களுக்கும், இன விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த இளைஞர்களுக்குமிடையே ஓர் ஒற் றுமை இருந்தது தவிர்த்துக்கொள்ள முடியாத விடயமே.

ஏனெனில் இனக்கலவரங்களாலும், இராணுவ நடவ டிக்கைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கத்தோலிக்க குருமார் தனிப்பட்ட முறையிலும் ஸ்தாபனரீதியாகவும் தொண்டாற்றி வருகின்றனர். இந்தப் புனர்வாழ்வுப் பணி களில் அந்நாட்களில் போராளிகள் இயக்கங்களும் ஈடுபட் டிருந்தன. அதன்மூலம் கத்தோலிக்க குருக்களுக்கும், போராளிகளுக்குமிடையே இப்பணிகளின் பொருட்டு தொடர்புகள் ஏற்பட வாய்ப்புகள் இருந்தன.

பஸ்ரியனைப் பொறுத்த வரையில் இத்தகைய வாய்ப் புகள் இன்னும் அதிகமாகவே இருந்தன. ஏனெனில் இனக் கலவரங்களால் புலம் பெயர்ந்தவர்களின் புனர்வாழ்வுப் பணிக்காக மன்னார் மறைமாவட்டத்தின் சமூகசேவை நிலைய மான "வாழ்வுதயம்" மூலம் பஸ்ரியன் சேவை செய்து கொண்டிருந்தார்; அதன் காரணத்தால் அவரும் ஒரு தீவிர வாதியாகவிருந்தார் என்றோ — போராளிகள் அணிகளுக்கு ஆள்சேர்க்கும் கையாளாக இருநதார் என்றோ தீவிரவாதிக ளின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஆதரவாளராக இருந் தாரென்றோ கொள்ள முடியாது. இது பஸ்ரியனுக்கு மட்டு மல்ல அவரது நிலையில் உள்ள அனைத்து குருக்கள், துறவி யருக்கும் பொருந்தும். இன்னுமொரு முக்கியமான விட யம் —

கடந்த காலகட்டங்களில் சிவில் நிர்வாகம் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தபோது, பாதுகாப்புப் படையினர் எப்படி அரச, த னி யா ர் உடைமைகளை, கட்டிடங்களை யெல்லாம் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தினார்களோ, அதேபாணியில் போராளிகளுக்கும் செயற்பட்டனர்.

எந்த இடத்தையும், பொருட்களையும் போராளிகள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தினர். அ த ற் கு த் தேவாலயங்கள், பாடசாலைகள், தனியார் வீடுகள் கூடவிதி விலக்காக இருக்கவில்லை. அதே நிலைமையில்தான் பஸ்ரியன் இறுதியாகப் பணிபுரிந்த வங்காலை ஆலய வளவும், அதன் எல்லைக்குள் அமைந்திருந்த பாடசாலைக் கட்டிடம், சேமக்காலை போன்றவையும் போராளிகளால் பயன்படுத்தப்பட்டன. இதனைத்தடுத்து நிறுத்துவது அரச பாதுகாப்புப்படைகளா லேயே முடியாத செயலாகவிருந்தது. இது காலத்தின் கட்டாய நடைமுறையாகி விட்டிருந்த நிகழ்வு. ஆனால் இவற்றை வைத்தே பஸ்ரியனுக்கும் போராளிகளுக்கும் தொடர்பு இருந்தது என்று காரணத்தைக் கற்பிக்க அவரது விரோத சக்திகளும், கொலைஞர்களும் முயன்றுள்ளனர் என்பது வெள்ளிடைமலையாகும்.

பஸ்ரியனது மரணத்துக்குப் பின்னர் நடந்த பல சம்ப வங்களிலிருந்து பஸ்ரியன் மட்டுமன்று, உண்மைக்காகவும், சத்தியத்துக்காகவும் வாழ்ந்த — குரல் கொடுத்த குருக்கள், ஆயர் முதலாக பயங்கரவாதிகள் என்றே வர்ணிக்கப் பட்ட வரலாற்றை நாம் கண்டுவிட்டோம். அப்படியொரு களங்கத்தை எம்மவர்கள் பெறுவது தவிர்க்க மு டி யா த வொன்றாகவும் அமைந்து விட்டது எனலாம்.

1985ல் அலன் தம்பதிகள் போராளிகளால் கடத்தப் பட்டு பின்னர் யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டனர்; மறுத்துக்கூற முடியாத நிலை யில் அரசாங்கமும் தொடர்பு சாதனங்களின் மூலம் அழுது

அழுது வேண்டுதல்களை விடுத்துக்கொண்டிருந்த பரிதாபகர மான கட்டத்தில், மனிதநேய அடிப்படையில் ஆயர் அவர் கள் அவர்களை ஏற்று அரசினிடம் ஒப்படைக்க இயைந்தார்.-

1986ல் திருமதி வில்லிஸ் போராளிகளால் முல்லைத் தீவில் கடத்தப்பட்ட போதும் அங்கிருந்த பங்குத் தந்தை அவர்களே அவருக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாப் பளிக்க வேண்டியிருந்தது.—

இவைபோன்று பல இடங்களில்; பல சந்தர்ப்பங்களில் பலருக்கு கத்தோலிக்க குருக்கள் அடைக்கலம் கொடுத்தும் வாதாடியும் பல உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய கட் டாயக் கடமைக்குள் தள்ளப்பட்டிருந்தனர். அதனால் 'இவர் கள் எல்லாம் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள்" என்ற சந்தேகத்துக்கு ஆளாக்கப்பட்டனர் — அரசபடை யின் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இவை அனைத்துக்கும் சிகரம்வைத்தது போன்று 1986 ஆவணி 10ஆம் நாள் மண்டைதீவுக் கடற்கரையில் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் 30 பேரின் மரணத்தின் பின்னர், ஒரு தந்தைக்குரிய வேதனையு டனும், ஒரு தலைவருக்குரிய பொறுப்புணர்வுடனும் 1986 ஜூன் 18ம் நாள் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவின் போது யாழ் ஆயர் அவாகள் மனமுருகி நிகழ்த்திய உரைக்கு சிங்கள சமூகத்திடமிருந்தே கிடைத்த வரவேற்புகள் அமைந்திருந்தன. அன்று அவர் அப்படி என்னதான் கூறினர்?.

" தற்போதுள்ள கஷ்டமான சூழ் நிலைகளிலும் எமது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப்புகட்டுவது அவசியம் எனினும், பாதுகாப்பற்ற நிலையில் உள்ள எமது மக்களைக் காப்பாற்றுவதற்கான வழிமுறை களை ஆராய்வது அதைவிட அவசியமாகும். தற்

பொழுது இங்கு நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளானது தமிழ்த்தீவிரவாதிகளை அழிப்பது என்ற போர்வையில் வடக்குக் கிழக்குத் தமிழ்ப்குதிகளில் வாழும் மக்களை அழிக்கவே அரசாங்கம் முயல்கிறது.''

"இன்று நாம் தரை கடலிருந்து மட்டுமன்றி ஆகாயத்தில் இருந்தும் தாக்கப்படுகிறோம். இவற்றினால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு, அல்லது காயப்பட்டுள்ளனர், முருங்கன், செட்டிகுளம், இருதயபுரம், அக்கரைப்பற்று, குறிகட்டுவன், மண்டைதீவு மற்றும் பல இடங்களில் ஆயுதப்படையினரால் பொதுமக்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான தமிழர் தமது பாரம்பரியமான இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறவேண்டி ஏற்பட்டுள்ளனர்.''

''ஆயிரக்கணக்கான மக்களின் ஜீவனோபாயமாக இருந்து வந்த மீன்பிடித் தொழில் அரசினால் முற்றாக முடக்கப்பட்டுள்ளது. அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் மனிதத்தன்மையற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக வடக்குக் கிழக்கில் உள்ள பிரஜைகள் குழுக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளன. ஆயினும் பலனில்லை. இந்நிலையில் தமிழ்மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உரிய வழிவகைகள் இல்லாததினால், தமிழ்மக்கள் அனைவரையும் அழிவில் இருந்து காப்பாற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு ஐ. நா. சபையைக் கோரும் காலம் வந்துவிட்டது என நான் நினைக்கிறேன்.''

இது ஆயர் அவர்களால் மனிதாபிமான உணர்வோடு நிகழ்த்தப்பட்ட உரை. இந்த உரையை நிகழ்த்தியமைக்காக ஆயர் அவர்களையே கைது செய்யத்திட்ட மிருந்தது என்று அப்பொழுது பரவலாகப் பேசப்பட்டது. அதுமட்டு

மல்லாது ஆயர் அவர்களின் இந்த மனிதநேய உரைக்கு எதிராக சிங்களக் கத்தோலிக்க சமூகம் குமுறி எழுந்தது. சிங்களக் கத்தோலிக்க குருக்களும் விசுவாசிகளும் அவர்களுக்கு பயங்கரவாதிகளின் ஆதரவாளர் என்ற பட்டம் சூட்டிப் பழிசுமத்தி பத்திரிகைகளில் அறிக்கைகளும், கட்டுரைகளும் வெளியிட்டனர். இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் மூத்ததலைவர்களில் ஒருவரான யாழ் ஆயர் அவர்களுக்கு எதிராக எழுதப்பட்ட இந்த அவமதிப்புகளையெல்லாம் தெற்குத் திருச்சபையின் தலைமைப்பீடங்கள் கண்டும் காணாதவராய் — கேட்டும் கேளாதவராய் வாய்மூடி மௌனம் சாதித்தன.

இந்தச் சம்பவங்கள் யாவும்

*1983* யூலை 1ம் திகதி இரவு மடுத்திருப்பதியில் பேராயர் அவர்களைச் சந்தித்த பஸ்ரியன் குழுவினருக்கு பேராயர் அவர்கள் கூறிய இறுதிப்பதிலும் — அதற்கு பஸ்ரியன் குழுவினர் கூறிய இறுதிப்பதிலும் அப்பட்டமான உண்மைகளே என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்களாகும்.

மூதறிஞரும், மூத்த தலைவருமான யாழ் ஆயர் அவர்களே இந்தவகையில் கணிக்கப்பட்டாரெனில். இளமைத் துடிப்பும், வேகமும் இனப்பற்றும் கொண்ட பஸ்ரியன் — இதே ஆயர் அவர்களால் உருவாக்கப்பட்ட பஸ்ரியன்—சிங்கள ஆயர்கள், குருக்கள் கத்தோலிக்க சமூகம், அரச பாதுகாப்புப் படையினர் கண்களுக்கெல்லாம் எந்தளவுக்குப் பயங்கரவாதியாகக் காட்சியளித்திருப்பார் என்பதை விளக்கத் தேவையில்லை.

★

## (6)

# புரட்சித் துறவி

பொதுவாகக் கத்தோலிக்க குருக்களுக்கு என்று சில சம்பிரதாயங்கள், சில கட்டுப்பாடுகள், சில புற வெளியடையாளங்கள் உள. இவை சாதாரண பொது மக்களில் இருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டும். இப்படித் தம்மை தனித்துவப்படுத்திக் காட்டும் தன்மையை விரும்பாத குருக்கள் இல்லையெனலாம்.

இந்த மரபுகளையெல்லாம் முக்கியமானவை எனக் கருதாமல் தன் துறவற வாழ்வில் தனக்கென்று ஒரு தனித்துவத்தைப் பேணி வாழ்ந்தவர் பஸ்ரியன்.

தூரத்தே நின்று—பஸ்ரியனை நெருங்கி வராதவராக நின்று—அவரை மேலோட்டமாக நோக்கும் எவரும் அவரை ஒரு துறவி என்று ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஒரு கத்தோலிக்க குருவை நோக்கும் ஒரு பொது மகன்.

குருக்களுக்கே உரிய அங்கியை—
அடக்கமாகப் பேசும் பண்பை—
ஒரு பிரமுகரிடம் இருக்கக்கூடிய நடைமுறையை—
தோற்றத்தை—

குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டிய கடமையை முடித்து விட்டு ஜெபத்தில் இருக்கவேண்டும் என்பதை— சமய, கோவிற் கடமைகளோடு நிற்கும் கட்டுப்பாட்டை-

எதற்கும் ஆண்டவரையும், பைபிள் வசனங்களையும் மேற்கோள் காட்டும் பேச்சுவழக்கை. இப்படியாக பலதரப் பட்ட குணவியல்புகளை ஒரு குருவிடம் எதிர்பார்ப்பார். ஆனால் பஸ்ரியனை நோக்கும் ஒருவர் இத்தகைய எதிர்பார்ப் புகளுடன் அவரை அணுகுவாராயின் நிச்சயமாக ஏமாற் றமே அடைவார். 'பஸ்ரியன் ஒரு துறவிதானா?' என்ற ஐயப்பாட்டைத் தனக்குள் எழுப்பவே செய்வார்.

ஒரு கத்தோலிக்க துறவிக்கு இருக்கக்கூடிய மாமூலான நடைமுறைகளை, பண்புகளை அவரிடம் எதிர்பார்த்துத் தோல்வியடைந்தவர்கள் பலர். அதன்பொருட்டு அவர் சந்தித்த சோதனைக்களங்களோ பல.

தன்னுடைய அதிகாரியாக இருந்தாலென்ன எவரா யிருந்தாலென்ன தன் மனதுக்குத் தவறென்று பட்டதை தயங்காமல் சொல்லிவிடுவார். தன் மனதுக்குச் சரியென்று பட்டதை செய்தும் விடுவார். இது அடுத்தவன் பிரச்சினை தானே நமக்கு என்ன என்று அகன்று சென்றுவிடும் 'வழுக்கல்' போக்கு அவரிடம் இருந்ததில்லை.

அவரிடம் இருந்த அந்தத் துணிவும், வெளிப்படையான அந்த வாழ்வும் அவர் குருமாணவராய் இருந்தகாலத்தி லேயே அவர் திருச்சபை எதிர்பார்க்கும் துறவியாக வரு வாரா என்ற ஐயப்பாட்டைச் சிலருக்கு எழுப்பியது.

அவரது உடன் மாணவர்கள் குருக்களாக அபிஷேகம் செய்யப்பட்ட பின்னரும் கூட, திருச்சி புனித சின்னப்பர் குருமடத்திலிருந்து அம்பிட்டியா குருமடம், அதன்பின்னர் சில பங்குகளில் பங்குத்தந்தைக்கு உதவியாளர் என்று இடம் மாற்றி இடம் மாற்றி புடமிடப்பட்டார். இறுதியாக

1974 ல் வவுனியாவில் பங்குத்தந்தையாக விருந்த அருட்திரு லூயிஸ் பொன்னையா அடிகளின் கீழ் ஆறுமாதங்கள் அருட் சகோதரராக இருந்து உதவிசெய்தார். அந்தக் காலகட்டத் தில் பஸ்ரியனை லூயிஸ் பொன்னையா அடிகள் முழுமையாகப் படித்துக்கொள்ள முடிந்தது. துடிதுடிப்பும், குறும்புத் தனமும் மிக்க அந்த இளைஞனுக்குள்ளே துறவுக்குரிய உறு தியான முத்திரை இருப்பதைக் கண்டு துணிந்து சிபார்சு செய்தார்.

காலம் கடத்தப்பட்டுவந்த அந்த நாட்களில் பஸ்ரிய னிடம் ஒரு உறுதியிருந்ததே தவிர தளர்ச்சி காணப்பட வில்லை. ''ஆண்டவர் தனக்கு ஊழியம் செய்ய என்னை அழைக்கச் சித்தமாயிருந்தால் அழைப்பார். எனவே நான் கவலைப்படமாட்டேன், ஆனால் என்னுடைய வாழ்வில் மற் றவர்களை உறுத்தும் முள்ளாகவே இருப்பேன்'' என்று தன் சக மாணவராய் இருந்த குருக்களிடம் சொல்லியிருக்கின் றார். தன்னையொரு 'முள்ளு' என்று வர்ணித்ததன் மூலம், தவறு செய்பவர்களுக்கு தானொருமுள்ளு. கடமையில் தவறிய வர்களுக்குத் தானொரு முள்ளு, மனச்சாட்சியை மறந்தவர் களுக்கு தானொருமுள்ளு. அவர்களை உறுத்தி உணரவைப் பேன என்கின்ற இலட்சியம் அவரிடம் இருந்தது என்ப தற்கு இவ்வாக்கியங்கள் சான்று. அவர் இறுதிவரையும் அப்படித்தான் வாழ்ந்தார் என்பதுவும் உண்மையே.

1975 ம் ஆண்டு ஏப்ரல் 25 ம் திகதி பஸ்ரியன் யாழ். ஆசனக் கோவிலில் யாழ் ஆயர் வந்தனைக்குரிய வ. தியோகுப் பிள்ளை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருப்பட்டமளிப்பு தனக்கு தாமதிக்கப்படுவதையிட்டு எந்தளவுக்கு அவர் சாதாரணமாகவும் பதட்டமுமின்றி இருந்தாரோ, அதே மனநிலையில் தான் குருப்பட்டமளிப்பு நிச்சயிக்கப்பட்ட பின்னர் கூட இருந்தார். தான் குருவா கப் போவது கிடைத்தற்கரிய பேறு என்பதில் நம்பிக்கை

யும், மகிழ்வும் இருந்தாலும், அந்தப் பதவியைப் பெறுவதில் கூட ஒரு தாழ்ச்சி இருக்கவேண்டும் என்று நினைத்தார் போலும்.

பஸ்ரியன் வளமான குடும்பத்தில் பிறந்தவர். வசதி மிக்கவர். தம் குருமகனுக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கும் மனநிலையில் பெற்றோர் இருந்தனர். ஆனால் பஸ்ரியனோ தனது குருப்பட்டமளிப்புக்கு அணிய வேண்டியிருந்த 'அல்ப்' (alb) எனப்படும் வெள்ளை நீள அங்கியைக் கூட தன்னுடன் மாணவனாக இருந்து, அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் குருவாகியிருந்த தனது நண்பரிடம் இரவலாகப் பெற்றே அணிந்தார். அதையிட்டு அவர் எதுவித கூச்சமும் கொள்ளவில்லை என்பது நாம் இங்கு கூர்ந்து நோக்க வேண்டிய தொன்றாகும்.

திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் குருக்கள் தமது சொந்த நாட்டில் இருந்தால் தமது சொந்த ஊரில் உள்ள தாம் சேர்ந்த கோவிலில் முதற்பலியை ஒப்புக் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. ஆனால், சாதிப்பிரச்சினையின் பொருட்டு இவர் சார்ந்த பங்குக் கோவிலான இளவாலை புனித அன்னம்மாள் கோவில் அந்த நாட்களில் மூடப்பட்டிருந்த காரணத்தால் முதற் பலியை அங்கு ஒப்புக் கொடுக்கும் வாய்ப்பு பஸ்ரியனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் தான் முதற்பலியை ஒப்புக்கொடுத்தார்.

அந்த ஆண்டிலேயே மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் அருட்திரு. கில்லறி ஜெபநேசன் அவர்களுக்கு உதவிக் குருவாகப் பணியாற்ற நியமனம் பெற்றார். அங்கு ஒருவருடம் உதவிக் குருவாக பணியாற்றிய பின்னர் 1977 ம் ஆண்டு வரையில் முருங்கன், மடு, மானிப்பாய் ஆகிய இடங்களுக்கு சிற்சில மாதங்களுக்குத் தற்காலிக நியமனங்களே வழங்கப்பட்டன.

1977 ம் ஆண்டில், அப்பொழுது மானிப்பாயின் பங்குத் தந்தையாய் இருந்த அருட்திரு M. J. மரியாம்பிள்ளை அவர்கள் இலண்டன் பயணமான போது தற்காலிகமாக அவருக்குப் பதிலாக அப்பங்கில் பணியாற்ற நியமிக்கப் பட்டார்.

அருள்திரு மரியாம்பிள்ளை அவர்களுக்குப் பதிலாக மானிப்பாயில் தற்காலிக நியமனம் பெற்ற இச்சம்பவத்தைக் கூறும் இவ்விடத்தில் இன்னுமொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

1974 ல் மரியாம்பிள்ளை அடிகள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் அதிபராக பணியாற்றிக் கொண்டிருந்த போது மலேசியாவுக்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்பொழுது திருச்சி குருமடத்தில் இருந்து இலங்கைவந்திருந்த (அப்பொழுது அருட் சகோதரராய் இருந்த) மேரி பஸ்ரியன் அவர்களே அதிபர் மரியாம் பிள்ளை அடிகள் வரும்வரை ஹென்றி அரசர் கல்லூரியின் பதில் அதிபராக ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது பஸ்ரியனுக்கு வயது 26. ஹென்றி அரசர் கல்லூரியின் வரலாற்றிலேயே இந்தச் சிறுவயதில் தற்காலிகமாகத்தானும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுப் பணிபுரிந்த முதல் நபர் மேரி பஸ்ரியன் தான்.

அந்த மூன்று மாத காலத்தில் திறமையாகத் தனது நிர்வாகப் பணியை மேற்கொண்ட பஸ்ரியன் அங்கும் தனக்கே உரித்தான தாழ்ச்சியை வெளிப்படுத்துவதில் பின்நிற்க வில்லை. அங்கு பணிபுரிந்த ஆசிரியர்களிடம் "மாஸ்டர் நான் வயதில் மிகவும் இளையவன. இந்த நாற்காலியில் அமரும் தகைமை எனக்கில்லை. ஆயர் அவர்கள் பணித்ததின் பேரில் தான் நான் இந்த இடத்தில் இருக்கின்றேன். நீங்கள் தான் என்னை வழி நடத்த வேண்டும்" என்று பணிவோடு கூறிக்கொள்வார்.

1974 ல் ஹென்றியரசர் கல்லூரியில் மரியாம்பிள்ளை அடிகளுக்கு பதிலாகப் பொறுப்பேற்ற பஸ்ரியன் 1977 ல் மானிப்பாயில் அவருக்குப் பதிலாகப் பங்குத்தந்தையாகவும் பதவியேற்ருர். இலண்டன் சென்ற மரியாம்பிள்ளை அடிகள் அங்கு விபத்து ஒன்றில் அகாலமரணம் அடையவே, தற் காலிகப் பங்குத் தந்தையாக நியமனம் பெற்ற பஸ்ரியன் மானிப்பாயின் பங்குத் தந்தையாகவே நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 1982 ம் ஆண்டுவரை மானிப்பாயிலே பணி யைத் தொடர்ந்தார்.

மானிப்பாயில் பணியாற்றிய கால கட்டம் தான் பஸ்ரி யனை யார் என்று மற்றவர்கள் இனம் கண்டு கொண்ட காலம். அது வீடு கட்டுகிறவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட கல்லு அல்ல, மூலைக்கு முதற்கல்லாக விளங்குகின்ற கல்லு என்பதனை விளங்கிக் கொண்டனர்.

துறவறத்தை ஒரு கடமைத் தொழிலாக அல்ல ஒரு தொண்டு வாழ்வாக பஸ்ரியன் வாழ்ந்து காட்டிய நாட்கள் அந்த நாட்கள்.

குடும்பங்களுக்கிடையே, பங்கு மக்களுக்கிடையே புரிந் துணர்வும், குடும்பங்களுக்கிடையே—பங்குமக்களுக்கிடையே ஏன் குருக்களுக்கிடையேயும் ஒரு ஒற்றுமைப் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அயராது உழைத்தவர்.

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயக் கதவினிலே ''வருந்திச் சுமப்போரே என்னிடம் வாருங்கள்'' என்ற வார்த்தை பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். அவ்வார்த்தைகளை பஸ்ரியன் உரைப்பதாகவே கொள்ளக் கூடிய வகையில் வாழ்ந்து காட்டியவர் பஸ்ரியன். குருக்க ளுக்கெல்லாம் ஒரு இணைப்புச் சங்கிலியாக—தொடர்புப் பால மாக — ஒரு தங்குமடமாக பஸ்ரியன் அங்கு வாழ்ந்தார்.

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும், பிறநாடுகளில் இருந்து கூட அவர் நண்பர்கள், நண்பர்களான குருக்கள் யாழ் வந்தால் வேறு எங்கும் தங்குவதை விட, பஸ்ரியனோடு தங்குவதில் நிறைவு கொள்பவர்களாக மானிப்பாயை நோக்கியே செல்வதுண்டு. வந்தோரை யெல்லாம் முகம் கோணாது விருந்தோம்பும் பண்பு பஸ்ரியனுக்கே உரித்தானதாக விருந்தது. 1982 ல் பஸ்ரியன் வங்காலைக்கு மாற்றலாகிச் சென்ற பின்னர் கூட மன்னாருக்குச் செல்லும் அவர் நண்பர்கள் தம்மை மறந்து மகிழ்ந்திருப்பதற்காக பஸ்ரியனையே நாடி வங்காலைக்குச் செல்வர்.

இத்தன்மையாக மற்றவர்களை ஈர்ந்து இழுக்கும் கவர்ச்சியும், திறமையும் பஸ்ரியனிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தது. மற்றவர்கள் முகம் கோணாமல் உபசரிக்கும் பண்பினை ஒரு சில பழமை விரும்பிகள் எதிர்க்கவே செய்தனர். அவர்மீது குறை கூறிக்கொள்வதில் திருப்தியடையவே செய்தனர். ஆனால் தனக்குச் சரியெனப்பட்டதை பிறருக்குத் தீமையில்லாத விடயத்தைத் துணிந்து செய்வதில் உறுதியுள்ள பஸ்ரியன் அதுகண்டு பின்னிற்கவில்லை.

விருந்துபசாரங்களும், கலகலப்பும் ஒரு துறவிக்கு அவசியமற்றவை என்பது அவர்களது வாதம். சோர்ந்து, நொந்து, தளர்வுற்று ஒரு மாறுதலுக்காக தன்னிடம் வரும் நண்பரை உபசரித்து உற்சாகப்படுத்துவது தனது கடமை என்பது பஸ்ரியனின் வாதம்.

துறவு என்பது புறத்துறவைவிட மனத்துறவிலேயே அதிகமாகவுள்ளது. மாற்றமடைந்துவரும் சமுதாயத்தில் இன்னும் பழமையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு அதற்கு துறவு என்று ஒரு வரைவிலக்கணத்தைக் கூறிக் கொள்வதன் மூலம், மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி அந்நியப்பட்டு வாழ்வது என்பது பஸ்ரியனால் முடியாதிருந்தது. மக்களில் இருந்து வேறுபட்டதல்ல மக்களோடு மக்களாக வாழ வேண்

டும். அப்படிக் கலந்து வாழ்வதில் தான் துறவின் மகத்து வத்தை மற்றவர்கள் உணரப்பண்ண வேண்டும் என்பது அவ ரது இலட்சியம். மக்களைத் தன்னோடு பஸ்ரியன் ஈர்த்துக் கொண்டதற்கு அவரது இந்த வெளியரங்கமான வாழ்க் கையே காரணமாக விருந்தது.

1975 ல் மன்னாரில் உதவிப் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் பனங்கட்டிக்கொட்டில் திரு இருதயக் கழகத்தின் உதைபந்தாட்டக் குழுவில் தானும் ஒரு விளையாட்டு வீர னாகச் சேர்ந்து வட்டாரச் சுற்றுப்போட்டி (tournament) கூட விளையாடியிருக்கின்றார்.

''ஐயகோ .. சுவாமியார் மேலங்கியைக் கழற்றிவிட்டு இப்படி அம்பலத்தில் விளையாடுகிறாரே'' என்று அடித்துக் கொள்ளும் பழமை விரும்பிகளைப் பற்றி அவர் அலட்டிக் கொண்டது கிடையாது.

பஸ்ரியன் பூண்டிருந்த துறவு எத்தகையது என்று எண் ணும் போது வீரமாமுனிவரின் தேம்பாவணியின் ஒரு காட் சியையே நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு.

துறவறம் வேண்டிக் கானகம் சென்று தவமியற்றச் சென்ற சூசைக்கு வானவன் முதியவன் உருவில் தோன்றித் தடுத்து துறவு என்றால் என்ன வென்று விளக்குகின்றான்.

''அருள் தரும் உணர்வு, அன்பு, ஊக்கம், அரும்பொறை ஈகை, மற்ற
மருள்தரும் இயல்தீர் மாட்சி மதியை மீன் சூழ்தல்போல
பொருள் தரு நாட்டில் வைகும் பொலம் துறவு
அணியும் அன்றோ''

'சந்திரனைச் சூழ்ந்த விண்மீன்கள் போல உன்னை அருளு ணர்வு, அன்பு, ஊக்கம், பொறுமை, மயக்கமற்ற மாட் சிமை சூழ செல்வம் மிகுந்த நாட்டில் உன் அழகிய துற வினை மேற்கொள்க' என்கின்றான்.

மேலும்

> "தான் வளர்தவத்தைக் கூட்டித்
> தமர்க்கெலாம் நகரில் காட்டல்
> வான் வளர் வலமை பூத்த மாண்பிதே"

மாண்புமிக்க தவம் எது? துறவு எது? 'காட்டினுள் சென்று இயற்றுகின்ற தவத்திலும், நாட்டினுள் மக்களோடு மக்களாக வாழ்ந்து காட்டுகின்ற தவமே உண்மையான உயர்ந்த துறவறம் ஆகும்' என்பதனை வீரமாமுனிவர் முதியவனை வானவன் பாத்திரம் மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

துறவுக்குரிய இந்த குணவியல்புகளை பஸ்ரியன் முழுமையாகக் கொண்டிருந்தார் என்பதனை அவரை அறிந்த, அவர் பணியால் பயன்பெற்ற அனைவருமே அறிவர். அவரது கலகலப்பும், விருந்தோம்பும் பண்பையும் குறித்து அவரது துறவு வாழ்க்கையை குறுகிய நோக்கோடு பார்ப்பவர்களுக்கு கிறிஸ்து பெருமான் கூறிய வார்த்தைகளையே சமர்ப்பிக்கின்றேன்.

"இத்தலைமுறையை யாருக்கு ஒப்பிடுவேன் பொது இடத்தில் உட்கார்ந்து தம் தோழரைக் கூவியழைத்து,

> நாங்கள் குழல் ஊதினோம்
> நீங்கள் ஆடவில்லை.
> நாங்கள் புலம்பினோம்
> நீங்கள் மாரடிக்கவில்லை

என்று கூறும் சிறுவரைப் போன்றது. ஏனெனில் அருளப்பர் வந்தபோது உண்ணாநோன்பிருந்தார். குடிக்கவுமில்லை அவரைப் போய்ப் பேய் பிடித்தவன் என்று சொல்கின்றார்கள். மனுமகன் வந்தபோதோ உண்டார், குடித்தார், அவரை இதோ போசனப்பிரியன், குடிகாரன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பன் என்கின்றார்கள். ஆனால், தேவ ஞானம் சரியென்று அதன் செயலால் விளங்கிற்று."

(மத். 11:16-19)

வசதிபடைத்த குடும்பவழி வந்தவர் என்றாலும் வாழ்க்கையில் சொகுசாக, பகட்டாக வாழவேண்டும் என்ற எண்ணம் பஸ்ரியனிடம் இருந்ததில்லை. அவர் குருவாக வந்த பின்னர் வருடமொன்றுக்கு மூன்று அங்கிகளை அவரது தந்தையாரான மனுவேற்பிள்ளை தைத்துக் கொடுத்து வந்தார். ஆனால் பஸ்ரியனைப் புதிய அங்கியுடன் காண்பது அரிது. சாதாரணமாக அவரைப் பார்த்தால் கிழிந்த, மங்கிய பல தையல்கள் போடப்பட்ட அங்கியுடனேயே திரிவார். ஒழுங்காக வாரிவிடப்படாத தலையும், தோளில் ஒரு சீலைப்பையுமாகவே பஸ்ரியன் காட்சியளிப்பார்.

வங்காலையில் அவர் பங்காற்றிய பொழுது மன்னார் கடைத்தெருவில் உள்ள முஸ்லிம் கடைகளில் "பஸ்ரியன் சுவாமி இந்தப்பக்கம் வந்தவரா ?" என்று விசாரித்தால் "யார் அந்த வெறுங்கால் சுவாமியா ?" என்றுமுஸ்லிம் கடைக்காரர்கள் திருப்பிக் கேட்கும் அளவுக்கு, காலணி அணியாத அவரது வாழ்க்கை பிரபல்யமாகி இருந்தது.

அவர் ஏன் கால்களில் எதுவும் அணியாது வாழ்ந்தார் என்பதற்கு அவர் எவர்க்கும் தெளிவான விளக்கம் கூறியது கிடையாது. பலருக்கும் பலவிதமாகப் பதில்கூறியுள்ளார்,

"எங்களைவிட எத்தனைபேர் கஷ்டப்பட்டு வாழ்கின்றார்கள். மோட்டார் சைக்கிலிலேயே சென்றுவரும் எனக்கு எதற்குச் செருப்பு. அது தேவையில்லாதது" என்றும், "தமிழீழம் கிடைத்த பின்னர்தான் செருப்பு அணிவேன்" என்றும் வெவ்வேறு காரணங்களைக் கூறியுள்ளார்.

அவர் காலணி அணியாததற்கு எது காரணமாயிருந்தாலும் ஆடம்பரமற்ற துறவு வாழ்வுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. கல்லிலும், முள்ளிலும், சுடு மணலிலும் அந்தப் பூம்பாதங்கள் ஓடி ஓடித் தொண்டு புரிந்ததை மறக்க முடியாது,

செருப்பில்லாமல் திரிவது அவருக்குப் பழகிவிட்ட தொன்று. அதன் காரணத்தால் யாராவது வில்லங்கமாக வாங்கிக் கொடுத்தால்கூட போகின்ற இடங்களில் மறந்து வைத்துவிட்டு வந்துவிடுவார். கொழும்புக்குச் செல்லும் போதுகூட பஸ்ரியன் வெறும்கால்களுடனேயே சென்றுவரு வார். ஒருமுறை அவரது தாயாரைக் கொழும்புக்கு அழைத் துச் சென்றபோது இவர் வெறுங்கால்களுடனேயே சென் ருர். தனது மகன் இப்படி வருவதைக்கண்டு ஏசிவிட்டு ஒரு சோடிச் செருப்பு வாங்கிக் கொடுத்தார். அதுவும் சில நாட் களின் பின்னர் எங்கு சென்றது என்று அவருக்கே தெரியாது.

யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை முன்னிலை யில் செல்லும்போது மட்டும் அவர் கண்டிப்பாரோ என்று சற்றுப்பயம். எனவே ஆயர் இல்லத்தில் நிற்கும் ஒருவ ருடைய செருப்பை இரவலாகக் கேட்டுவாங்கி அணிந்து செல்வார்.

செருப்பு விடயத்தில் அவர் அக்கறை செலுத்தாமல் விட்டதற்கு இன்னுமொரு காரணம் 'பிஸிபஸ்ரியனு'டைய வேகம். அந்தச் செயல் வேகமும், சிந்தனை வேகமும் கழற்றி வைத்ததை மாட்டிக்கொள்ள மறக்கச் செய்துவிடும்.

மானிப்பாயில் இருந்தபோது ஒருமுறை செருப்பு அணிந்துகொண்டு வந்து விட்டார், மானிப்பாய்க்கு வந்த அவரை வழியில் அவரைச் சேர்ந்த பங்குப்பிள்ளை மறித் துக் கதை கேட்டபோது, அவரது கால்களைக் கவனித்து ஆச் சரியப்பட்டுவிட்டார். காரணம் அவர் செருப்பு அணிந்திருந் ததற்காக அல்ல ஒருகாலில் நீலச்செருப்பும், மறு காலில் சிவப்புச் செருப்பும் அணிந்துகொண்டிருந்தார் என்பதனால். அப்பெண் சுட்டிக்காட்டியதும் தன் தவறை உணர்ந்து "நான் வழக்கமாகச் செருப்புப் போடுறதில்லை. இன்றைக் கென்று போட்டுக்கொண்டுபோய் யாருடைய செருப்பையோ மாறிப் போட்டுக்கொண்டு வந்திட்டன். ஒருவருக்கும் சொல் லிப்போடாதை" என்று அசடுவழியச் சிரித்தார்.

அவர் தன்னைத் தாழ்த்திக்கொண்ட துறவு வாழ்வுக்கு மானிப்பாயில் நடந்த இன்னுமொரு சம்பவத்தைக் குறிப் பிடலாம்.

1980-ம் ஆண்டு பெரிய வெள்ளியன்று மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருச்சிலுவை முத்தமிடும் சடங்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆண்களும் பெண் களும் வரிசையாக வந்து சிலுவை முத்திசெய்துகொண்டிருந் தனர்.

ஆண்களில் ஒருவர் சற்று மதுபோதையில் இருந்தார். அவர் நிரையைக் குழப்பிவந்து சிலுவை முத்திசெய்ய வந்த போது பஸ்ரியன் அவரைத் தடுத்து நிறுத்தினுர். போதையில் நின்ற அந்த நபர் ஆலயத்துள்ளே வைத்தே அவரை அவ மரியாதையாகப் பேசிவிட்டுச் சென்றுவிட்டார்.

சுவாமியை அந்த மனிதன் இப்படி ஏசிவிட்டாரே என்று ஆலயத்கில் இருந்தவர்களுக்குத் துக்கம் ஏற்பட்டது. ஆனுல் பஸ்ரியன் அதைப் பொருட்படுத்தியதாக இல்லை. அவ ரது கடமைகளைச் சரிவரச் செய்துமுடிசதார். மறுநாள் அந்தக் குறிப்பிட்ட நபரின் வீடுதேடிச் சென்று அவரைச் சந்தித்து அவரோடு சமாதானம் செய்து கொண்டார். அந்த நபர் தன் தவறை உணரவைத்தார். அத்தோடு தனது கடமை முடிந்துவிட்டதாக அவர் நினைக்கவில்லை. ஆலயத் துள் பலர் முன்னிலையில் அவர் அவமதிக்கப்பட்டவராகை யால், ஆலயத்துள்ளேயே வைத்து அந்த நபர் தனக்கு விரோதியல்ல நண்பர் என்று மற்றவர்கள் அறியச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்போலும், அடுத்த வருடம் 1981-ம் ஆண்டு பெரியவியாழன் அன்று நடைபெற்ற கால் கழுவும் சடங்கின்போது, தான் கால்கழுவி முத்தமிடவுள்ள பன்னிரண்டு பேரிலும் ஒருவராகக் கடந்த ஆண்டில் தன்னை அவமதித்த அந்த நபரையும் தெரிவு செய்து, அவரது கால் களைக் கழுவி முத்தமிட்டார். பஸ்ரியனிடம் குடிகொண் டிருந்த தாழ்ச்சி எனும் புண்ணியத்துக்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

"வேகமாகச் சுழலும் காற்றாடி கண்களுக்குத் தெரிவ தில்லை என்று டாக்டர். மு. வ. தனது நூல் ஒன்றில் குறிப் பிட்டுள்ளது போல, வேகமாகவும் மற்றவருக்குப் பல னளிக்க வேண்டியும் பணிகளினுள்ளே சுழன்று வாழ்ந்த பஸ்ரியனின் துறவை மற்றவர்கள் இனம் கண்டு கொள்வது சற்றுச் சிரமம் என்பதில் வியப்பில்லை.

அவருக்கென்று பெற்றவர்களும், சகோதரர்களும், நண்பர்களும் அனுப்பிவைக்கும் அன்பளிப்புகளைப் பெரும் பாலும் மற்றவர்களுக்குத் தான் அன்பளிப்புச் செய்து விடும் மனப்பான்மை துறவின் அடிப்படையிலல்லாது வேறு என்ன ?

வெளித்தோற்றத்துக்கு பஸ்ரியன் செபத்தில் ஈடுபா டற்றவர் போன்றே தோற்றமளிப்பார். ஆனால் ஓய்வின் றிச் சுழன்றுகொண்டிருந்தவர் செபத்தை மறந்தவரல்லர். தன்னைத் துன்பம் வாட்டும்போது தியானத்தில் அமர்ந்து செபிப்பது அவரது வழக்கம் என்பதற்கு நேரடியாகக் கண்ட, மானிப்பாய் தியான இல்லத் தலைவி அருட்சகோ தரி அசம்ரா அவர்கள் சாட்சி கூறுகின்றார்கள்.

பகலெல்லாம் பம்பரமாய்ச் சுழன்று திரியும் பஸ்ரியன் தியான இல்லத்தில் நடைபெறும் இரவு திருவிழிப்பு வழிபாடு களில் கலந்துகொண்டு மனம் ஒன்றித்துச் செபிப்பார் மேரி பஸ்ரியன் எனும் பெயரைக்கொண்டிருந்த அவர் அன்னை மரியாளில் அபாரப் பக்திகொண்டிருந்தார். அவர் பத் தியை வளர்ப்பதில் சபைகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வந்தார். மானிப்பாய் பங்கைச் சேர்ந்த அந்திரான் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாங்கண்ணி ஆலயம் அவரது முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

அவரது துறவு வாழ்வில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கோடு இருப்பவர்களுக்குத் தவிர மற்றவர்கள் மட்டில் அவர் உண்மைத் துறவியாகவே வாழ்ந்தார். மற்றவர்கள் தன்னைத் துறவியாகக் காணவேண்டும் என்பதைவிட தான் தன்மட்டில் துறவியாக வாழ வேண்டும் என்பதில் உறுதியாக வாழ்ந்தார்.

தமது துறவற வாழ்வில் விரக்தி ஏற்பட்ட சிலர் தமது நிலையில் இருந்து வழுவிவிடாது உறுதியாக இருப்பதற்கு பஸ்ரியன் ஆதாரமாக இருந்துள்ளார் என்பதுவே உண்மையாகும். தனது குரு நண்பர்களிடம் ஓடி ஓடிச்சென்று அவர்களை ஊக்குவித்து உற்சாகமளிப்பதில் பஸ்ரியன் முக்கிய பங்கு வகித்தார் என்பதை அனைவருமே ஒப்புக்கொள்கின்றனர். பஸ்ரியனின் மரணத்தின் பின்னர், பஸ்ரியனைப் போன்று புரிந்துணர்வை ஏற்படுத்திக் குருக்களை ஒன்று சேர்த்துவைக்கக்கூடிய இன்னுமொருவர் இன்றுவரையில் உருவாகவில்லை என்பது அவரது நண்பர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும்.

மற்றவர்களோடு பழகுவதிலும், உரையாடுவதிலும் இனிமையான பஸ்ரியன் மற்றவர்களைக் கவர்ந்துவிடக் கூடிய அழகிய தோற்றம் உடையவர் என்பதும் உண்மை. "தனது அழகு மற்றவர்களுக்குச் சலனத்தை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்பதற்காகவே தனது உடையைப் பற்றியோ, கலைந்திருக்கும் தலையைப் பற்றியோ அக்கறை செலுத்தாது வாழ்ந்தார்" என்பது அவர் பணியாற்றிய பங்குகளில் உள்ள அம்மாமார் சிலரது கருத்தாகும்.

மற்றவர்களது வீண் சந்தேகத்துக்கு இடம் தராத வகையில் இளம் பெண்களின் கௌரவம் காப்பாற்றப்படும் வகையிலேயே அவர் பழகிவந்தார். அவரது இந்த உயரிய பண்பினை அவர் பணியாற்றிய பங்குகளில் இருக்கும் பெரியவர்கள் எழுத்துமூலம் அறிவித்துள்ளனர்.

பஸ்ரியனின் துறவு தூய்மையானது — அவரது வாழ்க்கை தூய்மையானது என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது. அவர் குருவாகுவதற்கு முன்னரும் குருவான பின்னரும் அவரது நியமனங்களில் காட்டப்பட்ட தயக்கங்களுக்கும், தாமதங்களுக்கும் சவால் போன்று பங்குத் தந்தையாக நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவரது வாழ்க்கை அமைந்திருந்தது.

அதிலும் 1981ல் மன்னார் மறைமாவட்டம் பிரிந்ததன் பின்னர், அங்கு பணியாற்றக் குருக்களைத் தொண்டர்களாகக் கேட்டு மன்னார் ஆயர் அழைப்புவிடுத்தபோது புதிய மறைமாவட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்ற வேகத்தில் தனது பெயரையும் பதிவு செய்துகொண்டவர்களில் பஸ்ரியன் முக்கியமானவர். இது முன்னர் அவர்மீது காட்டப்பட்ட தயக்கங்களுக்கு ஒரு சவால் போன்று, இறை ஏவுதல் என்றுதான் கூறவேண்டும். புதிய மறைமாவட்டத்தில் ஆயரால் கூட்டப்பட்ட ஆய்வரங்கின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் பஸ்ரியன் முக்கிய பங்களிப்புக் கொடுத்தார். இவை அனைத்தையும் விட மன்னார் மறைமாவட்டத்தின் இளைஞர் விவகாரங்களுக்கும் பொறுப்பாளராக ஆயரால் நியமிக்கப்பட்டார்.

இவையெல்லாம் அவர் நாடிவந்த, தேடிக்கொண்ட, நிரூபித்துக்காட்டிய அவரது தூய்மையான துறவற வாழ்வுக்கு இறைவனாக வழங்கிய விருதுகள் என்பது உண்மையே.

✢

## (7)

# இறைபணியும் கலைப்பணியும்

மேரி பஸ்ரியன் அடிகள் ஒரு கலைஞரு? அப்படிக் கூறுவதானுல் அது மிகைப்படுத்திக் கூறும் கூற்ருகவே இருக்கும். ஆனுல் அவர் ஒரு கலை ஆர்வலர் என்பது உண்மை. கலைஞர்களைக் கௌரவிப்பதிலும், ஊக்குவிப்பதிலும் தனது பணியின் வெற்றிக்காகக் கலைஞர்களையும், கலையையும் பயன் படுத்துவதிலும் வல்லவர். அவரது இந்த ஈடுபாட்டினுல் குறுகிய காலத்தில் அவர் சாதித்தவை அதிகம் எனலாம்.

ஆனுல் அவர் மேடைஏறி அனுபவம் இல்லாதவர் என்று கூறிவிட முடியாது. திருச்சி, புனித சின்னப்பர் குருமடத்தில் பயின்ற காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 22-ம் நாள் நடைபெறும் சிறுவர் தினவிழாவில் குருமட மாணவர்களுக்கிடையில் நடைபெறும் கலைநிகழ்ச்சிப் போட்டிகளில் பஸ்ரியன் பங்குகொண்ட, அவரால் நெறிப்படுத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நான்கு வருடங்கள் முதலாம் இடத்தைப் பெற்றிருக்கின்றன என்று அவரது மாணவர் ஒருவர் பெருமையோடு நினைவு கூருகின்ருர்.

1980 நவம்பர் மாதத்தில் யாழ். புனித மாட்டீனுர் குருமடத்தின் நூற்ருவது ஆண்டு நிறைவுவிழாக் கொண்டா

டப்பட்டது. அவ்விழாவில் குருக்களும், குருமட மாணவர்களும் மட்டும் கலந்துகொண்ட கலைநிகழ்ச்சிகளின்போது குருக்கள் சிலர் சேர்ந்து திடீர் நாடகம் ஒன்றைத் தயாரித்து நடித்துக் காண்பித்தனர். அதில் பஸ்ரியன் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்து, பார்வையாளர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்ததைப் பார்த்தவர்கள் யாருமே மறந்துவிட முடியாது. வசனமே பேசாது தனது அபார நடிப்பின்மூலம் கொடுக்கவேண்டிய செய்தியைக் கொடுத்தார்.

சமய, சமூக வாழ்வில் அவர் செய்த பணிகளால் கவரப்பட்டதனால் மட்டுமே இந்நூலை எழுதவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது என்று கூறிவிட முடியாது. யான் கலை ஈடுபாடு உடைய ஒருவன் என்றமட்டில் கலைஞர்களை, அவர்களது ஆற்றல்களைக் கௌரவித்து மதிப்பதில் —அவர்களுக்கு வாழ்வளிப்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தை உணர்ந்தவன் என்பதுவும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அவரால் யான்பெற்ற நன்மைகளை எழுதவேண்டிய கட்டாயத்தால் எனக்கும் அவருக்கும் இருந்த தொடர்புகளை எழுதுவது தவிர்க்க முடியாததாகவுளது.

நாடகத்துறையில் நான் முழுமையாக ஈடுபடுவதற்கு முதற் காரணியாக அமைந்தவர் 1965-ம் ஆண்டில் மன்னாரில் உதவிப் பங்குத்தந்தையாக இருந்த அருள்திரு ஹில்றி ஜெபநேசன் அவர்களே. இடைநடுவே ஏற்பட்ட விரக்திகளால் விலகிப் போய்க்கொண்டிருந்த என்னை மீண்டும் இத்துறைக்குக் கொண்டுவந்து முழுமூச்சாக ஈடுபட வைத்தவர் மேரி பஸ்ரியன் அடிகளாரே.

1978-ல் 'சுதந்திரன்' வாரஇதழில் துணை ஆசிரியராகவிருந்த எனக்கு, யான் 'பாதுகாவலன்' பத்திரிகையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆவர்த்தை ஊட்டினார். எழுத்து, கலை ஈடுபாடுள்ள கத்தோலிக்கர் தம் திறமைகள் மறைப் பணிக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் முழுமையாக இருந்தது.

அத்தோடு நிற்காது அப்பொழுது மறைபரப்புதல் சபையில் தேசிய இயக்குநராகவிருந்த அருள்திரு கிங்சிலி சுவாம்பிள்ளை (தற்போதைய திருமலை-மட்டுநகர் ஆயர்) அவர்களிடம் என்னை அழைத்துச்சென்று, தமிழகத்துக்கு என்னை அனுப்பி இத்துறைகளில் பயிற்சிபெற்று வரச்செய்ய வேண்டும் என்றும், அதற்காக நிதி ஒதுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதற்கு அருள் திரு பி. எம். இம்மானுவேல், கரவையூர்ச் செல்வம் ஆகியோர் ஆதரவு வழங்கினர்.

இதன்பயனுக தமிழகம் சென்று கலைத்துறை, எழுத்துத் துறையில் கணிசமான அனுபவங்களைப் பெற்றுவர எனக்கு வாய்ப்புக்கிடைத்தது.

1979-ல் பயிற்சியை முடித்து தமிழகத்தால் வந்தபின்னர் பஸ்ரியன் என்னை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கினுர். அப்பொழுதுதான் பஸ்ரியன் அடிகள் எனக்குக் கூறிய வார்த்தைகள் : "எங்கடை ஆட்களுக்கு உம்மிடம் இருக்கும் திறமைகளைச் சரிவரப் பயன்படுத்தத் தெரியவில்லை. ஆனுல் என்னுல் முடிந்தவரை உம்மை நான் பயன்படுத்துவேன்."

இந்த வார்த்தைகளை அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இறந்துவிட்ட பின்னர், இன்றுகூட அவர் தெய்வமாக நின்று அவரைப்பற்றிய இந்த நூலை என்மூலம் எழுதுவிப்பதன்மூலம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ருர் என்று உறுதியாக நம்புகின்றேன்.

என்னைப் பயன்படுத்தி அவர் செய்த முக்கிய கலைப் பணியாக நான் கூறுவதாயின், 1980-ம் 81-ம் ஆண்டுகளில் மல்வம், சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய இளைஞர்களைக்கொண்டு அவர் அரங்கேற்றிய 'திருப்பாடுகளின் காட்சி'யைப் பெருமையோடு கூறலாம்.

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த அவ்விளைஞர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி, சுமார் அறுபது இளைஞர், யுவதிகளை ஒன்றுசேர்த்து பிரமிக்கத்தக்கவகையில் அக்காட்சிகளை அரங்கேற்றி முடித்தார்.

அன்றைய அத்திருப்பாடுகளின் காட்சியை வெறும் பொழுதுபோக்குக் காட்சியாக மட்டுமல்ல, அல்லது ஒரு மறை நிகழ்ச்சியாக மட்டுமல்ல, ஊர் மக்களை, இளைஞர்களை ஒற்றுமைப்படுத்தும் ஓர் ஊடகமாகவும் அவர் கையாண்டது பலருக்குத் தெரியாது.

இந்துக்களும், கத்தோலிக்கரும் கலந்துள்ள கிராமம் மல்வம். கத்தோலிக்க இளைஞர்களுக்கு சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூகநிலையம் போன்று இந்து இளைஞர்களுக்கு அம்பாள் சனசமூக நிலையம் என்று ஒன்று உண்டு. ஒரே சமூகத்தவர்களான இக்கிராமத்தவருள்ளே இரண்டு சனசமூக நிலையங்கள் உருவானதன் காரணத்தால் அவர்கள் விரும்பாமலே கருத்து முரண்பாடுகளும், போட்டி மனப்பான்மையும் வளரத் தலைப்பட்டன.

சமூகப்பணியே மறைப்பணி என்பதில் நம்பிக்கைகொண்டிருந்த பஸ்ரியன், இவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தக்கூடிய கருவியாக இந்தத் திருப்பாடுகளின் காட்சியைக் கையாண்டார். இரண்டு நிலையத்தினதும் உறுப்பினர்களை இணைத்து இக்காட்சிகளைப் பழக்க ஏற்பாடு செய்தார். இத்திருப்பாடுகளின் காட்சியின் இயேசுநாதர் பாத்திரத்தை அம்பாள் நிலையத்தின் முக்கிய உறுப்பினரே நடிக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த முயற்சிமூலம் பிளவுபடவிருந்த இளைஞர்களிடையே ஒரு பிணைப்பை, உறவை மீண்டும் பஸ்ரியன் ஏற்படுத்தினர்.

தினமும் இரவில் நடைபெறும் ஒத்திகைகளுக்குப் பெரும்பாலும் தானும்வந்து தன்னால் முடிந்தவரை நடிப்

புச் சொல்லிக்கொடுத்து நடிகர்களை ஊக்குவிப்பார். யாரும் எதிர்பாராத விதத்தில் இக்காட்சி அரங்கேற்றம் அருட்சியுடனும், வெற்றிகரமாகவும் அரங்கேற்றப்பட்டது.

மல்வத்தில் அரங்கேற்றியதோடு நில்லாது யாழ்ப்பாணம், திறந்தவெளி அரங்கிலும் அதே நிகழ்ச்சியை அரங்கேற்றுவித்தார். இதன்மூலம் இத்துறையில் பின்தங்கி நின்ற இவ்விளைஞர்கள் முன்னேற்றம் அடைவதற்கு அடிக்கல் இட்டார் என்பது மிகையாகாது.

1981ம் ஆண்டில் மீண்டும் "பழிதுடைத்த பலி" எனும் பெயரில் மீண்டும் அதே இளைஞர்கள் திருப்பாடுகளின் காட்சியை நடிக்க ஏற்பாடு செய்தார். இம்முறை காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலையில் அதை அரங்கேற்றவேண்டும் என்ற அழைப்பு வந்திருந்தது. அப்பொழுது காங்கேசன்துறை, ஊறணி மயிலிட்டிப் பங்குகளின் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. T. E தேவராஜன் அடிகளார் மூலமே இவ்வேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேவராஜன் அடிகளார் பஸ்ரியன் அடிகளரின் ஊரான இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நெருங்கிய நண்பருமாவார். சேவை மனப்பான்மையிலும் ஒரே கருத்துடையவர். எனவே காங்கேசன்துறையில் அரங்கேற்றப்படும் திருப்பாடுகளின் காட்சி ஒரு சமூக நன்மைக்காகவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டது. மயிலிட்டி, பலாலி, ஊறணி பங்கு மக்களிடையே இருந்த வேற்றுமை மனப்பான்மையைக் களைந்து, அவர்களிடையே ஒற்றுமையும், புரிந்துணர்வையும் வளர்க்க இந் நிகழ்ச்சி ஒரு ஆரம்பக் கருவியாகக் கையாளப்பட்டது.

ஒரு சிறிய பாடகர் குழுவே இந்நிகழ்ச்சிக்குப் போதுமானதாக இருந்தும் கூட ஒவ்வொரு கோவில்களில் இருந்தும் பாடகர்களைச் சேர்த்து ஒரு பெரியகுழுவே இந்

நிகழ்ச்சிக்கு பின்னணிபாட ஏற்பாடாகியது. இது அவர்களை ஒன்று கூட்டும் முதல் நிகழ்ச்சி. ஒருவரோடு ஒருவர் பழக ஏற்படுத்திய ஆரம்ப ஏற்பாடு. இரவு மேடை ஒத்திகை, அரங்கேற்றத்துக் கெல்லாம், பாடகர்கள் எல்லாம் தமது வீடுகளில் இருந்து பார்சல்களாக உணவுகொண்டு வந்து. ஓரே நேரத்தில் ஒன்றுக அமர்ந்து உணவு கொள்ளவைத் ததன் மூலம் மறைமுகமான ஒரு சமபந்தி ஏற்பாடாக்கி சமத்துவ மனப்பான்மையை வளர்க்க முதற்கருவியாக இந்நிகழ்ச்சியைக் கையாண்டனர். அன்று திருப்பாடுகளின் காட்சியைக் கொண்டு தொடங்கிய இப்பணி மயிலை ஊர ணிப் பங்கில், ஆலயப்பாடகர் குழாமிடையே ஒரு புரிந்து ணர்வை வளர்த்து ஒரே மேடையில் இணைந்து பாடவும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றவும் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்து விட்டுள்ளது. இதற்கு அருட்திரு தேவராஜனின் பணிமட்டுமன்று பஸ்ரியனின் கலை நிகழ்ச்சியும் அடிப்படைக் காரணிகளில் ஒன்று என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

மன்னர் மறைமாவட்டத்தில் பணியாற்றிய வேளையில் மன்னர் மறைமாவட்டத்திலேயே சிறந்த கலைஞர்களையும் பாடகர்களையும் கொண்ட வங்காலையில் பணியாற்றிய காலத்தில் — நாட்டுச் சூழ்நிலைகளால் கலைமூலம் பணியாற்றும் சந்தர்ப்பம் அவருக்குக் கிட்டவில்லை. ஆனல் 1982 ம் ஆண்டு கிறிஸ்துமஸ் இரவில் வங்காலையில் நடந்த திருப்பலியை வானெலியில் ஒளிபரப்பச்செய்த பெருமை பஸ்ரியனையே சாரும்.

கலை மூலம் மறைப்பணிபுரிதல், கலைஞர்களை கௌரவித்து ஊக்குவித்தல் — அவர்கள் பணிக்குத்தக்க ஊதியம் வழங்குதல் போன்ற பண்புகளுக்கு பஸ்ரியன் ஒரு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். கத்தோலிக்க கலைஞர்களின் சிந்தனைகளும், எழுத்துக்களும், படைப்புகளும் திருச்சபைக்கு

எதிராகத் திரும்பாவண்ணம் அவர்களை அணைத்து, ஆதரித்து. வளர்க்கும் பஸ்ரியனது உளப்போக்கு ஏனையவர்களுக்கு ஒரு வழிகாட்டுதலாகும்.

1980ல் அரங்கேற்றப்பட்ட திருப்பாடுகளின் காட்சிக்காக, நடித்த இளைஞர்கள் சார்பாக அன்பளிப்பாக வழங்கப்பட்ட கைக்கடிகாரத்தை பஸ்ரியன் புன்முறுவலுடன் எனது கையில் கட்டிவிட்ட காட்சி எனது நினைவில் பசுமையாக உளது. ஆனல் அவர் கட்டிவிட்ட அக்கடிகாரத்தை அவரது நினைவுச் சின்னமாக மூன்று மாதத்துக்குத் தானும் வைத்துப் பேணும் அளவுக்கு என்னல் முடியாமற் போனதை எண்ணும் போது வேதனையாகவே உள்ளது. ஆனல் கத்தோலிக்க கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும், வளர்ப்பதற்கும், பொருளதார ரீதியாக அவர்கள் நலன்களைப் பேணுவதற்கும் பஸ்ரியனது மனப்பான்மையோடு பொறுப்பில் உள்ளவர்கள் சிந்திப்பார்களானல் அந்த அன்பளிப்பை என்னல் காப்பாற்ற முடியாது போனது போன்ற நிலைமை ஏனைய கலைஞர்களுக்கும் ஏற்படாது. எமது திருச்சபையில் அமைப்புரீதியான திட்டம் ஒன்று கிறிஸ்தவக் கலைவளர்ச்சிக்கும், கலைஞர்கள நலனுக்குமாக உருவாக்கப்படவேண்டும் என்பது என்போன்ற கலை ஆர்வலர்களின் கருத்தாகும்

1967ம் ஆண்டில் பஸ்ரியன் வெளிக்களப் பயிற்சி (Regency) மேற்கொள்வதற்காக யாழ்.புனித மடுத்தீனர் குருமடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு முக்கியமான இரண்டு பொறுப்புகள் வழங்கப்பட்டன. ஒன்று குருமடத்தின் சமையற்பிரிவைக் கண்காணிப்பது, மற்றது குருமடமாணவர்களுக்கு ஆங்கிலம் படிப்பிப்பது.

இந்த இரண்டு பொறுப்புக்களையும் திறம்படச் செய்த பஸ்ரியன் மூன்ருவது பொறுப்பு ஒன்றினையும் தானே வலிந்து தேடிக்கொண்டார். அப்பொழுது அங்கு உயர்

வகுப்புப் படித்துக்கொண்டிருந்த மாணவர்களின் துணையுடன் ' ஏழையின் நண்பன் '' எனும் கையெழுத்துச் சஞ்சிகையை மாசு வெளியீடாக வெளியிட்டார். அதில் குருமடத்தின் உயர் வகுப்பு மாணவர்களும், குருமட ஊழியர்கள், அவர்கள்பிள்ளைகளின் ஆக்கங்கள் மட்டுமே வெளியிடப்பட்டன.

ஆரம்பத்தில் கையெழுத்துப் பிரதியாக ஆரம்பிக்கப்பட்ட அப்பிரதிகள் நாளடைவில் கல்லச்சுப் (Ronio) பிரதிகளாக்கப்பட்டு வெளியாருக்கும் விற்பனை செய்யப்பட்டன. சஞ்சிகை விற்றுக்கிடைத்த பணமானது குருமட ஊழியர்களின் பிள்ளைகளினதும், வேறு ஏழைப்பிள்ளைகளினதும் கல்விக்கு உதவப் பயன்படுத்தப்பட்டது. இச் ஞ்சிகையானது அவர் அங்கு பயிற்சி மேற்கொண்டிருந்த வருடம் முழுவதும் தொடர்ச்சியாக வெளிவந்தது.

பஸ்ரியனது இந்தச் செயற்பாடானது குருமாணவனாக இருந்தகாலத்திலேயே ஏழைகளுக்கு உதவி செய்வதில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு ஓர் உதாரணமாகும் ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவுவதில் பஸ்ரியனுக்கு இருந்த அந்த ஆத்மதாகத்தின் பிரதிபலிப்புத்தானோ என்னவோ. அவரது மரணத்தின் பின்னர், இன்று பஸ்ரியனது நண்பர்கள் ''பஸ்ரியன் கல்வி உதவித்திட்டம்'' (Bastian Education Assitance Scheme) சேவை நிதியை ஆரம்பித்து ஏழை மாணவர்களின் கல்விக்காக, அவர்பெயரல் நிதி உதவி புரிந்து வருகின்றார்கள்!

'ஏழைகளின் நண்பன்' வெளியீட்டுடன் மட்டும அவரது பணி நின்றுவிடவில்லை. ஏழை மாணவர்களுச்கு இரவுப் பாடசாலை நடத்துவது, பழைய புத்தகங்களைச் சேகரித்து அம்மாணவர்களுக்குக் கொடுப்பது, பயிற்சிப் புத்தகங்கள் தயாரித்து விநியோகிப்பது போன்ற பணிகளையும் செய்தார். இப்பணிகள் யாவும் குருமடத்தின் உயர்தர வகுப்பு

மாணவர்களின் துணையுடனும், அந்நாளில் குருமட அதிபராக இருந்த அருள்திரு J. E. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் பூரண ஆதரவுடனுமே செய்யப்பட்டது.

அருள்திரு வஸ்தியாம்பிள்ளை அவர்களுக்கும், பஸ்ரியனுக்குமிடையில் நெருங்கிய நட்பும், உறவும் இறுதிவரை இருந்திருக்கின்றது. ஏனைய குருக்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலங்களைவிட, வஸ்தியாம்பிள்ளை அடிகளாருடன்தான் பஸ்ரியன் கூடியகாலம் சேர்ந்து வாழ்ந்துள்ளார். 1968 முதல் 1969 வரை புனித மடுத்தீனார் குருமடத்திலும், 1973 — 1974 வரை மடுக்கோவிலிலும் சுமார் நான்கு ஆண்டுகள் அவரோடு பணிபுரிந்துள்ளார். அக்காலகட்டத்தில் வஸ்தியாம்பிள்ளை அடிகளாரின்கீழ் பெற்ற பயிற்சியும் வழிநடத்தலுமே இயற்கையில் சேவை மனப்பான்மையுள்ள பஸ்ரியனை சிரமதானப்பணி, சமூக சேவைப்பணியில் மென்மேலும் ஊக்கமொடு ஈடுபட வழிசமைத்துக் கொடுத்தன.

"ஒப்படைக்கப்பட்ட பணியை எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பாகச் செய்துமுடிக்கும் திறமை பஸ்ரியனிடம் இருந்தது" என்பது வஸ்தியாம்பிள்ளை அடிகளாரின் கருத்தாகும்.

குருமட அதிபராக வஸ்தியாம்பிள்ளை அடிகள் இருந்த காலத்தில் யாழ். சிறைச்சாலைக் கைதிகளுக்கு ஆன்மபணி செய்யும் பொறுப்பும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1968 — 1969 வரை அவரோடு வாழ்ந்த பஸ்ரியன் சிறைக்கைதிகளோடு உறவாடி, அனுதாபத்துடன் அவர்களுக்குத் தொண்டாற்றுவதில் ஆர்வம் காட்டினார். அத்தோடு கிறிஸ்துமஸ் போன்ற திருவிழாக்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் தயாரித்து சிறைச்சாலையில் அரங்கேற்றினார்.

எனவே கலையை ஒரு பொழுதுபோக்காக அல்ல தனது இறைபணிக்காக — முழுமனித வளர்ச்சிக்காகவே பயன்படுத்தினார் என்பதே உண்மை.

★

# (8)

## சமூகப்பணியே சமயப்பணி

முப்பத்தாறு ஆண்டுகாலம் மட்டுமே வாழ்ந்து அமரத்துவமடைந்துவிட்ட மேரிபஸ்ரியன் மறைந்தும் இன்று மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார் என்றால், அதன் அடிப்படைக் காரணியே அவராற்றிய சமூகப்பணி தான். அவருடைய வாழ்வு, போதனை வாழ்வு அல்ல சாதனை வாழ்வு. அவர் தன் வாழ்நாளில் செய்த அச்சாதனைகளில் மற்றவர்கள் அறியச் செய்தவைகள் சிலவே. விளம்பரம் இன்றிச் செய்து முடித்தவை பல. அப்பலவற்றுள் குறுகிய காலத்தில் எம்மால் சேகரிக்க முடிந்த சிலவற்றை வைத்துக்கொண்டு 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த' பஸ்ரியனது சமூகப்பணியை நோக்குவோம்.

அவரது சமூகப் பார்வையில் சமநோக்கு இருந்தது. தன்னவன் மற்றவன் என்ற பாகுபாடு அறவே அற்றிருந்தது. அதன் காரணத்தினாலே குருவாக வாழ்ந்த பத்தாண்டு காலத்தில் பணியாற்றிய பங்குகளின் மக்கள் இதயங்களில் அவரால் இடம்பிடிக்க முடிந்தது.

அவர் வசதிபடைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்; சிறந்த கல்விப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல. நாம் விரும்பினாலும், விரும்பா

விட்டாலும், ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், எம்மினத்திடையே ஏற்கனவே புகுந்துவிட்ட சமூக அந்தஸ்து என்று நோக்குமிடத்திலும் அவர் உயர் குலத்திலே பிறந்தவர். அதிலும் இளவாலை புனித அன்னம் மாள் கோவிற்பங்கைச் சேர்ந்தவர் என்கின்றபோது சமூ கப்பிரச்சினை காரணமாகத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் (1971 — 1977) இன்னுமொரு சமூகத்துக்கு ஆலயத்தில் சமத்துவம் அளிக்க மாட்டோம் என்ற பிடிவாதத்தில் ஆல யக்கதவுகளைப் பூட்டிவைத்துச் சாதனை புரிந்தவர்களின் உயர் வகுப்பைச் சேர்ந்தவர். (இதனை இங்கு யான் கூறுவது எவ ரையும் புண்படுத்தும் நோக்கோடு அன்று, பஸ்ரியனின் பெருமையைக் கூறுவதானால் இந்த வரலாற்று உண்மையை யும் கோடிட்டுக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு உண்டு. இதிற் சம்பந்தப்பட்டவர்கள் என்னை மன்னிக்கவும்.)

இத்தகைய சமூகப் பின்னணியில் பிறந்த பஸ்ரியன் சேவை எத்தகைய மக்களிடையே இருந்தது? தாழ்த்தப் பட்டவர்கள் என்று கருதப்பட்ட மக்களிடையே தான் பெரும்பாலும் இருந்தது; "இது எங்கடை சுவாமி," "இது எங்கடை அண்ணன்" "இது எங்கடை மகன்" என்று அம்மக்கள் உரிமையோடு கூறும் அளவுக்கு அவரது உறவாடல் இருந்தது.

எவருடைய வீட்டினுள்ளும், "அம்மா" "அப்பு" "ஆச்சி" என்று உரிமையோடு அழைத்து அடுக்களை மட் டும் சென்று குசலம் விசாரித்து உண்டு உறவாடும் மனோ பக்குவம் பஸ்ரியனுக்கு மட்டுமே உரித்தானது. பஸ்ரியன் பணியாற்றிய சில பங்குகளில், குறிப்பாக உடுவில் பங் கில் அவர் மாற்றலாகி மன்னார் சென்றபின்னர் மூதாட் டிகள் பேசும்போது "எங்கடை ஆண்டவர்" என்று குறித் துப் பேசும் அளவுக்கு அவர்கள் உள்ளத்தில் உயர்ந்து வாழ்ந்தார், வாழ்கின்றார். அவரைக் கனவில் கண்டது பற்றி மறுநாள் அங்கு மகிழ்வோடு, பெருமையோடு பேசிக்கொள்ளும் விடயமாக உள்ளது.

குலத்தில் குறைந்தவர்கள் என்று கணிக்கப்பட்ட மக்களோடு அவர் கூச்சமின்றி உறவாடியது எல்லாம் மக்கள் மனதில் தான் இடம் பிடிக்க வேண்டும் என்ற நோக்கிறைல் அல்ல. அது இதய பூர்வமாகவே அவர் கடைப் பிடித்த கொள்கை வாழ்க்கை.

சாதிப் பிரச்சினையால் அவரது சொந்த ஊர் ஆலயமாகிய புனித அன்னம்மாள் ஆலயம் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் மூடப்பட்டிருந்த சம்பவம் பஸ்ரியனை வெகுவாகப் பாதித்த ஒரு விடயம். முக்கியமான இரண்டு சடங்குகள் அக் கோவிலில் நடைபெருது போயின. ஒன்று அவரது முதற் திருப்பலி, அடுத்தது அவரது ஒரே சகோதரியான ஆன் பற்றிமாவின் திருமணம்.

இச் சடங்குகள் அங்கு நடைபெறவில்லையே என்பதை விட அக்கோவில் மூடப்பட்டிருந்ததின் காரணத்தை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. இதுபற்றி அவர் தனது தந்தையாருடனேயே விசாரித்துள்ளார். ' எங்கடை ஆட்கள் செய்யிறது பிழை ' என்று அவரிடம் நேரடியாகவே கூறியுள்ளார்.

அவரது நெருங்கிய உறவினர் ஒருவர், " எங்கடை ஆட்கள் முரட்டுத்தனமாக இருக்கிருர்கள். இவங்கட இந்தச் செயலால ஆயர் இல்லத்திலையும், மற்றச் சுவாமிமாருக்கு முன்னுலையும் நான் தலைகுனியவேண்டியிருக்கு " என்று தம்மிடம் பஸ்ரியன் கூறிக் கவலைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்ருர்.

அவர் பணியாற்றிய பங்கின் மக்கள் சிலர் இது பற்றி அவரிடம் கேட்டதுண்டு. அப்பொழுதெல்லாம் " இதுபற்றி நான் மிகவும் வெட்கமடைகின்றேன் " என்று சுருக்கமாகச் சொல்லி மௌனம் சாதிப்பார்.

இதனால் ஏற்பட்ட தாக்கங்களை; மன உளைச்சல்களை அவர் வெளிக்காட்டாவிட்டாலும். நீறுபூத்த நெருப் பென உள்ளம் கொதித்துக்கொண்டே இருந்தது. அதன் பொருட்டு மனதில் ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்தி யிருந்தது. அந்த ஆலயம் 1977ல் மீண்டும் திறக்கப் பட்ட பின்னர் அவர் மரணமடையும் வரையில், அங்கு பலி ஒப்புக்கொடுக்க வேண்டிய பல சந்தர்ப்பங்கள் ஏற் பட்டபோதும்கூட ஒரு முறைகூட அங்கு அவர் பலி ஒப் புக்கொடுக்கவில்லை.

சிறு வயதிலே பூசைப்பரிசாரகனாக இருந்தபோது அதி காலை நான்கு மணிக்கே எழுந்து அக்கோவிலுக்குச் சென்று பூசைக்கு உதவ வேண்டும் என்று அடம்பிடித்த பஸ்ரியன்—

அக்கோவிலில் பூசை காண்பவனாக அல்ல. பூசைக்கு உதவுபவனாகவே பலியில் பங்குகொள்ள வேண்டுமென்று அந்நாளில் துடித்த பஸ்ரியன்,

குருவானதன் பின்னர் மட்டும் பலி ஒப்புக்கொடுக் கும் சந்தர்ப்பத்தைத் தவிர்த்து வந்தார் என்றால் கார ணம் தனக்கோ, தனது குடும்பத்தவர்க்கோ ஏற்பட்ட தாக் கங்களின் பொருட்டல்ல; இப்பிரச்சினையில் சம்பந்தப் பட்டவர்களின் இதயக் கதவுகள் திறக்கப்படாத நிலையில் அவ்வாலயக் கதவுகள் திறக்கப்பட்டதை திறந்த மன முடைய பஸ்ரியனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பத னாலேயே.

மானிப்பாயில் பணியாற்றியபோது பஸ்ரியனைப் பாதித்த இன்னுமொரு விடயம் ஏழை விவசாயிகளின் பிரச்சினையாகும். நிலவுடமையாளர்கள் கூலி விவசாயிகள் மட்டில் அநீதியாக நடந்து கொள்வதையிட்டு மனம் வருந் தினார். கூலி விவசாயிகளிடமிருந்து திடீரென நிலங்களைப் பறித்து, காணிகளைவிட்டு வெளியேறும்படி செய்வது போன்ற அநீதிகளைக் கண்டித்தார். பஸ்ரியனது குடும்பத்

தவர்கள் நிலவுடைமையாளர்களாக இருந்தபோதும் அவ ரது சிந்தனையோ ஏழை விவசாயிகளின் பக்கமே இருந் தது. " அவரது தந்தையாரிடம் இதுபற்றிப் பேசும்பொழு தெல்லாம் " பாதிக்கப்படும் ஏழை விவசாயிகளை ஒன்று திரட்டி நிலவுடைமையாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப் போகிறேன் " என்பார் — முன்னாள் விவசாய அதிகாரியும், அனுபவசாலியுமான தந்தை " நீர் இப் பொழுதுதான் குருவாகியுள்ளீர், மானிப்பாயில்தான் முதன் முதல் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளீர். இப் பொழுதே இத்தகைய புரட்சிச் சிந்தனைகளிலும், செயல் களிலும் இறங்கினால் பல எதிர்ப்புகளைச் சம்பாதிப்பதுடன், செல்வாக்கையும் இழக்க நேரிடலாம் " என்று அறிவுரை கூறிக் கட்டுப்படுத்திக்கொண்டு வந்தார்.

" தமிழ் மக்களுக்காகப் போரிடும் போராளிகள், முத லில் ஒடுக்கப்படும் ஏழை விவசாயிகளுக்காக, அவர்களது சமூக, பொருளாதார விடுதலைக்காக அமைப்பு ரீதியாகப் போராட வேண்டும் என்பதுவும் அவரது இறுதிக்காலக் கொள்கைகளில் ஒன்றாகவிருந்தது.

' நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணம் ' ஔவையின் இக்கூற்று பஸ்ரியனைப் பொறுத்தவரையில் நூறுவீதம் பொருந்தும், தன்னிடம் மிஞ்சியதையல்ல தனக்கென்று உள்ளதைத் தானம் செய்கின்ற பண்பு — தரும சிந்தை அவரிடம் தாராளமாகவிருந்தது.

மல்வம் பாடசாலை கட்டுவதற்குப் பனைமரங்கள் தேவைப்பட்டன. அதனை மல்வம், சுவாமி ஞானப்பிரகா சர் சனசமூக நிலையம் பொறுப்பெடுத்துச் செய்தது. அந்த இளைஞர்கள் கூடிய இலாபம் பெறுவதற்கும், அதனால் அவ் விளைஞர்கள் கூடிய ஆர்வத்துடன் பொதுப் பணிகளில் ஈடுபடச் செய்யவேண்டும் என்பதற்காகவும் தன்னால் இயன்றதைச்செய்ய விரும்பினார். எனவே இளவாலையில்

உள்ள அவர்களது காணியில் அவருக்குச் சேரவேண்டிய பகுதியில் உள்ள பனைமரங்களை அவ்விளைஞர்களுக்கு இலவசமாகக் கொடுத்தார். தானும்கூட அவர்களோடு சென்று அம்மரங்களைத் தறித்து ஏற்றுவதற்கு உதவினர்.

பஸ்ரியன் மானிப்பாயில் பங்குத் தந்தையாக இருந்த போது பசித்துவருபவர்களுக்கு தன்னால் இயன்றதைக் கொடுப்பதுடன் மட்டும் நின்று விடாது, "இது கோவில். நெடுகிலும் இங்கு என்னால் உதவி செய்யமுடியாது. உனக்கு இனி எதுவும் தேவையென்றால் இளவாலைக்குப் போ. அங்கே என்னுடைய அம்மா வீடு இருக்கு. உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்" என்று வீட்டு முகவரியையும் கொடுத்து அனுப்பிவைப்பார்.

பஸ்ரியனுடைய சாப்பாட்டுமேசை ஆடம்பரமானதல்ல' ஆனால் எத்தனைபேர் போனாலும் உள்ளதை உவப்போடு பகிர்ந்து உண்ணும் உளப்பக்குவம் பஸ்ரியனிடம் இருக்கும். குருக்கள், துறவிகள், படித்தவர்கள், பதவியில் உள்ளவர்கள் மட்டுமே தன்னோடு சமமாக இருந்து உணவு கொள்ளக் கூடியவர்கள் என்று அவர் எண்ணியது கிடையாது. அவரைப் பொறுத்தவரையில் எவராய் இருந்தாலும் சமபந்தி தான். எவருக்கும் அவரது உணவில் பங்கு உண்டு. தன்னை விட தனது விருந்தினர்கள் திருப்தியடைய வேண்டும் என்பதிலேயே அவர் கருத்து இருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களால் மிகவும் மனமுடைந்து போகும் ஒரே நபர் அவரது சமையற்காரராய் இருந்த இராசநாயகம் அப்பாதான்.

இராசநாயகம் அப்பா காலமானதின் பின்னர். 1984 ஆடி மாதம் 25ம் திகதி வங்காலை ஆலயத்திருவிழாச் சமயத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

திருவிழாப் பலி முடிந்ததும், எதிர்பார்த்ததிலும் அதிகமான விருந்தினர்கள் வந்து விட்டகாரணத்தால் சாப்பாடு முடிந்துவிட்டது. எனவே பக்கத்தில் இருந்த கன்னியர் மடத்

துக்கு தனக்குச் சாப்பாடு தயாரித்து அனுப்பும்படி சொல்லி அனுப்பினார். உடனே சமையற் பகுதிக்குப் பொறுப்பான சகோதரி பிட்டும், கறியும் தயாரித்து அனுப்பிவைத்தார்.

சற்றுக் கழித்து மீண்டும் பஸ்ரியன் ஆளனுப்பினார். "கண்பொரியலாக ஐந்து முட்டை பொரித்து அனுப்பட்டுக் காம்" என வந்தவர் கேட்டார்: அந்தச் சகோதரி அப்படியே செய்து அனுப்பினார். 'சுவாமிக்கு ஏன் ஐந்து முட்டைகள்' என்ற சந்தேகம் எழவே ஆளிடம் அனுப்பி வைத்தகையோடு, அந்தச் சகோதரி குருமனைக்குச் சென்றார். அங்கே அந்தச் சகோதரி ஏற்கனவே அவித்து அனுப்பிய பிட்டும் கறியும், முட்டைகளும் யாரோ அகதிகளாக வந்திருந்த ஐவருக்குப் பரிமாறப் பட்டிருந்தன. பஸ்ரியன் அவர்களறியாத விதமாக தனது சாப்பாட்டு அறைக்குள் காய்ந்த பாண் துண்டொன்றைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சகோதரி அவரை அன்போடு கடிந்து கொண்டார். பஸ்ரியன் மற்றவர்கள் பசியாறியதில் திருப்தியடைந்தவராக தனக்கே உரித்தான பாணியில் சிரித்துச் சமாளித்தார்.

இப்படியாக 'தனக்குக்கண்டு மிஞ்சித்தான் தானம்' என்பதல்ல, 'தனக்கு உள்ளதையே தானம்' என்பதுவே பஸ்ரியனின் வாழ்வில் பல இடங்களில் காணக் கூடியதாக வுள்ளது.

பஸ்ரியன் கொலை செய்யப்பட்டபோது அவரோடு கூடவே கொலை செய்யப்பட்ட சிறுவன் அழகன் கூட அவரது இரக்க சிந்தையால் அவரோடு சேர்த்துக் கொள்ளப்பட்டவனே.

மானிப்பாயில் பணியாற்றிய போதுதான் அழகனுடைய தாயாரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது.பாவம் அந்தத் தாயும் நான்கு பிள்ளைகளும் குடும்பத் தலைவனால் நிர்க்கதியாகக் கைவிடப்பட்ட நிலையில் வாழ்க்கையைக்

கொண்டு செல்ல மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தத்தாய் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் கன்னியர் மடங்கள், ஆலயங்களில் சென்று தன் நிலையைக் கூறி உதவி பெற்ருள். அதுவும் எத்தனை நாட்களுக்கு என்ற நிலையில் இருக்கும் போது தான், புதிதாகப் பங்குத்தந்தையாக வந்த பஸ்ரியனை அவள் சந்திக்க நேர்ந்தது. தனது நிலைமையை எடுத்துரைத்து உதவி கோரினுள். அந்த நல்ல தாய்க்கு தற்காலிகமாக உதவுவதோடு நில்லாமல் நிரந்தரமாக அவள் வறுமையைப் போக்க ஏதேனும் செய்ய வேண்டும் என நினைத்தார். 'பசித்திறவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட தூண்டிலை வாங்கிக் கொடு' என்ற மாவோவின் தத்துவம் நினைவுக்கு வந்தது போலும்.

அத்தாயின் பிள்ளை நான்கினையும் தான் பொறுப் பேற்ருர். பையன்களில் மூத்தவனை அப்பொழுது பங்குத்தந்தையாகவிருந்த T. தேவராஜன் அடிகளிடம் விடுதிச்சாலையில் ஒப்படைத்தார். இளையவனுன அழகுவை தன்னுேடு வைத்துக் கொண்டார்.

அந்தத்தாயை அருட்சகோதரிகளின் உதவியுடன் மத்திய கிழக்குக்குச் சென்று உழைப்பதற்கு ஏற்பாடு செய்தார். அவள் பிரயாணத்துக்கு ஏற்பட்ட முழுச் செலவையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

அந்தத்தாய் மத்திய கிழக்கிற்குச் சென்ருள்—தன் பிள்ளைகளுக்காகும் செலவை அனுப்பிவைத்தாள். பஸ்ரியன் வங்காலைக்கு மாற்றலாகிச் சென்ற போதும் அழகுவைத்தன்னுேடு கூட அழைத்துச் சென்ருர். ஒவ்வொரு விடுமுறைக்கும் பிள்ளைகள் நான்கினையும் தன்னுேடு அழைத்து ஒன்று கூடி மகிழவைத்தார். தங்களுக்குத் தாயும் தந்தையுமாய் திகழ்ந்த அந்தத் தெய்வத்தின்மீது குண்டு பாய்வதைத் தாங்க முடியாமல் தான் அந்த அழகு என்னும் குருத்து செஞ் சோற்

றுக் கடன் தீர்க்கக் குறுக்கே பாய்ந்து தனது இரத்தத்தை யும் வளர்த்த தந்தையின் இரத்தத்தோடு கலந்து பூமியில் உறையவைத்தது. அந்தத்தாய் இன்றும் பஸ்ரியன் காட்டிய வழியில் மத்திய கிழக்கில் இருந்து தன் பிள்ளைகளுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றாள்.

மூளைவளம் குறைந்த சிறுவர்களின் நிலையமான 'ஆர்க்' உடுவிலில் உளது. பஸ்ரியன் மானிப்பாயில் பணியாற்றிய போது தான் அந்த நிலையம் தொடங்கப்பட்டது. அந் நிலை யத்தைக் கட்டி முடிப்பதற்கு பஸ்ரியன் பங்குத்தந்தை என்ற வகையில் அதன் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்று செய்த உதவிகளை அந்நிலையத்தின் அதிபரும், அருட் சகோதரிக ளும் நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

அந்நிலையத்தோடு அவர் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி அவர்களே கூறினார்கள்:-

விளையாட்டுத்தனமும், குறும்பும் கொண்ட பஸ்ரிய னுக்கு மூளைவளம் குறைந்த, அந்த கள்ளங் கபடற்ற உள் ளங்களுடன் கூடி விளையாடுவதிலும் அவர்களை மகிழ்விப்பதி லும் பெரும் ஆவலிருந்தது. வேறு அலுவலாகத் தானும் 'ஆர்க்' வழியாகப் போகும் சந்தர்ப்பம் கிட்டினால். ஒரு முறை வந்து அச்சிறுவர்களோடு சற்று நேரம் சிரித்து மகிழ்ந்து விளையாடிவிட்டுச் செல்வார்.

அவரைக் கண்டதும் அச்சிறுவர்கள் ''மாமா மாமா'' என்று சூழ்ந்து கொள்வார்கள், அவர்களிற் சிலரைத் தன் மோட்டார் சைக்கிளில் ஏற்றி அந்த வளவைச் சுற்றிவந்து வேடிக்கை காட்டுவார் பஸ்ரியன்.

அவர்களுள் ஜெயக்குமார் என்ற ஒரு சிறுவன் நிலையத் தில் சேர்ந்த மறுநாள் நிலையத்தில் இருந்து காணமற் போய்விட்டான், இச்சம்பவம் பஸ்ரியனுக்கு அறிவிக்கப் பட்டபோது முதற்காரியமாக அவனைப்பற்றிய தகவல்களை

பொலிசாரிடம் தெரிவித்து முறைப்பாடு செய்து விட்டு தானே தனது மோட்டார் சைக்கிலில் அச்சிறுவனைத் தேடி அலையத் தொடங்கினார். அடிக்கடி வந்து "வந்துவிட்டானா?" என்று விசாரித்து விட்டு மீண்டும் தேடத் தொடங்குவார்.

இறுதியில் சங்குவேலி எனும் இடத்தில் ஒரு திருமண வீட்டு வாசலில் இச்சிறுவன் அனாதையாக நிற்கக் கண்டு யாரோ ஒருவர் கொண்டுவந்து மடத்தில் ஒப்படைத்தார். அவனை மீண்டும் வந்துகண்ட பின்னரே பஸ்ரியன் அமைதி கொண்டார். மிக்க மகிழ்வுடன் அவனைச் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

ஜெயக்குமார் அவரைக் காணும் சமயம் எல்லாம் "மாமா சொக்கிளின்" என்று சொக்லட் கேட்பான்.

"மருமக்களுக்கு நான் ஒன்றும் கொண்டுவரவில்லை. சிஸ்ரரிடம் களவெடுத்துத் தருகிறேன்" என்று கூறி அவர் அவர்களுக்கு என்று வைக்கப்பட்டிருக்கும் இனிப்புவகைகளை எடுத்து அவர்களுக்குக் கொடுப்பார்.

"நான் வாழப் போவதோ கொஞ்சக்காலம், வாழும் வரை சேவை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்று ஆர்க் சகோதரிகளுக்கு அவர்கூறுவது வழக்கம்.

அந்தச் சகோதரிகள் அங்கு பணியாற்ற வந்ததின் நோக்கம் 'ஆர்க்' நிலையப் பணிக்காகவே என்றாலும், பஸ்ரியன் வேறுபல சமூக நலன்களுக்காகவும் அவர்களைப் பயன்படுத்தத் தவறவில்லை. மல்வம், உடுவில் போன்ற பகுதிகளில் வாழும் இளம் பெண்களின் முன்னேற்றத்துக்காக அவர்கள் உழைக்க பக்திச்சபைகள் மூலம் வழிகாட்ட அவர்களைப் பயன்படுத்தினார்.

செவ்வாய்க்கிழமைகளில் புனித அந்தோனியார் ஆலயத்தில் வந்து குவியும் காணிக்கைப் 'பாண்'களை 'ஆர்க்' சகோதரிகள் மூலம் அப்பகுதியில் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு விநியோகிக்க ஒழுங்கு செய்தார்.

உடுவிலிலே ஒரு மூதாட்டி. பெயர் அன்னப்பிள்ளை நோயாளி, பராமரிப்போர் யாருமற்ற அனாதை. எதற்கும் இன்னுமொருவர் உதவியை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் அப்பெண் வாழ்ந்து கொண்டிருந்தார். இந்த முதியவளைப்பற்றிய செய்தி பஸ்ரியனுக்குக் கிட்டியது 'ஆர்க்' சகோதரிகள் அப்பெண்ணுக்குத் தேவையான மருந்து, உணவுகளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார். எனினும் இன்னுமொருவரின் உதவியில்லாமல் எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருந்து அவருக்கு, வீட்டோடு இருந்து பணியாற்ற இன்னுமொரு வறிய, வீடுவாசலற்ற குடும்பத்தைத் தேடிப்பிடித்தார். ஒருவர் ஒருவருக்கு உதவுமுகமாக அக்குடும்பத்தை அந்த ஆச்சியின் வீட்டிலேயே குடியமர்த்தினர். இந்தத் தகவலைக் கேள்வியுற்ற போது, இறப்போருக்கான இல்லம் அமைத்து மரணிப்பவன் மனித மாண்புகள் மதிக்கப்படுகின்ற வகையில் மரணிக்கவும், ஈமக்கிரியைகள் செய்யப்படவும் எனப்பணிபுரியும் அன்னை தெரேசாவின் எண்ணமே எனக்குத் தோன்றியது.

அப்பெண் காலமானபோது பஸ்ரியன் வங்காலையில் இருந்தார். ஆனால் அவருக்குப் பின்னர் மானிப்பாயின் பங்குத் தந்தையாக வந்த அருட்திரு. A. C. கிறிஸ்தோப்பர் பஸ்ரியனைத் தொடர்ந்து அப்பெண்ணைக் கவனித்து வந்தார். அவரது மரணச் சடங்கின் போது அது ஒரு அனாதைப் பிணத்தின் மரணச்சடங்காக அல்ல ஆடம்பரமான முறையில் சோடனைகள் செய்து நடாத்தப்பட்டது. இந்தக் கைங்கரியத்துக்கு முன்னின்று உழைத்தவர்கள் பஸ்ரியன் அடிகளாரால் உருவாக்கப்பட்ட மல்வம், சுவாமி ஞானப்பிரகாசியார் சனசமூகநிலைய இளைஞர்களே.

பஸ்ரியன் மட்டில் நன்றி மறக்காதவர்களும், பஸ்ரியனை தனது நற்பண்புகளை ஊட்டி உருவாக்கி விட்டவர்களும் பஸ்ரியன் காட்டிய வழியில் இன்று வாழ்ந்து சமூகப்பணி

யில் பஸ்ரியனைப் பிரதிபலித்துக் கொண்டிருப்பவர்களும் மல்வத்தில் வாழும் இளைஞர்களே என்று நான் குறிப்பிடுவது ஒன்றும் மிகைப்படுத்திக் கூறுகின்ற மொழிகள் அல்ல.

'ஆர்க்' நிலையச் சகோதரிகள் செந்தமிழ்ச் செல்வி எனும் பத்தொன்பது வயதுப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்து வைத்தனர். அப்பெண் நவாலியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவரது மகள். சிவசுப்பிரமணியம் ஆஸ்துமா நோயாளி. செந்தமிழ்ச் செல்விக்கு இளைய சகோதரங்கள் உண்டு. அவள்தான் குடும்பத்தில் மூத்தபெண்.

சுப்பிரமணியம் பஸ்ரியனைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரிடம் உதவிகோரி வந்தார். அவரது உண்மையான நிலைமையைக் கண்டுணர்ந்த பஸ்ரியன் அவருக்கு உதவமுன் வந்தார். அவர் அக்குடும்பத்திற்கு செய்த முக்கியமான உதவி அப்பொழுது 12 வயதுச் சிறுமியாக விருந்த செந்தமிழ்ச் செல்வியை தத்தெடுத்துக் கொண்டது தான்.

செந்தமிழ்ச் செல்வி அப்பொழுது நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். அவளை ஆர்க் மடத்தில் சகோதரிகள் பொறுப்பில் விட்டார். உடுவில் பாடசாலையில் சேர்ப்பித்துப் படிப்பித்தார். பின்னர் ஆறும் வகுப்பு அவள் படிக்கும் போது அவர் வங்காலைக்கு மாற்றலாகிச் செல்லவே செந்தமிழ்ச் செல்வியையும் தன்னோடு அழைத்துச் சென்று பன்டிவிரிச்சான் கன்னியர் மடத்தில் சேர்த்து அங்கேயே படிப்பித்தார்.

1984 செந்தமிழ்ச் செல்வி க. பொ. த. சாதாரண பரீட்சை எடுத்தார். ''அதுவரையில் எனக்கு எல்லாமே அவர்தான் வழங்கினார். அவர்தான் என்னை வளர்த்த அப்பா... நான் பரீட்சை எடுத்துவிட்டு லீவில் ஆர்க்கில் வந்திருந்த போது தான் அவர் இறந்த செய்தியைக் கேள்விப்பட்டேன். என்றால் அதை நம்பவே முடியவில்லை......''

சொல்லிக் கொண்டுவந்த செந்தமிழ்ச் செல்வியின் பேச்சுத் தடைப்பட்டது. விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். கேள்வி கேட்டுக் கொண்டிருந்த நான், அவள் அழுது ஓயும் வரை மௌனமாக இருந்தேன்.

உம்மிடம் முக்கியமானதொரு கேள்வி கேட்கின்றேன். சுவாமிமார், சிஸ்டர்மார் இப்படி உதவி செய்வதெல்லாம் உங்களைப் போன்ற பிறசமயத்தவர்களை வேதத்தில் சேர்ப்பதற்கென்று என்பது பொதுவான அபிப்பிராயம். கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் அவரது பராமரிப்பில் வாழ்ந்திருக்கிறீர். இந்த ஐந்து வருடகாலத்தில் எப்பொழுதாவது அவர் உம்மை வேதத்தில் சேரும்படி கேட்டதுண்டா? என்று அவளிடம் கேட்டேன்.

நான் இந்து மதத்தைச் சேர்ந்தவள் தான் இன்றைக்கும் ஒரு இந்துப் பெண்ணாகவே இருக்கின்றேன் நான் அவரது பராமரிப்பில் வாழ்ந்த காலத்தில் ஒருநாளாவது, பகிடியாகத்தானும் மதம் மாறும்படி கேட்டதில்லை. அந்த எண்ணத்தோடு அவர் என்னைப் படிப்பித்து வளர்த்து விடவுமில்லை. 'நீ படித்து முன்னேறினால் போதும்' என்றுதான் என்னைக்காணும் போது அடிக்கடி சொல்வார். அவரது அந்த ஆசையை நான் நிறைவேற்றி என் குடும்பத்தைக் கவனிப்பேன்'' என்று அவள் கூறிய போது அவள் குரலில் ஒரு உறுதி தெரிந்தது. அவள் குரலில் ஒரு நன்றியுணர்ச்சி கனிந்தது. பஸ்ரியனது சுயநல நோக்கு இல்லாத சேவைக்கு அவள் ஒரு சாட்சியாக என்கண்முன்னே தோன்றினாள்.

பஸ்ரியன் அவள் மட்டில் தொடங்கிய பணியை ஆர்க் சகோதரிகள் தொடர்ந்து ஆற்றிவருகின்றனர். சென்ற ஆண்டு நான் அவளைச் சந்தித்தபோது க. பொ. த. உயர் தரப் பரீட்சைக்கு அவள் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். ''இது அவர் எனக்கு அளித்த வாழ்வு'' என்பதில் அவள் பெருமை கொள்கின்றாள்.

இந்த உதவிகள் யாவும் பிறரின் துணையுடன் செய்த படியினுலேயே என்ருல் இத்தகவல்களை திரட்டக் கூடியதாக விருந்தது. ஆனுல் மற்றவர்கள் அறியா வண்ணம் பஸ்ரியன் ஆற்றிய சேவைகள், தொண்டுகள் பல. அன்றாடப் பசியைப் போக்குவதை மட்டும் அவர் தன் பணியாகக் கொள்ளவில்லை. ஏழைக் குடும்பங்கள் சிறுகைத் தொழில்கள் செய்ய, கோழி வளர்க்க, தையற் தொழிலுக்கு என்று மூலப்பொருட்களை வாங்கிக் கொடுத்து அவர்கள் வாழ்வு மலர வகை செய்துள்ளார்.

நோயுற்ரோரின் மருந்துக்கு-
வறியோரின் மரணச் சடங்கிற்கு-
வறிய குடும்பங்களின் திருமணத்திற்கு-
வறிய மாணவர்களின் படிப்புக்கு-
வறியவர்கள் வீடு கட்டுவதற்கு-
வறியவர்கள் தமக்கெனக் காணிவாங்குவதற்கு-
வறிய இளைஞர்கள் வேலை வாய்ப்புத்தேடி வெளிநாடு செல்வதற்கு-
வறியவர்களின் உணவுக்கு, உடைக்கு

பட்டியல் போடுவதாளுல் அதன் விபரங்கள் நீண்டு கொண்டே போகும்.

"மற்றவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ இவ்வளவுக்கும் செலவு செய்வதற்கு துறவியான இவருக்கு ஏது பணம்?'' இப்படியொரு கேள்வியை வாசகர்கள் எழுப்புவது நியாயமே.

இதற்கான நிதியைப் பெரும்பாலும் நிதி உதவி செய்யும் நிறுவனங்களிடமிருந்தும் - தன் பெற்ரோர், சகோதரர், நண்பர்கள் அனுப்பிவைக்கும் அன்பளிப்புகளிலும் இருந்தே செய்து வந்தார். தனக்கென்று வையாத கொடைக் குணம் அவரை மற்றவர்கள் வாழ்வுக்காக அள்ளி இறைக்கச் செய்தது என்பதுவே உண்மை.

தனது பங்குகளிடையே ஒற்றுமையையும் நட்பையும் மற்றவனுக்கு உதவும் மனப்பான்மையையும் வளர்க்கும் பிறிதொரு கருவியாக அவர் பயன்படுத்தியது சிரமதானப் பணியையே, இதன் மூலம் அவர் சாதித்தவை பல.

இத்தகைய பொதுப்பணிகளில் ஈடுபடும் போது தான் வெறுமனே பார்வையாளனாகவோ. கண்காணி பவனாகவோ நிற்பதில்லை. பணி புரிபவர்களோடு தானும் ஒருவனாகக் களத்திலே இறங்கி வேலை செய்வதே அவரது கொள்கை.

அங்கியைக் கழற்றி ஒரு புறத்தே வைத்துவிட்டு அரைக் காற்சட்டையுடனும், பெனியனுடனும் சிரமதானத் தொண்டர்களுடன் வேலை செய்வார். சிலசமயங்களில் கிடுகுக் கட்டுகளைத் தன் தலையில் சுமந்து கொண்டு சென்றதைப் பலர் கண்டு வியந்துள்ளனர். இவையெல்லாம் மற்றவர்கள் கண்டு அனுதாபம் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல மற்றவர்களுக்குத் தான் முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்பதற்காகவே. சிரமதானப் பணிகளில் சிலர் பங்குகொள்ளாமல் பண உதவி செய்வதுடன் நின்று விடுவதை அவர் வரவேற்பதில்லை. அது சிரமதானப் பணியின் உண்மை நோக்கை குறைத்துவிடும் என்பது அவர் கருத்தாகும்.

சிரமதானப் பணியில் எல்லாரும் பங்குகொண்டு உடல் உழைப்பை நல்கவேண்டும் என்பது அவரது குறிக்கோளாக இருந்தபோதிலும், அன்றாட உழைப்பையே நம்பிவாழும் ஏழைகளுக்கு விதிவிலக்கு அளித்திருந்தார். அத்தகையோரை தனிப்பட அழைத்து அவருக்குக் தினக்கூலியை வழங்கிவிடுவார். குறிப்பிட்ட நபர் அதனை விரும்பாத விடத்தும் வலியுறுத்தி, கூலியைப் பெறச் செய்வார். இச்செயலானது அவருக்கே உரிய இரக்க குணத்தையும், தாராள மனப்பான்மையையும் மட்டுமன்று, தனது பங்கில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் எந்த அளவுக்கு அறிந்து வைத்திருந்தார் என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டாகும்.

உடுவில், ஆலடி புனித சூசையப்பர் கோவில் புனரமைப்புப் பணியை சிரமதானத்தின் மூலமே செய்து முடித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது ஒன்றாகும்.

மல்வம், கோவிற் பங்குமனையின் தளவேலையை அக் கோவிலைச் சேர்ந்த இளைஞர்கள் அன்று செய்து கொண்டிருந்தனர். அன்றுமாலை தொடங்கிய வேலையை இரவோடு இரவாகச் செய்து முடிப்பது என்பது அவர்களது திட்டம். வேலையைத் தொடங்கிவிட்டு தனது ஏனைய பணிகளுக்காக பஸ்ரியன் சென்றுவிட்டார்.

ஆரம்பத்தில் உற்சாகத்துடன் வேலை செய்த இளைஞர்கள் நேரம் செல்லச் செல்ல சோர்ந்துவிட்டனர். இரவு பன்னிரெண்டு மணியைத் தாண்டிய போது பெரும்பாலானோர் அலுத்துக் களைத்து உறங்கிவிட்டனர்.

இரவ இரண்டு மணிக்கு பஸ்ரியன் மீண்டும் வந்து சேர்ந்தார். முடிக்கப்படவேண்டிய வேலை பாதியிருந்தது. உறங்கிக் கொண்டிருந்த இளைஞர்களைப் பற்றி அவர்கவலைப்படவில்லை. அவர்களைக் கடிந்து கொள்ளவுமில்லை.

அங்கியைக் கழற்றி ஒருபுறம் வைத்துவிட்டு காற்சட்டையுடன் வேலை செய்யத் தொடங்கினார். மண்வெட்டியைக் கையிலெடுத்து 'கொங்கிறீற்று'க் கலவையை குழைக்கத் தொடங்கினார். கூட நின்று வேலைசெய்த இளைஞர்களுக்கு என்னவோ போலிருந்தது. தூங்கிக் கொண்டிருந்த இளைஞர்களைத் தட்டியெழுப்பி சுவாமி வேலை செய்வதைக் காட்டினார்கள். அவ்வளவுதான் அந்த இளைஞர்கள் தூக்கத்தை மறந்தார்கள். துடித்தெழுந்தார்கள். துரித கதியில் வேலை தொடர்ந்தது. பின்னர் வேலை முடியும்வரை எவரும் தூங்கவில்லை. பஸ்ரியனும் ஓய்வெடுக்கவில்லை. இப்படியாக இளைஞரோடு இளைஞராக, மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து பணிபுரிவது பஸ்ரியனது பிறவிக்குணம். அதனால் அவர் பல உள்ளங்களை வென்றார்.

இளைஞர்களை அடிக்கடி சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது அவர் வழக்கம். கசுவரினு கடற்கரை (Casuarina Beach)க்கு அழைத்துச் சென்றுல் பஸ்ரியன் குழந்தையாகி விடுவார். நீச்சலடிப்பது, நீரிறைத்து விளையாடுவது. தனது தோளின் மீது இளைஞர்களை ஏறிக் குதிக்கச் செய்வது, தான் இளைஞர்களின் தோள்களின் மீது ஏறிநின்று குதிப்பது, சேர்ந்து சமைத்து உண்பது, இப்படிப்பலப் பல......

மானிப்பாயில் கடமையாற்றிய போது ஒருமுறை இளைஞர்களும் யுவதிகளுமாக அறுபத்தைந்து பேர் அடங்கிய குழுவை அழைத்துக்கொண்டு கண்டிக்குச் சுற்றுலா சென்றுர். இவர்களோடு அருட்திரு ஹில்லறி ஜெபநேசன் அடிகளாரும் சென்றுர். அந்தச் சுற்றுலாவில் இளைஞர்களும், யுவதிகளும் நடந்துகொண்ட விதத்தையும், கடைப்பிடித்த கட்டுப்பாட்டையும் கண்டு ஜெபநேசன் அடிகள் வியந்தே போனுர். 'இத்தனை இளைஞரான பஸ்ரியனுல் எப்படி இவர்களை இந்த அளவுக்கு உருவாக்க முடிநதது?' என்பதே அவரது வியப்புக்குக் காரணமாகும். சுற்றுலா முடிந்ததன் பின் இதனை அவர் சொல்லிக்காட்டிப் பெருமையுடன் பாராட்டவும் செய்தார்.

அவரால் உருவாக்கப்பட்ட இளைஞர்கள் அவர் தம்மோடு எப்படி நடந்துகொண்டாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் அள்வுக்கு மனப்பக்குவம் அடைந்திருந்தனர். அதற்குக் காரணம் அவர்கையாண்ட அணுகுமுறைகள். அவர்களில் செலுத்திய கபடற்ற அன்புதான்.

மானிப்பாயில் இளைஞர்களுக்கான ஒரு கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவரால் நேசிக்கப்பட்ட ஒரு இளைஞன், அவரை அன்பு செய்த ஒரு இளைஞன் அன்றைய கருத்தரங்கில் காரசாரமான கருத்துக்களைப் பரிமாறினுன். அது கருத்தரங்கின் நோக்கத்தையே முறியடிப்பதாக

விருந்தது. பஸ்ரியன் சமாதானமான முறையில் ஒன்றிரண்டு தடவைகளில் அவனை எச்சரிக்கை செய்தார். அவனுமோ அதனை ஏற்றுக் கொள்வதாகவில்லை.

தன்னால் உருவாக்கப்பட்டுவரும் அந்த இளைஞன் அன்று தன்னையும் மீறி அந்த இடத்தில் செயற்படுவதை பஸ்ரியனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கோபம் மீறிய நிலையில் அவனை அத்தனை பேருக்கும் முன்னே அடித்துவிட்டார். அந்த இளைஞன் உடனே அவருக்குக் கட்டுப்பட்டான். உடன் அமைதி காத்தான்.

பஸ்ரியன் அடித்துவிட்டாரே தவிர, தனது செயலை அவ ரால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அவனைத் தான் அவமா னப் படுத்திய தனது செயலைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. அனைவர் முன்னிலையிலும் பஸ்ரியன் அழுதுவிட்டார்.

தனக்கு அடிவிழுந்ததால் ஏற்பட்ட தாக்கத்தைவிட சுவாமி அழுவதை அந்த இளைஞனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் ஓடோடிச் சென்று அவரிடம் மன்னிப் புக் கேட்க, அவா அனைவர் முன்னிலையிலும் அவனைக் கட்டி யணைத்து முத்தமிட்டு அவனைச் சமாதானம் செய்தார். இப்படியாக பஸ்ரியன் இளைஞர்கள் மட்டில் தந்தையாக மட்டுமன்று, நண்பனாக, சகோதரனாக வாழ்ந்து உருவாக்கி அவாகள் இதயங்களை வென்றார்

பஸ்ரியன் சிறந்ததொரு விளையாட்டுவீரன் மட்டுமன்று, அத்துறையில் ஆர்வம் மிககவரும் கூட. சுவிற்சலாந்தில் தற் பொழுது வசிக்கும் அவரது நெருங்கிய நண்பர் ஜெயரட் ணம் அவரைப்பற்றித் தகவல் தருகையில் "பஸ்ரியனுக்கு கிரிக்கட் விளையாட்டு என்றால் உயிர் சர்வதேச கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகளை ரசிப்பதிலும், அவற்றைப் பற்றி அறிவதிலும் ஆர்வம் காட்டினார். பஸ்ரியனுக்கு பைபிளைப் பற்றி எந்தளவுக்கு தெரியுமோ அந்த அளவுக்கு விளை யாட்டு வீரர்களைப் பற்றியும், அவர்களது பின்னணி வாழ்க் கையைப் பற்றியும் தெரியும்" என்கிறார்கள்.

அவர் பணிபுரிந்த பங்குகளில் எல்லாம் ஓய்வான மாலை நேரங்களில் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம் விளையாடுவதில் செலவிடுவார். அத்துறைகளில் அவர்களை ஊக்குவிக்கவும் முயற்சிகள் எடுத்துள்ளார்.

இளம் பெண்களைப் பொறுத்தவரையில் தையற் தொழில், பீடி சுற்றும் தொழில் முதலியவற்றைக் கற்பிக்க மன்றங்களாக அவர்களை உருவாக்கியதால் அவர்கள் தமக்கு வேண்டிய சிறு வருமானத்தைப் பெறுவதற்கும் வழி காட்டினார்.

பஸ்ரியனுடைய இன்னுமொரு முக்கியமான பொழுது போக்கு புகைப்படக்கலை. தனக்கென்று சொந்தமாகவே ஒரு புகைப்படக் 'கமரா'வை அவர் குருமடத்தில் படிக்கின்ற காலம் முதல் தன்னோடு வைத்திருந்தார்.

இந்தியாவுக்கு ஒருமுறை ஜெபநேசன் அடிகளாருடன் சென்றிருந்தபோது சுவையான ஒரு சம்பவம் இடம்பெற்றது. பெரும் பெரும் பிரமுகர்கள் எல்லாம் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சிக்கு இருவரும் சென்றனர். இருவரிடமும் ஆளுக்கொரு 'கமரா' இருந்தது.

குருக்கள் துறவிகளுக்கு என்று ஒரு குறிப்பிட்ட பகுதியை அங்கு ஒதுக்கியிருந்தனர். பஸ்ரியனுக்கு அதில் திருப்தியில்லை. பிரமுகர்களை அருகில் சென்று பார்க்க வேண்டும் என்பதில் ஒரு ஆவல். மறுகணம் ஒரு திட்டம் போட்டார். மற்றவர்கள் கவனிக்காத இடத்துக்குச் சென்று தனது வெள்ளை அங்கியைக் கழற்றி வைத்துவிட்டு சாதாரண உடையில் வந்தார். ஜெபநேசன் அடிகளாரின் கமராவையும் வாங்கி தனது தோளில் மாட்டிக் கொண்டு மேடையை நோக்கிச் சென்றார். யாரும் அவரைத் தடை செய்யவில்லை. ஏனெனில் அவரை ஏதோ ஒரு பத்திரிகையின் நிருபர் என்று அனைவரும் நினைத்துக் கொண்டனர். பத்திரிகை நிருபர்

களுக்கு மட்டுமே மேடைக்குச் செல்ல அனுமதியிருந்தது. பிறகென்ன மேடையிலே பஸ்ரியன் தனது விருப்பப்படி யெல்லாம் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தார்.

அவரோடு கூடவந்த ஜெபநேசன் அடிகளாருக்கு மட்டும் மனதிலே ஒரு அச்சம் ''உங்களோடு வந்தவர் எந்தப் பத்திரிகைக்கு ரிப்போட்டருங்க?'' என்று யாராவது கேட்டால் என்னபதில் சொல்வது, எனவே ''சிலோனில் இருந்து வெளிவரும் 'பாதுகாவலன்' பத்திரிகையின் ரிப்போட்டர்'' என்று சொல்லிவிடுவோம் என்று ஒரு பதிலை ஆயத்தமாகவே வைத்திருந்தார். நல்லகாலம் யாரும் அவரை அப்படியொரு கேள்வி கேட்கவுமில்லை. இப்படி ஒரு பதிலைச் சொல்லும் சந்தர்ப்பம் கிடைக்கவுமில்லை.

பஸ்ரியன் பலதுறைகளில் ஆற்றல் மிக்கவராக விருந்தார். அவையாவும் தான் எந்தநோக்கத்துக்காகத் துறவு பூண்டாரோ அதற்காகவே முழுமையாகப் பயன்படுத்தினார். அவரது பணி சமயம் என்ற ஒரு தனி வட்டத்துள் மட்டுமல்ல, சமூகம் என்ற பாரியவட்டத்துள் சமயப்பணிமூலம் சமூக—சமய—அரசியல்—பொருளாதார—கல்வி — கலைகலாசார பணிகளைச் செய்து முழுமனித வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். அவரைப் பொறுத்தவரை சமயத்தையும், மனித சமூகத்தையும் பிரித்துப் பார்க்க முடியவே இல்லை.

★

# (9)

## பலிக்களத்தில்

இயேசுவின் பலிக்களம் ஜெருசலம் —
பஸ்ரியனின் பலிக்களம் வங்காலை —
அங்குதான் அவருடைய கல்வாரி இருந்தது
அங்குதான் அவருக்கு மரண ஓலை எழுதப்பட்டது —
அங்குதான் அவர்கொண்ட இலட்சியத்தின் வெற்றி
மரணம் கிட்டியது —

இயேசுவின்வழியில் இறைபணி இயற்ற—முழுமனித விடுதலைப்பணியாற்ற தன்னை அர்ப்பணித்த பஸ்ரியனின் இறுதி அத்தியாயங்கள், இலட்சியத்துக்காக இரத்தம் சிந்திய மக்களின் பூமியாகிய மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைக் கிராமத்திலேதான் நடந்தேறின.

1981ல் மன்னார் மறைமாவட்டம் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டபோது அங்கு இறைபணியாற்ற போதிய அளவு அந்த மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள் இல்லாமையால், மன்னார் ஆயர் அவர்கள் அனுபவமிக்க குருக்களை ஆரம்பகாலத்தில் அங்குவந்து பணியாற்றுமாறு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்றுச் சில குருக்கள் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து முன்வந்தனர்.

எங்கு சேவை தேவையோ அங்கெல்லாம் முன்செல்லும் பஸ்ரியனும் எவரது தூண்டுதலுமின்றித் தானுக முன் வந்தார். ஏனெனில் மன்னுர் மறைமாவட்டம் அவர்முன்னர் பணிபுரிந்த களம். குருமாணவராய் இருந்தகாலத்தில் மடுத் திருப்பதியிலும், குருவானபின்னர் மன்னுரிலும், முருங் கனிலும் பணியாற்றிய அனுபவங்கள் அவருக்கு இருந்தன. அவரை ஆயர் அவர்கள் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார் அதுமட்டன்று, ஆரம்பத்தில் மன்னுர் மறைமாவட்டம்பற்றி மடுத்திருப்பதியில் ஆயர்அவர்களால் கூட்டப்பட்ட ஆய் வரங்கில் பஸ்ரியனே பொதுச் செயலராகவும் நியமனம் பெற்ருர். ஆய்வரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடை முறைப்படுத்தவும் அவரே முன்னின்று உழைத்தார்.

இவற்ருேடு இன்னுமொரு முக்கியமான பணியாகிய மன்னுர் மறைமாவட்டத்தின் இளைஞர் விவகாரப் பொறுப் பும் ஆயர்அவர்களால் பஸ்ரியனுக்கு வழங்கப்பட்டது. இவர் ஏற்றுக்கொண்ட இப்பொறுப்பின் காரணமே இளைஞர்களை இவர் தேடிச்செல்லவும் இளைஞர்கள் இவரைத் தேடிவரவும் காரணமாக அமைந்தது. இளைஞர்களோடு உறவாடும் இவரை பயங்கரவாதியென்ற குரோதக் கண்களோடு பாது காப்புப்படைகள் அவதானிப்பதற்கும் அதுவே ஆதாரமாக விருந்தது.

உயர்தர வகுப்பு மாணவர்கள், படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். அவர்கள் தொழிற்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கோடு நடமாடும் கல்விச்சேவைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதில் 'தையல், 'தட்டச்சு, வகுப்புகளை ஆரம்ப வேலைத்திட்டங்களாகக் கொண்டார்; அது செயற்படத் தொடங்கிய சில நாள்களிலேயே நாட்டு நிலைமை மோசமடையத் தொடங்கியது. இளைஞர்களை ஒன்றிணைப்பதும் அவர்களுக்குள் சேவை செய்வதும் காவற்

படைகளின் சந்தேகங்களுக்கு இலக்கானது. எனவே அத்திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன. மீண்டும் அத்திட்டங்கள் தொடரப்படும் முன்னரே அவர் அமரராகிவிட்டார்.

மன்னார் மாவட்டத்திலேயே அதிகம் கல்விமான்களைக் கொண்ட ஒரு கிராமம், நூறுவீதம் கிறிஸ்தவர்களைக் கொண்ட ஒரு கிராமம் வங்காலைக் கிராமம்.

இறைவனின் திராட்சைத் தோட்டத்துக்குப் பணிபுரிய அனேக துறவிகளையும், குருக்களையும் வழங்கிய கிராமம்—இப்படியெல்லாம் பெருமையுடைய இக்கிராமத்திலேயும் பலபிரச்சனைகள் இருக்கத்தான் செய்தன. பாமரர்களை மட்டும் கொண்ட கிராமமாயின் பணிஇயற்றுவது எவருக்கும் இலகு. படித்தவர்கள் இருந்தால் இப்படித்தான் என்பதற்கு இக்கிராமம் ஓர் உதாரணம்.

உள்ளூர் அரசியல் (Local politics) பிரச்சினைகளால் கிராமம் இரண்டுபட்டுள்ளது. ஊரைஇரண்டு படுத்துவதால் இலாபம் பெறக் கூடிய சில சக்திகளின் மறைமுகச் செயல்பாடுகளே அனைத்துக்கும் காரணம் என்பது அங்குவாழ் மக்கள் பலரதும் அபிப்பிராயமாகும்.

இரண்டுபட்டு நிற்கும் மக்களிடையே பொதுப் பணியாற்றுவது என்பது இலகுவான காரியமல்ல. இப்பகுதியினரை ஒன்றிணைத்துச் செயல்படுவது பஸ்ரியன் மட்டுமல்ல அங்கு பணிபுரிந்த ஒவ்வொரு பங்குத் தந்தைக்கும் ஏற்பட்ட சிலுவைப்பாதை என்று கூறுவது பொருந்தும் என்பது அங்கு பணியாற்றியவர்கள் பலரின் கருத்தாகும்.

எனினும் பங்குத்தந்தைக்குப் பக்கபலமாய் பெரும்பான்மையான மக்களும், கோவில் பங்குச் சபையும் நின்றதனால் ஒவ்வொருவரும் தமது இறைபணியில் வெற்றி பெற்றனர் என்பதே உண்மை. ஆனால் பங்குச்சபையின் தலைவராக பங்குத்தந்தையவர்களே பணியாற்றுவதனால்

பங்குச்சபையில் ஏனைய உறுப்பினர்களுக்கு (தனிப்பட்ட முறையில்) விரோதமானவர்களும் பங்குச் சபையுடன் பகைமை பாராட்டவும். பங்குச்சபையின் தலைவரான பங்குத்தந்தையுடன் முரண்பாடு கொள்ளவும் வாய்ப்புகள் உருவாகியிருந்தன. பங்குச்சபையின் செல்வாக்கையும், பங்குத்தந்தையின் மக்கள் உறவையும் அந்நியப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு உள்ளூரில் புதிதாக வேர் விடத் தொடங்கியுள்ள புதிய பிரிவினை மதச்சபை யொன்றும் இயங்கிவருகின்றது என்பது இவ்வூர் மக்கள் பலரதும் கருத்தாகும்.

பஸ்ரியனுக்கு முன்னர் வங்காலைப் பங்குத்தந்தையாக விளங்கிய A. C. கிறிஸ்தோப்பர் அடிகளார் வங்காலை மக்கள் மனதில் நல்லதோர் இடத்தைப் பெற்றிருந்தார். அவருக்குப் பதிலாக வரப்போகின்றவர் எப்படியிருப்பாரோ என்ற வினாவோடு இருந்த பொழுதுதான், அதுவரை அங்கு பணியாற்றியவர்களுள் எல்லாம் இளையவரான 32 வயதே உடைய பஸ்ரியன் அங்குவந்து சேர்ந்தார்.

புதிய பங்குத் தந்தை வந்ததும் ஆலயமணியை ஒலித்து மக்களுக்கு அறிவிப்பது நடைமுறையில் உள்ள வழக்கம். ஆனால் பஸ்ரியன் அதனை விரும்பவில்லை. தனதுவருகை அப்படி ஒன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்ற கருத்தோடு மணி அடித்து அறிவிப்பதைத் தடைசெய்து விட்டார். பஸ்ரியனிடம் இருந்த அடக்கமான சுபாவத்துக்கு அம்மக்கள் முதன்முதலில் கண்ட நிகழ்ச்சியிது.. வரவின் போது எதுவித பரபரப்புமின்றி வந்தஅவர்—எதுவித முன்னறிவிப்புமின்றி வந்த அவர் அவ்வூரைவிட்டு, ஏன்—உலகை விட்டுப் பிரியும்போது பேரதிர்ச்சியையும், கவலையையும் கண்ணீரையுமல்லவா கொடுத்துச் சென்று விட்டார்.

மக்கள் மனதில் இடம் பிடிக்க பஸ்ரியன் முதலில் செய்த சாதனை எது வென்று கூறுவதானால் சிறுத்தோப்பு 'பாடு' பிரச்சினையில் தீர்வு கண்டதையே கூறலாம்.

வருடாந்தம் ஏப்ரல் மாதம் தொடக்கம் செப்டம்பர் வரையிலான இடைக்காலத்தில் வங்காலைக் கடலில் மீன்பிடி ஓய்ந்த காலம்—இவ்வூர் மக்கள் பலர் தொழிலின்றி இருப்பர். இதனால் சிலர் பேசாலைக் கிராமத்துக்கு அண்மையில் உள்ள கரிசல் கடற்கரையில் இக்காலங்களில் தமது தொழிலைச் செய்யத் தொடங்கினர். இது சம்பவம் பேசாலை மக்களுக்கும் வங்காலை மக்களுக்குமிடையே ஒரு பகைமையை வளர்த்து வந்தது. நீண்ட நாளாக இருந்து வரும் இப்பிரச்சனைக்குத் தீர்வு கொண்டுவர பஸ்ரியன் தீர்மானித்தார்.

''சீசன்'' ஓய்வான காலத்தில் தொழில் உரிமையாளர் களான சம்மாட்டிமாரைவிட, அவர்களிடம் தொழில் செய் யும் கூலித் தொழிலாளரே மிகவும் பாதிப்புக்குள்ளாயினர். காரணம் தொழிலற்ற காலத்தில் மேலும் மேலும் சம்மாட்டி மாரிடம் கடன் பட்டு அவர்கள் நிரந்தரக் கடன்காரர்க ளாகவும், இதனால் தொழில் நடைபெறும் காலத்தில், ஏற்கனவே பட்ட கடனை அடைக்க உழைத்துக் கொடுப்பவர் களாவும் வாழும் கட்டுப்பட்ட நிலைக்கு ஆளாகினர். இந்த விதமான அடிமைத்தளையை அகற்றவும் விரும்பியே வங் காலை மக்கள் வருடம் முழுவதும் தொடர்ச்சியாகத் தொழில் செய்வதற்கு கரிசல் கடற்கரையில் மீன்பிடிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுக்க கடற்றொழில் அமைச்சர்வரை சென்று சமாதானமான முறையில் பெற்றுக் கொடுத்தார்.

பேசாலை—வங்காலை மக்கள் குலத்தால், சமயத்தால், இனத்தால் ஒரே மக்களாகையாலும், பெரும்பாலும் உற வினர்களாகையாலும் பொது மனிதனாகிய பஸ்ரியனால் இவர் களிடையே ஒரு சமரசத்தீர்வைக் கொண்டுவருவதும் இலகு வாயிற்று.

இது விடயத்தில் கிடைத்த வெற்றியானது இளைஞர்கள் மத்தியில் பஸ்ரியனுக்குப் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தது. சுவாமிக்காக, சுவாமியோடு சேர்ந்து எதையும் செய்ய ஆயத்தமாக விருந்தார்கள்—அத்தோடு இளைஞர்கள் மட்டத்துக்கு இறங்கி இளைஞர்களோடு இளைஞர்களாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் பஸ்ரியனது சுபாவம் மேலும் அவர்களை ஈர்த்துக் கொண்டது. இதனால் பங்குச் சபை எடுக்கும் எந்த முடிவையும் இவ்விளைஞர்கள் மூலமாகச் செய்வது பஸ்ரியனுக்கு இலகுவாக விருந்தது.

பங்குச்சபையின் தீர்மானங்களின் படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளான 'சட்டவிரோத சாராய ஒழிப்பு' 'சட்ட விரோத வீடியோ படக்காட்சித்தடை' போன்றவை பங்குச் சபையின் தலைவரான பஸ்ரியனுக்கு எதிரான கசப்புணர்வை இதனால் பாதிப்படைந்தவர்களுக்கிடையே ஏற்படுத்திவிட்டிருந்தது.

உள்ளூர் அரசியல் சக்திகளால் பிளவுகள் புதுப்பிக்கப் படாமல் இருப்பதற்கு 1985ல் நடை பெறவிருந்த கிராமோதயசபைத் தலைவர் பதவிக்கு பங்குத் தந்தையான பஸ்ரியனை விண்ணப்பிக்கும்படி சிலர் கேட்டுக் கொண்டனர். இதனை பஸ்ரியன் ஏற்றுக் கொள்வது முறைதானா வினவை எழுப்பி ஆராய்ந்த போது அதற்கானவிடையையும் அவர்களே கொடுத்தனர்.

"1932—1939 ஆண்டுவரை வங்காலைக்குப் பங்குத் தந்தையாகவிருந்த அருட்திரு M. S. நல்லையா அவர்களே அங்கு கிராமசபை உருவாகக் காரணமாக இருந்தவர் அது உருவாக்கப்பட்ட காலத்தில் அவரே கிராம சபையின் தலைவராகவும் இருந்து வழிநடத்தினார். ஊர் ஒற்றுமையின் பொருட்டு பங்குத்தந்தையான பஸ்ரியனும் கிராமோதய சபைத் தலைவர் பதவிக்கு விண்ணப்பிப்பது விரும்பத்தக்கதே" என வற்புறுத்தினர். மறுக்க முடியாத நிலையில் பஸ்

சியனும் ஊர் ஒற்றுமையைக் கருத்தாகக் கொண்டு அதற்குச் சம்மதித்தார். பஸ்ரியனது இந்த முடிவு கூட ஒரு சிலருடையே அதிருப்தியை ஏற்படுத்தி விட்டிருந்தது. படித்தவர் பலர் நிறைந்த இக்கிராமத்தில் பங்குத்தந்தையே கிராமோதய சபைக்கும் தலைவராகவருவது மற்றவர்கள் எம்மவர்களைக் கேலி செய்யும் நிலைமையை உருவாக்கும் என்ற காரணத்தை வேறு சிலர் கூறித் துக்கப்பட்டனர். நிலைமையை நன்கு பரிசீலனை செய்து கொண்ட பஸ்ரியன் தலைமைப் பதவிக்கு விண்ணப்பிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார்.

பஸ்ரியனது ஆதரவுடன் இடம் பெற்று வந்த 'சமூக விரோத, சட்ட விரோதச்' செயல்கள் தடுப்பு நடவடிக்கைகளால் பாதிப்படைந்த சக்திகள் அவரைப் பழித்தும், அவமானப் படுத்தியும் சுவர்களில் எழுதினர். எதையும் தாங்கும் இதயம் படைத்த பஸ்ரியன் "பொதுப்பணி செய்யும் போது இவைகள் எதிர்பார்க்கப் படவேண்டியவைகளே" என்று தனக்கே உரிய புன்னகையுடன் ஏற்றுக் கொண்டார்.

தனிக் கத்தோலிக்க கிராமமான வங்காலையில் ஊடுருவிய பிரிவினை மதச் சக்திக்கு எதிராக இளைஞர்கள் சிலர் செயற்பட்ட போது எல்லாம்—அவ்விளைஞர்களை பஸ்ரியன் கண்டித்தார். "அவர்களுக்கு எதிராக நாம் எடுக்கக் கூடிய எதிர் நடவடிக்கை அன்னைமரியாளின் மீதுள்ள பக்தியை எம் மக்களிடையே பரப்புவதொன்றே" எனக் கூறி மரியாளின் பக்தியையும், பக்திச்சபைகளையும் ஊக்குவிக்க தன்னால் முடிந்தது அனைத்தையும் செய்தார்.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இடம் பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து பெருந்தொகையான மக்கள் வடக்குக் கிழக்குக்கு வருகை தந்தனர். அதில் மன்னார் நோக்கி வந்தவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் சேவையில் வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் பஸ்ரியன் முழுமை

யாக ஈடுபட்டார். நூற்றுக்கணக்கான அகதிகளை வங்காலையில் இளைஞர்கள் துணையுடன் அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் வழங்கிப் பராமரித்தார். அம்மக்களை கரிசல், தோட்டவெளிக் கிராமங்களில் உள்ள கோவிற் காணிகளில் குடியமர்த்துவதற்கும் ஆவனசெய்தார்.

காலிலே எதுவித அணியும் இல்லாமல், கொளுத்தும் வெய்யிலிலும், கொடிய உடைமுட் புதர்களிடையேயும் இம்மக்களுக்காக காணிகள் ஒதுக்கி—துப்பரவு செய்து. வீடமைத்துக் கொடுக்க இரவு பகல் என்று பாராது உழைத்தார். அந்தச் சிவந்தமேனி வெய்யில் சுட்டுக்கருகியதை அந்நாளில் பலர் அறிவர். அதன் காரணத்தாற்றான் அடிகளார் இறந்த பின்னர் அக்குடியேற்றக் கிராமம் ஒன்றுக்கு பஸ்ரியனின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை அம்மக்களிடமிருந்தே வந்தது. அது நிறைவேற்றப்படவில்லை. அவர் அமைத்த அந்த வீதிக்காவது 'பஸ்ரியன் வீதி' எனும் பெயர் சூட்டப்பட வேண்டும் எனும் எண்ணம் இருந்து வருகின்றது.

அகதிகள் துன்ப நிலையைக் கண்டு அவர்களிடையே முழுமையாக வேலைசெய்த காலத்தில்தான் தமிழன் நிச்சயமாக சுயாட்சியுடன் வாழவேண்டும் என்ற ஆவல் அவரிடம் அதிகரித்திருந்தது. பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களிடையே அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் இறுதியில் அவர் கொண்டிருந்த நிலைப்பாட்டினையும் விளக்கும் வாசகங்கள் தன்தாயாருக்கு 20-9-84இல் இறுதியாக எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

"ஒவ்வொரு நாளும் ஏதும் நடக்கும். குண்டுகள் வெடிப்பதும் துப்பாக்கிச் சூடுகளும் கேட்டுப் புளித்துவிட்டது. பரிதாபமான வாழ்க்கை"

"நான் சுகமாக இருக்கிறேன். பங்குப்பணிகளைவிட வீடு, கடைகள் எரிந்தவர்களுக்கு உதவுவது, பிடிபட்டவர் களை விடுவிக்க முயற்சி எடுப்பது, அகதிகளுக்குக் காணி, வீடு, தொழில் வசதிசெய்து கொடுப்பதில்தான் முழுநேர மும் போகிறது. இப்படியாக ஒவ்வொரு நாளும் செய்தி களும் கூட்டங்களும் நடந்தவண்ணமே இருக்கின்றது. எப் பொழுது ஈழம் மலரும் என்றுதான் யோசனை"

இக்கடிதத்தில் "வீடு, கடைகள் எரிந்தவர்களுக்கு உதவுவது" என்று அவர் குறிப்பிடுவது. 1984 ஆவணி 12ஆம் திகதி மன்னாரில் இடம் பெற்ற இராணுவ அட்டூழி யங்களின் பொழுது கடைகள் பல எரிக்கப்பட்டன. அதில் இழப்புக்கள் ஏற்பட்டவர்கள் சிறிய முதலில் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிப்பதற்காக மன்னார் 'வாழ்வுதயம்' உதவி வழங்கியது. அந்த உதவியைப் பெற்றுக்கொடுப் பதற்காக பஸ்ரியன் முன்னணியில் நின்று உழைத்தார். குறிப்பாக சிகை அலங்காரக் கூடங்கள், சாப்பாட்டுக் கடைகள் வைத்திருந்தவர்கள் மீண்டும் தம் தொழிலை ஆரம்பிக்க இன, மத பேதமற்ற விதத்தில் உதவி வழங்கப் பட்டது. இந்த உதவிகளைப் பெற்றவர்களில் பெரும்பான் மையோர் இந்து முஸ்லிம் வர்த்தகர்களாவர்.

இந்த அழிவுகளின் பின்னரும், தொடர்ந்து வந்த அநர்த்தங்களின் பின்னரும் மன்னாரைப் பார்வையிடவந்த விசாரணைக் குழுக்கள், பிரமுகர்களை கூட்டிச் சென்று சம்ப வங்கள் நடந்த இடங்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் காண்பிப்பது, நிகழ்வுகளைப் புகைப்படமெடுப்பது போன்ற வற்றை முன்னின்று செய்தார். இச்செயல்களும், அகதி கள் புனர்வாழ்வு விடயத்தில் பஸ்ரியன் காட்டிவரும் அக்கறையும், கொண்டுள்ள ஈடுபாடும் இராணுவத்தின ரால் கைது செய்யப்படும் இளைஞர்களின் விடுதலைக்காகத் தொடர்புகளை ஏற்படுத்தி முயற்சிகளை மேற்கொள்ளுவது யாவும் பஸ்ரியன்மீது இராணுவம் குறிவைப்பதற்குக் கார

ணிகளாகின. ஏனெனில் இராணுவத்தின் பார்வையில் தமிழ் இளைஞர்கள் யாவரும் பயங்கரவாதிகள். அவர்களுக் காகப் பரிந்து பேசும் பஸ்ரியனும் பயங்கரவாதி ஆகும்.

தாயாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. 1985 தை 23ஆம் திகதி தாம் அமெரிக்காவில் இருந்து வருவதாக தாயார் எழுதியிருந்தார். இந்த முறை அம்மா வந்தால் நிச்சயம் தன்னை விட்டுவிட்டுப் போகமாட்டார் எப்படியும் அழைத்துக் கொண்டுதான் செல்வார் என்பதில் சந்தேக மில்லை.

ஏனெனில் அவரது குருத்துவத்தின் 10வது ஆண்டு நிறைவதாய் சகோதரங்களுடன் சிறப்பாகக் கொண்டாட வேண்டும என்பது அனைவரதும் விருப்பம். எனவே அம்மா வந்து திரும்பும்போது தானும் அம்மாவோடு அமெரிக்கா செல்வது என்ற முடிவுடன் அதற்கான முன் ஆயத்தங் களைச் செய்யத் தொடங்கினார். இதனை இரகசியமாகச் செய்ய வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை, ஆனால் 'சுவாமி வெளிநாடு போகப் போகின்றார்' என்ற விடயம் இரகசியமான முறையில் இராணுவத்தைச் சென் றடைந்துவிட்டது! அவர் தம்பி ஓடப்பார்க்கின்றார் என்ற ஐயப்பாடு எழுந்தது. மெதடிஸ்த போதகர் அருட்திரு. ஜோர்ச் ஜெயராசசிங்கமும் வெளிநாடு செல்வதற்கு முழு ஆயத்தங்களுடனும் இருந்தார். அவர் புறப்படவிருந்த சில தினங்களின் முன்னரே முள்ளிப்பள்ளம் எனும் இடத்தில் வைத்து கொல்லப்பட்டார் என்பதுவும் இங்கு யாம் சிந்திக் கற்பாலது.

டிசம்பர் 4ஆம் திகதி மன்னாரின் அயற்கிராமங் களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னர், அனாதரவாய்க் கிடந்த பிணங்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று ஈமக்கிரியைகள் செய்வித்த பின்னர் பஸ்ரியனிடம் மாற்றங்கள் காணப் பட்டன. தனக்கு எதுவும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருந்தது.

1984 டிசம்பர் 11ம் திகதி.

பஸ்ரியனது 36 வது பிறந்ததினம்—அதுதான் அவர் கொண்டாடிய இறுதிப் பிறந்ததினம்—

வங்காலேயில் இருந்தபோது கடைசியாக பஸ்ரியன் ஒரு மயில்க் குஞ்சு வளர்த்தார்: அன்று காலே அவர் பலி ஒப்புக்கொடுத்த போது அந்தக் குஞ்சு பீடத்தைச் சுற்றிச் சுற்றிவந்தது— அதன் செய்கையைக் கண்டு புன்னகைத்து விட்டு பலியை ஒப்புக் கொடுத்து முடித்தார்—

வருடாவருடம் அவரது பிறந்ததினத்துக்கு அவரது தந்தையார் புதிய அங்கி ஒன்று தைத்து அனுப்புவார். (Birth day Cake) பேர்த்டே கேக்கும் வந்து சேரும். கடந்த வருடம் பிறந்த தினத்துக்கு தந்தையார் அனுப்பி வைத்த அங்கிசற்று நீளமானதாக விருக்கவே அதைக் கீழால் மடித்துத் தைக்கவேண்டியிருந்தது.

"பப்பா ஒவ்வொரு வருஷமும் மகன் வளர்ந்து கொண்டிருக்கிறான் என்று நினேக்கிறார் போல" என்று சொல்லிச் சிரித்தார்.

திருப்பலி முடிந்ததும் அவருக்குப் பிறந்த தினவாழ்த்துக் கூறவந்த ஆசிரியக் குழுவிடம் "இந்தமுறை கசக் (Cassoke)கும் இல்லேத் கேக்குமில்லே" என்று சொல்லிச் சிரித்தார்.

"பயப்படாதிங்கோ, இப்ப வந்துகொண்டிருக்கும்" என்று வந்தவர்கள் கூறினர்கள்.

முந்திய வருடங்களில் இருந்த கலகலப்பு இம்முறை அவரிடம் காணப்படவில்லே. "அடுத்த பேர்த்டேக்கு இருப்பேனே தெரியாது!"

அமங்கலமாக வெளிவந்த இந்த வார்த்தைகளை அன்று ஏன் சொன்னார்? உளரீதியாக அவர் பாதிக்கப் பட்டிருந்தார் என்பதினை இது உணர்த்திற்று. ஒருவேளை தான் அமெரிக்கா செல்ல விருப்பதனை மறைமுகமாகச் சொல்லிக் காட்டுகின்றார் என்று எண்ணவும் கூடியதாக விருந்தது. ஆனால் அவர் தொடர்ந்து சொல்லியவை அவர் மனதில் அச்சம் கொண்டுள்ளதுக்குச் சான்று கூறியது.

''கோவில் பறவை சுற்றி வருவது கூடாதாம், எனக்கு என்ன நடக்குமோ தெரியாது''

இந்த வார்த்தைகளை சிரித்துக் கொண்டுதான் சொன்னார். எப்போதும் கேலியாகப் பேசுவது போலவே சொன்னார். சகுன சாஸ்திரங்களில் நம்பிக்கை வைக்கக் கூடாத குரு உண்மையாகவோ, கேலியாகவோ அன்று கூறிய வார்த்தைகள் அடுத்த இருபத்து ஐந்து நாட்களில் நடக்க விருந்த அவலத்துக்குக் கட்டியம் கூறுவது போல் இருந்தது.

அடுத்த இரண்டு தினங்களில் நடைபெற்ற மற்ற தொரு அவலம் அவர்மனதை அடியோடு இடித்து நொறுக்கி விட்டது எனலாம், மரணதேவன் தன்னையும் நெருங்கிக் கொண்டிருக்கின்றான் என்ற ஒரு நம்பிக்கையை அவரிடம் ஊன்றி வளர்ந்து கொண்டிருந்தது.

டிசம்பர் 13 ம் திகதி ஜீவோதயம் பண்ணை இயக்குநர் அருட்திரு. ஜெயராசசிங்கம், அவரது சாரதி அப்துல்காதர் சுலைமான், தமிழ்ப் பொலிஸ் கான்ஸ்டபிள் யேசுதாசன் ரேச் மூவரும் தள்ளாடி இராணுவமுகாமுக்கு அண்மையில் முள்ளிப்பள்ளம் எனும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டு உடல்கள் காருடன் தீமூட்டி எரிக்கப்பட்டன.

மறுநாள்—

இறந்த கார்சாரதி அப்துல் காதர் சுலைமானின் தந்தையை அழைத்துச் சென்று பொலிசில் முறைப்பாடு

கொடுக்கவைத்து— பின்னர் ஜெயராசசிங்கத்தின் உடலில் எரிந்தது போக எஞ்சியிருந்த பகுதிகளை கொண்டு சென்று முருங்கன் ஜீவோதயம் பண்ணையில் ஒப்படைத்தார்.

"ஜெயராசசிங்கமும் ஒரு குரு. இன்று அவருக்கு நடை பெற்றது நாளை நமக்கும் நடக்கலாம். எனவே இவற்றுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டியது எமது கடமை" என்று பஸ்ரியன் துடித்தார்: ஆனுல் அருட்திரு. ஜெயராசசிங்கம் சார்ந்த சபையே அதுபற்றி மௌனம் சாதித்தபோது அவர் எது செய்வது? அவர்களுடைய அந்த மௌனமே இன்னு மொரு மறைத் தொண்டரில் தயக்கமின்றி கைவைக்கும் துணிவை அரசபடையினருக்குக் கொடுத்தது என்பது உண்மை.

இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வங்காலை இளைஞர் ஒருவரிடம் இராணுவம் பஸ்ரியனைப் பற்றியும் விசாரித்தது.

"எப்படி பஸ்ரியன்? அவன்தான் பெரிய கொட்டியா. அவனையும் நாங்கள் சாப்பிடுறது" என்று அவர்கள் கூறி யதை அவ்விளைஞன் பஸ்ரியனுக்குக் கூறியிருக்கின்றுர். ஆயினும் அவர் அதையிட்டு அதிர்ச்சியடைந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனுல் அவர் தன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்தினுர் என்பது மட்டும் புரிகின்றது.

ஜெயராசசிங்கத்தின் மரணத்தின் பின்னர் தனது பங்கு மக்கள் பலரிடம் பஸ்ரியன் விரக்தியுடன் பேசியிருக் கிறுர்.

"ஜெயராசசிங்கத்துக்கு நடந்ததே எனக்கும் நடக் கலாம். அவருடைய சாம்பலாவது கிடைத்தது, என்னுடைய உடலை என்ன செய்வார்களோ தெரியாது, என்னுடைய சாம்பல் தானும் கிடைப்பது சந்தேகம்.

புனித செபஸ்தியாரும் இளம் வயதிலேதான் மரண மடைந்தார். அவர் பெயர் கொண்ட எனக்கு அப்படிப்பட்ட மரணம் தான் ஏற்படும்."

வஞ்சியின் குளம் எனும் கிராமத்துக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கச் சென்ற அவர் "அடுத்தமுறை நான் பூசைக்கு வாறது எனக்குச் சந்தேகம். எனக்கு ஏதும் ஆபத்து நிகழலாம். எனக்கு ஏதும் நடந்தால் அம்மாதான் பாவம்."

"அம்மா அமெரிக்காவுக்குப் போய் ஏழெட்டுமாதங்களாகின்றன, அங்கே அண்ணனோடு இருக்கிறா. அவ என்னைப்பற்றிப் பயந்துகொண்டு அங்க வரும்படி அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறா. அவதான் பாவம், அவவை நினைக்கத்தான் கவலையாய் இருக்கு."

"போன முறை நான் தான் அவவை கட்டுநாயக்காவுக்குக் கூட்டிக் கொண்டு போய் பிளேன் ஏற்றிவிட்டனான் வாறமாதக்கடைசியில் வருகிறாவாம்."


"எனக்கு எத்தனையோ பேர் இருக்கினம். ஆனால் எனக்கு ஏதும் நடந்தால், என்னுடைய சகோதரர், சொந்தக்காரர், நண்பர்கள் எல்லாரையும்விட அம்மாதான் துடிதுடியென்று துடிச்சப்போவா."

"வங்காலையில இருந்து எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால இருக்கிற அவவை என்னமாதிரி கவலை பாதிக்கும்! பாவம் அவ. என்ர பிரேதத்தைத்தானும் அவவுக்குக் காட்டுவாங்களோ தெரியாது."

இவ்வாறு அவர் பலருக்குக் கூறியிருக்கிறார். அந்த மாதம் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் அனுப்பிவைத்தார். அந்தவாழ்துக்கள் கூட அவரது மரணத்தின் முன்னறிவிப்புகளாகவே இருந்தன.

அதற்குச் சான்று

**சுதுமலையில் இருக்கும் திருமதி குணநாயகம் அவர்களுக்கு 20-12-84 ல் அனுப்பிவைத்த கிறிஸ்துமஸ் வாழ்த்தும் ஒன்றாகும்.**


வங்காலை
29 12 84

கிறிஸ்துமஸ் வந்து சென்றது—புத்தாண்டும் பிறந்தது. அன்று தைமாதம் 3ம் திகதி மாதத்தின் முதல் வியாழன்—கடலில் இருந்து கடற்படை சுட்டது. வங்காலை மக்கள் பதறி அடித்துக்கொண்டு ஆலயத்தை நோக்கி வந்தனர். பஸ்ரியனே அஞ்சா நெஞ்சினராகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். கடற்படையினருடன் பேசினார்.

"எல்லை தாண்டிக் கடலில் பிரவேசிக்க வேண்டாம் என்று உங்கள் மக்களை எச்சரியுங்கள்" என்று அவர்கள் அவரிடம் கூறினர்.

அன்று மாலை ஆராதனையின் போது அவர் நிகழ்த்திய மறை உரையில்,

“நேவி சுட்டபோது மக்கள் கோவிலைத் தேடி ஓடி வந்தார்கள், ஆராதனைக்கு மணி அடிக்கும் போதோ எல்லோரும் சந்திகளில் நிற்கின்றார்கள்! உங்கள் விசுவாசம் எங்கே? இறைபக்தி எங்கே?”

“ஆண்டவர் வீதியிலே வலம்வந்து கொண்டிருக்கிறார். யாரை முதலில் சந்திப்பாரோ தெரியாது” என்று கூறினார்.

நான்காம் திகதி மாலை பல்வேறு காரணங்களினால் தன்னோடு மனஸ்தாபமாய் இருந்த இளைஞர் மன்றங்களை அழைத்து அவர்களிடம் மன்னிப்புக்கோரி சமாதானம் செய்து கொண்டார். அவர்களும் சுவாமியாரிடம் மன்னிப்புக் கோரினர்; அவரோடு சமாதானமாகினர். இவையெல்லாம் பஸ்ரியன் சமாதானத்தில் நித்திய இளைப்பாற்றி பெறுவதற்காகச் செய்துகொண்ட முன் ஆயத்தங்கள்.

ஐந்தாம் திகதி பகல் 11–30 மணியளவில் யாழ் ஆயர் இல்லத்துக்கு வங்காலை உப தபால் அலுவலகத்தில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பஸ்ரியனது அன்புக்குரிய வஸ்தியாம்பிள்ளை அடிகளாரே அப்பொழுது ஆயரில்லத்தில் இருந்து பேசினார். இருவரும் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர். மறுநாள் பகல்தான் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும், பிற்பகல் தனக்குக் கார் தேவைப்படும், எனவே தனது மாமனுடைய மக்களிடம் கூறி அதனை ஆயத்தநிலையில் வைத்திருக்கும்படி அறிவிக்கக் கேட்டுக்கொண்டு விடைபெற்றார், தன்னை உருவாக்குவதில் முக்கிய பங்கு கொண்டிருந்த தன் அபிமானத்துக்கும். அன்புக்குமுரிய வஸ்தியாம்பிள்ளை அடிகளாரிடம் இறுதியாக அவர் பெற்றுக்கொண்ட பிரியாவிடையே அதுவாகும்.

நாதனுடைய (மைக்கல் நாதன் குரூஸ்) தந்தையார் அன்று பஸ்ரியனை வந்து சந்தித்தார். கஷ்ட நிலையில் உள்ள நாதனுடைய குடும்பத்துக்கு ஏதோ தன்னால் முடிந்ததைச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே, நாதனை யாழ் மறைக்கல்வி நிலையத்தால் அளிக்கப்படவிருக்கும் மறையாசிரியர்களுக்கான மூன்றுமாதப் பயிற்சி வகுப்பில் அழைத்துச்சென்று சேர்த்துவிடத் திட்டமிட்டிருந்தார்.

“நீங்கள் நாதனைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நாளைக்கு நான் போகும்போது நாதனை என்னோடு கூட்டிச்சென்று நல்ல இடத்தில் சேர்த்து விடுகிறேன்” என்று நாதனுடைய தந்தைக்கு வாக்களித்துத் தைரியம் கூறினார்.

ஆலயவளவுக்குள் இளைஞர்கள் நடமாடிக்கொண்டேயிருந்தனர். ஆலய வளவினைப் பொறுத்தவரை இது ஒன்றும் புதுமையான நிகழ்வு அல்ல. பகலென்ன இரவென்ன மக்கள் நடமாடிக்கொண்டே யிருப்பர். சிலர் காற்றோட்டத்துக்காக ஆலயத்தின் வராந்தாவில் படுத்துறங்குவர். தீவிரவாத இளைஞர்கள் அன்று அங்கு கூடினர் என்பது அரசாங்கத்தின் வாதம். அப்படி அன்று அவர்கள்தான் வந்திருந்தால்கூட அது ஒன்றும் அசாதாரணமானது அல்ல. அதனைத் தடுக்கும் வலிமை அன்று பாதுகாப்புப் படையினரிடமே இல்லாதபோது பஸ்ரியனால் எப்படி முடியும்?

ஐந்தாம் திகதி சனிக்கிழமை இரவு...ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை நடு இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. மறுநாள் பௌர்ணமி தினம் முழுநிலவு வானத்தில் ஒளி உமிழ்ந்துகொண்டிருந்தது. மறுநாள் ஞாயிறு திருப்பலிக்கு வேண்டிய மறை உரையை ஆயத்தம் செய்த பின்னர் பஸ்ரியன் படுக்கைக்குச் செல்கின்றார்.

பஸ்ரியனது அறைக்கு வெளியே அழகு, நாதன், சமையற்காரர் மயில்வாகனம், உதவியாளர் ரவி ஆகியோர் படுத்துக்கிடக்கின்றனர்.

ஊரே உறங்கியவேளை...இயம வாகனங்கள் போன்று மன்னார் — நானாட்டான் வீதியால் வங்காலையைநோக்கி இராணுவ வண்டிகள் வந்துகொண்டிருக்கின்றன.

தொலைவில். பிரதான வீதியில் வாகனங்கள் நிறுத்தப் பட்டு இராணுவத்தினர் பரபரப்பாக ஓடிவந்து — ஆல யம், பாடசாலை, சேமக்காலை, கன்னியர்மடம் உட்படச் சுற்றி வளைக்கின்றனர். முதலில் சேமக்காலைப் பக்கம் துப் பாக்கி வேட்டுகள் வெடிக்கும் ஓசை அந்த நடுஇரவு அமை தியைக் கிழித்துக்கொண்டு எழுந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வங்காலைக் கிராமமே திடுக்கிட்டு எழுந்தது. பஸ்ரியனும் எழுந்தார். அவரது அறை வராந்தாவில் கிடந்த அந்த நால்வரும் எழுந்து பஸ் ரியனின் அறைக்கு ஓடிவந்தனர். துப்பாக்கி வெடி தொடர்ந்துகொண்டே இருந்தது.

"பாதர் பாதர்" பதறிய குரலில் யாரோ கதவை இடிக்கும் சத்தம் கேட்கவே கதவைத் திறக்கின்றார் பஸ்ரி யன். அங்கே...

பாடசாலைக்கு அருகில் வசிக்கும் அதிரியான் சோசை ஆசிரியரின் குடும்பமே குழுமிநின்றது. துப்பாக்கிச் சத்தத் துக்கு அஞ்சி ஆலயத்துக்கு அடைக்கலம்தேடி வந்திருக்கின் றார்கள் என்பதை அவர் புரிந்துகொண்டார்.

"இப்ப என்ன செய்யிறது மாஸ்டர் ?"

"வெடிச்சத்தம் கிட்டடியில் வந்துகொண்டிருக்கு கோவில் கதவைத் திறந்துவிடுங்கோ பாதர்"

சக்கிறிஸ்திக்குள் படுத்திருக்கும் சக்கிறிஸ்திப் பொறுப்பாளர் எமிலியான் குரூசைத் தட்டி எழுப்பி ஆலயத்தின் கதவைத் திறந்து விடும்படி கூறுகின்றார் பஸ்ரியன். ஆலயக்கதவு திறந்து விடப்படுகின்றது. அதிரியான் சோசை ஆசிரியர் குடும்பம் கோவிலுக்குள் சென்றதும் கதவு பூட்டப்படுகின்றது. பீடத்துக்கு அண்மித்த பகுதியில் அவர்கள் நிற்கின்றனர். இப்பொழுது துப்பாக்கி வெடிச்சத்தம் பரவலாக ஆலயத்தைச் சுற்றி எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

அறை வீட்டினுள் நிற்கும் பஸ்ரியனுக்கோ, மற்றவர்களுக்கோ, கோவிலுள் இருக்கும் ஆசிரியர் குடும்பத்துக்கோ, கோவில் பரிபாலகருக்கோ வெளியே என்ன நடக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை.

கோவிலின் வலப்பக்கமாக இருக்கும் கன்னியர் மடத்துள்ளும் ஒரே பதட்டம். அண்மைக் காலங்களில் நடந்து வரும் அசம்பாவிதங்களினால் வீடுகளில் இரவில் படுக்க அஞ்சி கன்னியர் மடத்தில் சென்று சில பெண்கள் படுத்து வந்தனர். கன்னியர் மடத்துள் இருந்தவர்களுக்கும் வெளியே நடப்பது என்னவென்று தெரியவில்லை. ஆனால் இராணுவம் சுற்றிவளைத்துச் சுடுகின்றார்கள் என்பது மட்டும் புரிந்தது.

பஸ்ரியனும் ஏனைய நால்வரும் அவரது படுக்கை அறைக்குள் நெஞ்சு பதைக்க நிற்கின்றனர். பங்குமனையின் பின் வராந்தாவில் "பூட்ஸ்" கால் ஒலிகள் தட, தட வென்று கேட்கின்றன. ஆம், பங்குமனையின் பின்பக்க முள்ள சிறிய படலையூடாக இராணுவத்தினர் நுழைந்து பின்வராந்தாவில் ஏறிவிட்டனர்.

சற்று நேரத்தில் "பாதர், பாதர்," என்று அந்தப் புதிய குரல் அழைத்தது.

பஸ்ரியன் அப்பொழுதே மரணத்தை எதிர்கொள்ளத் தயாராகிவிட்டார். வங்காலை மக்களின் கருத்துப்படி அவர் நினைத்திருந்தால் தப்பித்து ஓடியிருக்க முடியும். சேமக் காலைப்பக்கம் துப்பாக்கி வேட்டொலி கேட்டபொழுதே அதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் இருந்தது. இராணுவம் அவர்மீது குறிவைத்திருக்கின்றது என்பதை ஏற்கனவே அறிந்திருக்குமவர் — அதிரியான் சோசை ஆசிரியருக்கு மறைந்துகொள்ள இடம் கொடுத்த அவர் நினைத்திருந்தால் தானும் தன்னைக் காப்பாற்றியிருக்க முடியும். அப்படி அவர் தப்பிப்போயிருந்தால் அவர் பயங்கரவாதிதான் என்ற பட்டத்தை அரசும், இராணுவமும் ஆதாரத்துடன் கூற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அடுத்து, அவர் காணமற் போனதைத் தொடர்ந்து அவரைத் தேடுதல் எனும் பெயரில் வங்காலைக் கிராமத்தையே துவம்சம் செய்திருப்பார்கள். பலரின் நலனுக்காக தான் ஒருவன் பலியாவது நன்று என எண்ணினார் போலும்—.

தொடர்ந்து அதே குரல் "பாதர், பாதர்" என அழைத்தது. இரவு உடையுடன் நின்ற அவர் தனது வெள்ளை அங்கியை அணிந்து, இடையில் பட்டியைக் கட்டிக்கொண்டார், கையில் தனது செபமாலையை எடுத்துக்கொண்டார்.

கூட நின்றவர்கள் அவரைப் போகவேண்டாம் என்று தடுத்தனர். மற்றவர்களை வெளியே வரவேண்டாம் என்று கூறிய அவர், அறையின் கதவைத் திறந்து நடு ஹோலுக்குள் பிரவேசிக்கின்றார்.

அங்கே :—

அவரை அழைத்த குரலுக்கு உரியவன் மட்டுமன்று இன்னும் சிலரும் பின் வராந்தாவுக்கும் ஹோலுக்கும் இடையில் உள்ள கதவின் இரண்டு பக்கங்களிலும் உள்ள ஜன்னல்களுக்கு ஊடாகத் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்துக்

கொண்டு நிற்கின்றார்கள். அவர்கள் கண்களிலே கொடிய கொலைவெறி தாண்டவமாடிக்கொண்டு நிற்கின்றது. அவர்களது நோக்கத்தை அறிந்துகொண்ட அவர் செபமாலை தொங்கும் கைகளை உயர்த்திக்கொண்டே கெஞ்சும் தொனியில்.

"பிளீஸ்... பிளீஸ்" என்கின்றார்-

அவரது கெஞ்சுதல் மொழிகளுக்கு அந்தக் கொலைஞர் பதில் கூறவில்லை. அவர்களில் ஒருவனது கையில் இருந்த தானியங்கித் துப்பாக்கியே பதில் சொன்னது.

"பட், ... பட், ... பட் ......"
துப்பாக்கி வெடிச்சத்தம் ஒலிக்கு முன்னரே அழகுவும் நாதனும் நடு அறைக்குச் சுவாமியிடம் ஓடுகின்றனர்.
"ஐயோ அம்மா ..!"
இது பஸ்ரியன் எழுப்பிய அவலக்குரல் ...
மீண்டும் "பட், பட், பட், ......"
"ஐயோ அம்மா ... !"
இது பஸ்ரியனது இறுதிக்குரல் ...
குழந்தை பஸ்ரியன் முதலில் அழைத்த மழலைக்குரல் "அம்மா"
குரு பஸ்ரியன் அன்று இறுதியில் அழைத்த குரலும் "அம்மா"

"அம்மா" என்று அவர் அழைத்த அந்த அவலக் குரல் தான் — அந்திமக் குரல்தான் ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் அமெரிக்காவில் இருந்த அன்னையின் உதரத்தை, உதிரத்தை உலுக்கியது.

பஸ்ரியனைத் தொடர்ந்து அவரை நோக்கி ஓடிய நாதனும், அழகனும் நடு ஹோலில் சரிந்து விழுகின்றனர். அவர்கள் கீழே விழுந்த பின்னரும் தரையில்கிடந்த அந்த உடல்களை நோக்கி துப்பாக்கிச் சன்னமழை பொழிந்து கொண்டே இருக்கிறது. அறையின் உட்சுவர், கதவுநிலை, தரை எங்கும் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துத் துவாரத்தை ஏற்படுத்துகின்றன. தரையிலே பஸ்ரியனுடைய இரத்தம் பெருகித் தேங்குகின்றது.

பஸ்ரியன் மக்களுக்காக வாழ்ந்தவர், மக்களை நேசித்து மக்களின் நேசத்தில் வாழ்ந்தவர். அந்த நேசப்புதல்வர்களில் இருவரான நாதன், அழகு ஆகியோரின் இரத்தங்கள் பெருகித் தமது அன்புத்தந்தையாம் பஸ்ரியனின் இரத்தத் தோடு கலந்து அந்தப் பூமியிலே உறைகின்றது. அது அவர்கள் அவர் மீது கொண்டிருந்த — அவர் அவர்கள் மீது கொண்டிருந்த இரத்த பாசத்தின் அடையாளமா ?

இங்கு நடந்த அத்தனை அநர்த்தங்களையும் பஸ்ரியனது அறைக்குள்ளே இருந்த சமையற்காரர் மயில்வாகனமும், உதவியாள் ரவியும் கட்டிலின்கீழே பதுங்கியிருந்து அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். அங்கு நடப்பவற்றைக் கண்களால் காணமுடியாவிட்டாலும் ஒவ்வொரு அசைவின் ஒலியையும் அந்த மயான அமைதியில் காதுகளால் தெளிவாகக் கேட்கக் கூடியதாயிருந்தது.

அதே இறுதிக் குரல்கள் ஆலயத்தினுள் பீடத்துக்கு அண்மையில் நின்ற ஆசிரியரின் குடும்பத்தினதும், கோவில் பரிபாலகரினதும் காதுகளிலும் விழுந்தன.

சுவாமியின் அறையினுள் துப்பாக்கி வேட்டொலியையும், சுவாமியின் அவலக்குரலையும் கேட்ட ஆசிரியரின் பெண்மக்கள் இருவரும், பயந்தவர்களாக, கோவில் முகப்பில் பாடகர் குழாம் பயன்படுத்தும் மேன்மாடிக்கு ஓடினர்; அவர்களைத் தனிமையில் அங்கு விடவும் அச்சமாகவிருந்தது. ஆசிரியர் அதிரியான் சோசை மேல்மாடியை நோக்கிச் சென்றார். அவரைத் தொடர்ந்து கோவில் பரிபாலகன் எமிலியான் குருஸ் விரைந்தார்.

பஸ்ரியனும் மற்றும் இருவரும் தரையில் விழுந்ததைத் தொடர்ந்து கதவு இடித்துத் தள்ளப்பட்டது. கதவு திறந்து கொள்ளவே இராணுவத்தினர் உள்ளே நுழைந்தனர்.—

அவர்களது நோக்கம் பஸ்ரியனைக் கொலை செய்வ தொன்றே. அதனால் அவர்கள் பஸ்ரியனது படுக்கை அறை யினுள்ளோ, ஏனைய அறைகளுள்ளோ பிரவேசிக்கவில்லை. அதன் காரணத்தால் படுக்கை அறையினுள் கட்டிலடியில் மறைந்திருந்த சமையற்காரரும் உதவியாளும் உயிர்தப் பினர்;

அறையில் நின்ற ஒவ்வொருத்தரின் நடவடிக்கைகளுக் கும் தொலைத் தொடர்புக் கருவிமூலம் கட்டளை பிறப்பிக் கப்பட்டுக்கொண்டிருந்தது.

சுமார் பதினைந்து நிமிடங்களின் பின்னர் அறைவீட்டை விட்டு அவர்கள் படியிறங்கி வெளியேறுவது பூட்ஸ் ஒலிகள் மூலம் கேட்கக் கூடியதாகவிருந்தது.

குளியலறையின் மேற்பகுதியில் நீள்சதுரவடிவில் துவா ரங்கள் உள்ளன. கட்டிலடியில் இருந்த ரவி மெல்ல எழுந் துவந்து அத்துவாரங்கள் மூலம் வெளியே உற்றுப்பார்த் தார். அங்கே ... ...

பலிகொடுக்கப்பட்ட செம்மறியின் உடலான பஸ்ரிய னது உடல் தூக்கிச் செல்லப்படுவது நிலவுவெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. அவரது வெள்ளை அங்கி இரத்தத் தில் தோய்ந்திருந்தது. நாலுபேர் அவரது கைகளிலும் கால் களிலும் பிடித்திருக்க, இன்னுமொருவன் தலையைப்பிடித் திருக்க,... பின்வாசல் வழியாகக் கன்னியர் மடத்துப் பக் கம் கொண்டு செல்ல்ப்படுவதை ரவி தெளிவாகக் கண்டார். அவர்களுக்கு இருந்த வெற்றிக்களிப்பில் ரவியை எவருமே கவனிக்கவில்லை.

அதேவேளை ஆலயத்தினுள்ளே மேல் படியில் நின்ற அதிரியான் மாஸ்டரும், இரண்டு பிள்ளைகளும், ஆலயப் பரி பாலகன் எமிலியான் குருசும் கோவிலின் போட்டிக் கோவில் இராணுவம் நிற்பதையும், சிங்களத்தில் அவர்கள் உரையாடுவதையும் கேட்கக் கூடியதாகவிருந்தது.

மேல் மாடியில் கன்னியர்மடப் பக்கமாக இருந்த கண்ணாடியில்லாத ஜன்னலூடாக வெளியே கவனித்த எமிலியான் அதிர்ச்சியடைந்தவராக மாஸ்டரை மெதுவான குரலில் அழைத்தார்: "மாஸ்டர், (பெண்கள்) பள்ளிக்கூட வாசல்படியைப் பாருங்க, சுவாமியைக் கொன்று போட்டு கொண்டுவந்து போட்டிருக்கிறுங்கள்".

ஆசிரியரும் அவரது பிள்ளைகளும் ஒரே நேரத்தில் அங்கே பார்த்தனர். அங்கே அவர்களின் அன்புப் பங்குத் தந்தை சற்று முன்னர் அவர்களுக்கு அபயம் கொடுத்து ஆலயத்தைத் திறந்துவிட்ட அவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைக் கண்டனர். அக்காட்சியைக் காணச் சகிக்காதவர்களக பெண்கள் இருவரும் வாய்விட்டு அழத் தொடங்கினர். அவர்களைக் கட்டுப்படுத்தி கீழே பீடத்தடிக்கு அழைத்து வருவது ஆசிரியருக்கு பெரும்பாடாக விருந்தது.

பஸ்ரியனின் உடலை எடுத்துச்சென்று பெண்கள் பாடசாலையின் படியில் கிடத்திய பின்னர், சிலர் பிணத்தைச் சுற்றிக் காவல் நின்றனர்.

பஸ்ரியன் கொலை செய்யப்பட்ட அறையினுள் நாதன், அழகு இருவரது உடல்களும் இருந்தன. என்ன நினைத்தார்களோ, பின்விராந்தாவில் கதவுக்கு அருகில் பொதுமக்கள் விநியோகத்துக்கு என்று வாங்கி வைக்கப்பட்டிருந்த மண்ணெய் தகரங்களில் ஒன்றைச் சரித்து அறைமுழுவதும் எண்ணெய் பரவச்செய்தனர்.

இத்தனை அமளிகளுக்குள்ளும், துப்பாக்கி வேட்டொலி கேட்டு அஞ்சி அடைக்கலம் தேடி ஆலயத்தையும், பாடசாலையையும் நோக்கி ஓடிவந்த பொதுமக்கள் சிலரும் கருணையின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களுள் எழுபத்தி இரண்டு வயதான தங்கச்சியம்மா எனும் மூதாட்டியும் அடங்குவர்.

நேரம் அதிகாலை விடியலை நெருங்கிக் கொண்டிருந்து. வாகனம் ஒன்று (Van) பஸ்ரியனது உடல் கிடத்தப்பட்டிருந்த பாடசாலைப்படிகளை அண்மித்துக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. அவரது உடல் வாகனத்துள் தூக்கிப்போடப்பட்டது. சிப்பாய்கள் நான்குபேர் அவரது கால்களிலும் கைகளிலுமாகத் தூக்கி வாகனத்துள் போட இன்னுமொருவன் துவண்டு தொங்கிக் கொண்டிருந்த தலையின் முடியில் பிடித்து உள்ளே இழுத்துப் போட்டான்.

"அறங் யண்ட" (கொண்டு போங்கள்) என்ற கட்டளை பிறந்ததும் வாகனம், அவரது உடலைத் தாங்கிய வண்ணம் நகர்ந்து சென்றது.

வங்காலையில் பங்குத்தந்தையாக அடியெடுத்து வைத்த போது தனது வருகையை அறிவிக்கும் மணியை ஒலிக்கவேண்டாம் என்று தடுத்த பஸ்ரியன், வங்காலையை விட்டுப் பிரியும் வேளையிலும் மணி ஒலிக்கவில்லை.— மணி ஒலிப்பதைத் தடுப்பதற்கும் பஸ்ரியன் உயிரோடில்லை.

இத்தனையும் நடந்து முடியும்வரை கன்னியர் மடத்து அறைகளுக்குள்ளே நடுங்கியபடி நின்றனர் மடத்துக் கன்னியர்கள். காலை ஆறுமணிக்கு இராணுவம் மடத்துக் கதவைத் தட்டிக் கன்னியர், பெண்கள் அனைவரையும் வெளியேற்றினர். அவர்கள் எவரையும் பெண்கள் பாடசாலைப் பக்கமாக நகர விடாது ஆலயத்தின் போட்டிக்கோ வாசல்வழியாக ஆலயத்துள் வரிசையாக நடத்திவந்து உள்ளேவிட்டனர்.

கன்னியர்கள் மடத்திலிருந்து வெளியேற்றப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தளபாடங்கள் யாவும் புரட்டி எடுக்கப்பட்டன. சோதனையென்ற பெயரில் சூறையாடல் நடந்தது. நற்கருணைப் பேழையை முதலாகத் திறந்து அவமரியாதை செய்தனர். கைக்கடிகாரங்கள், மற்றும் பல முக்கியமான பொருள்கள் பாதுகாப்புப் படையினரால் கொள்ளையடிக்கப்பட்டன.

காலை ஏழரைமணி அளவில் — பங்குமனை, ஆலயவளவு' சேமக்காலை ஆகிய இடங்களில் ஆங்காங்கு கிடந்த சடலங்களையும் கைது செய்யப்பட்ட சில ஆண்களையும் ஏற்றிக் கொண்டு 'லொறி' ஒன்று ஆலய வளவில் நின்று புறப்பட்டது. தொடர்ந்து ஏனைய வாகனங்களும் சென்றன. எங்கும் அமைதி.

இராணுவம் வங்காலையை விட்டு வெளியேறி விட்டதை உறுதிசெய்து கொண்டபின்னர் மக்கள் ஒவ்வொருவராக ஆலயத்தை நோக்கி வந்தனர். அதுவரையில் ஆலயத்தினுள் அடைபட்டுக் கிடந்தவர்களும் வெளியே வந்தனர்.

பங்குமனையில் நடு அறையில் மண்ணெய்யோடு கலந்து கறுத்துப்போயிருந்த இரத்த வெள்ளத்தையும் — பெண்கள் பாடசாலைப் படியில் உறைந்திருந்த இரத்தக் கறையையும் மட்டுமே அவர்களால் காணமுடிந்தது.

மன்னார் ஆயருக்கு அதன் பின்னரே அறிவிக்கப்பட்டது. ஆயரும், குருமுதல்வரும் வந்து அழுதுகொண்டிருக்கும் மக்களையும், இரவு நடந்த அவலங்களையும் அவர்கள் சொல்லக் கேட்டனர்.

இராணுவ முகாமோடு தொடர்புகொண்டு பஸ்ரியனது உடலையாவது திருப்பித் தரும்படி பலவழிகளில் முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் பஸ்ரியனைக் கொலை செய்யவில்லையென்றும் - அவர் தப்பி ஓடிவிட்டார் என்ற பொய்த் தகவலையுமே கொடுத்தனர்.

ஆலத்தினுள்ளே ஒரு செபவழிபாட்டை நடாத்திய ஆயர் அவர்கள், அங்கு குழுமியிருந்த மக்களுக்கு இராணுவமுகாமில் இருந்து கிடைத்த தகவலை அறிவித்தார். அதனைக் கேள்வியுற்ற மக்கள் அனைவரும் வாய்விட்டு அழுதனர்.

தாம் கண்களால் கண்ட காட்சிகளை - பஸ்ரியனது உடல் பாதுகாப்புப் படையினரால் மோட்டார் வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கண்டவர்கள் கொடுத்த தகவலை வலியுறுத்தி இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார் ஆயர்.

ஆயருடன் பேசிய அதிகாரியின் குரலில் ஆச்சரியம் இழையோடியது, தான் அதுபற்றி விசாரிப்பதாக மட்டுமே கூறப்பட்டது.

அன்று நண்பகல் ஒன்பது சடலங்கள் மன்னர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. அவையாவன:-

| | | |
|---|---|---|
| பாலசுப்பிரமணியம் அழகரட்ணம் | 15 | வயது |
| மைக்கல் நாதன் குரூஸ் | 27 | ,, |
| சூசையப்பு பீரிஸ் ஹேர்மன் பியிரிஸ் | 17 | ,, |
| குயின்ரஸ் பீரிஸ் | 18 | ,, |
| தங்கச்சியம்மா | 72 | ,, |
| அன்ரனி பெல்டானோ | 24 | ,, |
| ரூபஸ் குரூஸ் | 22 | ,, |
| டல்மேடா தாசன் (ஜீவா) | 28 | ,, |
| சந்தியாகு எதிர்ராசசிங்கம் | 21 | ,, |

அந்த ஒன்பது சடலங்களின் மத்தியில் பஸ்ரியனது உடல் காணப்படவில்லை.

பலி செய்யவந்த குருமகன் பலி கொள்ளப்பட்டார்— அவர் பலிகொள்ளப்பட்ட பலிக்களம் இருந்த " — அதன் அடையாளங்கள் இருந்தன — ஆனால் அந்தப் பலிப்பொருள் எங்கே? அதற்கு என்ன நடந்தது? அதற்கு நேர்மையான முறையில் இதுவரையில் எதுவித பதிலும் கிடைக்கவில்லை; ஆனால் அன்று காலையில் இராணுவமுகாமின் பின்பக்கமிருந்து கரிய புகைமண்டலம் எழும்பியதை வங்காலையில் நின்று பார்க்கக் கூடியதாகவிருந்தது என்று கண்டவர்கள் கூறுகின்றனர்.

அந்தப் பலிப்பொருள் தகனப்பலியாக்கப்பட்டதா?

## (10)

# *மரணத்தின் பின்*

6-ம் திகதி அன்று அதிகாலையில், வங்காலையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள்பற்றி அன்றைய வானொலி, தொலைக்காட்சிகள் முழங்கின. "ஆயுதங்களும், வெடி மருந்துகளும், பிரசுரங்களும் ஆலயத்துள்ளும், அதன் சுற்றுப்புறங்களிலும் கைப்பற்றப்பட்டதாகப் புளுகித் தள்ளின.

அன்று பிற்பகல் மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கு, தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. தொலைபேசியில் பேசிய இராணுவ அதிகாரி "வங்காலையில் இருந்து இராணுவ முகாம் நோக்கி வங்காலை மக்கள் கண்டன ஊர்வலம் வர இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதனைத் தடுத்து நிறுத்துங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்ட ஆயர் அவர்கள் ஆலயத்தில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டதாகச் செய்யப்பட்ட வெகுஜன தொடர்பு சாதனங்களில் பிரசாரங்கள் பற்றிக் கேட்டார். அதற்கு அந்த இராணுவ

அதிகாரி "இராணுவம் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆலயத்தினுள் பிரவேசிக்கவில்லை, அவை பாடசாலை வளவினுள் இருந்தே மீட்கப்பட்டன" என்றார்.

"அப்படியானால் அப்பாடசாலை அரசாங்கப் பாடசாலை அதற்கு நாங்கள் பொறுப்பல்லவே" என்று ஆயர் அவர்கள் பதில்கூறி அவர்களது ஆதாரமற்ற பிரசாரங்களைக் கண்டித்துத் தன் வேதனையைத் தெரிவித்துக் கொண்டார்.

"பஸ்ரியனது உடலுக்கு என்ன நடந்தது ?" என்ற வினாவுக்கான நேர்மையான பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. அவரைத் தாம் காணவே இல்லை என்பதுவே அவர்களது பதிலாகக் கிடைத்தது.

ஆனால், 17—1—85இல் பந்தோபஸ்த்து அமைச்சர் அத்துலத் முதலி தனக்கே உரித்தான பாணியில் பஸ்ரியன் தென் இந்தியாவில் பிரிவினை வாதிகளுடன் உயிரோடு இருப்பதாக அறிவித்தார்.

இச்செய்தியை 18—1—85 வத்திக்கான் வானொலி ஒலிபரப்பியது.

......"Father Mary Bastian, Tamil priest of Sri Lanka, is alive and he is among the Tamil separatists in the south of India. The announcement was made yesterday by Minister Lalith Athulathmudali"...(translation from the Italian)......

இச்செய்தியானது அவுஸ்திரேலிய கத்தோலிக்கப் பத்திரிகையான "Catholic Advocate"ல் வெளிவந்தது. அதே செய்தியை இலங்கையின் ஆங்கில நாளேடான "Daily News" 21—2—85 இதழில் வெளியிட்டிருந்தது.

பஸ்ரியன் இராணுவத்தால் கொல்லப்படவில்லை என்ப தனை அரசதரப்பினர் அழகிய கதையாகவே ஜோடித்துக் கூறினர். சர்வதேச மன்னிப்புச் சபையின் தகவல் பிரிவு 1986 அக்டோபர் மாதம் வெளியிட்ட தமது அறிக்கையில் இக்கதையைப் பிரசுரித்ததுடன், இது வெறும் கதையே என்பதையும் சுட்டிக் காட்டியது.

..."இம் மரணத்தைப்பற்றிய விசாரணையின்போது அரசதரப்புப் பேச்சாளர் ஒருவர் கொடுத்த தகவலின் படி பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூடு இடம் பெற்ற சமயம் மக்கள் கோவிலை விட்டு கடற்கரையை நோக்கி ஓடியதாகவும், அதனைத் தொடர்ந்து இயந் திரப் படகொன்று விரைந்து செல்வது போன்ற ஓசை கேட்டதாகவும் தெரியவருகின்றது, உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் அரசதரப்பின் கூற்றுப்படி மேரி பஸ்ரியன் அடிகளார் சம்பவம் நடந்த இடத்தை விட்டு வெளியேறி இருக்கலாம் என்றும், அதனாற்றான் அவரது உடல் காணப்படவில்லையென்றும் கருதப்படுகின்றது. ஆனால், இந்தச் செய்திகளுக்கு ஆதார பூர்வமான சான்றுகள் எதுவும் சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கிடைக்கவில்லை....................ஆயர் மன்றத்தின் அறிக் கையின்படியும் இலங்கைப் பத்திரிகைச் செய்திகளின் படியும், பொலிஸ் குழுவினர் 1985ஜனவரி 13ஆம் திகதி காலை 11 மணி முதல் 14ஆம் திகதி பகல் 12 மணி வரை ஆறு சாட்சியங்களை விசாரணை செய் ததில், இக்கண்கண்ட சாட்சிகளில் பலர் கொடுத்த தகவல்களின்படியும் மேரி பஸ்ரியன் அடிகளார் பாது காப்புப்படையினரால் அவரது அறை வீட்டிலேயே இன்னும் இருவரோடு சுட்டுக் கொலைசெய்யப்பட்டு, அவரது சடலமும் கொன்றவர்களாலேயே எடுத்துச் செல்லப்பட்டுளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது ....."

அரசதரப்பினரின் கட்டுக் கதைகள் எதையும், எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கையே ஒரு சான்றாகும்.

பஸ்ரியன் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரச தொடர்புச் சாதனங்களின் பொய்யான தகவல்களைக் கண்டித்து மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் 7—1—1985இல் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

"வங்காலையின் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அருள்திரு மேரி பஸ்ரியன் இம் மாதம் 6ஆம் திகதி ஞாயிறன்று அவரது பங்கு மனையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் என்ற துக்கம் நிறைந்த செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். 36 வயது நிரம்பிய அடிகளார் ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக மன்னார் மறை மாவட்டத்தில் அரும்பாடுபட்டு உழைத்த. தியாகம் நிறைந்த பணியாளர் கடவுளின் மகனான இவருக்கு எதிரான இந்த மனிதாபிமான மற்றதும், கொடுமை நிறைந்ததும, நினைத்துப் பார்க்க முடியாததுமான வன்செயலையிட்டு மன்னார் மாவட்டக் கத்தோலிக்க மக்களும், நாமும் ஆழ்ந்த மன வேதனை அடைந்துள்ளோம். அவரது சடலம் நல்லடக்கத்துக்குக் கையளிக்கப்படும் என இன்னும் எதிர் பார்க்கின்றோம்.

வங்காலை ஆலயத்துள் ஆயுதங்களும் வெடி மருந்துகளும் பிரசுரங்களும் கண்டெடுக்கப்பட்டதாகவும், ஆலயம் ஆயுதப்படையினருக்கு எதிராகத் தாக்குதல் செய்யும் தளமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிடும் அரசின் சமூகத் தொடர்பு சாதனங்களின் பிழையான அறிக்கைகளுக்கு எமது கடுமையான எதிர்ப்

யைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம். அத்துடன் வங்காலைக் கிராமத்தில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையையும் கண்டிக்கின்றோம். மேலும் வங்காலைக் கிராமத்தின் திருக் குடும்பக் கன்னியர் மடத்தினுள் ஆயுதப்படையினர் அத்துமீறிச் சென்றதற்கும் எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள் கிறோம். மன்னார் மறைமாவட்ட மக்களும், எனது குருக்களுடன் இணைந்து நானும் எல்லாவிதமான வன்செயல்களையும் கண்டனம் செய்வதுடன் மன்னார் மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் அரசு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமெனவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்,

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் விரிவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் இவை மீண்டும் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆயர் இல்லம், + தோமஸ் சவுந்தரநாயகம்
7—1—1985 மன்னார்.

இதே வேளையில் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப் பிள்ளை அவர்களும், குருக்களும் ஜனாதிபதிக்கு தந்தி மூலம் கண்டனத்தைத் தெரிவித்ததுடன் கடிதம் ஒன் றினையும் ஆயர் தனிப்பட அனுப்பிவைத்தார்.

''வங்காலையின் பங்குத்தந்தை அருள்திரு மேரி பஸ்ரியன் அவர்களுடைய அவல மரணத்தையிட்டு இன்று எமது குருக்களும் நானும் இணைந்து அனுப்பிய தந்திச் செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் இக்கடிதத் தினை எழுதுகின்றேன். தந்திச் செய்தி பின்வருமாறு:

''ஜனவரி 5ஆம் திகதி இரவு கத்தோலிக்க குருவாகிய வங்காலையின் பங்குத்தந்தை அருள்திரு மேரி

பஸ்ரியன் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட் டமை பற்றி ஆழ்ந்த கவலையடைகிறோம். அவர் எமது யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராயிருப் பதனால் அவரது உடலை கிறிஸ்தவ முறைப்படி யாழ்ப் பாணத்தில் நல்லடக்கம்பண்ண அதனை உடனே தருவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

—யாழ் மறைமாவட்ட ஆயரும், குருக்களும்

"யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராகிய அருள் திரு மேரி பஸ்ரியன் புதிய மன்னார் மறைமாவட்டத் தில் திருப்பணி புரிவதற்குப் போதிய குருக்கள் இல்லா திருந்தமையால் சில வருடங்களுக்கு அங்கு பணி புரிய தம்மையே விரும்பி அர்ப்பணித்தார்"

"எமக்குக் கிடைத்துள்ள நம்பகமான தகவல்களின் படி ஜனவரி 6ஆம் திகதி அதிகாலை அவரும், நீண்ட காலமாக உடன்வசித்துவந்த சிறுவர்களும் குருமனைக் குள்ளேயே ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டார்களென அறிகிறோம். இந்தக் கொடுமை நடை பெறும்போது அவர் குருவுக்குரிய அங்கியில் இருந்தி ருக்கிறார்"

"ஊரடங்கு வேளையில் ஆயுதப்படையினரால் செய் யப்பட்ட இந்த அட்டூழியத்தையிட்டு எனது மறை மாவட்டக் குருக்களும், நானும் மிகுந்த அதிர்ச்சிய டைகிறோம். பெரும் துன்பத்துக்குரிய இச்சம்பவத் தையிட்டு சுயாதீனமான விசாரணைக் குழுமூலம் பார பட்சமற்ற விசாரணை நடத்துமாறு விண்ணப்பிக் கிறோம்.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
6—1—1985.

வங்காலையில் பஸ்ரியன் கொலை செய்யப்பட்டமைக்கு வேதனை தெரிவித்தும், சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்குமாறும் இலங்கை அரசசைக் கோருமாறு யாழ். ஆயர் அவர்கள் திருத்தந்தைக்குத் தந்தி ஒன்றை அனுப்பி வைக்க முயற்சித்தார். ஆனால், யாழ்ப்பாணம் தபால் நிலையம் அத்தந்தியை ஏற்று வத்திக்கானுக்கு அனுப்பிவைக்க மறுத்துவிட்டது. இதே போன்று மன்னார் ஆயர் அவர்கள் மன்னாரில் இருந்து அனுப்ப முயற்சித்த தந்தியையும் மன்னார் தபால் நிலையம் ஏற்க மறுத்தது.

இலங்கையின் சமூகத்தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் அரசு கூறும் தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரம் செய்தனவேயொழிய வங்காலையில் நடந்து முடிந்த நிகழ்வுகளின் உண்மைக்குச் சான்றுபகரத் தயங்கின. அதிகம் கூறுவானேன்? இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் ஓரேயொரு ஆங்கில வாரப்பதிப்பான The Catholic "Messenger" கூட வெளிநாட்டுப் பத்திரிகைகள் கொடுத்த அளவு முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. ஆயர்களின் அறிக்கைகளை மட்டும் தவிர்க்க முடியாத, தப்பிக்க முடியாத நிலையில் பிரசுரித்தன என்பதுவே உண்மை. யாழ் மறை மாவட்ட, கத்தோலிக்க தமிழ் வார ஏடான "பாதுகாவலன்", மற்றும் 'ஈழநாடு' முதலியனவே உண்மைச் சம்பவங்களைத் துணிந்து வெளியிட்டன.

பஸ்ரியன் கொலை செய்யப்பட்டு ஏறக்குறைய மூன்று வாரங்களின் பின்னரே இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம்கூட ஒரு கண்டன அறிக்கையை கஷ்டப்பட்டுப் பிரசவித்தது.

காரணம், பாதுகாப்பு அமைச்சரின் வாக்கை அரிச்சந்திரன் வாக்காகத் தெற்குக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களும், மக்களும் நம்பினர். அல்லது அரசின் பிரச்சாரத்துக்கு மாறான உண்மைச் செய்திக்காகக் குரல் கொடுக்

கப் போனால், கத்தோலிக்கர் பயங்கரவாதத்துக்குத் துணை நிற்கிறார்கள் என்ற பாரப்பழி தம்மீது சுமத்தப்பட்டுவிடும் என்பதனால் இச் செய்தியில் எவ்வளவு உண்மை உண்டு என்பதைக் கண்டுபிடிக்க இச்செய்திகளை போஸ்ற் மோட்டம் செய்துகொண்டிருந்தனர்.

இலங்கை ஆயர் மன்றத்தின் அறிக்கை:

இராணுவத்துக்கும் பயங்கர வாதிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதல் பற்றியும், அதன் விளைவாக கோயில் வளவில் பஸ்ரியன் எனும் குருவானவர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் செய்திபற்றியும் நாட்டின் வெகு சனத்தொடர்பு சாதனங்களுடாகக் பலதரப் பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கோயில் வளவிலிருந்து பயங்கரவாதிகள் தாக்கியமையால் இராணுவத்தினர் இதைச் செய்யத் தூண்டப்பட்டனர் என்று ஒரு புறமும், எத்தகைய ஆத்திரமூட்டலுமின்றி இராணுவத்தினர் இந்தப் படுகொலைகளைச் செய்தனர் என்ற மறுபுறமும் வேறுபட்ட செய்திகள் எம்மை வந்தடைகின்றன. தொடர்பு சாதனங்களின் இத்தகைய முரண்பட்ட செய்திகள் பொது மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தி வடக்கிலும், கிழக்கிலும் நெருக்கடி நிலைமையைத் தோற்றுவிக்கலாம். இதன் உண்மை நிலையை உறுதிப் படுத்த பாகுபாடற்ற, உயர்மட்ட விசாரணை ஒன்றை நடாத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

பஸ்ரியனுக்கு ஏற்பட்ட அநியாயச்சாவையிட்டு நீதியான விசாரணை நடாத்தப்படவேண்டும் என்று மன்னார் ஆயர் அவர்கள் 9—1—1985, 1—2—1985 ஆகிய திகதிகளில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அவற்றுக்கு 7—3—1985இல் ஜனாதிபதியிடம் இருந்து பதில்வந்தது.

My No.18/11/278.

*President of Sri Lanka*

7th March 85.

Your Lordship,

I refer to your letters dated 9th January and 1st February 1985 regarding the alleged death of Rev.Fr.Mary Bastian.

2. I wish to inform you that:

(i) C.I.D. investigations are being made.

(ii) The Security Forces state that no such person has been killed by the Security Forces and in fact there is no evidence that he is dead.

(iii) On proof of death appropriate steps will be taken.

Yours sincerely,

President.

Rt.Rev.Dr.Thomas Savundaranayayam,
Bishop of Mannar,
Bishop's House,
Mannar.

எனது எண் 18/11/278
ஜனாதிபதி
ஸ்ரீலங்கா
7—3—85

மேதகு ஆயர் அவர்களே,

இறந்ததாகக் கூறப்படும் மேரிபஸ்ரியன் அடிகளார் விடயமாக ஜனவரி 9, பெப்ருவரி 1 திகதிகளில் தங்களால் எழுதப்பட்ட கடிதங்களையிட்டு :

பின்வரும் விடயங்களை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

I குற்றப் புலனாய்வுப் பிரிவு இதைப்பற்றிய விசாரணைகளை நடாத்தியது.

II பாதுகாப்புப் படையினர் இத்தகைய கொலையினைத் தாங்கள் செய்யவில்லை எனத் தெரிவிக்கின்றனர். மேலும் இவர் இறந்தார் என்பதற்கு எந்த வித சான்றுகளும் இல்லை.

III இவரது மரணம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள
ஜே. ஆர். ஜெயவர்த்தன
ஜனாதிபதி

அதிவணக்கத்துக்குரிய
கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம்
மன்னார் ஆயர்
ஆயர் இல்லம்
மன்னார்.

ஜனதிபதி அவர்கள் அறிவித்தது போல கொழும்பில் இருந்து வந்த விசேட குற்றப்புலனாய்வுக்குழு வொன்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் தைமாதம் 13 ம் 14 ம் திகதிகளில் விசாரணைகளை மேற்கொண்டது. பஸ்ரியன் படுகொலை செய்யப்பட்டார் என்பதனை உறுதிப்படுத்தி கண்கண்ட சாட்சிகள் அறுவர் வாக்கு மூலம் கொடுத்தனர்.

ஆனல், பஸ்ரியனின் உடலுக்கு என்ன நடந்தது? கொலைஞர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? பஸ்ரியன் படுகொலை செய்யப்பட்டு ஆண்டுகளும் மூன்று மூன்று கடந்து விட்டன. அராஜகங்களுக்குப் பலியான ஆயிரக்கணக்கானேரில் ஒருவராக பஸ்ரியனும் கணிக்கப் பட்டுவிட்டார் என்பதுவே உண்மை.

பஸ்ரியனுடைய மரணம் சிங்களவர்களான அவரது நண்பர்கள் பலருக்கும் பெருஅதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனல் அவர்களது மன எழுச்சியும், துயரத்தையும் வெளிப் படுத்தும் அளவுக்கு அவர்களது தலைமைப்பீடங்கள் தடை விதித்தன.

வடக்கு-தெற்குத் துறவற சபைகளுக்கிடையிலான உரை யாடல்களின் போது கலந்து கொண்ட திருக்குடும்பக் கன்னி யர் சபையின் தென்பிராந்தியத்தலைவி அருட் சோதரி யோசப்பின் மென்டிஸ் பஸ்ரியனது மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தார். சமூகப்பணியிலும், இனப்பற்றிலும் தணியாத தாகம் கொண்டு உழைத்த இளைஞரான பஸ்ரிய னது மரணம் திருச்சபைக்கே ஒரு பேரிழப்பு என்று எண்ணி ஞர். கடைசியாக அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத் தின்பின்னர் நடந்த சம்பவமும் பஸ்ரியன் கூறிய பதிலும் அவர் மனதில் நிழலிட்டன.-

கூட்டம் முடிந்ததும் மாலை ஐந்துமணியாகிவிட்டது. பஸ்ரியன் மன்னருக்குத் தனது மோட்டார் சைக்கிளில்

தனிமையாகப் புறப்படுகின்றார். இருட்டும் வேளை, இடமோ சிங்களவர்களின் இடம்; இதனைக்கண்ட அருட்சகோதரி ஒருவர், அவரைத்தடுத்து,

"Fr. Basti are you not afraid to ride alone on those lonely roads during these dangerous times."

("பாதர் பஸ்ரி, ஆபத்தான இந்த நேரங்களில், இந்த தனித்த வீதிகளிலே போவதற்கு உங்களுக்குப் பயமில்லையா)

பஸ்ரியனுக்கே இயல்பான சிரிப்போடு கூடிய பதில் அவரிடமிருந்து கிடைத்தது.

"Sister our life is always at stake and I am ready to be killed at any moment- such is our life now"
(சிஸ்டர், எங்கள் உயிருக்கு எப்பொழுதுமே உத்தரவாதமில்லை. எந்த நேரத்திலும் நான்கொல்லப்படலாம்,அதற்கு நான் தயாராகவே இருக்கிறேன். எங்களது நிலைமை(வாழ்வு) இப்பொழுது இப்படித்தான்)

பஸ்ரியன் அன்று கூறிய வார்த்தைகள் தீர்க்கதரிசனம் போல் நிறைவேறிவிட்டனவே என்று எண்ணிக்கலங்கினார். அந்த உண்மைத் தொண்டனுக்கு தன்னால் இனிமேற்செய்யக்கூடியது அவரது ஆன்மசாந்திக்காக இறைஞ்சுவது ஒன்றே எனக்கருதினார். எனவே துறவறசபையினரை ஒருங்கிணைத்து ஒரு ஆன்மசாந்தி வழிபாட்டையும் திருப்பலியையும் ஒப்புக்கொடுக்க விரும்பினார்.

அருட்சகோதரி யோசப்பின் மெண்டிஸ் மட்டுமல்ல பஸ்ரியனை அறிந்த பலரும் அவருக்காகப் பகிரங்கமாக இரங்கற்பலிகள் ஒப்புக்கொடுக்க விரும்பினர். ஆனால் பஸ்ரியன் கொலைசெய்யப்பட்டாரா? அல்லது தென்னிந்தியாவுக்குத் தப்பிஓடிவிட்டாரா? என்பது நிச்சயமாகத் தெரியாத பட்சத்தில் பகிரங்கமாக இரங்கற்பலிகள் ஒப்புக்கொடுப்

பதற்கோ, அஞ்சலி செலுத்துவதற்கோ தெற்கின் தலைமைப் பீடம் அனுமதி அளிக்கவில்லை. மன்னார், யாழ் ஆயர்களின் கூற்றைவிட லங்கா புவத்தின் செய்திகள் உண்மையென அவர்கள் நம்பிக்கொண்டிருந்தனர். எனவே அரசாங்கத்தின் விசாரணைமுடிந்து முடிவுதெரியும் வரை பொறுத்திருக்கக் கூறினர்.

காத்திருந்தும் என்ன பலன்? கடைசியில் சகோதரி அவர்கள் இரங்கற்பலிக்கு ஏற்பாடு செய்தார். கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள திருக்குடும்பக்கன்னியர் மடத்தில் அந்த வழிபாட்டுக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இரங்கற் பலிக்குத் தலைமை தாங்கி நடாத்தும்படி திருத்தந்தையின் இலங்கைத்தூதுவரான மேதகு அம்புறோஸ் டீ பௌளி அவர் களுக்கு அழைப்பு விடுத்தார். முதல் சம்மதித்த திருத்தந் தையின் தூதுவர் அவர்கள் கடைசிநேரத்தில் தெற்குத் தலைமைகளின் சிந்தனைகளை ஏற்றுக் கொண்டவர்போல் அவ் வழிப்பாட்டில் தான் கலந்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார். எனவே, அன்றைய அ.ம.தி. கள் சபையின் துணைமுதல்வராயிருந்த அருட்திரு டல்ஸ்ரன் போர்ப்ஸ் அ. ம. தி. (Dulsteon Forbes o.m.i) அவர்கள் அவ்வழிபாட்டுக்குத் தலைமை தாங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டார். அதற்கு அவர் பூரணசம்மதம் தெரிவித்தார். ஏனெனில் அருட்திரு. டல்ஸ்ரன் போர்ப்ஸ் அவர்கள் கண்டி தேசிய குருமடத்தில் பஸ்ரியன் படித்த காலத்தில் குருமடத்தின் அதிபராகவும் விரிவுரை யாளராகவும் இருந்தவர். எனவே பஸ்ரியனை அறிந்த, அன்புசெய்த ஒருவர் அவ்வழிபாட்டினுக்குத் தலைமை தாங்குவது மிகப் பொருத்தமாகவும் இருந்தது. துறவற சபைச் சகோதரிகள், சகோதரர்கள் இதயபூர்வமாகக் கலந்து கொண்ட அந்த ஆன்மசாந்தி வழிபாடு உணர்ச்சிபூர்வமாக நடந்தேறியது.

திருத்தந்தையின் பிரதிநிதி அவர்களின் இந்தக் கடைசி நேர மனமாற்றத்துக்குக் காரணம் பஸ்ரியனது மரணம் அரசதரப்பால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது மட்டுமல்ல, அதிவண. அம்புறோஸ் டீ பௌளி அவர்களுக்கு முன்னர் திருத்தந்தையின் பிரதிநிதி அதிவண. ஞெட்டுண்ணே அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவமும் ஒரு காரணமாயிருந்தது. ஏனெனில் முன்னுள் பிரதிநிதியவர்கள் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் மீது கூடிய அனுதாபம் கொண்டிருந்த படியினுலேயே இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. திருத்தந்தையின் முன்னுள் பிரதிநிதியவர்கள் பற்றிய இச் செய்திகள் அன்றைய பத்திரிகைகளில் முதலாய் அடிபட்டன என்பதுவும் உண்மை.

இந்த இரண்டு காரணங்களையும் தவிர பஸ்ரியனது மரணத்தின் பெருமையையும், தியாகத்தையும் உணராத—உணர்ந்தும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காத—கொடுக்க விரும்பாத, தெற்கின் சிங்களக் கத்தோலிக்க திருச்சபையின் சில தலைமைகளே அதிமுக்கிய காரணிகளாய் இருந்தார்கள் என்பது கத்தோலிக்க அவதானிகள் பலரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இலங்கை வாழ் முழுக் கத்தோலிக்க சமூகத்துக்காகவும் தனது பிரதிநிதியாகத் திருத்தந்தை அவர்களால் நியமிக்கப்பட்ட அதிவண. அம்புறோஸ் டீ பௌளி அவர்களின் இந்த நடவடிக்கையானது, மன்னர் மறைமாவட்டத்தில் பஸ்ரியனை அறிந்து அன்பு செய்த அவருடைய சகோதரக் குருக்களுக்கு மிகுந்த கவலையையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. இந்த ஒருபக்கச்சார்பான செயலைக் கண்டித்து அவருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்தனர். அருள்திரு A. பிலிப்பு அவர்கள் குருக்கள் சார்பாக இக்கண்டனக் கடிதத்தை அனுப்பிவைத்தார்.

ஆயர் இல்லம்
மன்னார்
21—01—1985

மாட்சிமை தங்கிய
வண. அம்புறேசியோ டீ பௌலி
திருத்தந்தையின் தூதுவர்
கொழும்பு — 5

மாட்சிமை தங்கிய தூதுவர் அவர்களே!

கொழும்பில் உள்ள அருட்சகோதரிகள் அமார் மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு ஒழுங்குபடுத்திய பூசைப்பலியில் பங்குகொள்ள தாங்கள் பின் வாங்கியமை எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. தாங்கள் இந்த முடிவுக்கு வரக்காரணமாயிருந்த சூழ்நிலையை அறிந்து கொள்ள முடியாமலிருக்கின்றோம். மேரி பஸ்ரியன் அடிகளார் அரசபடையினரால் கொலை செய்யப்பட்டமையையும் அவரது உடலம் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டமையும் அச்சம்பவம் யாழ்ப்பாணம், மன்னார் ஆயர்களால் ஊர்ஜிதம் செய்யப்பட்டமையும் யாவரும் அறிந்த தொன்றாகும்.

தங்கள் நிலைப்பாட்டை நோக்குமிடத்து வட பகுதியில் பணிபுரியும் தங்கள் ஆயர்களின் உண்மைத்தனத்தையும் நேர்மையையும் தாங்களே சந்தேகிப்பதுபோல் தெரிகிறது. உங்களுக்குக் கீழ் பணிபுரியும் ஆயர்களின் உண்மைச் சாட்சியங்களைவிட, அரச தொடர்பு சாதனங்கள் சொல்வனவற்றையும் தெற்கில் இருந்து வரும் செய்திகளையுமே தாங்கள் நம்புவதாகப் படுகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தாங்கள் ஒரு ராஜதூதுவர். ஆனால் எமக்குத் தாங்கள் திருத்தந்தையின் பிரதிநிதியாகச் செயற்படும் கிறிஸ்துவின் மேய்ப்பர். ஆகவே எந்தச் சந்தர்ப்பததிலும் தாங்கள் சத்தியத்துக்குச் சான்று பகர்வதையே நாங்கள் எதிர்

பார்க்கிறோம். இறந்த குரவர் ஒருவரது ஆன்மசாந்திப் பலியை திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள் ஒப்புக்கொடுக்கும் செயலானது அகிலத் திருச்சபையின் அனைத்து விசுவாசிகளின் மட்டில், குறிப்பாக ஒருவரை இழந்து வருந்துபவர்கள் மட்டில் தாய்த்திருச்சபைக்குள்ள கரிசனையையும், ஒன்றிப்பினையும் சிறப்புறக் காட்டுவதாகவே நாம் கருதுகிறோம்.

அருள்திரு மேரி பஸ்ரியனுக்கு நடந்தது எங்களில் பலருக்கும் நிகழலாம். அந்த வேளைகளிலும் தாங்கள் இவ்வாறே கைநெகிழலாம் என அஞ்சுகிறோம். தெற்கின் திருச்சபை இக்கொடுங்கொலையைக் கண்டித்துக் குரல் எழுப்பத் தவறிவிட்டது. அகவே அவர்களும் நீதியின்பால் நிற்காமல் எம்மைக் கைவிட்டு விட்டார்கள். என்றே நாம் உணர்கின்றோம். கைவிடப்பட்டமை, பாதுகாப்பின்மை, ஒத்தாசையின்மை, எமது நிலைப்பாட்டினைப் புரிந்து கொள்ளாமை ஆகிய இந்த உணாவலைகளே எம்மை இம்மடலைத் தங்களுக்கு எழுதத் தூண்டியது.

மேதகு ஆண்டகை அவர்களே! எமது உணர்வுகளையும்—எத்தகைய அவலச் சூழ்நிலையில் நாங்கள் இறை அரசுக்காக உழைத்து வருகிறோம் என்பதையும் தாங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

தங்கள் மன்ருட்டுக்களை எதிர்பார்த்து நிற்கும்.

கிறிஸ்துவில் கீழ்ப்படிவுள்ள

அருள்திரு A. பிலிப்பு

மன்னர் மறைமாவட்டக் குருக்கள் சார்பாக

ஆயர் இல்லம்
மன்னர்.

இக் கடிதத்துக்குத் திருத்தந்தையின் பிரதிநிதி அவர் களிடமிருந்து 6-2-1985 ல் பதில் வந்தது. அதில் முக்கிய மான பகுதிகள்.

......''உங்கள் உணர்வுகளை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. உங்கள் நிலையினில் இருந்திருந்தால் நானும் உங்கள் நிலைப்பாட்டினையே வெளியிட்டிருப்பேன்''.

''திருப்பலியில் யான் கலந்து கொள்ளாதது மேரி பஸ்ரியனது மறைவையிட்டு மன்னார், யாழ் ஆயர்கள் உறுதிப்படுத்திய கூற்றுக்களை யான் சந்தேகித்தேன் என்ற காரணத்தால் அல்ல. அதன் (திருப்பலியின்) கருத்துகளுக்காக என் உள்ளத்தாலும், செபத்தாலும் இணைந்துள்ளேன் என்ற எனது நிலைப்பாட்டினை அதனை ஒழுங்கு செய்தவர்களுக்கு யான் எடுத்துக்கூறியுள் ளேன். யான் இதில் கலந்து கொண்டிருப்பின் அது பத்திரிகைகளில் பிரசுரமாகி, இச்சிக்கலான சூழ்நிலையை இலகுவாக்க யான் எடுக்கும் முயற்சிகளுக்கு தப்பான விளக்கங்களைக் கொடுக்கக் கூடும் என்பதனாலேயே. நிகழ்வுகளை ஒரு பரந்த அடிப்படையில் பார்க்கவேண் டிய நிலையில் உள்ளதும் அந்தவகையில் எந்த இடத் திலும், எந்த நேரத்திடும் ஓர் இணக்கத்தையும், புரிந் துணர்வையும் ஏற்படுத்த வேண்டியுள்ளதுமான என் நிலையைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். உங்கள் புரிந்துணர்வையும் செபத்தையும் வேடிண்நிற் கிறேன்......''

இக் கடிதமானது மேதகு. அம்புறோஸ் டீ பௌலி அவர்கள், அனைத்துக் கத்தோலிக்கரினதும் தந்தையான திருத்தந்தை அவர்களின் பிரதிநிதி என்பதை விட அவர்கள் ஒரு சிறந்த இராஜதந்திரி என்பதையே துல்லியமாக எடுத்துக் காட்டி நிற்கின்றது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் பிரதிநிதி அவர்கள் மன்னா ருக்கு வருகை தந்திருந்தபோது மன்னார் மறைமாவட்டக்

குருக்கள் இது விடயம் பற்றி நேரடியாகவே அவரோடு விவாதித்தனர். அப்பொழுது அவர்கள் முக்கியமான இரண்டு விடயங்களை முன்வைத்தனர்.

I ''தங்களை, திருத்தந்தை அவர்களின் பிரதிநிதியாகத் தான் நாம் கருதியிருந்தோம். ஆனல், தாங்களோ அரசாங்கத்தினை ஆதரிக்கும் அசல் இராஜதந்திரியாகவே நடந்து கொண்டீர்கள்.

II தங்களால் நியமனம் செய்யப்பட்ட ஆயர்கள் இருவரையும் தாங்களே நம்பாதபோது, நாங்கள் அவர்களை நம்புவோம் என்று தாங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?''

இவற்றுக்கும் அவர் சாணக்கியமான பதில்களைக் கூறி நிலைமையைச் சமாளித்துக் கொண்டார்.

இவையெல்லாம் இலங்கையின் தெற்குக் கத்தோலிக்கத் திருச்சபையின் மனநிலையானது பஸ் யனது மரணத்தில் மட்டுமல்ல தமிழர் தம் பிரச்சனைகள் மீதும் உள்ள ஈடுபாடுகள் எந்த அளவிலானது என்பதற்குச் சான்றுகளாகும்.

20-6-1986இல் தோலகட்டி ஆச்சிரமத்தில் 66வயதான செபமாலைத்தாசர் சபைச் சகோதரர் மனுவல் வென்சஸ்லோஸ் அவர்கள் பாதுகாப்புப்படையினரால் வதைத்துக் கொலை செய்யப்பட்ட போது—

வடபகுதி ஆலயங்களில் தஞ்சம் புகுந்தோர் சுட்டுக் கொலை செய்யப்பட்டபோது—

ஆலயங்கள் குண்டுகளால் தாக்கப்பட்டபோது இலங்கையின் தெற்கின் திருச்சபை கிறிஸ்தவ சகோதரத்துவ உணர்வுதானுமற்று அஞ்சிநின்ற வரலாற்றைக் கண்டோம்.

ஆனல்,

தீவிரவாதிகளால் பௌத்த துறவிகள் கொலைசெய்யப் பட்டபோதும்—

மனிதநேய அடிப்படையில் இந்திய அரசு உணவுப் பொதிகள் போட்டபோதும்— "அநியாயம், அக்கிரமம்" என்று கொடிபிடித்துக் கூச்சலிட்ட தெற்குத் திருச்சபையின் குருக்கள், துறவிகள் ஊர்வலம் நடத்திய பிறர் சினேகப் பிர கடனத்தையும் பார்த்துவிட்டோம்—

இதற்கெல்லாம் கோஷம் போட்ட எமது இரத்த உறவு கள் பஸ்ரியன் படுகொலை செய்யப்பட்டபோது மட்டும் கொதிக்கவில்லையே!

சத்தியம் காக்கச் சஞ்சலங்களை ஏற்ற ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவருக்கு 300ஆம் ஆண்டு விழாவெடுத்து முத்திப்பேறு பட்டத்துக்காக ஒரே குரலில் பிரார்த்திக்கும் நாம் இதுபற்றியும் சற்றுச் சிந்திப்போம்.

## மக்கள் மன உணர்வுகள்

பஸ்ரியனது மரணச் செய்தி கேட்டு அவரை அன்பு செய்த அவரால் அன்பு செய்யப்பட்ட அத்தனை இதயங்களும் அழுது வடித்தன. துயரத்தால் குமுறித்துடித்தன 'அவரது பூதவுடலைத்தானும் காணக் கிடைக்கவில்லையே' என்று வெதும்பி வெடித்தன.

வங்காலை மக்கள் மட்டுமல்ல, மானிப்பாய், மல்வம், உடுவில் மக்கள் தமது சொந்தப் பிள்ளையையே பறிகொடுத்து விட்ட உணர்வில் துக்கம் கொண்டாடினர். "பஸ்ரியன் இந்தி யாவிற்குத் தப்பி ஓடிவிட்டார்" என்று அரசாங்கம் செய்யும் பொய்ப்பிரசாரம் உண்மையாக இருக்கக் கூடாதா என்று கூட ஏங்கினர்.

மன்னார், யாழ். ஆயர்கள் பலவழிகளாலும் பஸ்ரிய னது உடலையாவது பெறுவதற்காக முயற்சித்தார்கள்; முடிய வில்லை பஸ்ரியனது தந்தையார் மனுவேற்பிள்ளை அவர்களும் அரசாங்கத்தில் உயர்பதவியில் உள்ள தனது நண்பர்கள், அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தனது மகனது உட லைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்தார். அனைத்து முயற்சி களுக்கும் பின்னர் இறுதியாக "5ஆம் திகதி இரவு பஸ்ரியன் வங்காலைக் கோவிற் பங்குமனையில் இருக்கவில்லையாம்" என்ற பதிலே அவருக்குக் கிடைத்தது.

8-1-85 பஸ்ரியனது ஆன்ம சாந்திக்காக யாழ். பேரா லயத்தில், யாழ் ஆயர் அவர்கள் கூட்டுப்பலி ஒப்புக் கொடுத் தார். பட்டினத்தின் பல்வேறு பங்குகளில் இருந்தும் பல்லா யிரக்கணக்கான மக்கள் பஸ்ரியனது படங்கள், சுலோக அட் டைகள் தாங்கி ஊர்வலமாக வந்து அத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

10-1-85இல் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் மறைமாவட்ட முதல்வர் அருள்திரு மைக்கல் சாமி அவர்களின் தலைமையில் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. மானிப்பாய் பங்கின் ஒவ்வொரு ஆலயத்தில் இருந் தும் மக்கள் கண்டனச் சுலோக அட்டைகள், படங்கள், பிண வண்டி அலங்காரங்கள் சகிதம் ஊர்வலமாக வந்து கலந்து கொண்டனர்.

இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவருக் காக பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டன ஊர்வலம் நடத்தினர் என்றால் அது பஸ்ரியன் எந்த அளவுக்கு மக்கள் இதயங்களை வென்றுள்ளார் என்பதற்குச் சான்றேயாகும்.

பஸ்ரியன் மானிப்பாயில் பணிபுரிந்த காலத்தில் கத் தோலிக்க மறையைத் தழுவிக்கொண்ட புத்தரப்பா என அழைக்கப்படும் ஒரு முதியவர், பஸ்ரியன் இறந்த செய்

தியைக் கேள்வியுற்றதும் மண்ணிலே புரண்டு அழுதார். அம் முதியவர் இந்த ஆன்மசாந்திப் பலி நடைபெறும் வேளையில் "எட பஸ்ரி எங்க நீ போய்ற்ருய்?" என்று கூவியழ கோவி வில் திரண்டிருந்த மக்கள் திரள் சோகம் தாங்க மாட்டாது கலங்கித் தவித்தது.

11-1-85இல் பஸ்ரியனது சொந்த ஊரான இளவாலை யில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் அருள்திரு T. E. தேவ ராஜன் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்றும் மக்கள் பல ஆலயங்களில் இருந்தும் சுலோக அட்டைகள், படங்கள் தாங்கி ஊர்வலமாகவே வந்து கலந்து கொண்டனர்.

பஸ்ரியன் இறந்த 11ஆம் நாளன்று மல்வம் கிராமத் தின் திருக்குடும்ப ஆலயத்தில் பஸ்ரியன் பெயரால் அக்கிராம மக்களால் காலை முதல் மாலை வரையில் அன்னதானம் வழங் கப்பட்டது. அதே தினத்தில் பஸ்ரியன் நினைவுச் சின்னமாக ஆலயமணிக் கூண்டுக் கோபுரத்துக்கு அடிக்கல் நாட்டப்பட் டது. பஸ்ரியனல் உருவாக்கப்பட்ட அம்மக்கள் மூன்றே மாதத்துள் கோபுரத்தைக் கட்டி முடித்ததுடன் ஆறுமாதத் துள் அம்மணிக் கூட்டின்மேல் பஸ்ரியனுக்குச் சிலையும் எழுப் பினர்.

6-2-85இல் இளவாலையில் பஸ்ரியன் இறந்து 31ஆம் நாள் நினைவுதினம் அனுட்டிக்கப்பட்டது. வீதி எங்கும் தோரண அலங்காரங்கள் செய்யப்பட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. 30 குருக்கள் 40 கன்னியர்கள் உட்பட 2000 க்கும் அதிகமான மக்கள் அங்கு கலந்து கொண்டனர். பஸ்ரியனது வீட்டில் அவரது உருவப்படம் திரைநீக்கம் செய் யப்பட்டது 500க்கும் அதிகமானவர்களுக்கு அங்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

அதே தினத்தில் வங்காலை புனித அன்னம்மாள் ஆல யத்திலும் மன்னர் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் அவர்

கவின் தலைமையில் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பஸ்ரியனின் கொலை செய்யப்பட்ட அறைவீட்டினில் இருந்து மக்கள் திரள்முன்னே செல்ல அவரது புகைப்படம் ஊர்வல மாக எடுத்துச் செல்லப்பட்டது. அவரது உருவப்படம் ஆல யத்துள் கொண்டுவரப்பட்டபோது, ஒரு முதிய பெண் ''ஐயோ என் மகனே'' என்று பலத்த சத்தமாக அழுதார். அதனைத் தொடர்ந்து ஆலயம் முழுவதும் அழுகைப் பிரலா பம் பேரொலியாகத் தொடர்ந்தது துயரம் தாங்க முடியாத மக்கள் ''கோ'' வென வாய்விட்டு அழுதனர். அந்தக்காட்சி யைக் காணச் சகிக்கமுடியாது பலிசெலுத்தவந்த குருக்களும் சேர்ந்து அழுதனர். இந்த அழுகை ஒலி அடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் சென்றது. அதுவரையில் திருப்பலியைத் தொடங்கமுடியாது ஆயரவர்கள் பொறுத்து நிற்கவேண்டி யிருந்தது.

''எங்களையெல்லாம் கொன்றுவிட்டு சுவாமியை மட் டும் உயிரோடு விட்டார்களில்லையே பாவிகள்'' என்று கூறிய முதவர் அந்தமக்கள். மக்கள் இதயங்களை எல்லாம் வென்ற பஸ்ரியன் அவர்கள் நெஞ்சில் இமயமாக உயர்ந்து நின்றார் என்பதற்கு இதுவே சான்று.

அவரது மரணம் ஏற்படுத்திய தாக்கம் இளைஞர்களுக் கும் பொதுப்பணியாற்றிய குருக்களுக்கும் பெருந்தாக்கமாக விருந்தது. அதிலும் வங்காலை மக்களுக்கோ ஈடுசெய்ய முடி யாததாகவிருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப்பின்னர் வங்காலையில் இருக்கவே அஞ்சி பல இளைஞர்கள் இந்தியாவுக்கு அகதிகளா கச் சென்றனர். அவரது மரணத்தின் ஓராண்டு நினைவுநாளை மண்டபம் அகதிமுகாமிலே கொண்டாடினர். வங்காலையில் வாழ்ந்த மக்கள், ஆலயவளவில் அவர் இறந்த பங்குமனையின் முன்னே அவருக்குச் சிலை எழுப்பினர்.

வங்காலை மகாவித்தியாலயத்தின் புதிய கட்டிடம் பஸ்ரியன் அங்கு பணிபுரிந்த காலத்திலேயே கட்டப்பட்டது.

வங்காலை மண் தந்த மகனுன - மன்னாரின் முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. பி. சூசைதாசன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணத்தினலே அப்புதிய கட்டிடம் எழுப்பப்பட்டது. ஆனல் அம்மண்டபத்துக்குத் தேவையான அத்திபாரம் போடுவதற்கு வேண்டிய ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்தை வங்காலை மக்களே கொடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. அப்பணமானது அவ்வூர் மக்களாலேயே வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அதனை மக்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கத் தூண்டிய பங்களிப்பு பஸ்ரியனைச் சார்ந்ததே என்று அவ்வூர்மக்கள் இன்றும் நன்றியோடு கூறுகின்றனர்.

திரு. பி. சூசைதாசன் அவர்களின் முயற்சியால் எழக் காரணமான அக்கட்டிடத்துக்கு 'சூசைதாசன் மண்டபம்' என்று பெயர் பொறிக்கப்பட்டது. ஆனல், பஸ்ரியனை நேசித்த இளைஞர்களோ அதற்கு 'பஸ்ரியன் மண்டபம்' என்று பெயரிடக்கோரினர், வாதாடினர். அதனையும் மீறிய ஒருசிலர் அதிற் பொறிக்கப்பட்ட பெயரின் முன் எழுத்துக்களை இரவோடு இரவாக அகற்றிவிட்டனர். யான் அங்கு சென்றகாலத்தில் அம்மண்டபத்தின் பெயர் ''ன் மண்டபம்'' என்றே பொறித்திருக்கக் காணப்ப்பட்டது; அந்த ''ன் மண்டபம்'' ''சூசைதாசன் மண்டபமா?'' அல்லது ''பஸ்ரியன் மண்டபமா?'' என்று முடிவுசெய்யப்படாத நிலையிலேயே அன்றுவரையில் இருந்தது. இதில் மண்டபத்துக்கு பஸ்ரியனது பெயரைப் பொறிப்பது என்பது முக்கியமல்ல பஸ்ரியனது பெயர் மக்கள் இதயங்களில் எத்துணை ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ளது என்பதற்கான அடையாளமே ஆகும்!

பஸ்ரியன் மீது அதி தீவிரமான அன்பைச் செலுத்துகின்ற, அவருக்காக எதையும் செய்யக் கூடிய அஞ்சாநெஞ்சங்களும் வங்காலையில் இன்றுமுள்ளன. இந்த அணை கடந்த காட்டாற்று வெள்ளம் போன்ற அன்பின் முன்னல்- அவர்மீது,

அவரது சுயநலமற்ற பணிகளின் மீது அழுக்காறு கொண்டு அவ்வப்போது எழுந்த பகைப் புழுதிகள் யாவும் அடித்துச் செல்லப்பட்டு விட்டன.

## வெளிநாடுகளில்

பஸ்ரியனது பிறந்த நாட்டிலே அவருக்கு அஞ்சலி செலுத்தத்தானும் அஞ்சிக்கொண்டிருந்த அதேவேளையில் வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான பலத்த கண்டனங்கள் எழுந்தன.

குறிப்பாக அமெரிக்காவில் அவரது தாயாரும் சகோதரர்களும் இருந்த படியால் அமெரிக்கப் பத்திரிகைகள் அவரது இறப்புச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்பக்கச் செய்திகளாக வெளியிட்டன. அவற்றுள், "The Patriot", "Ledger", "Daily Transcript" "The Boston Globe" "The Universe "The Times" "Catholic Herald" மற்றும் "The Citizen" "The Gazette" "Bury Messenger" போன்ற பத்திரிகைகள் ஒழிவு மறைவின்றி உண்மைகளைப் பகிரங்கப் படுத்தின. லண்டன் பத்திரிகையான "The Times" தனது 19-1-1985 இதழில் "Tamil martyr without Corpse" எனும் தலைப்பினைக் கொடுத்து அவரை ஒரு மறைசாட்சியாக்கிச் செய்தியினை வெளியிட்டிருந்தது. "Redwood crozier" எனும் பத்திரிகையில் கலிபோர்னிய ஆயரான மேதகு ஹேர்லி அவர்கள் "The story of a Martyr without Corpse" எனும் தலைப்பில் பஸ்ரியனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பினையும், அவர் சேவையையும் விபரித்து ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில் பஸ்ரியனது பூதவுடல் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அங்கு எழுந்தன. பஸ்ரியன் குடும்பத்தவர்களின் நண்பர்களும், சில தனவந்தர்களும் அதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்

கொள்ளும்படியும் அதற்காய செலவுகளைத் தாம் பொறுப்பேற்பதாகவும் தாயாரையும், சகோதரர்களையும் கேட்டுக் கொண்டனர்.

அதன்படி உவோல்போலின் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் திரு. பிறெய்ன் டொனலி அவர்கள் மூலம் அமெரிக்க அரசிடம் விண்ணப்பித்தனர். "எனது மகனது உடலை என்னிடம் சேர்ப்பிக்க தங்கள் அதிகாரத்தைப் பயன் படுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் உவோல்போல் நற்கருணைநாதர் ஆலயத்தின் புனித பிரான்சிஸ் சேமக்காலையில் எனது மகனின் உடலை நல்லடக்கம் செய்ய உதவுமாறு வேண்டுகின்றேன்" என்று பஸ்ரியனது அன்னையார் விண்ணப்பித்தார். அமெரிக்க அரசு இலங்கையின் அமெரிக்கத் தூதரகத்துக்கு உடன் செய்தி அறிவித்து விசாரணைகளை மேற்கொண்டது.

லண்டனில் வாழும் பஸ்ரியனது சகோதரி திருமதி ஆன் பற்றிமா இராஜசிங்கம் அரசின் வெளிவிவகார அமைச்சுக்கு பஸ்ரியனது படுகொலையைப் பற்றி முறையிட்டு 6-1-85-ல் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்தார். வெளிவிவகாரஅமைச்சகமும் இலங்கைத் தூதரகத்தோடு தொடர்பு கொண்டு விசாரணை நடாத்தியது.

விவகாரம் அத்துடன் முடிந்துவிடவில்லை. சில நாட்களில் லண்டனுக்குத் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அலிஸ்ரர் பேர்ட், மற்றும் சிமாட்டி யங் ஆகியோர் சந்தித்து இப்படுகொலை பற்றிக் கேள்விமேல் கேள்விகேட்டுத் திக்குமுக்காட வைத்தனர்.

கனடாவில் ஜனவரி 20-ம் திகதி ஞாயிறு அன்று 400க்கும் அதிகமான தமிழர்கள் ஒன்று திரண்டு பஸ்ரியனது

படுகொலையைக் கண்டித்து ரொரண்டோவில் இருந்து ஒட்டாவா வரை கண்டனச் சுலோகங்கள் தாங்கியவண்ணம் ஊர்வலமொன்றினை நடத்தினர். ஓட்டாவாவில் இருந்த இலங்கைத் தூதுவர் இவர்களுக்கு முகம்கொடுக்க அஞ்சி ஒழிந்து கொண்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

## Note by the Editors of SPECIAL REPORT

"The officials of the Srilankan H. C. including the High Commissioner were hiding inside their residence and the office and were watching the demonstration"

"The Citizen'' Ottawa
Monday, January 21, 1985

இவ்விதமாக, பல இடங்களில் இருந்தும் எழுந்த கண்டனங்களும், நெருக்குதல்களும் இலங்கை அரசாங்கத்தையும், பாதுகாப்பு அமைச்சரையும் திணறடித்தன. இவை எதுவும் அழிக்கப்பட்டுவிட்ட பஸ்ரியனது உடலை மீட்டுத்தருவதற்குத் துணை நிற்கவில்லையென்றாலும், கத்தோலிக்க குருக்கள்மீது கண்மூடித்தனமாக நடவடிக்கை எடுத்துவந்த அராஜக சக்திகளை நின்று நிதானிக்க வைத்தன.

பஸ்ரியனது மரணத்தின் மட்டில் எமது நாட்டின் தென்னகக் கத்தோலிக்க சமூகமும், தலைமைகளும் காட்டிய அதிதீவிர அஹிம்சை போக்கின் பயன்தானோ என்னவோ 10-11-87ல் பதுளை, புத்தள எனும் இடத்தில் மலையமக்களின் விடிவுக்காக உழைத்த உத்தமன், தூய துறவி, சமூகப் பணியாளன், இறைபணியாளனான சிங்களக்குரவர் அருட்திரு மைக்கல் றொட்றிகோ அ. ம. தி. அவர்களை திருப்பலி ஒப்புக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே துடிக்கத் துடிக்கச் சுட்டுக்கொன்றனர் கயவர்கள். அந்த உத்தம துறவியின் ஆன்மா சாந்தியடையட்டும்.

பஸ்ரியனது உறவினர்கள், நண்பர்கள் இருந்த இடமெலாம் அவருக்காகத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப் பட்டன.

10-1-85 உவோல்போலில் அவரது தாயார், சகோதரர் கள் நண்பர்களின் ஏற்பாட்டின் பேரில் நற்கருணைநாதர் ஆலயத்தில் வெகு விமரிசையான முறையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் இரண்டு ஆயர்களும், ஏழு குருக்களும் கலந்து கொண்டனர். இக்குருக்கள் குழுவில் ஒருவரான கரவையூர்ச் செல்வம் அவர்கள் பஸ்ரியனைப் பற்றிய பேருரை நிகழ்த்தினார்.

16-1-85 லண்டன் பியூரி (Bury)யில் உள்ள கார்டியன் ஏஞ்சல் ஆலயத்தில் Tamil Union of Herts. பஸ்ரியனுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

20-1-85 பஸ்ரியனது பெயர்கொண்ட புனிதரான செபஸ்தியார் தினமன்று கனடா ரொறன்டோவில் குருக்கள் இருவர் இணைந்து அவரது ஆன்மசாந்திக்காககத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

9-2-85 பஸ்ரியன் இறந்த 31-ம் நாள் நிறைவு தினத் தன்று கனடா, மொன்றியலில் ஒரு ஆயர், ஏழு குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்க 2000த்துக்கும் அதிக மான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

25-4-85 பஸ்ரியனது குருத்துவதினத்தின் 10வது ஆண்டு நிறைவுதினமான அன்று உரோமாபுரியில் வாழ்ந்த பஸ்ரியனது இலங்கை, இந்திய நண்பர்களான குருக்கள், கன்னியர்கள் சேர்ந்து புனித இராயப்பர் கலாசாலையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

27-4-85 பொஸ்ரன் பேராலயத்தில் பஸ்ரியனது குருத் துவத்தின் பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக கருதினல் மேதகு லோ அவர்களின் தலைமையில் 3 குருக்கள் இணைந்து பலி ஒப்புக்கொடுக்கப் பெருந்தொகை யான மக்கள் கலந்துகொண்டனர்.

அத்திருப்பலியில் பஸ்ரியனது பெற்றேரும் (பஸ்ரியனது தந்தையார் மனுவேற்பிள்ளை அவர்கள் மகன் இறந்த ஒரு மாதத்தின் பின்னர் அமெரிக்கா சென்றுவிட்டார்) சகோதரர் குடும்பத்தவரும் கலந்துகொண்டனர். பஸ்ரியனது மரணத் தின் பின்னர் அவரது தாயார் மிகவும் தளர்ச்சியுற்று நோயாளியாகி விட்டார். அன்று திருப்பலிக்குப் போகு முன்னர் தம் உணர்ச்சிகளை அடக்கமாட்டாதவர்களாக அனைவரும் கலங்கினர்.

அவருடைய இந்தப் பத்தாவது குருத்துவதினத்தில் "தம்பி இருந்திருந்தால் அவர்தான் இங்குவந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து எங்கள் எல்லோரையும் மகிழவைத்திருப் பார். நாங்கள் எல்லோரும் அதுக்குக் கொடுத்துவைக்காத பாவிகளாகிப் போனேம்" என்று அன்ரன் வாய்விட்டுக் கூறிக் கலங்கினர்.

பலிப்பீடத்துக்கு அண்மையில் சிறிய மேசைமீது பஸ்ரி யனது உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. படத்தினை மலர் மாலை அலங்கரித்துக்கொண்டிருந்தது. படத்தின் இருமருங்கி லும் குத்துவிளக்குகள் ஒளி உமிழ்ந்துகொண்டிருந்தன.

திருப்பலி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பெருவிழாக் கொண்டாடவேண்டிய தினம் விழாவின் கதாநாயகன் பஸ்ரியனே உயிரோடு இருந்து பலி ஒப்புக்கொடுக்கவேண்டிய தினம் "இன்று மகனே உன்படத்துக்கல்லவா மாலையிட்டு விளக்கேற்றி மன்றுடுகின்றேம்" என்று அழுது வடித்தது அன்னையின் இதயம். அப்படியே மயக்கமுற்று விழுந்தார். திருப்

பலிக்கு வந்திருந்த டாக்டர்கள் அவருக்குச் சிகிச்சையளித்தனர். உடன் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்தனர். அதற்குள் மயக்கம் தெளிவுற்ற அன்னை வைத்தியசாலைக்குச் செல்ல விரும்பாது மறுத்து மகனுக்காக ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலே கலந்துகொண்டார். அந்த அன்னையின் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்"?

திருப்பலி முடிந்ததும் பொதுக்கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் இலங்கையின் இனப்பிரச்சனை, அதில் பஸ்ரியனது பங்களிப்பு, சமூக சேவைகள் பற்றியெல்லாம் விளக்கமளிக்கப்பட்டது. இதில் கிறிஸ்தவர்கள் அல்லாத பலரும் கலந்துகொண்டனர்.

25-5-85 நியூயோர்க்கில் தமிழ் இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இரண்டு குருக்கள் பஸ்ரியனுக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இவைதவிர இந்தியா, சாம்பியா, மலேசியா, கலிபோர்னியா போன்ற இடங்களில் எல்லாம் பஸ்ரியனது ஆன்ம சாந்திக்காகத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

பஸ்ரியன் ஒரு ஊருக்காக-சமூகத்துக்காக-மதத்துக்காக மட்டும் வாழ்ந்தவரல்லர். அவரது வாழ்வும் மரணமும் முழு மனித விடுதலை வாழ்வுக்காக அமைந்தது என்பதையே பல்வேறு நாட்டிலும் அவருக்காக அஞ்சலிகள் செலுத்தப் பட்டதில் இருந்து நாம் அறிய முடிகிறது.

இளவாலைப் பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறந்த பஸ்ரியன் பிறந்தது வவுனியாமண்ணில், குருப்பட்டம் பெற்றது யாழ்ப்பாணத்தில், இறந்தது மன்னார் மண்ணில் ஆம் அவர் பிறப்பு-வாழ்வு இறப்பு எல்லாம் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் தமிழ்ப் பண்பாட்டில் கலந்துள்ளது எனலாம்.

10-1-85 உவோல் போல், நற்கருணை நாதர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட இரங்கற்பலியில் அருள்திரு சா. ம. செல்வரெட்ணம் O.M.I. (கரவையூர்ச் செல்வம்) அவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்திய பேருரையின் தமிழாக்கத்தை முழுமையாக இங்கு தருகிறோம்.

"உலக மக்களுக்காக தம் உயிரைத் தியாகம்செய்த இயேசுக் கிறிஸ்துவின் இறப்பையும், உயிர்த்தெழுதலையும் குறிக்கும் இப்புனித விழாவிற்காக இந்த மாலை வேளையில், இவ்வழகிய ஆலயத்தில் யாமெல்லாரும் குழுமியுள்ளோம். எமக்காகத் தமது உயிரை அர்ப்பணித்த அருள்திரு பஸ்ரிய னுக்காக மன்றாட இங்கு கூடியிருக்கின்றோம். அவர் எங்கள் எல்லோருக்காகவும் கிறிஸ்துவிடம் பரிந்து பேசுவார் என்ற நம்பிக்கையில் இங்கு சேர்ந்துள்ளோம். இவரை இழந்து தவிக் கும் அன்புப் பெற்றோர்கள், அவரது ஒரே தங்கை, இரு சகோதரர்கள், மைத்துனிகள், உறவினர்கள், நண்பர்கள். இவர்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் வேண்ட இங்கு வந்துள்ளோம். அருள்திரு பஸ்ரியன் மன்னார் மாவட்டத்து ஏழைகளுக்குத் தொண்டாற்ற அங்கே சென்றார். குருக்களும் கன்னியரும் இன்றும் அங்கே ஆபத்தான நிலையில் வாழ்கின் றார்கள் இவர்களுக்காகவும் இறைவனை இறைஞ்சுவோமாக. பஸ்ரியன் அடிகளாரைப் போன்று ஆன்ம, சமூகத் தொண் டாற்றும் தலைவர்கள் மேலும், மேலும் தேவைப்படுகின்ற இந்த நம்பிக்கையற்ற வேளையில் இவரைப் பறி கொடுத்து இனப்படு கொலைகளுக்குள்ளாகி அல்லலபடும் ஈழத்தமிழர் களுக்காகவும் வேண்டுவோமாக.

முப்பத்தாறே வயதான, சோர்வின்றி உழைக்கும் ஓர் உத் தம குருவை இழப்பது அம்மாவட்ட ஆயருக்கும், சேர்ந்து ழைத்த குருக்கள், கன்னியர்களுக்கு, அவரது பெற்றோர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். தங்கள் பிள்ளைகளை இறை பணிக்கு முழுமையாக அர்ப்பணிக்கும் பெற்றோர்கள் ஒன்றை மட்டுமே அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். தங்கள்

மரணப்படுக்கையில் தமக்குத் தேற்றரவாக அருகிலிருந்து, ஆசீர்வதித்து, அபிஷேகம் பண்ணி இறுதியில் தம்மை அடக்கம் செய்வார்கள் என்ற பெரும்பாக்கியத்தையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர். தங்களுடைய மகன் குரூரமாய்க் கொலை செய்யப்பட்டதால் அப்பாக்கியத்தை இழந்த பெற்றோர்களின் இதயம் படும் வேதனையை, சோகத்தை, இழப்பை வார்த்தைகளால் வடிக்க இயலாது. அன்புப் பெற்றோரே! இத்துயரவேளையில் உங்களுக்கு ஆறுதல் சொல்ல எங்களிடம் வார்த்தைகள் இல்லை. ஆனால் உங்களது சொல்லொணாத் துயரத்தில் நாமும் ஒன்றித்துள்ளோம். மேலும், மன்னார், யாழ்ப்பாணம் வாழ் கத்தோலிக்க மக்களோடும், அங்கு வாழும் தமிழினத்தவரோடும் அவர்கள் கொண்டுள்ள சோக இழப்பில் நாமும் பங்கு கொண்டுள்ளோம் என்று இங்கு குழுமி இருப்பவர்கள் சார்பில் சொல்லிக் கொள்ள விழைகின்றோம்.

இலங்கையில் இன்று நிலவும், மனிதாபிமானமற்ற கொலைகள் நிகழும் சோகச் சூழ்நிலையில் பஸ்ரியன் அடிகளாருக்காக இப்படியொரு திருவிருந்து வழிபாட்டை, எம் சொந்த உயிர்களுக்கு ஆபத்தில்லாமல் பகிரங்கமாகவும், சுதந்திரமாகவும் அங்கு நடாத்துவது என்பது சந்தேகத்துக்குரிய தொன்றாகும். எனவே, இவ்விழாவைக் கொண்டாடக் கோவிலைத் தந்துதவிய உவோல்போல் நகர் நற்கருணைச் சபைச் சகோதரர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவக்க வந்திருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். புரோக்டன் மாவட்டத்து ஆயர் மேதகு டானியேல் ஹேர்ட் அவர்கள் வருகை தந்து இவ்விழாவிற்கு தலைமைதாங்கிக் கௌரவப்படுதியமைக்கு பெருமையோடு நன்றி கூறுகின்றோம். இங்கு வருகை தந்துள்ள பொஸ்ரன் நகரின் ஆயர் மேதகு லோறன்ஸ் ஜே. றைலி அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. இத்தனைபேர் இங்கு குழுமி இருக்கும் இவ்விழாக் காட்சி கிறிஸ்துவின் மறையுடற் கொள்கையின் பெருமையையும், கத்தோலிக்க திருச்சபையின் சர்வதேசத் தன்மையின் மகத்துவத்தையும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

எமது வாழ்வு மிகவும் அழகானது, ஆகவே அது கொண்டாடி மகிழற்பாலது. ஆனால் இறப்பு அதனை ஆட்கொள்ளும் போது அதன் அர்த்தம் சிந்தனைக் கெட்டாத பூடகமான தொன்றுயுள்ளது. நான் சந்தித்த நண்பர்களுள் பஸ்ரியன் அடிகளாரைப் போன்று தம் வாழ்வை முழுக்க முழுக்கக் கொண்டாடி மகிழ்ந்தவர்கள் மிகச்சிலரே. எந்நேரமும் கலகலப்பாயிருந்தார். பிறருக்கும் அதை ஊட்டினர். ஏழைகளின், அகதிகளின், ஒடுக்கப்பட்டவர்களின் ஆர்வமுள்ள தொண்டனுகத் திகழ்ந்தார். எம்மையெல்லாம் அவ்வழியில் ஊக்குவிக்கும் வழிகாட்டியாகவும் விளங்கினர் இளவயதினராகவிருந்தும் அபார ஆன்மீக, சமூக, தலைமைத்துவ இயல்புகளைக் கொண்டிருந்தார். குருத்துவ மாணவனயிருக்கும் போதே இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி அதிபர் பொறுப்பினையும், பின்னர் நெடுந்தீவுப் பங்குப் பொறுப்பினையும் ஏற்றுத் திறம்படச் செய்தார். இளங்குருவாக வெளியேறி மன்னர் செபஸ்தியார் ஆலயத்திலும் தேசப் புகழ் வாய்ந்த அன்னை மரியாளின் மடுப்பதியிலும் துணைப்பங்குக் குரவராகப் பணியாற்றினர் மானிப்பாய் புனித அந்தோனியார் கோவிலில் பங்குக் குரவராகப் பணியாற்றி இறுதியாக வங்காலை புனித அன்னம்மாள் கோவிலில் பங்குக் குரவராய் இருந்து இராணுவத் துப்பாக்கிகளுக்குப் பலியானர்.

1981ம் ஆண்டு புதிய மன்னர் மறைமாவட்டம் உதயமாகிய பின்னர் 1982ம் ஆண்டின் முதல் மறை மாவட்டக் கூட்டத்தை அமைத்து இயக்குவதில் முழுமூச்சாக உழைத்தார். இக்கூட்டம் புதிய மறை மாவட்டத்துக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

இலங்கையின் தெற்கில் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் 150 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து உருக்குலைந்த ஏழைத் தொழிலாளர்கள் மீண்டும் மீண்டும் கொள்ளையடிக்கப்பட்டு, இல்லங்கள் எரிக்கப்பட்டு, குரூரமாகக் கொலை செய்யப்பட்டு, வீடுகளில் இருந்து விரட்டப்பட்டு

தங்கள் உயிர்களைப் பாதுகாக்க வட — கிழ் மாகாணங்களுக்கு அகதிகளாய்ச் சென்றனர். பஸ்ரியனின் இதயம் இந்த அபலைகள்பாற் சென்றது. அவர்களுக்கு உணவும், உடையும், உறைவிடமும் கொடுத்து நம்பிக்கையான எதிர் காலத்தைக் கட்டியெழுப்ப அல்லும் பகலும் உழைத்தார். இவர் ஆற்றிய இந்தப் பணி தவறானதா? இல்லையென்றால் அவரை ஏன் படுகொலை செய்தார்கள்? அடிகளார் நீதிக் காகப் போராடினார், ஏனெனில் கிறிஸ்துவின் மலைப் பொழிவு அவர் மனதில் உறைந்திருந்தது "நீதியின் மேல் பசிதாகமுள்ளோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" (மத்: 5:6) இருந்தும், அரசபடைகள் இரவு பகலாக அவர் பங்கில் இழைத்த கோரக் கொடுமைகளைக் கண்ணுற்று கண்டும் அவர் அரசின்பால் எதுவித எதிர்ப்பையும் காட்டவில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப் பிடிக்கும் பிரஜையாக, அந்தப் பங்கில் தலைசிறந்த குடிமகனாக விளங்கினார். அப்படியானால் மரணதண்டனைக்குட்படுத்தப் பட்டவரைப்போல் இவரை அதிகாலை ஒருமணிக்குக் கொன்று ஒழித்தது ஏன்? அடிகளார் தன் எசமானரின் குரலுக்குச் செவிமடுத்தார். "சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் (மத்: 5:9)."

பஸ்ரியன் அடிகளாருக்கு எங்களில் பலரைவிட பலநெருங்கிய சிங்கள நண்பர்கள் இருந்தனர். எல்லா மக்களிடையிலும் சமாதானம் நிலவவும், முழுமனித வளர்ச்சிக்குமாகவும் அவர் அரும்பாடுபட்டார். நீதியையும், சமாதானத்தையும், கருணையையும், மன்னிப்பையும், அன்பையும் போதித்தார். அதே கோவிலில் வைத்தே அவர் அநியாயமாகக் கொலை செய்யப் பட்டதேன்? இந்த கொலைபாதகச் சூழலை விட்டுக் கொஞ்சக்காலமேனும் அமெரிக்காவின் பசுந்தரைகளில் இளைப்பாறும்படி இவர் தாயாரும், தங்கையும், சகோதரர்களும் விடுத்த அழைப்பை இவர் நிராகரித்தார். ஏனெனில் தன் வாழ்வை பங்கிற்கும், மாவட்டத்திற்கும், வறிய அகதிகளுக்கும் இவர்

அர்ப்பணித்திருந்தார். இவரது இந்தத் தெரிவு சட்ட விரோதமானதா? இல்லையென்றால் துப்பாக்கியால் அவர் உயிரைப் பறித்ததேன்?

1984ம் ஆண்டு டிசம்பரில் ஒன்றுமறியாத அப்பாவிப் பொது மக்கள் ஏறக்குறைய 250 பேர் தெருக்களிலும் வீடுகளிலும் சந்தைகளிலும் விலங்குகளைப்போல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். உற்றார் உறவினர்களை இழந்து தவித்த குடும்பங்களுக்கு—சடலங்களை மீளப் பெற்று அடக்கம் செய்யும் உயரிய பணியில் முன்னின்று உழைத்தவர் பஸ்ரியன் அடிகளார். இவைகளும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளா? இல்லையென்றால் குருமனைக்குள் வைத்து ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள வேளையில் இந்தக் குருவானவர் குரூரமாகக் கொலை செய்யப்பட்டது ஏன்?

இந்த வினாக்களைப் பல தமிழ் மக்கள் கேட்பதை யான் அறிவேன். இவையாவும் நிகழ இறைவன் ஏன் அனுமதிக்கின்றார்? தாய்மார்களின் பச்சிளம் பாலகர்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன! பள்ளிசெல்லும் கன்னிப்பெண்களின் கற்புச் சூறையாடப்பட்டு அவர்கள் கொலைசெய்யப்படுகிறார்கள்! இளைஞர்கள், வளர்ந்தவர்கள் சித்திரவதைக்காளாகி இறக்கிறார்கள்! இப்படி ஆயிரமாயிரம் உயிர்கள் புத்தபெருமானினதும் தர்மிஷ்டத்தினதும் பெயரால் அழிக்கப்படுவதைப் பார்த்தும் கேட்டும் விரக்தியுற்று, வேதனையுற்ற என் உள்ளமும் இதே கேள்வியைத்தான் கேட்கிறது. இறைபயமுள்ள ஒன்றுமறியாத இந்தச்சனங்களுக்கு இந்த அவலங்கள் நிகழ இறைவன் ஏன சம்மதிக்கின்றார்?

இதற்கான முழுவிடையையும் யான் அறியேன். ஆனால் ஒன்றுமட்டும் என் உள்ளத்தில் உதிக்கின்றது. கிறிஸ்துவின் பிறப்பின் பின்னர் ஏரோதன் கொன்றொழித்த பச்சிளம்பாலகர்களின் செங்குருதியிற்றான் எமது திருச்சபை ஆரம்பமானது.

கிறிஸ்து சிந்திய குருதியில் திருச்சபை ஆழவேர்பரப்பி. வலிமையும் வீரத்துணிவும் பெற்றுவளர்ந்தது. அப்போஸ் தலரும், மன்னாரில் மறைசாட்சிகளும் அன்று சிந்திய இரத்தம் யாழ்ப்பாண மன்னார் மாவட்டத் திருச்சபைக்கு உரமிட்டு உறுதியளித்தது. எமது விசுவாசம், சமாதானம், நீதி, அன்பு, இவைகள் மேல் எமக்குள்ள பற்றும் உறுதிப்பாடும் மீண்டும் சோதிக்கப்படுகின்ற காலகட்டமிது.

17 ம் நூற்றுண்டுகளில் ஒல்லாந்தரின் வேதகலாபனை களில் எமது முன்னோர்கள் உறுதியாக நின்று தம் விசுவாசத் தைப் பாதுகாத்தனர். நாமும் இன்றைய பௌத்தர்களின் சித்திரவதைகளின் மத்தியில் உறுதியோடு நிலை நிற்போம்: மன்னார் மறைசாட்சிகள் தமது விசுவாசத்தை அறிக்கையிட் டதன் பொருட்டுத் தமது உயிரைத்தியாகம் செய்தனர். அருள்திரு பஸ்ரியன் தமது விசுவாசத்தில் வாழ்ந்தமைக் காகத் தமது உயிரைப் பலிகொடுத்தார்; இன்றைய தமிழர் வரலாற்றில் வேத விசுவாசத்திற்காகவும், சுதந்திரத்தில் நாம் கொண்டுள்ள அசையாத நம்பிக்கைக்காகவும், அர்ப் பணிப்புக்காகவும் உயிரைத் தியாகம் செய்த முதல் மறை சாட்சி அருட்திரு மேரி பஸ்ரியனவர். அவரது வாழ்வும், வனப்பும், வளமும், செழிப்பும் நிறைந்ததாய் அமைந்தது. அவரது மரணமும் அவ்வாறே நிறைவேறிற்று. மீண்டும் கிறிஸ்துவின் வார்த்தைகள் எமக்கு உயிர்பெற்று வருகின்றன. "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களதே(மத் 5.10).

பஸ்ரியன் அடிகளாரின் தாயார் நேற்றைய தினம் என் னோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார். "சுவாமி அவர்கள் எனது மகனுடைய உயிரைப் பறித்து விட்டார்கள், அவரது உடலையாவது திருப்பித்தரக் கூடாதா? எனது ஆசைமகனின் உடலைக் கடைசியாகப் பார்த்து என் கண்ணீரால் அபிஷேகம் பண்ணி இங்குள்ள அருமையான

நண்பர்கள் சூழ, அவருக்கு இறுதி அடக்கத்தைச் செய்ய அருள்பாலிக்க வேண்டும் என்று தேவதாயாரிடம் ஓயாமல் மன்றாடிக் கொண்டிருக்கின்றேன். ''ஆயினும் உரிமையும் மனிதாபிமானமும் உள்ள இந்தத்தாயின் வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. சொந்த மகனுடைய சடலத்தைத் தானும் காணக் கொடுத்துவைக்காத தாயின் வெறுமை உணர்ச்சியை வார்த்தைகளால் கூறமுடியாது. இந்தியப் பெருங்கவிஞர் ரவீந்திரநாத்தாகூரின் வார்த்தைகள் என் நினைவுக்கு வருகின்றன.

''கிடைத்திடப் பெற்றேன் அனுமதியை
விடைகொடும் எனது சோதரர்காள்
தங்களனைவர்க்கும் என்னுடைய
தலையது வணங்கி விடைபெற்றேன்
ஈதோ மீளக் கொடுக்கின்றேன்
எனது கதவின் சாவிகளை
மனையில் உள்ள உரிமைகளை
மறுத்து விட்டுப் பிரிகின்றேன்—என்னால்
கொடுக்க முடிந்ததற் கதிகமதாய்
எடுத்துக் கொண்டேன் என்றனுக்கு.

விடியல் தோன்றிப் பகலாக
என்னுள் இருட்டு மூலையொன்றில்
எரிந்த விளக்கும் அணைந்துவிட
அழைப்பு எனக்கு வந்துளது
என்றன் பயணம் தொடர்வதற்கு
எல்லாம் தயாராய் நிற்கின்றேன்.''

பஸ்ரியன் அடிகளாரைப் பொறுத்தவரையில் தாகூரின் கவிதையில் ஒருமாற்றத்தைச் செய்யலாம் என்று நினைக்கின்றேன். ''இல்லை பஸ்ரி'' (நாங்கள் அவரை அப்படித்தான் செல்லமாக அழைப்போம்) ''உனக்குக் கொடுக்கமுடிந்த

யைதவிட உன்னிடமிருந்து நாம் அதிகமாகப் பெற்றுக் கொண்டோம். இருளைப் போக்கிய உன்தீபம் இப்பொழுது அணைந்துவிட்டது. உனக்கும் அந்த அழைப்பு வரத்தான் செய்தது. ஆனால் அவை இரண்டு துப்பாக்கி ரவைகளாக வந்தது. நீயும் பயணத்துக்கு ஆயத்தமாகவே இருந்தாய்,'' ஏனோ இவையெல்லாம் எமக்குப் புரியாத புதிர்களாகவே இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள் கிறோம்.

அருள்திரு பஸ்ரியனது இறுதிப் பயணத்தின் போது, முதற்துப்பாக்கிச் சூட்டை நெஞ்சில் வாங்கியபோது ''பிளீஸ்'' என்ற என்ற ஆங்கில வார்த்தையில் கொலையாளி களைப் பார்த்து இறைஞ்சினார்.

கிறிஸ்துவின் போதனைகளைப் பொறுக்கமுடியாமல் தலைமைக் குருக்களும் இவ்வாறுதான் அவரை அச்சுறுத் தினார்கள். கிறிஸ்துவின் விடைகளால் சினமுற்ற போர்ச் சேவகன் அவரது கன்னத்தில் அறைந்தான். அதற்கு இயேசு நான் பேசியது தவறாய் இருந்தால் எதுதவறு என்று காட்டு, பேசியது சரியானால் ஏன் என்னை அடிக்கிறாய்? என்றார்: இது வும் ஒரு அஹிம்சை வழிப் போராட்டம்தான், அருள்திரு பஸ்ரியனும் தன்கொலையாளிகளிடம் இவ்வாறு தான் வேண்டினார். அவர் யாருக்கும் தீங்கிழைக்க நினைக்கவில்லை.

அவர் இரண்டாவதாகக் கூறிய இறுதிவார்த்தை எந்தக்குழந்தையும் சொல்லும் முதல்வார்த்தை. ''அம்மா'' என்பதாகும். எங்கள் மொழிப்பாரம்பரியத்தின் அழகான வார்த்தை'' அம்மா''வாகும். ''அப்பா, அம்மா'' உலக வாழ்க்கையில் இறைவனின் பிரதிநிதிகள் இவர்கள்தான்; ''அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்'' என்பர். ''தாய் நாடு, தாய் மொழி'' என்றெல்லாம் சொல்விக் கொள் வோம். மனித மேம்பாடே இந்த'' அம்மா'' என்ற சொல் லிற்றான் அடங்கியுள்ளது.

சிலுவையில் தொங்கிய கிறிஸ்து தன்மரண வேதனையிலும் தாயைப் பார்த்து ''அம்மா, இதோ உன்மகன்', என்றார். மேலும் உயிராய் நேசித்த சீடனைப்பார்த்து ''இதோ உன் தாய்'' (அரு. 19 :25-27) என்றார். சீடர்களும், திருச்சபையும் வளர ஒரு தாயின் தேவையை வலியுறுத்தினர் கிறிஸ்து. அருள்திரு பஸ்ரியனும் இதே வார்த்தைகளைத் தான் தனது தாய்க்கும், ஆயிரம் ஆயிரம் இளம் செல்வங்களை இழந்த தாய்மார்களுக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இனப்படுகொலையால் நாதியற்றுப்போன அபலை அகதிகளுக்கும், தான் நேசித்த ஜீவன்களுக்கும் அவர் சொல்லுவார் ''இதோ உங்கள் அன்னைமார்கள் விதவைகள் ஏற்றுக் கொள்ளுங்கள்; எங்கள் சுயநலன்கள் திடசித்தமில்லாத சுபாவங்களிலிருந்தும் விடுபட்டு எங்கள்தாய் நாட்டையும், மொழியையும், பாரம்பரியத்தையும் எல்லா அடக்கு முறைகளில் இருந்தும் விடுவித்துப் பாதுகாத்து வளர்ப்போமாக''

சுமந்து பெற்ற அருஞ்செல்வங்களை இழந்து தவிக்கும் தாய்மார்களுக்கு அவர் கூறுவார் ''இதோ உங்கள் தாய் நாட்டின் செல்வங்கள், அவர்களுக்குப் புதிய நம்பிக்கையும் சுதந்திர வேட்கையையும், அளியுங்கள் ''எல்லாக் கொடிய ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுதலைபெற்று வாழ வழி சமையுங்கள்''

இறுதியாக ரவீந்திரநாத் தாகூரின் பிராத்தனையுடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

''ஆபத்துக்களில் இருந்து என்னைப்பாதுகாத்துக் கொள்வதற்கல்ல— அவற்றை எதிர்கொள்ளும் அச்சமின்மையை யான் உன்னிடம் வேண்டுவேனாக''

''என் வேதனைகளில் இருந்து ஆறுதல் பெறுவதையல்ல— அவற்றைத்தாங்கிக் கொள்ளும் இதயத்தை உன்னிடம் கேட்பேனாக''

"போர்க்களத்தில் நண்பர்களை நாடாமல் என் சுயவலிமையில் நம்பிக்கை வைப்பேனாக."

"அங்கலாய்க்கும் அச்சங்களிலிருந்து என்னைப் பாதுகாப்பதை விடுத்து, சுதந்திரத்தை வென்றெடுக்கும் பொறுமையைத் தந்தருளுவாயாக.

',என்வெற்றியில் நின்கருணையை மட்டும் காண்பதை விடுத்து வெறுங் கோழையாக வாழாமல் யான் சந்திக்கும் தோல்விகளில் என் கரத்தின் வலிமையைக் கண்டுணர அருள்வாயாக.

— ஆமேன்

*

பஸ்ரியன் அடிகளாரைப்பற்றி நூல்எழுதும் ஆர்வத்தில் தகவல்கள் சேகரிக்கப் புறப்பட்ட எனக்குக் கிடைத்த விசித்திரமான தகவல்கள் பல. அவற்றில் இதுவுமொன்று :

உடுவிலில் வாழும் அந்த இளம்பெண் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்குப் போவதற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். பரீட்சைக்கு இன்னும் சிலதினங்கள் மட்டுமே இருந்தன. அதற்கு வேண்டிய பத்திரங்களைச் சரி பார்த்தபொழுது மிக முக்கியமான அடையாள அட்டை காணப்படவில்லை. தேடிப்பார்த்தாள் கிடைக்க வில்லை. தொலைந்து விட்டது. 'எங்கே தொலைந்தது? எப்போ தொலைந்தது?' இக்கேள்விகளுக்குப் பதிலே கிடைக்கவில்லை.

இறுதியில் அப்பெண்ணின் தாயார் கூறினார் " இன்றைக்குச் சமைக்கவும் வேண்டாம், பஸ்ரியன் சுவாமியை மன்றாடிக்கொண்டு தேடுங்கோ " அப்படியே தேடினர். கிடைக்கவில்லை.

அன்று இரவு — அப்பெண்ணின் தாயாரது கனவில்,

உடுவிலில் ஒரு குறிப்பிட்ட வீட்டின்முன்னால் பஸ்ரியன் அடிகள் நிற்பதாகவும் பின்னர் நடந்து ஆலயப்பக்கம் செல்வதாகவும் காணப்பட்டது.

மறுநாள் காலை, இரவு கனவில் பஸ்ரியன் அடிகள் நின்றதாகக் காட்டப்பட்ட வீட்டின் பெண் இவர்கள் வீட்டுக்கு வந்தாள்.

" உங்கடை மகளிட அடையாளஅட்டை காணமல் போயிற்றே?"

" ஓம்... கண்டனியே பிள்ளை? அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறம் ".

" சுண்ணாகத்தில் என்னோட வேலைசெய்யிற நவாலிப் பிள்ளையொண்டு சொன்னது, தான் போனமாதம் யாழ்ப்பாணம் கடைக்குப் போனபோது கடையொன்றுக்குள்ள இருந்து அடையாள அட்டை ஒன்றைத் தான் கண்டெடுத்ததாம். நேற்றுத்தான் அவ எனக்குத் தற்செயலாய்ச் சொன்னவ. நான் உடுவில் எண்டாப்போல உங்களுடைய மகளிடைபேரைச் சொல்லி, போய் விசாரிச்சுப் பார்த்திட்டு வந்து சொல்லச்சொன்னவ" என்று கூறினாள்.

பின்னர் அவர்கள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டனர்.

" முதல்நாள் முழுவதும் பஸ்ரியனை வேண்டிக்கொண்டு சமையல்கூடச் செய்யாமல் தேடிய அதேவேளையில் அடையாள அட்டைபற்றிய தகவல் அப்பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. இது பஸ்ரியன் அடிகளார் தமக்குச்செய்த புதுமை" என்று அப்பெண்ணின் தாய் உணர்ச்சி பொங்கக் கூறுகின்றார்.

இதனை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டாலும் இல்லையென்றாலும் பஸ்ரியன் அவர்வாழ்ந்த மக்களின் இதயக் கோவில்களில் தெய்வப்பிறவியாகப் பூசிக்கப்பட்டு வருகின்றார் என்பதுமட்டும் உண்மை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறளடிகளும் பொய்யன்று.

இவ்வுலகில் வாழும்வரை மக்கள் பணிக்கு அவரைத் தன் கருவியாகப் பயன்படுத்திய இறைவன் அவர் இறந்தபின்னரும் அதே நோக்கில் பயன்படுத்துவது சித்தமெனில் யார் தான் தடுக்கவல்லார்?

அருட்திரு மேரி பஸ்ரியன் அவர்கள் இவ்வுலகில் வாழும் போது தீபமாக வாழ்ந்தவர். அத்தீபம் குன்றின்மேல் இட்ட தீபமாய் ஒளிர்ந்து மற்றவர்களுக்கு ஒளிகொடுத்துக்கொண்டிருந்தது. அத்தீபத்தை 6-1-1985 ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் வங்காலை, புனித அன்னம்மாள் ஆலயக் குருமனையில் வைத்து அணைத்தார்கள்! ஆனால் அந்தத்தீபம் உண்மையிலேயே அணைக்கப்பட்டதா?

இல்லை, இல்லவே இல்லை. அவர் ஆற்றிய பணிகளிலே, அவரால் உருவாக்கப்பட்ட பல இளைஞர்களும் இன்று தீபங்களாய் ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தீபங்களில் ஒளிர்ந்துகொண்டிருக்கும் சேவை ஒளிகள் பஸ்ரியன் எனும் தீபத்தில் இருந்து பெறப்பட்ட சுடர் பிளம்புகளேயாகும். அவரது வழியில் அத்தீபங்கள் இன்னும் பல்லாயிரம் தீபங்களை ஏற்றிவைத்து ஒளிரப்போகின்றன. எனவே பஸ்ரியன் எனும் தீபம் அணைந்துவிடவில்லை. பஸ்ரியன் பல தீபங்களாய் நின்று ஒளிர்கின்றார். வாழையடி வாழையாய் ஒளிர்ந்துகொண்டே இருப்பார். அவை அணையாவிளக்குகள். அந்தத் தீபங்கள் எரிகின்றன,

★

# வளரும் பயிரின் வாய்க்கால்கள்

பஸ்ரியன் அடிகளாருக்கு - எனது நல்ல நண்பரான அவருக்கு - யான் செலுத்தக்கூடிய நன்றிக்கடனாக, எனது அன்பின் சின்னமாக என்னால் முடிந்தவரை அவரது வாழ்வின் நிகழ்வுகளைத் திரட்டித் தொகுத்து வைப்பது என்ற ஓர் எண்ணம் மட்டுமே எனக்கு ஆரம்பத்தில் இருந்தது. இதற்கு அச்சுருக்கொடுத்து நூலுருவாக்கும் துணிபோ-வலிமையோ எனக்கு இல்லை. ஆனால் எதிர்பாராத விதமாக இது அழகிய நூலுருப்பெற்று எனது ஆத்மதாகம் நிறைவு செய்யப்பட்டுள்ளது என்றால் - பஸ்ரியன் அடிகளாரின் ஆசியும் பல நல்ல இதயங்களின் ஆதரவுகளுமே அதற்குக் காரணமாகும். அந்த நல்ல இதயங்களை இங்கு நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

★ இந்நூலை எழுத ஆரம்பிப்பதற்கு முதற் தூண்டுகோலாய் இருந்த அருள்திரு T.E. தேவராஜன் அவர்கள்—

★ பஸ்ரியன் அடிகளாரைப்பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கு வேண்டிய தொடர்புகளை மேற்கொள்ள உதவிகளைத் தந்த BEAS நிலையம், குறிப்பாக இதன் செயலர் அருள்திரு S, எட்வின் அவர்கள்—

★ நேரில் காணுதலுக்காக யான் மேற்கொண்ட பிரயாணங்களின்போது என்னோடு கூடவருகைதந்து தகவல் திரட்ட, வேண்டிய ஆவணங்களைச் சேகரிக்கத் துணை நின்ற அருள்திரு C.G. ஜெயக்குமார் அவர்கள்—

★ அஞ்சல் வழியாகவும், நேரில்காணல் மூலமும் வேண்டிய தகவல்கள், ஆவணங்களைத் தந்துதவிய பஸ்ரியன் அடிகளாரின் பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்கள், நண்பர்கள், அவர்பணியாற்றிய பங்குகளின் மக்கள். குறிப்பாக மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள்—

★ எனது எழுத்துக்களை நெறிப்படுத்தி, கருத்துக்கள் சிதையா வண்ணம் தணிக்கை செய்து தந்து உதவிய தணிக்கைக் குழுவினர்—

★ இந்நூலில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மூலப் பிரதிகளை அழகுறத் தமிழாக்கம் செய்து தந்துதவிய திரு. P.A.C. ஆனந்தராஜா, அருள்திரு M.A. யோகராஜா ஆகியோர்—

★ நூலின் கையெழுத்துப் பிரதிகளை - பிரதிபண்ணித் தந்துதவிய செல்வி. புஸ்பலதா மடுத்தீன் அவர்கள்—

★ நூல்வெளியீட்டுக்காக கணிசமான தொகையைத் தாமாகாவே முன்வந்து தந்துதவிய பஸ்ரியன் அடிகளாரின் குடும்பத்தவர்கள்—

★ நூல் வெளிவரும் முன்னரே எமது நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் நல்நோக்கோடு நூலுக்கு முற்பணம் தந்து உதவிய பெரியோர்கள் - அன்பர்கள் குறிப்பாக மயிலைப் பங்கு இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள்—

★ பஸ்ரியன் அடிகளாரால் உருவாக்கப்பட்டவர்களும், இந்நூலின் வெளியீட்டாளர்களுமான மல்வத்தை, சுவாமி ஞானப்பிரகாசர் சன சமூக நிலையத்தினர்—

★ அட்டைப் படத்தை அழகுற அமைத்துத்தந்த அருள் திரு அன்ரன் மத்தாயஸ், திருநெல்வேலி Baby Photo நிலையம், மற்றும் Kalaimagal Printograph ஸ்தாபனத்தார்—

★ புத்தகத்தை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய யாழ் புனித வளனுர் கத்தோலிக்க அழுத்தகத்தின் ஊழியர்கள்—

இவர்கள் எல்லாம் என்னைப் புரிந்து கொண்டு, என் இதயதாகத்தை உணர்ந்து கொண்டு இக்கைங்கரியத்தில் யான் வெற்றிபெறக் கைகொடுத்து உதவியவர்கள். வளரும் என் எழுத்துப் பணிக்கு வாய்க்கால்களாக நின்று நீர் பாய்ச்சியவர்கள். இவர்களுக்கு இச்சிறிய எழுத்தாளனின் சிரம் தாழ்த்திய நன்றிகள்.

— நாவண்ணன்.

★ ★ ★

அருள்
Photo
ஸ்த

புனித
—

எல்
த்தில
ாருட
நீர்
னின்



''நான் வாழப்போவதோ கொஞ்சக் காலம். வாழும்வரை சேவை செய்யவேண்டும் என்பதே எனது விருப்பம்.''

''ஜெயராசசிங்கத்துக்கு நடந்ததே எனக்கும் நடக்கலாம். அவருடைய சாம்பலாவது கிடைத்தது. என்னுடைய உடலை என்ன செய்வார்களோ தெரியாது. என்னுடைய சாம்பல் தானும் கிடைப்பது சந்தேகம். புனித செபஸ்தியாரும் இளம் வயதிலேதான் மரணமடைந்தார். அவர் பெயர் கொண்ட எனக்கும் அப்படிப்பட்ட மரணம்தான் ஏற்படும்.''

"Sister, our life is always at Stake and I am ready to be killed at any moment – Such is our life now"